வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்


ஆய்வுப்பதிப்பு



தொகுதி - 4

அந்தாதி

பகுதி - 2



பதிப்பு

அ. சதீஷ்

வண்ணச்சரபம்

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள்

ஆய்வுப் பதிப்பு

தொகுதி – 4

அந்தாதி

பகுதி – 2

பதிப்பு
அ. சதீஷ்

வெளியீடு
தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
21, 'லட்சுமி' சத்யசாய் நகர்,
மதுரை - 625 003.

தாமரை பிரதர்ஸ்
மீடியா பிரைவேட் லிமிடெட்

தலைப்பு
வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் - ஆய்வுப் பதிப்பு

வகை
அந்தாதி

பதிப்பாசிரியர்
அ. சதீஷ்

பதிப்பு
முதல் பதிப்பு: ஆனி, குரோதி, கலி - 5125 / ஜூன் - 2023

அளவு & பக்கங்கள்
B5 (17.6 cm x 25 cm) - 324

ISBN
9789392601798

புத்தக எண்
TB0303

நூல் வடிவமைப்பு
கதிர் & மு.சுந்தரலிங்கம்

அட்டை வடிவமைப்பு
ரெ. கார்த்திகேயன்

ஓவியம்
விஷ்ணு

விலை
ரூ. 450/-

வெளியீடு
தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்
21, 'லட்சுமி', சத்யசாய் நகர்,
மதுரை - 625 003.

தொடர்புக்கு
Toll Free 1800 425 7700 (7:00 am - 7:00 pm)
75500 09565 (whatsapp only)

81/1

பதிப்பு உருவாக்கக் குழு

ஆலோசகர்கள்

தவத்திரு குமரகுருபர சுவாமிகள்
தலைவர், சிரவை கௌமார மடாலயம், கோவை.

பேராசிரியர் சு. வேங்கடராமன்
மேனாள் தமிழ்த் துறைத்தலைவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி
இணையாசிரியர், தினமலர்.

திரு. சௌந்திர. சொக்கலிங்கம்
உதவியாசிரியர், தினமலர்.

முனைவர் கி. ஜெயகுமார்
சுவடியியல் அறிஞர்.

பதிப்பாசிரியர்

அ. சதீஷ்

ஆய்வாளர்கள்

ஈ. உமா
மு. சுந்தரலிங்கம்
வே. தமிழரசு
வி. அகிலா

கணினி அச்சு

ச. வாசுகி

நூல் மற்றும் அட்டை வடிவமைப்பு

மு. சுந்தரலிங்கம் - ரெ. கார்த்திகேயன்

81/1

பொருளடக்கம்

பதிப்பாளர் உரை

தமிழ் சமய, இலக்கிய, அரசியல் வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு மிக மிக முக்கியமான காலகட்டம். ஆங்கிலேயர் எழுச்சி, தீவிரமான மதமாற்றம், சமயவாதிகளின் கருத்துப் போர், அடுத்தடுத்து ஏற்பட்ட பஞ்சங்கள், கடும் வறுமை, அறத்தின் வீழ்ச்சி, தமிழை விட வடமொழியே உயர்ந்தது என்ற ஒரு தரப்பினரின் செல்வாக்கான தொடர் பிரசாரம், பழைய வாழ்க்கை முறை முற்றிலும் மறைந்து புதிய வாழ்க்கை முறை தோன்றியமை எனப் பல பிரச்னைகள் சமூகத்தை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தன.

அச்சுக் கருவி கண்டுபிடிக்கப்பட்டு அது பயன்பாட்டுக்கு வந்தபின், கிழக்கிந்திய கம்பெனி மூலம், கிறிஸ்தவ மிஷனரிகள் நூல்கள் வெளியிட்டு வந்தனர். 1835ம் ஆண்டுதான் சுதேசிகளும் அச்சகங்கள் அமைத்து நூல்களை அச்சிடலாம் என அனுமதி அளிக்கப்பட்டது. அதன்பின் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழ்ச் சமூகத்தையே புரட்டிப் போட்டன. நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகள் மூலம் மக்களிடையே விழிப்புணர்வு தோன்றியது.

இக்காலகட்டத்தில், ஆறுமுக நாவலர் (1822 - 1879), மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை (1815 - 1876), வள்ளல் இராமலிங்க அடிகள் (1823 - 1874), சூளை சோமசுந்தர நாயகர் (1846 - 1901), வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (1839 - 1898) ஆகிய ஐந்து ஆளுமைகள் தோன்றி, சமூகத்தின் போக்கையே மாற்றினர்.

ஆறுமுக நாவலர், கிறிஸ்தவ மிஷனரிகளோடு இருந்து கல்வி பயின்றதாலும் அவர்களுடன் பணியாற்றியதாலும் சமகாலப் பிரச்னையான மதமாற்றத்தை எப்படித் தடுப்பது என்பதை அவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டார். அதோடு பள்ளிகள் நிறுவி பொதுக்கல்வியையும் சைவ சமயக் கல்வியையும் பரப்பும் தொண்டிலும் ஈடுபட்டார். இவரது தொண்டு சமூகம் மற்றும் சைவ சமய நோக்கில் அமைந்தது.

'பத்து கம்பர்' எனப் போற்றப்பட்ட மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, புலவர்கள் பலரை உருவாக்கினார். அவர்களில் சிறந்தோராக, தியாகராசச் செட்டியார், தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர்

உள்ளிட்டோர் வெளிப்பட்டனர். சமகாலத் தமிழ்க் கல்வி உலகையும் இவர்கள் இயக்கினர். இவர்கள் மூலம் தமிழ் இலக்கிய உலகம் புத்தெழுச்சி பெற்றது. பிள்ளையின் தொண்டு தமிழ் இலக்கிய உலகத்தில் அமைந்தது.

வள்ளல் இராமலிங்க அடிகள், ஜீவகாருண்யம், சோதி வழிபாடு ஆகியவற்றைப் பரப்பினார். தமது 6ம் திருமுறைப் பாடல்கள் மூலம், புனித நூல்கள், சமயக் கட்டமைப்புகள், உருவ வழிபாடு ஆகியவற்றின் மீது விமர்சன பூர்வமான கருத்துகளை முன்வைத்தார். அவை பெரும் விவாதத்தை உருவாக்கின. அவற்றின் தாக்கம் இன்றளவும் தொடர்கிறது. இவரது தொண்டு, சமூகம் மற்றும் ஆன்மிக நோக்கில் அமைந்தது.

சூளை சோமசுந்தர நாயகர், சமய உலகில் ஒப்பற்ற சிங்கமாகத் திகழ்ந்தார். தமிழகம் முழுவதும் பல சைவ சபைகளை உருவாக்கியதும், நால்வர் குருபூஜைகளைக் கொண்டாடியதும் அவற்றின் மூலம் சைவ சமய உலகம் புத்தெழுச்சியை அடைந்ததும் இவரது பெருந்தொண்டுகள். இவரது மாணவரான மறைமலையடிகள் பிற்காலத்தில் தனித்தமிழ் இயக்கம் உருவாக்கியதற்கு இவரது கருத்துகளே அடிப்படையாக அமைந்தன. இவரது தொண்டு சைவ சமய உலகில் அமைந்தது.

இவர்களின் சமகாலத்தவரான வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இவர்களை விட வேறுபட்டு சிந்தித்து சமூகத் தொண்டாற்றினார். இவர் ஆங்கிலக் கல்வி பெறவில்லை. இவருக்கு ஆங்கில நாகரிகப்படி அமைந்த கல்வி நிறுவனங்களோடு தொடர்பில்லை. அரசு அதிகாரிகளோடு பழக்கமில்லை. ஆயினும் தனது முற்போக்கு கருத்துகளை மேற்கண்ட நான்கு பேரை விட ஆணித்தரமாக முன்வைத்தார்.

வறுமையாலும் பஞ்சத்தாலும் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல் அறத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததைக் கண்ட சுவாமிகள், ஜீவகாருண்யத்தையும் வாழ்வியல் அறத்தையும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

சுவாமிகள் தமிழ் இலக்கிய உலகில் வேறு எவரும் அதுவரை செய்திராத புதிய நூல்களைப் படைத்தார்.

1. ஆங்கிலேயரின் கொடூர ஆட்சியை எதிர்த்து 100 பாடல்கள் கொண்ட 'ஆங்கிலியர் அந்தாதி' என்ற நூலைப் பாடினார். அதில், ஆங்கிலேயர், எவ்வளவு கொடுமையானவர்கள், அவர்களால் மக்கள்

படும் துயரங்கள் என்ன என்பதை விவரித்திருப்பார். அவர்களை அழிப்பதை மட்டுமே வரமாகத் தர வேண்டும் என இறைவனிடம் கேட்டார். அதேபோல் ஒரு கீர்த்தனையையும் பாடினார்

2. வாய்மொழிக் கதைகளின் அடிப்படையில், புலவர்களின் வரலாறு களைத் தொகுத்து, 'புலவர் புராணம்' பாடினார்

3. அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய மூன்று இலக்கண நூல்களை இயற்றினார்

4. பல்வேறு புதுமைக் கவிகளை - குறிப்பாக - எண்கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை, தசாங்கக் கூற்றிருக்கை - பாடினார்

5. தமிழின் உயர்வை நிருபிப்பதற்காகவே, 'தமிழ் அலங்காரம்' பாடினார்

6. கௌமார நெறிக்கு உரிய நூல்களை எழுதினார்

7. தன் வரலாறாக, 'குருபரதத்துவம்' என்ற நூல் பாடினார்

8. சமகாலத்திற்கேற்ப, அரசியல் கருத்துகளைப் பதிவு செய்யும் 'அரசாட்சி' என்ற நூலை எழுதினார்

9. திருக்குறள் அடிப்படையில் வாழ்வியல் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில், 'மனுநெறித் திருநூல்' இயற்றினார்

10. ஆயிரம் பாடல்களாகக் கொண்ட நூல்கள் இயற்றினார்

11. தேவார மூவருக்குப் பின் அதிகளவில் தலங்களைத் தரிசித்து பாடல்கள் பாடினார்

அதேபோல் வேறு எவரும் பேசியிராத கருத்துகளையும் சமகால நிகழ்வுகளின் மீதான விமர்சனங்களையும் தம் நூல்களில் பதிவு செய்தார்.

1. உயிர்ப்பலி இடப்படும் வேத வேள்விகளை மிகமிகக் கடுமையாக எதிர்த்தார்

2. எத்தகைய மகான்களாக இருந்தாலும் விமர்சன நோக்கோடு அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் கேள்விகள் எழுப்பினார் (புலவர் புராணம்)

3. வண்ணம் எனப்படும் சந்தப் பாடல்களில் வடமொழி கலந்தால் அதன் இனிமை குன்றும் எனவும் வடமொழி கலந்திடாத தமிழ் எனவும் முதன்முதலில் தனித்தமிழ் பற்றிப் பேசினார்

4. வைணவர்களின் தென்கலை, வடகலை இடையிலான மோதல்களைப் பதிவு செய்து அவை வேண்டாம் என வெளிப்படையாகக் கூறினார்

5. தமிழ்ப் புலவர்கள் வெறும் அறிவாளிகளாக மட்டும் நின்றுவிடாமல் உபாசனை மூலம் தெய்வ சக்திகளையும் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்

6. புதிய இலக்கண நூல்களில் பழமையைப் போற்றியதோடு காலத்திற்கு ஏற்ற வகையில் புதிய கருத்துகளையும் பதிவு செய்தார்

இவரது பாடல்கள் மொத்தம் 49 ஆயிரத்திற்கும் மேற்பட்டவை. கடந்த நூற்றாண்டில், அவற்றில் சில நூல்களே அச்சாகியுள்ளன. மீதமுள்ளவற்றை திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பாக கொண்டு வரும் திட்டம், கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

அதன் முதற்கட்டமாக சென்னை தரமணியில் இயங்கிவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் கோவை சிரவணபுரம் கௌமார மடாலயமும் இணைந்து, சுவாமிகள் எழுதிய பிள்ளைத்தமிழ் இலக்கியங்களை முதல் தொகுதியாகவும், கலம்பகங்களை இரண்டாவது தொகுதியாகவும் வெளியிட்டன.

அதையடுத்து இத்திட்டத்தில், 'தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் மிக்க மகிழ்ச்சியுடன் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் வாயிலாக, சுவாமிகளின் அந்தாதி நூல்கள் திரட்டப்பட்டு 4வது தொகுதி வெளியாகிறது. இந்த நான்காவது தொகுதியில் 5 பகுதிகள் அடங்கியுள்ளது. ஐந்து பகுதிகளில் 57 அந்தாதி நூல்கள் வெளியிடப்படுகின்றன. இதனைத் தமிழன்னைக்கு செய்யும் பெருந்தொண்டாகவும் இந்நிறுவனம் கருதுகிறது.

இந்நிறுவனம் மூலம், வண்ணச்சரபம் சுவாமிகளின் நூல்களை வெளிக் கொண்டு வர நிதியுதவி அளித்த புண்ணியச் செல்வர்கள்:

1. இரா. ஸ்ரீநிவாஸன், தினமலர்
2. ஸ்ரீவித்யா கி. அர்ஜுன், சென்னை
3. அ. ஸுந்தரம் ஐயர், சென்னை
4. ஸு. ஸ்வாமிநாதன், சென்னை
5. ஆ. லட்சுமிபதி, தினமலர்
6. ஹேமா ராமசுப்பு, சென்னை

7. ல. ஆதிமூலம், தினமலர்

8. செந்தூர்வேலன், ஜி.எம்.எஸ் கன்ஸ்ட்ரக்ஷன்

9. டாக்டர். பொன்ராஜ் ஷண்முகநாதன், சென்னை

10. ஓம் எனர்ஜி மேனேஜ்மென்ட் ஸிஸ்டம்ஸ்

11. டாக்டர். தி. பெருங்கோ, சென்னை

12. இரா. கிருஷ்ணமூர்த்தி, தினமலர்

தமிழுக்கும் சமயத்திற்கும் இவர்கள் செய்துள்ள இந்த ஒப்பற்ற தொண்டு, உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழ்ச் சமூகத்தால் போற்றப்பட வேண்டிய ஒன்று. தமிழ் உள்ளளவும் இவர்களின் பெயர்களும் இந்தத் தொண்டும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ் அறிஞர்களும், ஆய்வாளர்களும், இலக்கண வல்லார்களும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் இந்நூல்களைப் பயன்படுத்தி பலகட்ட ஆய்வுகளை வெளிக்கொணர வேண்டும். அதன்மூலம் 19ம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் தொடர்பான ஆய்வுகளில் மேலும் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்ச முடியும் என நம்புகிறோம். நன்றி!

தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்

பதிப்புரை

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலமையாளர்களில் ஒருவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம் முதலிய பல துறைகளில் அழுத்தமான பங்களிப்பினை நிகழ்த்தியுள்ளார். இவர்தம் படைப்புகளில் சில, இவர் வாழ்ந்த காலத்திலேயே அச்சு வாகனம் ஏறின. காகிதங்கள் மிகுதியான புழக்கத்திற்கு வந்திருந்த பொழுதும் இறுதிவரை ஓலைச்சுவடிகளிலேயே தம் படைப்புகளைப் பதிவு செய்துள்ளார். தம்முடைய காலத்தில் நிலவிய இலக்கிய வகைமைகள் அனைத்திலும் பாடல்களைப் புனைந்துள்ளதுடன் பழங்காலத்தில் நிலவிய அரிதான சில இலக்கிய வகைகளிலும் பாடல்களைப் புனைந்துள்ளார். யாப்பும், இசையும், பொருளும் இவரது பாடல்களில் இழைகின்றன. நுட்பமான, அரிதான யாப்பு வடிவங்களை மீட்டெடுத்து கவிபுனைந்துள்ளதுடன் தமக்கு முந்தைய அறிவு மரபுகள் அனைத்தையும் ஆவணப்படுத்தவேண்டும் என்ற வரலாற்று ஓர்மையுடனும் செயல்பட்டுள்ளார்.

தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் அறுவகை இலக்கணம், புலவர் புராணம் முதலான சில நூல்களே மீண்டும் மீண்டும் அச்சாகியுள்ளன. பல நூல்கள் ஒருமுறை மட்டுமே அச்சாகியுள்ளன. இவ்வாறு அச்சான நூல்களில் சில தற்பொழுது எங்குமே கிடைக்காத நிலையிலுமுள்ளன. இன்னும் பல்லாயிரக்கணக்கான பாடல்கள் பதிப்பிக்கப்படாமல் ஓலைச்சுவடிகளிலேயே உள்ளன. இதுவரை அச்சாகாத படைப்புகளைப் பதிப்பிக்க வேண்டும் என்பதுடன் அச்சான படைப்புகளையும் சுவடியுடன் ஒப்பு நோக்கித் திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பு கொண்டு வரவேண்டியது அவசியமான பணியாகிறது. அச்சான படைப்புகள் பலவும் பல்வேறு சிக்கல் நிறைந்தனவாக உள்ளன. மூலத்திற்கு நெருக்கமான பதிப்புகளாக அவைகள் அமையவில்லை.

இந்நிலையில் தற்பொழுது கிடைக்கும் தண்டபாணி சுவாமிகள் படைப்புகள் அனைத்தும் (சில சுவடிகள் நீங்கலாக) அவர்தம் கைப்பட எழுதிய ஓலைச்சுவடிகளில் உள்ளன. இச்சுவடிகள் கோவை கௌமார மடாலயத்திலும் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் முறையாகப் பாதுகாக்கப்படுகின்றன. ஆசிரியர் எழுதிய மூலச்சுவடியே கிடைத்துள்ளது.

இச்சுவடி எழுதி முடிக்கப்பட்ட பின்னர் மீண்டும் இவரால் சில திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே இவரது படைப்புகளுக்குப் பாடவேறுபாடுகள் கிடையாது. என்றாலும் சுவடியை வாசித்தவர்களிடையே சிற்சில மாறுபாடுகள் உருவாகியுள்ளன. சந்தி பிரித்துப் பல படைப்புகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் ஒரு சீரான முறையியல் பின்பற்றப்படவில்லை.

பதிப்பு முறையியல்கள்

ஒரு படைப்புக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட முறையியல்களில் பதிப்புகள் வரவேண்டியது அவசியமாகும். எந்தவொரு பதிப்பும் தற்காலிகத் தன்மை கொண்டது என்பதோடு பதிப்பாசிரியரின் புலமைப் பின்புலச் சார்பும் கொண்டது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

தமிழ்ப் பயில்வு மரபில் நிகழ்ந்த சில விவாதங்கள் மரபான பயில்வுமுறையில் சில மாற்றங்களை உருவாக்கின. குறிப்பாகச் சந்தி பிரிக்காமலும் சீர் முதலிய யாப்பமைதி குன்றாமலும் அமைந்த பதிப்புகள் வெளியாகின. இப்பதிப்புகள் இசை ஒழுங்கு கொண்டவை என்பதோடு நினைவில் நிறுத்துவதற்கு எளிதானவை. மற்றொருபுறம் பொருள் புரிதலுக்கு எளிதாகச் சந்தி பிரித்த பதிப்புகள் வெளியாகின. இரண்டும் இரு வேறு வாசகத் தளத்திற்கானவை என்பதாக அடையாளப்படுத்தப்பட்டன. நவீனக் கல்வி பொருளுக்கு மட்டுமே முதன்மை அளித்தது. எனவே சந்தி பிரித்த பதிப்புகளே வாசகருக்கு எளிமையானவை என்னும் கருத்து முதன்மைப்பட்டது. இதனால் பழம்பனுவல்களை அவற்றின் மூல வடிவில் புரிந்துகொள்ளும் பயிற்சி தமிழ் மாணவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு அருகிவிட்டது.

காலனிய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்த அனைத்து நாடுகளும் தங்களுக்கான கல்வி மரபுகளை விவாதித்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் இன்று உருவாகியுள்ளது. நமது பாரம்பரிய மரபில் உள்ள அனைத்து அறிவுமரபுகளையும் மீட்டு எடுக்க வேண்டியது அவசியமான பணியாகிறது.

இச்சூழலில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் மரபான பழம் பண்பாட்டுச் சூழலின் அறிவு மரபுகளைத் தாங்கி நிற்கும் படைப்புகள் ஆகும். அச்சு ஊடகம் விரைவாகப் பரவத் தொடங்கிய காலத்தில், காகிதம் புழக்கத்தில் வந்துவிட்ட காலத்தில், தம் படைப்புகள் தம் காலத்திலேயே அச்சு வாகனம் ஏறிய பொழுதும் ஓலை

என்னும் ஆற்றல் வாய்ந்த ஊடகத்தையே இறுதிவரை பயன்படுத்திய பண்பாட்டுத் தொடர்பாளராகத் தண்டபாணி சுவாமிகள் விளங்குகின்றார்.

இவரது படைப்புகள் பல்வேறு அடுக்கு நிலைகளில் அமைந்துள்ளன. மிகக் கடினமான சந்தத்தில் அமைந்துள்ளது போன்றே மிக எளிமையான நடையிலும் அமைந்துள்ளன. இவரது படைப்புகளை வெவ்வேறு பதிப்பு முறைகளில் வெளியிட முடியும். குறிப்பாகச் சந்தி பிரித்துப் பதிப்பித்தல், உரை எழுதிப் பதிப்பித்தல், வரலாற்றுக் குறிப்புகள் கொடுத்துப் பிற நூல்களோடு ஒப்பு நோக்கிப் பதிப்பித்தல், ஒரு நூலுக்குள்ளேயே சந்தி பிரிக்காமலும் சந்தி பிரித்தும் பதிப்பித்தல் என்று பல்வேறு பதிப்புகளைக் கொண்டுவர வேண்டியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் அடிப்படையாகச் சுவடியை மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட திருத்தப் பதிப்பு வெளிவர வேண்டியது முதன்மையான பணியாகும். இந்த அடிப்படையான பதிப்பைக் கொண்டு வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு முறையியல்களில் பலப்பல பதிப்புகளைக் கொண்டுவர முடியும். அந்த அடிப்படையில் தண்டபாணி சுவாமிகள் கைப்பட எழுதிய சுவடிகளில் இருந்து இவரது படைப்புகளை முறையாகப் பதிப்பித்து வெளியிடும் நோக்கில் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

முந்தைய பதிப்பு முயற்சிகள்

இதுவரை அச்சான தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளைத் தொகுத்தும் ஓலைச்சுவடிகளில் இருந்தவற்றை கௌமார ஆதீனப் புலவர் கிருஷ்ணய்யர் அவர்கள் பிரதி செய்து வைத்திருந்த கையெழுத்துப் பிரதியைக் கொண்டும் தட்டச்சு செய்யப்பட்டது. அவைகள் பெரும்பாலும் சந்தி பிரிக்கப்பட்டு இருந்ததன் காரணமாகவும் யாப்பு இயைபு இல்லாமல் இருந்ததாலும் அவற்றை மூலச்சுவடியைக் கொண்டு ஒப்பு நோக்கி இப்பதிப்பு அமைக்கப்பட்டது. இதன் காரணமாக அதிக காலமும் கடும் உழைப்பும் இதற்குத் தேவைப்பட்டது. அச்சாகாத, கையெழுத்துப் பிரதி இல்லாத படைப்புகள் மூலச் சுவடியிலிருந்து நேரடியாகவே எழுதப்பட்டதுடன் மீண்டும் மீண்டும் மூலச்சுவடியுடன் ஒப்பு நோக்கப்பட்டன. இவற்றின் காரணமாகச் சுவடி வாசிப்பில் இயல்பாக நேரும் பிழைகள் பெருமளவு குறைந்தன. யாப்பு நோக்கி அமைக்கும் போது பிழைகள் சரிசெய்யப்பட்டன. இதன் காரணமாகத்தான் ஆதாரப் பதிப்பு அல்லது மூலப்பதிப்பு என்பது சீர் முதலிய யாப்பமைதியோடு கூடிய பதிப்பாக அமைவதே சிறந்த பதிப்பாகிறது. இதிலிருந்து அடுத்த கட்ட

பதிப்புகளுக்குச் செல்லலாம். எனவே பின்னர் வெளிவரவுள்ள பல்வேறு வகையான பதிப்புகளுக்கான மூலப் பதிப்பாக இதனைக் கொண்டுவர வேண்டும் என்று திட்டமிடப்பட்டு இப்பதிப்பு கொண்டுவரப்படுகிறது.

தண்டபாணி சுவாமிகள் இலக்கணம், இலக்கியம், சமயம், தத்துவம், உரை எனப் பல தளங்களில் படைப்புகளை உருவாக்கியுள்ளதால் இவரது பாடல்களின் தொகையை அறுதியிட்டுக் கூற இயலாத சூழல் உருவாகியுள்ளது. இவரது பாடல்களின் தொகையைக் கூறிய அனைத்து அட்டவணைகளும் முன்முயற்சிகளும் போதாமை நிறைந்தவையாகவே உள்ளன. சுவடிகளில் சில தவறியமை, சுவடிகள் இடம்பெயர்ந்தமை, சுருள் வடிவச் சுவடிகளில் (ஓரிரு ஓலைகள்) சில இன்னும் வாசிக்கப்படாமை ஆகிய காரணங்களால் இப்பணி முழுமை அடையவில்லை. இப்பதிப்பு வரிசை நிறைவடையும் பொழுதே இவரது பாடல்களின் தொகையைத் துல்லியமாகக் கூறமுடியும்.

தண்டபாணி சுவாமிகள் தமிழகம் முழுவதும் பயணம் செய்துள்ளார். பல்வேறு ஊர்களில் உள்ள கடவுளர்கள் மீது பாடல் புனைந்துள்ளார். சில ஊர்களில் மிகுதியான பாடல்களும் சில ஊர்களில் குறைவான பாடல்களும் பாடியுள்ளார். ஊரோடு தொடர்பு இல்லாத பொதுநூல்கள் பலவும் பாடியுள்ளார். எனவே ஊர்ப்பெயர் அடிப்படையிலான பதிப்பு என்பது சரியான முறையியலில் அமையவில்லை. மேலும் கால வரிசையிலான பதிப்பும் இவரது படைப்புகளுக்கு சாத்தியமில்லை. சில முதன்மையான நூல்களை மட்டும் இவை முன், பின் என அறியமுடிகிறதே அன்றி அனைத்து நூல்களுக்கும் கால வரிசை அமைக்க முடிவதில்லை. இதன் காரணமாக இலக்கிய வகைமை அடிப்படையில் - பிள்ளைத்தமிழ், கலம்பகம், தூது, அந்தாதி, கோவை, மாலை, அலங்காரம், சதகம், பதிகம், இலக்கணம், புராணம், நீதிநூல் என - இவரது படைப்புகளை வெளியிடலாம் என முடிவு செய்யப்பட்டது.

அந்த அடிப்படையில் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய ஐந்து பிள்ளைத்தமிழ் நூல்கள் முதல் தொகுதியாகவும் ஆறு கலம்பக நூல்கள் இரண்டாம் தொகுதியாகவும் 2019ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழி பதிப்பிக்கப்பட்டன. மூன்றாம் தொகுதியில் ஐந்து கோவை நூல்கள் பதிப்பிக்கப்பட்டன. இந்நூலினை தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் வெளியிட்டது. இந்த நான்காம் தொகுதியில் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய 57 அந்தாதி நூல்கள் இடம்பெறுகின்றன.

அந்தாதி

அந்தாதி என்பது அந்தம், ஆதி ஆகிய இரு சொற்களால் ஆன வடமொழித் தொடர் ஆகும். இத்தொடரில் உள்ள அந்தம் என்பது "முடிவு" என்றும் ஆதி என்பது "முதல்" என்றும் பொருள்படும். ஒரு பாடலின் ஈற்றிலுள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்த பாடற்கண் முதலாக அமையப் பாடுவது அந்தாதித் தொடை எனப்படும். நூல் முழுமையும் இம்முறை கையாளப்பட்டிருக்குமானால் அது அந்தாதி என்னும் நூல் வகையைச் சாரும். வெண்பா அல்லது கட்டளைக் கலித்துறைச் செய்யுட்கள் நூறு அந்தாதித் தொடையில் பாடப் பெறுவது அந்தாதி இலக்கிய வகையின் பொது இலக்கணமாகும்.

சங்க இலக்கியத்தில் பதிற்றுப்பத்தின் நான்காம் பத்திலும் ஐங்குறுநூற்றின் தொண்டிப்பத்திலும் அந்தாதி அமைப்பைக் காண முடிகிறது. சிலப்பதிகாரத்தின் இந்திரவிழவூரெடுத்த காதையில் அந்தாதித் தொடை அமைந்துள்ளது. பக்தி இலக்கியங்கள், அந்தாதியை ஓர் தனி இலக்கியமாக வளர்ச்சியடையச் செய்தன. சைவத்தில் காலத்தால் முற்பட்டவராக விளங்கும் காரைக்கால் அம்மையார் அற்புதத் திருவந்தாதியையும், முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் அந்தாதி அமைப்பிலும் பாடியுள்ளனர். பாட்டியல் நூல்கள் பல்வேறு சிற்றிலக்கிய வகைகளைக் குறிப்பிட்டு இலக்கணம் வகுத்தபோதும், அந்தாதி சிறப்பிடம் பெற்றுள்ளது.

சுவாமிகள் எழுதிய இலக்கிய வகையில் பதிகத்தினை அடுத்து மிகுதியாக அமைந்தவை அந்தாதி என்னும் இலக்கிய வகையாகும். இவர் எழுதியதில் தற்பொழுது ஐம்பத்தேழு அந்தாதி நூல்கள் கிடைக்கின்றன. தமிழ் இலக்கிய மரபில் இவ்வளவு அந்தாதி நூல்களை இயற்றியவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். இவரியற்றிய ஐம்பத்தேழு அந்தாதிகளையும் பொருண்மை அடிப்படையில்,

- முருகன் தொடர்பானவை
- சிவன் தொடர்பானவை
- திருமால் தொடர்பானவை
- பொதுவானவை

எனப் பாகுபடுத்தி இதில் முருகன் தொடர்பான இருபத்தி நான்கு அந்தாதிகளை இரண்டு பகுதிகளாகவும் ஏனையவை ஒவ்வொரு

பகுதியாகவும் அமைத்து, ஐம்பத்தேழு அந்தாதி நூல்கள் அடங்கிய நான்காம் தொகுதி ஐந்து பகுதிகளாக வெளியிடப்படுகின்றன.

இந்த நூலில்...

நான்காம் தொகுதியின் இந்த இரண்டாம் பகுதியில் முருகன் தொடர்பான பன்னிரண்டு அந்தாதி நூல்கள் இடம்பெறுகின்றன.

நான்காம் தொகுதியின் இரண்டாம் பகுதியாக அமைந்துள்ள இத்தொகுப்பில் 12 அந்தாதி நூல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் திருச்செந்தூர் வெண்பா அந்தாதி, திருவேரகம் வெண்பா அந்தாதி, முருகன் வெண்பா அந்தாதி ஆகிய மூன்றும் வெண்பா யாப்பில் அமைந்தவை.

யமக அந்தாதி வகையில் திருச்செந்தூர் யமகவந்தாதி எனும் நூல் இடம்பெற்றுள்ளது. யமகம் என்பது ஒரு பாடலின் நான்கு அடிகளிலும் முதலடியின் முதற் சீரே ஏனைய மூன்றடிகளுக்கும் முதற் சீராக அமைந்து பொருள் வேறுபடுவது ஆகும்.

திரிபு அமைப்பில் திருச்செந்தூர் திரிவந்தாதி எனும் நூல் இடம்பெற்றுள்ளது. பாடலின் நான்கடிகளிலும் முதலெழுத்து மட்டும் திரிந்து (மாறுபட்டு) ஏனைய பலவெழுத்துக்கள் ஒத்து நின்று பொருள் வேறுபட்டு அமைவது திரிவந்தாதி ஆகும்.

இதழகலந்தாதி வகையைச் சார்ந்த நிரோட்டடத்தலை செய்யுளந்தாதி, குகன் நிரோட்டத்தொருதொடைச் செய்யுளந்தாதி, ஏகத்தாள் இதழலந்தாதி, தலையணிச் சீரிதழகலந்தாதி ஆகிய நான்கு நூல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இதழ் கூடி வராத எழுத்துக்களைக் கொண்டு அமைவது இதழகல் அந்தாதி ஆகும். இதனை வடமொழியில் நிரோட்டகம் என்று கூறுவர்.

பத்துப் பத்துப் பாடல்களாக அந்தாதி தொடையில் நூறு பாடல்கள் பாடுவது பதிற்றுப்பத்தந்தாதி ஆகும். அந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள நூல் திருச்செந்தூர் பதிற்றுப்பத்தந்தாதி.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள கலிவிடந்தாதி, குருநாதனந்தாதி ஆகிய இரண்டு நூல்களும் கட்டளை கலித்துறை யாப்பால் அமைந்தவை. எழுத்து எண்ணிப் பாடப்பெறும் பா வகை கட்டளைக் கலித்துறையாகும்.

13. திருச்செந்தூர் வெண்பாவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 16இல் 1ஆம் ஏடு தொடங்கி 5ஆம் ஏடு வரையான 5 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 38.3

செ.மீ நீளமும் 3.3 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

14. திருச்செந்தூர் யமகவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 16இல் 18ஆம் ஏடு தொடங்கி 24ஆம் ஏடு வரையான 7 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 38.3 செ.மீ நீளமும் 3.3 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

15. திருச்செந்தூர் திரிவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 16இல் 11ஆம் ஏடு தொடங்கி 17ஆம் ஏடு வரையான 7 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 38.3 செ.மீ நீளமும் 3.3 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

16. திருச்செந்தூர் பதிற்றுப்பத்தந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 16இல் 24ஆம் ஏடு தொடங்கி 30ஆம் ஏடு வரையான 7 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 38.3 செ.மீ நீளமும் 3.3 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

திருச்செந்திற் பிரபந்தங்கள் என்னும் தலைப்பில் பதிப்பிக்கப்பட்ட நூலில் மேற்குறிப்பிட்ட நான்கு அந்தாதி நூற்களும் இடம்பெற்றுள்ளன. திருச்செந்தூர் தேவஸ்தான வெளியீடாக 1969ஆம் ஆண்டு இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூற் பதிப்பிற்கான மூலத்தைத் திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலிருந்து பெற்றுள்ளனர் என்பதனை,

"இப்பிரபந்தங்கள் நன்கு வெளிவர நூற்களைத் தந்தும் சில கடினச் சந்திப் புணர்ச்சியுள்ள நூற்களுக்கு உரையெழுதியும் பல்லாற்றாலும் உதவிய திருவாமாத்தூர் கௌமார மடத்துத் தலைவர் திரு.தி.செ.முருகதாச ஐயா அவர்களுக்கும் அதற்குறுதுணையாயிருந்த கோவை நாகராஜய்யர், கிருஷ்ணையர் ஆகியோர்களுக்கும்..." (திருச்செந்திற் பிரபந்தங்கள், பதிப்புரை, பக்.3) என்கின்ற குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது.

திருச்செந்தூர் முருகப் பெருமான் வெண்பா அந்தாதி நூல் மட்டும் 1983ஆம் ஆண்டு இரண்டாவது பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூலை, தண்டபாணி சுவாமிகளின் 85வது குருபூஜை விழாவன்று வளையாம்பட்டு திரு.க.பழனிவேல் பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் வெண்பா அந்தாதி வகைப்பட்டதால் அடி பிரித்துச் சீர் பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு சுவாமிகளின் பெயரர் முருகதாச சுவாமிகள் பாராட்டுக் கவிதை எழுதி தந்துள்ளார்.

17. திருவேரகம் வெண்பாவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 43இல் 15ஆம் ஏடு தொடங்கி 28ஆம் ஏடு வரையான 14 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 15செ.மீ நீளமும் 3 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 103 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வந்தாதி சென்னைப் பல்கலைக்கழகச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக பேரா. வீ.அரசு அவர்களின் நெறியாளுகையின் கீழ் வி.அருள் என்பவர் 2005 ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார்.

காப்பு மற்றும் நூற்பயன் சேர்த்து மொத்தம் 102 பாடல்களைக் கொண்ட இந்நூல் முழுமையும் அடிபிரித்துச் சீர் பிரிக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. திருவேரக வெண்பா அந்தாதிக்குச் சுவாமிகள் எழுதிய தனிப்பாடல் ஒன்று இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. சுவாமிகள் எழுதிய மூலச் சுவடியில் இவ்வந்தாதிக்கு அடுத்து அத்தனிப்பாடல் காணப்படுவதால், பதிப்பாளாரும் நூற்பயன் பாடலைத் தொடர்ந்து அதனை அமைத்துப் பதிப்பித்துள்ளார். இந்நூற் பதிப்பிற்குச் சுவாமிகள் தம் கைப்பட எழுதிய மூலச் சுவடியைத்தான் பதிப்பாளர் பயன்படுத்தியுள்ளார்.

18. முருகன் வெண்பாவந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 26இல் 223ஆம் ஏடு தொடங்கி 228ஆம் ஏடு வரையான 6 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 44.3 செ.மீ நீளமும் 3.4 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் இதுவரையிலும் பதிப்பானதாக அறியமுடியவில்லை.

19. நிரோட்டத் தலைச்செய்யுளந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 40இல் 1ஆம் ஏடு தொடங்கி 18ஆம் ஏடு வரையான 18 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 16.7 செ.மீ நீளமும் 3.5 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன தமிழ்ச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக அ.சதீஷ் அவர்களின் நெறியாளுகையின் கீழ் இரா.சண்முகம் என்பவர் 2022 ஆம் ஆண்டு இந்நூலினைப் பதிப்பித்துள்ளார்.

20. குகன் நிரோட்டத் தொருதொடைச் செய்யுளந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 40இல் 1ஆம் ஏடு தொடங்கி 24ஆம் ஏடு வரையான 24 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 16.7 செ.மீ நீளமும் 3.5 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் இதுவரையிலும் பதிப்பானதாக அறியமுடியவில்லை.

21. கலிவிடந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 2இல் 2ஆம் ஏடு தொடங்கி 9ஆம் ஏடு வரையான 8 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 38.5 செ.மீ நீளமும் 4 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் சென்னைப் பல்கலைக்கழகச் சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. வீ.அரசு அவர்களின் நெறியாளுகையின் கீழ் கு.சுதாகர் என்பவர் 2005 ஆம் ஆண்டு இந்நூலினைப் பதிப்பித்துள்ளார்.

காப்பு மற்றும் நூற்பயன் சேர்த்து மொத்தம் 102 பாடல்களைக் கொண்ட இந்நூல் முழுமையும் அடிபிரித்துச் சீர்பிரித்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் கலிப்பாவினால் பாடப்பட்ட இந்நூலில் 10 பாடல்கள் வீதம் பல்வேறு துறைகள் மற்றும் யாப்பினால் அமைந்துள்ளதனால் 10 பாடல்களுக்கு ஒரு முறை அதில் பயின்று வரும் யாப்பினைக் குறிப்பிட்டும், 10வது பாடலின் இறுதி அடியை அதற்குத்

தலைப்பாகவும் கொடுத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூற் பதிப்பிற்குச் சுவாமிகள் தம் கைப்பட எழுதிய சுவடியைத்தான் பதிப்பாளர் பயன்படுத்தியுள்ளார்.

22. குருநாதனந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 40இல் 2ஆம் ஏடு தொடங்கி 23ஆம் ஏடு வரையான 22 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 16.7 செ.மீ நீளமும் 3.5 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

குருநாதன் அந்தாதி என்னும் பெயரில் இந்நூல் 1967ஆம் ஆண்டு தி.செ. முருகதாச ஐயா அவர்களின் மணிவிழா மலராகத் திருவாமாத்தூர் கௌமார சபை வெளியிட்டுள்ளது. இந்நூலிற்கு முருகதாசரின் மகனார் சங்கரலிங்கம் அவர்கள் முன்னுரை கொடுத்துப் பதிப்பித்துள்ளார். அப்பகுதியில் நூல் குறித்தும், அதன் பதிப்பிற்குப் பொருளுதவி அளித்தவர் குறித்தும் குறிப்பட்டுள்ளார். காப்பு மற்றும் நூற்பயன் சேர்த்து மொத்தம் 102 பாடல்களைக் கொண்டுள்ளது இந்நூல்.

இந்நூல் முனைவர் வெ.சத்யநாராயணன் மற்றும் முருக. ஜெகதீஸ்வரன் ஆகிய இருவர் எழுதிய உரையுடன் பதிப்பாகியுள்ளது. சுவாமிகள் எழுதிய கங்கைப் பதிகம் மற்றும் கங்கை அந்தாதி ஆகிய இரு நூல்களுடன் இணைந்து சிரவை கௌமார மடாலய வெளியீடாக 2021 ஆம் ஆண்டு இப்பதிப்பு வெளிவந்துள்ளது.

23. ஏகத்தாவிதழகலந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 20இல் 38ஆம் ஏடு தொடங்கி 80ஆம் ஏடு வரையான 42 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 35.3 செ.மீ நீளமும் 2.9 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 32 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் கௌமார சமய பரமாகிய ஏகத்தாள் இதழகலந்தாதி மூலமும் உரையும் என்று தலைப்பிடப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளது. காஞ்சி முருகேச முதலியார் அவர்களின் விருப்பத்தின்படியும் வளவனூர்க் குமாரபுரியில் வசிக்கும் பொய்கைப்பாக்கம் அப்பாசாமி உபாத்தியாயரின் வேண்டுகோளிற்கும் இணங்கக் காஞ்சி நாகலிங்க முதலியாரால் சென்னை இந்து தியாலஜிகல் யந்திரசாலையில் 1888 ஆம் ஆண்டு இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

24. தலையணிச் சீரிதழகலந்தாதி

கோவை கௌமார மடாலய சுவடிக் கட்டு எண் 2இல் 1ஆம் ஏடு தொடங்கி 8ஆம் ஏடு வரையான 8 ஏடுகளில் இந்நூல் அமைந்துள்ளது. 38.5செ.மீ நீளமும் 4 செ.மீ அகலமும் கொண்ட ஏடுகளில் எழுதப்பட்டுள்ள இவ்வந்தாதியில் காப்பு மற்றும் நூற்பயன் உட்பட 102 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் இதுவரையிலும் பதிப்பானதாக அறியமுடியவில்லை.

நன்றி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையத்திற்குச் சுவடிகள் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தபொழுது பேராசிரியர் சு.வேங்கடராமன் அவர்கள் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு. குமரகுருபர சுவாமிகளிடம் என்னை அறிமுகப்படுத்தினார். மடாலயத்தில் உள்ள தண்டபாணி சுவாமிகளின் ஓலைச்சுவடிகளைப் பார்வையிட அனுமதித்ததுடன் மின் எண்மம் செய்யப்பட்டிருந்த சில சுவடிகளின் மென்படியையும் அளித்துதவினார்.

தண்டபாணி சுவாமிகளின் பதிப்பாகாத நூல்களை வெளிக்கொண்டு வரலாம் என்ற எண்ணத்துடன் இதுவரை பதிப்பான நூல்கள் குறித்த விவரங்களை முனைவர்பட்ட ஆய்வாளர் சு. கலைவாணி அவர்களைக் கொண்டு சேகரிக்கத் தொடங்கினோம். செம்பாதிக்கும் மேல் அவரது படைப்புகள் பதிப்பாகாமல் இருந்தன.

இந்நிலையில் கோவை கௌமார மடாலயத்தின் தலைவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகை புரிந்தார்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அவரோடு நிகழ்த்திய உரையாடலில் தண்டபாணி சுவாமிகளின் படைப்புகள் அனைத்துக்கும் ஆய்வுப்பதிப்பு கொண்டு வருவதன் தேவை குறித்தும் முறையியல் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது. கௌமார மடாலயத்தின் உதவியால் சுவடியில் இருந்த படைப்புகள் பெயர்த்தெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டன. இதன் விளைவாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின்வழி பிள்ளைத்தமிழ் நூல்கள் ஒரு தொகுதியாகவும் கலம்பகம் நூல்கள் ஒரு தொகுதியாகவும் வெளியிடப்பட்டன. எனவே இத்திட்டப்பணி தொடங்க முதற் காரணமாக அமைந்தவர் கௌமார மடாலயத்தின் தலைவர் தவத்திரு குமரகுருபர சுவாமிகளாவார்.


தற்பொழுது இத்திட்டப்பணி 'தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட்' நிறுவனம் வழி புத்துயிர் பெறுகிறது. இதற்குக் காரணமாக அமைந்தவர் இந்நிறுவனத்தின் நிருவாக இயக்குநரும் 'தினமலர்' நாளிதழின் இணையாசிரியருமான **திரு. இரா.கிருஷ்ணமூர்த்தி** அவர்கள். ஆய்வுப் பதிப்பின் தேவையை உணர்ந்து இப்பணியை விரைவாக முடிக்க அனைத்து உதவிகளையும் நல்கினார். தொடர்ந்து நூல்களை வெளிக்கொணர அவரது ஊக்கமும் ஆலோசனையும் மிகுதி. **திரு.இரா.கிருஷ்ணமூர்த்தி** அவர்களிடம் இத்திட்டப்பணி குறித்து அறிமுகம் செய்து வைத்து இப்பணியைத் தொடர்ந்து நிகழ்த்த ஆலோசனைகளை வழங்கி வருபவர் 'தினமலர்' நாளிதழ் உதவியாசிரியர் **திரு. சௌந்திர. சொக்கலிங்கம்** அவர்கள்.

பேராசிரியர் **சு. வேங்கடராமன்** அவர்களின் வழிப்படுத்தலும் முதன்மையான இடத்தைப் பெறுவது. இப்பதிப்பு தொடர்பாக கோவை மடாலயத்தில் நடைபெற்ற அனைத்து ஆய்வுக் கூட்டங்களிலும் பங்கேற்று தக்க ஆலோசனைகளை வழங்கியவர் பேராசிரியர் **ஐ. கே. சுப்பிரமணியன்** அவர்கள். தமிழகத்திலுள்ள பல்வேறு நூலகங்களுக்கும் சென்று தண்டபாணி சுவாமிகளின் படைப்புகளில் பதிப்பான நூல்களைத் திரட்டியதுடன் இத்திட்டப்பணியின் முதன்மையாய்வாளராகச் செயல்பட்டு வருபவர் செல்வி **சு. கலைவாணி** அவர்கள். சுவடிகளை ஒப்புநோக்கும் பணியிலும் பாடல்களின் அமைப்பு முறைகளை ஒழுங்குபடுத்துவதிலும் இப்பணியில் ஈடுபட்டவர் முனைவர் **கி.ஜெயகுமார்**. சுவடியைப் பெயர்த்து எழுதுதல், பிழைதிருத்தம் மேற்கொள்ளுதல் எனப் பலநிலைகளில் உதவியவர்கள் திட்ட ஆய்வாளர்கள் கா. முரளி, ஈ. உமா, அ. வீரமணி, மு. சுந்தரலிங்கம், வே.தமிழரசு, வி. அகிலா மற்றும் ஆய்வு நண்பர்களான முனைவர் அ.சண்முகம், ச. கனகராஜ் ஆகியோர்; தட்டச்சு செய்துதவியவர்கள் ச.வாசுகி, மணிச்செல்வி ஆகியோர்; நூலினை வடிவமைப்பு செய்தவர் நண்பர் கதிர்.

இந்த ஒருங்கிணைந்த உழைப்பு தொடர்ந்து வருவதால் தண்டபாணி சுவாமிகளின் அனைத்து படைப்புகளுக்கும் ஆய்வுப் பதிப்பு அடுத்தடுத்து வெளிவருவது உறுதி. இப்பணியில் இவர்களோடு நானும் இணைந்து கொள்வதன்றி எவ்வாறு நவிலுவது நன்றி!

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் — ***அ. சதீஷ்***

சென்னை - *600 113.* — இணைப்பேராசிரியர்



வண்ணைச்சரபம்

தண்டபாணி சுவாமிகள்

தோற்றம்: கார்த்திகை 16, விகாரி, கலி 4941 திருவருட்பேறு: ஆனி 23, விளம்பி, கலி 5000

குருபூசை: ஆனித் திருவோணம்

(28.11.1839 – 05.07.1898)

நூலாசிரியர் வரலாறு

செந்தமிழ் வளர்த்த புலவர்கள் பலர் தோன்றிய திருநெல்வேலி நகரத்தில் சைவ வேளாளர் மரபில் 22.11.1839 அன்று பிறந்தவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள். இவரது இயற்பெயர் சங்கரலிங்கம். தந்தை பெயர் செந்தில்நாயகம் பிள்ளை. தாயார் பேச்சி முத்தம்மை. சிறு வயதிலேயே கவிதை புனையும் ஆற்றல் வாய்ந்தவர். தமது எட்டாவது வயதில் சுரண்டை என்னும் ஊரில் குடிகொண்டுள்ள பூமிகாத்தாள் என்னும் அம்மன் மீது வெண்பா யாப்பில் பாடல் பாடினார். இயல்பாகவே கவிதை பொழியும் இவருடைய ஆற்றல் கண்டு இவரது ஆசிரியர் சீதாராம நாயுடு இவருக்கு 'ஓயா மாரி' என்ற சிறப்புப் பெயரைச் சூட்டினார். வண்ணப்பாடல்களை மிகுதியாக எழுதிய தனித்துவத்தால் வண்ணச்சரபர் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். மேலும் திருப்புகழ் சுவாமிகள், முருகதாச சுவாமிகள், அபர அருணகிரி என்ற பெயர்களிலும் சுவாமிகள் அழைக்கப்பட்டார்.

மரபான கல்வி முறையில் இலக்கணம், இலக்கியம், சமயம், மருத்துவம் போன்ற பல்துறை நூல்களை முறையாக ஆசிரியர்களிடம் கற்றுத்தேர்ந்தார். நூல்களைக் கற்கும் இளம்வயதில் பாடல்களை இயற்றி அவற்றை பனை ஓலைகளில் எழுதிவந்தார். கல்விச்சாலை ஒன்றை அமைத்து மாணவர்களைப் பயிற்றுவித்தார். சோழவந்தான் கந்தசாமி பிள்ளை, சித்திரபுத்திர பிள்ளை, அழகிய சொக்கநாத பிள்ளை, அரன்வாயல் வேங்கடசுப்பு பிள்ளை, ஊற்றுமலை வித்வான் கந்தசாமி புலவர், நாடக மேதை தவத்திரு. சங்கரதாச சுவாமிகள், ஆரியூர் வரதராச பிள்ளை போன்றோர் சுவாமிகளிடம் இலக்கண இலக்கிய நூல்களைக் கற்றனர்.

தேவார மூவர் மற்றும் அருணகிரிநாதருக்குப் பிறகு அதிகமான தலங்களுக்குச் (222 தலங்கள்) சென்று வழிபாடு செய்து பதிகங்கள் பாடினார். மேலும் ஒரு தலத்திற்குச் சென்றால் அத்தலத்தில் குடிகொண்டுள்ள அனைத்து தெய்வங்களையும் பாடும் வழக்கம் கொண்டவராக இருந்தார்.

முருகப்பெருமான், விநாயகர், சிவன், அம்பிகை, திருமால், சூரியன், மற்றும் கிராமதெய்வங்கள் மீது சமயாதீத நிலையில் எண்ணற்ற பாடல்களை எழுதினார். இவர் ஒரு லட்சம் பாடல்களுக்கு மேல் எழுதியிருப்பினும் அவற்றுள் பாதிக்கும் மேற்பட்ட பாடல்கள் இயற்கை சீற்றத்தாலும் சுவாமிகளால் அழிக்கப்பட்டும் மறைந்து போயின. இன்று கிடைக்கக்கூடிய பாடல்கள் சுமார் 49,000 பாடல்கள் ஆகும்.

இவருடைய படைப்புக்கள் பெரும்பாலும் சிற்றிலக்கிய வகைமைச் சார்ந்தவைகளாக உள்ளன. அந்தாதி, கலம்பகம், உலா, சதகம், பதிகம், பிள்ளைத்தமிழ் என பல வகைமைகளைச் சார்ந்தும் பல்வேறு யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தியும் நூல்களைத் தந்தார்.

அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத்தியல்பு ஆகிய மூன்று இலக்கண நூல்களை இயற்றினார். மேலும் அறிவிற் சிறந்த பல்வேறு புலவர்களின் வரலாற்றினைத் தொகுத்து 3005 பாடல்களில் 'புலவர் புராணம்' என்ற நூலையும் தனது வரலாற்றினை 'குருபர தத்துவம்' என்னும் நூலாகவும் எழுதினார்.

ஊர்கள் தோறும் சென்று நூல்களை எழுதி வந்த சுவாமிகள் சிறிதுகாலம் பழனித்தலத்தில் தங்கி அங்கு ஒரு மடாலயம் அமைத்தார். 'பழனித் திருவாயிரம்' என்னும் நூலை அத்தருணத்தில் எழுதினார். இவ்வாறு ஆயிரம் என்னும் வகைமைச் சார்ந்து தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம் போன்ற நூற்களையும் எழுதினார்.

அருணகிரிநாதரின் மறுபிறவியாகத் தன்னைக் கருதிக்கொண்டு மிகுதியான சந்தப்பாடல்களை (வேல்விருத்தம், மயில்விருத்தம், ஆறெழுத்தலங்காரம், திருப்புகழ் பதிகங்கள் போன்றவை) இயற்றினார். மேலும் அருணகிரிநாதரின் வரலாற்றினையும் எழுதினார்.

மரபான செய்யுள் வடிவில் நூல்களை இயற்றி வந்த சுவாமிகள் உரைநடை வடிவில் 'சத்திய வாசகம்' என்னும் நூலை எழுதினார். மேலும் முசுகுந்தனின் வரலாற்றினை நாடக வடிவில் 'முசுகுந்த நாடகம்' என எழுதினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவியிருந்த ஆங்கிலேய ஆட்சி மற்றும் ஆங்கிலக் கல்வியை எதிர்க்கும் விதமாக 'ஆங்கிலியர் அந்தாதி' என்னும் நூலை எழுதினார்.

தனது நூல்களை பனை ஓலைகளில் எழுதிவைப்பது மட்டுமின்றி அந்நூல்களை தனது சமகால புலமையாளர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் செய்து அவை குறித்து விவாதித்தும் வந்தார். தம்மிடம் வரும் புலவர்களின் நூல்களை வாசித்து அந்நூல்களுக்குச் சுவாமிகள் சாத்துகவிகள் எழுதிக் கொடுத்தார்.

மயிலம் முருகன் கோயிலில் உருத்திராக்க மாலையை திருமாங்கல்யமாக அணிவித்து சுந்தரத்தம்மையை தனது மனைவியாக ஏற்றுக்கொண்டார். அம்மையாருக்கு பல்வேறு நூல்களை சுவாமிகள் தாமே கற்பித்ததுடன், நூல்களை இயற்றவும் செய்தார். அவர் எழுதிய நூல் பெண்மாட்சி.

இவரது சமகாலப் புலவர்களாக விளங்கிய வடலூர் வள்ளலார், வளவனூர் சண்முக சுவாமிகள், ஆறுமுக நாவலர், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முதலியார், பூவை கல்யாண சுந்தர முதலியார், மாம்பழக் கவிசிங்க நாவலர் போன்றோருடன் நட்பு பாராட்டினார்.

தமிழகம் மட்டுமின்றி கேரளம், இலங்கை போன்ற பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்து சமய பேதமின்றி எண்ணற்ற பாடல்களை தந்தவர் தண்டபாணி சுவாமிகள்.

இவர் உருவாக்கிய திருவாமாத்தூர் கௌமார மடாலயத்திலும் இவர் மாணவர் தவத்திரு இராமானந்த சுவாமிகள் உருவாக்கிய கோவை கௌமார மடாலயத்திலும் இவர் எழுதிய சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. திருவாமாத்தூரில் தங்கி எல்லை தாண்டா விரதத்தை மேற்கொண்ட சுவாமிகள் **05.07.1898**இல் முருகப் பெருமான் திருவடியில் இரண்டறக் கலந்தார். இவரது மகன் வழி பெயரனார் தற்பொழுது திருவாமாத்தூரில் வசித்து வருகிறார்.

13

திருச்செந்தூர் வெண்பாவந்தாதி

13

திருச்செந்தூர் வெண்பாவந்தாதி

செந்துவர்வெற் பென்றிலகு சேந்தனடி யார்தமிழ்போற்
சிந்து முழங்குதிருச் செந்தூரில் - வந்துமுதல்
வேண்டு மவரை வினையொழிக்கு மெய்வழியிற்
றூண்டுகளிற் றானை துணை.

நூல்

சீர்மருவு செந்திநகர்ச் செவ்வேளைத் தேவர்புகழ்
பேர்மருவு வேற்கைப் பெருமாளைக் - கார்மருவு
கண்டமுளான் பெற்றநுதற் கண்மணியைக் கைகுவித்துக்
கொண்டவர்க்கே தீருங் குறை. 1

குறைவனைத்து மெண்ணிக் கொதிக்குமென்ற னெஞ்சி
னிறைவமையும் வண்ண நினையாய் - மறையவர்க
ளார்க்குமெழிற் செந்திநக ராதிபனே யாகமழை
நீர்க்குமிழி யாய்விடுமுன் னே. 2

முன்னே யுரைத்த மொழியொன்றுந் தப்பாம
லின்னே யருளற் கிசைகுவாய் - மின்னேரும்
வேலாயு தம்பிடித்து மிக்கதிருச் செந்தூரிற்
கோலாக லஞ்செய் குகா. 3

குகனே திருச்செந்தூர்க் கொற்றவனே யீசன்
மகனே யெனத்துதித்து வாழ்ந்து - மிகலோருக்
கஞ்சித் தவிக்கும்வண்ண மம்புயன்விட் டானெனவென்
நெஞ்சிற் கருதுகில்லே னே. 4

ஏனே னெனவடியேன் னெப்போ தழைத்தாலும்
வானே வழியா வரவேண்டும் - மீனேருங்
கண்ணா ரிருவர்புணர் கந்தனே செந்திநக
ரண்ணா வடிவே லவா. 5

வேலவனைச் செந்திநகர் வித்தகனை வேடமகண்
மாலவனைப் பச்சைமயில் வாகனனைச் - சாலக்
கருதி யருட்காட்சி கண்டவரைக் கண்டு
சுருதிநலங் கொள்ளல் சுகம். 6

சுகமுனிவன் கேட்டுமகிழ் தூயபுகழ்ச் செந்தூர்க்
குகனருளே தஞ்சமெனக் கொண்டா - லிகபரமுஞ்
சித்திக்கு மானந்தச் செல்வஞ் செழிக்கு முண்மைப்
பத்திக்கு முண்டாம் பலன். 7

பலங்கொண்ட சூர்மாவிற் பட்டுருவத் தொட்டு
வலங்கொண்ட வேலுடையான் வாழு - நலங்கொண்ட
செந்திற் பதியிடத்திற் சென்றவனைச் செந்தமிழால்
வந்திக்கப் பெற்றேன் வரம். 8

வரந்தந்து மாயா மயக்கடல்விட் டேறக்
கரந்தந்து காக்கக் கடன்காண் - சுரந்தந்து
தென்னவனை முன்னாண்ட செந்திநகர்த் தேசிகனே
யின்னமிரங் காதிருப்ப தேன். 9

ஏனற் புனங்காத் திருந்தாண்முன் னேகியநாள்
வானத் தவளை மறந்தாயோ - ஞானமொடு
செல்வமிகு செந்திநகர்ச் செவ்வேளே செஞ்சடையில்
வில்வமணி வார்பெறும்வாழ் வே. 10

வாழைக் கனியின் மதுவாறு பாய்ந்துவளர்
தாழைப் பொழில்சூழ் தருஞ்செந்தா - ரூழைத்
திருத்துமென வந்தடைந்தேன் செவ்வேற் குகனே
வருத்துதொழி லொன்றை மற. 11

மறமகடன் பாற்போய் வருந்திருத்தா ளன்பே
திறமெனக்கொண் டேனுதவி செய்வா - யறமுயல்வார்
வாழுந் திருச்செந்தூர் வள்ளலே மற்றொன்றைத்
தாழுமோ வென்றன் றலை. 12

தலையாறு கொண்டவனே சந்தவரைச் செந்தி
னிலையாக நின்றவனே நீயன் - றிலையூடு

வைத்தவெண்ணீ றீந்துரைத்த வார்த்தை மறந்தனையோ
வெய்த்தடியேன் வாடுகின்றே னே. 13

ஏதம் பலகோடி யான்புரிந்த துண்டெனினு
நீதந்த நீறவற்றை நீக்காதோ - சூதமறக்
காய்ந்தவடி வேற்கரத்துக் கந்தனே செந்தமிழ்நூ
லாய்ந்தவர்கள் வாழ்செந்தி லா. 14

செந்திற் பதியானே செக்கர்வெட்குஞ் சீரானே
தந்திப் பரியூருஞ் சண்முகனே - மந்திக்
குரங்கனைய நெஞ்சகத்தின் கோரம் சகியே
னிரங்கியெதிர் வந்தருள்வா யே. 15

வாயே யுனக்குநல்ல வாழ்வதென்றால் வைவேற்கைச்
சேயே திருச்செந்தூர்ச் செவ்வேளே - நீயே
துணையென்று சந்ததமுஞ் சொல்வதொன்றே கண்டா
யிணையின் றியபுகழுண் டே. 16

உண்டேயுன் னுள்ளத் துரிமையென்றன் மீதெனவுட்
கொண்டே யுலகிற் குதிக்கின்றேன் - றண்டேந்துங்
கைம்மறலி கண்ணெதிர் காட்டாதே செந்திநகர்ச்
செம்மலையே வேற்கையர சே. 17

அரசாகிச் செந்திநக ராளுங் குகனே
முரசார்க்கு நின்கோயில் முன்பிற் - பரசாருங்
கையான் முதலாம் கடவுளரெல் லாம்வணங்கல்
பொய்யாகா வண்ணம் புரி. 18

புரிசடையிற் கங்கைவைத்த புண்ணியனும் போதப்
பெரியகட லுண்டவனும் பேணித் - தெரிய
வுரைத்ததனை யென்றனக்கு மோதியருள் சந்த
வரைத்தலத்துச் செந்தின் முதல்வா. 19

முதல்வனெனத் தேறுநர்க்கும் முக்கட் பரமன்
புதல்வனெனப் போற்றுநர்க்கும் பொய்தீர்த் - திதமகிதங்
கண்டுதவி செய்யுமெழிற் கந்தனருட் காட்சிநல
முண்டுதிருச் செந்தின கருள். 20

உள்ளந் தளர வுரையுந் தடுமாற
வெள்ளங் கலுழ்ந்து விழிசோர - மெள்ளவந்துன்
சந்நிதியி னின்றறியேன் சந்தவரைச் செந்தினகர்ச்
செந்நிறவே லாவுதவி செய். 21

செய்ய பவளத் திருவாய் திறந்தொருசொல்
லையமறச் சொற்றருள லாகாதோ - வையகமும்
வானகமும் போற்றுசெந்தின் மாநகரில் வாழ்குகனே
நானடிமை யன்றோ நவில். 22

நவிலுங் கலைமுழுது நான்முகனைக் குட்டிப்
புவிபடைத்த நின்சீர் புகன்றுங் - கவிபகரென்
றென்னையுநீ கேட்டவித மென்னோ விலங்குசெந்தூர்
தன்னையினி தாண்டருள்கந் தா. 23

கந்தா திருச்செந்தூர்க் காவலா கன்னிபெற்ற
மைந்தா வெனவே வழுத்தாமற் - பந்தாய
கொங்கை மடவார் குணம்பாடிக் கொண்டாடிச்
சங்கைகற்போர்க் குண்டோ தவம். 24

தவமுந் திருநீறு தண்டமிழுந் தந்துங்
கவலைப் படுமாறு கண்டாய் - பவளநிறக்
குன்றமெனச் செந்தினகர்க் கோயிலிடம் வாழ்குகனே
யுன்றனக்கீ தாமோ வுரை. 25

உரையு முணர்வுமிழந் தோங்கார மென்னுங்
கரையுங் கடந்தபதங் காட்டும் - விரைமருவு
வன்ன மலர்க்கடம்பு மன்னுசெந்தின் மாநகரின்
முன்னவன்ற னாறு முகம். 26

முகமன் பகர்ந்துபலர் முன்றிலிற்போய் நின்றேற்
றகநொந்து வாடா தருள்வாய் - பகல்வந்து
திங்களொடு கொஞ்சுபொழிற் செந்தினகர்ச் சீர்விரும்பு
மெங்கள் குலதெய்வ மே. 27

தெய்வ மநந்தமெனத் தேயத்தார் செப்புமொரு
பொய்வழக்கை யெண்ணியெண்ணிப் புண்படே - னெய்வழிதார்ச்

செச்சைமலர் சூடுஞ் செந்தினகர்ச் சேவகன்ற
னச்சைநினைந் தாராய்ந்த தால். 28

ஆலிற் சதுரர்க் கறமுரைத்துள் ளானுமதன்
மேலிற் றுயில்வானும் வேதியனும் - வேலிற்
சிறந்தபுகழ்ச் செந்தினகர்ச் சேவகனைப் போற்றி
யிறந்தழியா வாழ்வுபெற்றோ ரே. 29

பெற்றோர் களிகூரப் பெண்ணிரண்டு தந்தவரு
மற்றோர்க ளாயபல வானவரு - முற்றோகை
கொள்ளமுது சூருடலைக் கூறுகண்ட கோமானே
யெள்ளருஞ்சீர்ச் செந்திற் கிறை. 30

இறையளவு மெய்யுணர்ச்சி யில்லாத பாவி
குறைமுழுதுந் தீரக் குறித்தேன் - பிறையணியும்
பெம்மான் மகனே பெருகுபுகழ்ச் செந்தினக
ரம்மானே நீயறியா யா. 31

ஆயு மறைக ளறியாத வானந்த
மீயும் படியென் றிசைவாயோ - வாயு
மனமு முடலுநல்க வல்லார்க் கிரங்குங்
கனமருவு செந்தின்முரு கா. 32

காகா வெனவே கதறுவேன் றன்னளவு
நீகாவார் போலிருக்கை நீதமோ - வாகாருஞ்
செந்தினகர்ச் சண்முகனே செய்யமயில் வாகனத்தில்
வந்திலைநீ றின்றருளு வாய். 33

அருளும் பொருளுமறி வானந்தப் பேறுந்
தெருளும் பெருகுநலஞ் செப்பு - மருளுமனத்
தீய ரணுகரிய செந்தினகர் வாழ்குமர
நாயகனைப் போற்றுகின்ற நா. 34

நாவார வாழ்த்து நலம்பெற்று நானுலகத்
தீவாரை நாடி யிளைக்கின்றே - னீவாரா
தின்னந் துயர்ப்படுத்த லேனோ விலங்குசெந்தூர்
மன்னவனே வேற்கைவய வா. 35

வாளைக் கயல்பாயும் வண்பணைச்செந் தூர்முருகன்
றாளைக் கருதித் தவஞ்செய்யீர் - நாளைக்கு
வந்தடருங் கூற்றுவனை மாய்த்தருளால் வானகத்தி
லுந்தமைவாழ் விப்பவரா ரோ. 36

ஆரோ வொருவ னடுத்தடுத்தென் றன்கனவிற்
பாரோரொப் பாமை பகர்ந்தானே - நீரோலஞ்
சங்கையறக் கொண்டசெந்திற் சண்முகனே தண்புனத்து
மங்கைகொண்கா நீயல்ல வா. 37

அல்லற் பணியி லயருந் தமியேனுட்
சொல்லற் கரியமொழி சொல்லியநீ - யில்லறமு
மன்றித் துறவறமு மன்றியுற விட்டனையே
வென்றிமிகு செந்தில்வாழ் வே. 38

வாழ்வு மலிந்து மதிமருண்ட மாந்தரிடந்
தாழ்வு பகர்ந்து சலிக்கின்ற - பாழ்வினையை
யென்றற் கமையாதே யீடில்புகழ் செந்தில்நகர்க்
குன்றத்தில் வாழுங் குகா. 39

குகைமருவு பல்கோடி குன்றிடத்துஞ் சென்றுன்
றகைவிளக்குஞ் சந்தத் தமிழின் - மிகைபாடி
வானவரு மெச்சமகிழ் வாழ்வெனக்கென் றீகுவையோ
வீனமில்சீர்ச் செந்திலா னே. 40

ஆனே றுகைத்தாற் கருளியதைத் தென்பொதியைக்
கோனே றுரைத்த குருநாதா - மானேர்கண்
மின்னார்க ளாடல் விளங்குதிருச் செந்தூரா
வென்னாசை நீயறிவா யே. 41

ஏல நெடுங்குழலார்க் கிச்சைகொண்டிங் கீடழிந்து
கால பயத்தாற் கலங்கினே - னீலமயில்
வாகனனே செந்தினகர் வாழ்வேமுன் வந்துனது
கோகனகத் தாளைக் கொடு. 42

கொடுங்காலன் றன்னுருவக் கோரங் கருதி
நடுங்காதுன் னாறெழுத்தை நாடி - நெடுங்கால

மாயிற்றே யின்னமும்வந் தாண்டிலையே செந்திநகர்க்
கோயிற்றே வாவேற் குகா. 43

வேற்குகனைச் செந்திநகர் மேவும் விறல்வேளை
நாற்குலத்து வித்தகர்க்கு நல்லோனை - யாற்குள்
ளிருந்தாற் கொருசொல் லிசைத்தானை யெண்ணிற்
பொருந்தாதோ வுண்மைப் புகழ். 44

புகழ்ச்சி முழுதுமென்னைப் பூவுலகோர் கூறு
மிகழ்ச்சி முழுதுமுன தென்பே - னிகழ்ச்சிமுற்றுந்
தன்செயலாக் கொண்டசெந்திற் சண்முகனே சத்தியமா
யென்செயலிங் கொன்றுமில்லை யே. 45

இல்லைச் செயலொன்று மென்றனக்கென்றி யான்விளம்புஞ்
சொல்லையெவர் சொல்வித்தார் சொல்லுவாய் - தொல்லைவளங்
குன்றாத செந்திநகர்க் கோயிற் குகனேநீ
யென்றாலொப் பாதா ரெவர். 46

எவரும் புகழுநல மேய்ந்ததிருச் செந்தூ
ரவர்தம் புடையிலென்னை யாக்காய் - நவநவமான்
யுள்ளத் தளவி லொளித்துவிளை யாடல்செய்யுங்
கள்ளத் தனத்துவிசா கா. 47

சாகா வரமுந் தருவாயென்றி யானடைந்தேன்
மோகாந்த காரத்தின் மூழ்கவிட்டா - யேகாந்தச்
சண்முகனே செந்திநகர்ச் சற்குருவே தாரணியி
லெண்முகமுங் கூறு மிதை. 48

இதுவதுவென் றோதி யிளைக்கு மயல்போய்ப்
பொதுமுதலென் றோர்ந்தும் புலர்ந்தேன் - பதுமமலர்
வாவிமலி செந்திநகர் வாழ்வே மறுகுமென
தாவி யுனதடைக்க லம். 49

அடைக்கலமென் றந்நா ளடைந்த வமரர்
புடைக்கலக்கந் தீர்த்த புனிதா - படைக்கலங்கொள்
பன்னிருகை யானே பழுதில் புகழ்ச்செந்தூரா
நின்னிருதா ளீந்தருளின் னே. 50

இன்னே யிரங்கிரங்கென் றெத்தனையோ கோடிதரஞ்
சொன்னே னனந்தந் துயர்ப்பட்டேன் - கன்னேய
முள்ளார்போ னீயிருக்க வொண்ணாதொண் ணாதுசெந்தூர்
வள்ளான் மயிலேறி வா. 51

ஏறுகைத்த பெம்மாற் கியம்பியதை யென்னுடனீ
கூறுதியே லியாவருனைக் கோபிப்பார் - வீறுமதக்
குஞ்சரத்தோ டாட்டையுங்கைக் கொண்டிலையோ செந்திலுக்கோர்
தஞ்சமென வந்தமர்கந் தா. 52

தானே வலியவந்து சாற்றியவா றத்தனையு
மேனேன் முடியா திருக்கின்றாய் - வானேயுங்
குஞ்சரிவாழ் செந்தினகர்க் கோமானே நானினிமேற்
பஞ்சரிக்க மாட்டேனப் பா. 53

அப்பன் குணமுனக்குண் டானா லடியவரை
யிப்படிநீ வைப்ப தியல்பன்றே - செப்பரிய
நால்வரைப்போ லிங்கொருவர் நன்கொளிர வேண்டாமோ
போல்வதில்செந் தூரா புகல். 54

புகலிக் கவுணியன் றன்புத்திரனை யேவி
இகலிச் சமணழித்த வெந்தா - யகல்புவியின்
முத்தமிழ்ச்சீர்ச் செந்தின் முதல்வாவம் மூர்த்தமொரு
பத்தனுக்கின் றீவாய் பரிந்து. 55

பரியுங் கரியுமணிப் பல்லக்கு மேறித்
திரியுஞ் சிலர்மனையிற் சென்று - விரியுங்
கரத்தொடுநின் றேற்கவிடேல் காசறுசெந் தூரில்
வரத்தொகுதி நல்குமிறை வா. 56

வாரணமும் பைங்கிளியும் வன்னமயி லும்பிடித்த
காரணத்தால்வே டர்குலக் கன்னிதான் - சேர
நினைத்தா ளவளையெந்த நீர்மைபற்றிக் கொண்டாய்
கனைத்தகடற் செந்தின் முருகா. 57

முருகு விரிபைங்கடம்பு மூரிக் குரவும்
பெருகுநிறச் செச்சையும்போற் பேணித் - திருகுமொழிப்

பொல்லேன் கவியும் புனைந்தருள்வாய் செந்தூரில்
வல்லே யருள்புரி தேவா. 58

தேவாதி தேவனுதற் றீக்கட் புலிங்கமென
மேவா வருஞ்செந்தூர் வித்தகனை - நாவார
வாழ்த்தும் பெருமைபெற்றான் மாநிலத்து மன்னர்வந்து
தாழ்த்துவார் தந்தந் தலை. 59

தலைமைப் பெருமைச் சடாக்கரத்தை நாடு
நிலைமைக் குரித்தாகி நின்றும் - புலைமருவு
புல்லருக்கு நாணிப் புலர்ந்தேன் புகழ்ச்செந்தூர்
வல்லவனே நீயுமறி வாய். 60

அறிவாய் வெளியா யகண்டமா யாறு
பொறியாகி நின்ற புலவன் - வெறியா
லளிமுரல்பூம் புன்னைமலி வானதிருச் செந்தூர்க்
கொளிருமபி மானமுடை யோன். 61

உடைத்தோலுள் ளான்புதல்வ னோதநீர் ஞாலம்
படைத்தோன் றலைபுடைக்கப் பார்த்தோன் - சடைத்தோர்
களிக்குநலங் காட்டுசெந்திற் காவலவ னன்பற்
குளிக்குமவ ரெந்தங் குழாம். 62

குழுவுங் கவுமாரர் குன்றுதொறுஞ் சென்று
வழுவின் றியதமிழால் வாழ்த்தும் - பொழுதை
வரவழைக்க வல்லாயோ மாட்டாயோ செந்திற்
சரவணப வாகுருநா தா. 63

நாதாந்த மோன நடுவான நாயகனை
வேதாந்த விஞ்சை விளைப்போனைக் - கூதாள
மாலைக் குறத்தி மணாளனைச்செந் தூரினிற்கண்
டோலைக்கைத் தூதரைவெல் வோம். 64

ஓமென்ற மந்திரத்தி னுட்பயனை யத்தனொடு
நாமென் றுரைத்தசெந்தி னாயகனைத் - தேமென்ற
செந்தமிழாற் போற்றச் சிறிதுஞ் சலியார்பா
லந்தகன்கைக் காசுசெல்லு மா. 65

மாவைப் பிளக்க வடிவேல் விடுத்தசெந்திற்
றேவைக் கருதித் தெளியாமற் - பாவையர்க
ளூடற் குருகி யுழலுமெனை யொத்தமுழு
மூடர்க்கும் மோனமெய்து மோ. 66

மோதுந் திரைக்கடனீர் முத்தெறியுஞ் செந்திலிலென்
வாதும் பிணக்கு மறந்தேனே - யோதும்
புகழும் பிறவும் பொறுத்துப் பொதுவாத்
திகழும் குகன்செயலைத் தேர்ந்து. 67

தேருலவும் வீதித் திருச்செந்திற் சேவகனாங்
கூருலவா வேலான் குணங்களையிங் - காருடனே
சொல்லலாம் சொல்விற் றொலையாது சொன்னமட்டி
னல்லதென்று கொள்ளார் நரர். 68

நரகம் புகுதார் நமன்கையிற் சிக்கார்
கிரகங்க ளால்வருந்தார் கிள்ளை - பரவுதமிழ்ச்
செந்திற் குகனைத் தினமு மறவாமற்
சிந்திக்கப் பெற்ற சிலர். 69

சிலரன்றிச் செந்தினகர்ச் சேந்த னடியார்
பலரென் றுரைக்கப் படுமோ - வுலகறிய
நொந்து மனக்கண்ணா னோக்கிநோக் கிக்குழைந்து
நைந்துமருட் பேறுபெறா நான். 70

நானென் றிறுமாந்து நாட்கழித்த நட்டம்போய்த்
தானென் றமையுந் தவம்பெற்றேன் - றேனென்று
பெய்வேத சாரம் பெருகு திருச்செந்தூர்
வைவேலான் சந்நிதியில் வந்து. 71

வந்திப்ப வர்க்குநல்ல வர்க்கு மறவாமற்
சிந்திப்ப வர்க்குத் திருவருளுஞ் - செந்திற்
பதியிலிருந் தீகின்ற பன்னிருகைச் செவ்வேள்
கதியினுக்கோர் வித்தனையான் காண். 72

காண விரும்புமென்னைக் காசினியி லுள்ளவர்க்கு
நாண விடுத்தனையே ஞாயமோ - சேணளவு

சோலைத் திருச்செந்தூர் துங்கமுறச் செய்யும்வண்ணம்
வேலைத் தரித்ததெய்வ மே. 73

மேவார்க ளாமவுணர் வேரறுத்த வேற்பெருமான்
பாவாண ரேவல்செய்யும் பான்மையான் - மூவா
முருகோன் திருச்செந்தின் முன்னோன் முராரி
மருகோ னெனையாண்ட வன். 74

ஆண்டலைப்புட் கூவு மடற்கே தனத்தானைத்
தூண்டகுசீர்ப் பன்னிரண்டு தோளானை - மீண்டும்
துறவா தருள்செந்திற் பெம்மானைச் சற்றும்
மறவா தெனது மனம். 75

எனது மனந்தானோ வெங்கெங்கு நிற்கு
முனது திருவருளோ வோதா - யனவரதம்
பல்வார்த்தை யென்பாற் பகர்கின் றதுசெந்திற்
செல்வா சிவதே சிகா. 76

தேசிகனுந் தெய்வமுநின் சீரருளே யென்றுகுறித்
தாசி பகர்ந்து மலமந்தேன் - வாசியென
வன்னமயி லூர்வானே வந்தியர்சூழ் செந்திலில்வாழ்
முன்னவனே யென்னவித மோ. 77

மோன மறியேன் முதிருந் தவமறியேன்
ஞான நிலையறியே னாயினே - னானமட்டில்
வந்திப்பேன் கைவிடுமோ வாழ்விக்கு மோவளஞ்சேர்
செந்தினகர்க் கந்தன் செயல். 78

செயலிறந்த பூரணமே தேவர் நிமித்தம்
வயமலிவேற் கந்தனென வந்த - வியனுணரார்
செந்தினகர்க் கோயிலுக்குட் சென்றாலுந் தேர்ந்துகொள்வார்
மந்திரவித் தாம்பிரண வம். 79

பிரணவத்தி னுட்பயனைப் பேசிப் பிணங்குங்
கரணமறப் பார்க்குங் கடவு - ளரணந்
திகழ்கின்ற செந்திற் சிறுவனெனச் செப்பி
யிகழ்கின்ற வர்க்குநல்லோ னே. 80

நல்லோர் மருவுசெந்தி னாயகனை நஞ்சுமிழ்வேல்
வல்லோனே யென்று வழுத்தாமல் - பொல்லோனென்
றேசு மவர்க்கிலக்கா யிங்கலையும் வம்பருக்கே
பூசுரர்கோன் றன்கைப் பொறி. 81

பொறியும் புலனுமற்ற போத மயமென்
றறியுந் தவர்க்கெளிய னாவான் - வெறிமிஞ்சு
மந்தித் திரள்வாழ் மலர்ச்சோலை மன்னுதிருச்
செந்திற் பதியிலொரு சேய். 82

சேயாய்க் குருவாய்ச் சிவனுக் குவகைநல்கித்
தீயார்க் கெமனாகிச் சித்தருக்குத் - தாயாகிச்
சந்தவரைச் செந்தூர் தனக்கரச னாவதுவே
சுந்தரத்தோட் கந்தன் தொழில். 83

தொழுவார் விழிகாணத் தோகை மயின்மேற்
குழுவாம் புலவரொடு கூடி - நழுவாத
வேல்பிடித்துத் தோன்றுதலை விட்டனையோ செந்திலிற்செங்
கோல்பிடித்த கைக்குகனே கூறு. 84

கூறாய மங்கையுடைக் கோமான் குருபரனை
யாறாறு தத்துவத்துக் கப்பாலிற் றேறாத
வென்போ லியர்க்கு மிசைந்தநலங் காட்டுசெந்தூ
ரன்போர்க்கே நல்கு மருள். 85

அருளாசை கொண்டவர்போ லம்புவியிற் றோன்றிப்
பொருளாசை மிஞ்சிப் புலர்ந்தேன் - தெருளாளர்
மன்னுதிருச் செந்திநகர் வள்ளலே வந்துரைத்த
நின்னுரைபோற் செய்தருளின் னே. 86

நேயம் பெருத்துமுழு நீறணிந்த வேடமிட்டு
மாய விருளான் மருள்கின்றே - னீயதுகண்
டின்னந் திருவருட்பே றீந்திலையே செந்திநகர்
மன்னவனே வெண்சேவ லா. 87

சேவற் பதாகைதிகழ் செந்திநகர்ச் சந்தவரைக்
காவற் றொழில்புரியுங் கந்தனையே - யாவற்

பெருக்கமொடு கைகுவிக்கும் பேறுபெற்ற பேர்க்கே
திருக்ககன்ற ஞானத் திரு. 88

திருவும் பெருகருளுஞ் செஞ்சொற் றமிழு
மருவும் படிகருணை வைக்குங் - கருமறலி
பற்கோரங் காணார் பரவுதிருச் செந்தினகர்ப்
பொற்கோயில் கொண்ட பொருள். 89

பொருணசையாற் பல்வாறு புண்படுவேன் றன்னை
யருணகிரி யென்றுரைத்த தாரோ - தருணமறிந்
தாளுந் திருச்செந்தி லாதிபனே யுன்னையன்றிக்
கோளுஞ் சிறிதுளது கொல் 90

கொல்லா விரதமொன்றே குற்றமற்ற தென்றுணர்ந்து
நில்லார் மனத்தகத்து நிற்பாயோ - வல்லாண்மைக்
கந்தனே செந்தினகர்க் காவலனே நீநிறைந்த
தெந்தவித மென்னோ டியம்பு. 91

இயமன்கைச் சூலமினி யென்செய்யு மாரன்
செயமிஞ் சியகணையென் செய்யும் - வியனொன்றும்
வேதன் விதியென்செய்யு மிக்கதிருச் செந்தூர்வாழ்
நாதனரு ளுண்டே நமக்கு. 92

நமராய னைத்தடிந்த நம்பன் பரவுங்
குமரா வெனத்தினமுங் கூவுந் - தமராவா
ரெல்லவரும் வாழவென்றே யீடில்புகழ்ச் செந்தூர்வாழ்
வல்லவனைக் கெஞ்சுமென்றன் வாய். 93

வாய்மை யறிவடக்கம் வண்மை முதலாய
தூய்மை முழுதுந் தொகுத்துதவுஞ் - சேய்மருவு
செந்தினகர்க் கோயிற் றெரிசித்துக் கொண்டபின்னும்
புந்தியிடத் துண்டாமோ பொய். 94

பொய்யும் புலையும் பொருந்தினோர் செந்தமிழால்
வையும் பொழுது மகிழுமே - மெய்யுலக
மேழும் பரவு மெழிற்றிருச்செந் தூரிடத்தில்
வாழு மொருவன் மனம். 95

மனங்கொண்ட பேராண்மை வாழ்வனைத்து நல்குங்
கனங்கொண்ட செந்தினகர்க் கந்தன் - றினங்கொண்ட
செந்தமிழி னாசை சிறிதுந் தணியானென்
றிந்தவித நானறிந்த தே. 96

அறிந்த தனந்த மறிவரிய தாகிச்
செறிந்த தனந்தந் திரையான் - மறிந்தபுனற்
சிந்துடையான் செந்திற் றிருவுடையான் செங்கடப்பங்
கொந்துடையா னாடுகின்ற கூத்து. 97

கூத்தாடு வான்மகனைக் கொற்றநவ வீரருக்கு
மூத்தானைச் செந்தின் முருகோனைச் - சேத்தார்க்
கடம்பணிந்த திண்புயனைக் காணக் கருதித்
திடம்படுநெஞ் சுள்ளார் சிலர். 98

சிலருக் கருள்புரிந்த செந்திற் குமரன்
பலரைப் பரதவிக்கப் பார்த்தா - னுலகிற்
சிறியேனை யாள்வானோ சீரழிப்பான் கொல்லோ
வறியே னறியேனம் மா. 99

அம்மம்ம செந்தினக ராளு மயில்வேற்கைச்
செம்ம லருளைத் தினநாடி - மும்மலமுஞ்
சிந்த முயலுந் திறன்பொருந்துஞ் சித்தருக்குச்
செந்தமிழே யொப்பல் பெருஞ்சீர். 100

நூற்பயன்

தண்பாவு செஞ்சொற் றமிழ்த்திருச்செந் தூர்முருகன்
வெண்பா வொருநூறும் வேண்டுவார் - கண்பாய
பூவுலகும் வானுலகும் போற்றும் புகழ்பொறுத்து
மேவுவரன் னோனடிக்கீழ் மெய்.

முற்றிற்று

14

திருச்செந்தூர் யமகவந்தாதி

14

திருச்செந்தூர் யமகவந்தாதி

காப்பு

கட்டளைக் கலித்துறை

கந்த னியமக வந்தாதி மார்பணி கைக்கொளச்சி
கந்த னியமக வந்தா திமதக் களிறுகொள்வார்
கந்த னியமக வந்தாதி யாடமர்க் காரன் செந்திற்
கந்த னியமக வந்தாதிக் காவல் கணபதியே.

நூல்

சீரனந் தந்தரும் பூவார் கமலஞ் செழுங்கயல்வெண்
சீரனந் தந்தரும் வாவிகள் சூழ்செந்திற் சேய்தெளிசொற்
சீரனந் தந்தரும் வாழப் புரியுந் திறன்முதலாஞ்
சீரனந் தந்தரும் பாக்கைத்து ளார்க்குத் தினநல்குமே. 1

தினமா தரிக்கு மொழியா லுருகித் திகைத்துவருந்
தினமா தரிக்குந் ததியிது காண்செந்திற் செல்வபுல்லைத்
தினமா தரிக்கும் பிரானுக்கு நாடொறுஞ் செங்கரத்தேந்
தினமா தரிக்கும் புதல்வா கலாபச் சிகண்டியனே. 2

சிகண்டியன் சேவலன் செந்தூரன் பைங்கிளி செப்பிடுமா
சிகண்டியங் கும்புயத் தேற்றிவைத் தோன்கொலை செய்விடம்வா
சிகண்டி யருளும் புதல்வன்வெண் ணீற்றைச் சிறப்புறப்பூ
சிகண்டி யணிந்து தவம்புரி வாரெண்ணில் சித்தர்களே. 3

சித்தத் தருக்குடை யார்மனை வாயிலிற் சென்றுடல்கூ
சித்தத் தருக்கு நிகராகினேன் பன்றித் திண்மருப்பொ
சித்தத் தருக்குநல் குங்கரத் தாய்திருச் செந்திலில்வ
சித்தத் தருக்குணர் வார்பணி நாடொறுஞ் செய்யச்செய்யே. 4

செய்ய கவிப்புல வர்க்கருள் வாய்கன்னல் செந்நெலறாச்
செய்ய கவிப்புல வம்பொலி சீர்திகழ் செந்திலில்வாழ்

செய்ய கவிப்புல வம்போதி கொள்ளிற் சினந்தடங்கச்
செய்ய கவிப்புல வர்ப்புரந் தாய்மெய்ச் சிரத்தைநல்கே. 5

சிரத்தைய வாவி யருகிற்செய் தார்புணர் சேந்தவெளவச்
சிரத்தைய வாவிய வாறளித் தாய்செந்திற் சேருமறு
சிரத்தைய வாவிய செந்தகர்ச் சேவக சிங்கனஞ்சச்
சிரத்தைய வாவியற் பாடல்கொண் டீந்தருள் செம்புகழே. 6

செம்புக ரானனத் தான்றுணை யாங்குக தெற்பையினாற்
செம்புக ரானப் புரிந்தான் மருக சிவன்விழியிற்
செம்புக ரானல் லுருக்கொண்டு ளாய்திருச் செந்திலெந்தாய்
செம்புக ரானதொக் குஞ்சிந்தை யேனைத் திருத்துதியே. 7

திருத்து திக்கையர் வெருண்டேத்து மாகு செலுத்துவதாந்
திருத்து திக்கையன் றன்னோ டிகலுஞ் சிறுவகஞ்சத்
திருத்து திக்கைய மருக செந்தூர்க்குக செஞ்சொலன்பர்
திருத்து திக்கை யறிவீனர்முற் போந்துயர் தீர்த்தருளே. 8

தீரத் தனத்தத்தை பாடிப் புனையுந் திருப்புகழ்ச்சேய்
தீரத் தனத்தத்தை நீக்கவல் லான்றிருச் செந்திற்சிந்து
தீரத் தனத்தத் தயிலணிந் தோன்பதந் தேடிவருந்
தீரத் தனத்தத்தை வேதன்செய் முத்தொழிற் றீயனவே. 9

தீயன்ன வாகலி மிக்குடை யேன்வெஞ் சினப்பணியைத்
தீயன்ன வாகவ வீரருள் ளாய்திருச் செந்திலெந்தாய்
தீயன்ன வாகத்த வேலாயு தம்புனை திண்புயமூர்த்
தீயன்ன வாகனற் கஞ்சாத வாழ்வருள் சிக்கறுத்தே. 10

சிக்கன கங்களைச் சற்றுஞ்செய் யேன்புதுச் செல்வரைக்கெஞ்
சிக்கன கந்தரல் வேண்டிநிற் பேனின் திருப்புகழ்பே
சிக்கன கந்தொறுஞ் சென்றிறைஞ் சேனெழிற் செந்திலைநே
சிக்கன கந்தைகொண் டேனெனை யாண்டருள் சீக்கிரமே. 11

சீக்கிர கந்தனக் கேயுழைத் தெய்த்துவிண் சேரொன்பதாஞ்
சீக்கிர கந்த மிகல்காட்ட நொந்தனன் செஞ்சிகிமேற்
சீக்கிர கந்தம் பதியாகி வந்தருள் செந்நிணவேற்
சீக்கிர கந்தசெந் தூர்முரு காதொண்டர் சிந்தையனே. 12

சிந்தைக் கவிகளைப் பாடும் புலவர் சிவந்தபெருஞ்
சிந்தைக் கவிகளைப் பொன்றுநல் கானைச் செழுங்கனிகட்
சிந்தைக் கவிகளை யின்றாடுஞ் சோலைத் திருச்செந்திலூர்ச்
சிந்தைக் கவிகளைத் தூயர்பல் லோர்தினஞ் சேவிப்பரே. 13

சேவித் தகரைய ராதியர் போற்றச் செலுத்துகையாய்
சேவித் தகரையன் றாண்டா யுனைத்திருச் செந்திலிடஞ்
சேவித் தகரை யளகத்தர் கோவைச் சினப்பவர்முற்
சேவித் தகரைய மெய்த இகல்வதென் செப்புதியே. 14

செப்பந்த மான முலையார் மயலிற் றிகைத்தெறியுஞ்
செப்பந்த மானக்க வந்தகற் கஞ்சினஞ் செந்நெல்வயல்
செப்பந்த மானற் கமலங்கொள் சீர்திகழ் செந்தில்வண்மை
செப்பந்த மானவின் றாள்வாய்கொ லோசிவ தேசிகனே. 15

தேசிகச் சுந்தரச் செவ்வேண்மு னேனலிற் சென்றபர
தேசிகச் சுந்தரப் பொற்பூணும் பூண்டு திரண்டகனித்
தேசிகச் சுந்தரத் தேகவல் லார்துணை செந்திலில்வாழ்
தேசிகச் சுந்தர வாமானை தோழனென் சித்தத்தனே. 16

சித்தமஞ் சாத வனவேடர் கொட்டிற் சிறுமிமுன்னஞ்
சித்தமஞ் சாதல்செய் வானிகர் மேனித் திருமறைக்குஞ்
சித்தமஞ் சாதரஞ் செய்சந்த மால்வரைச் செந்திலையா
சித்தமஞ் சாதறு மானந்த மீந்துனிற் சேர்த்துக்கொள்ளே. 17

சேரன் பராவக் கனவூடன் றோர்மொழி செப்பச்சென்றாய்
சேரன் பராவல்க ளெல்லா முதவுந் திருச்செந்திலாய்
சேரன் பராவ லவாவெனக் கண்டனை தீயருடன்
சேரன் பராவம் புவிமீதெ னாண்மை திகழச்செய்யே. 18

திகரப்ப டாமைபன் கொள்களி யாற்கடற் சேலையுடுத்
திகரப்ப டானெனத் தேவர்கள் வாடச் செகுத்தருண்மூர்த்
திகரப்ப டாமுகத் தாற்கிளை யான்திருச் செந்திலின்வை
திகரப்ப டாவிடிற் றானவர்க் கெல்லவன் றேரஞ்சுமே. 19

தேரலங் காரமட் டோரும் புலமைத் திறலருள்சேய்
தேரலங் காரத் திருச்செந்தி லானும்பர் சிந்தையஞ்சுந்

தேரலங் காரகப் பஞ்சாக்கி னான்றனைச் சிந்திக்கப்பேய்த்
தேரலங் காரம காமாயை தீரின்பஞ் சித்திக்குமே. 20

சித்திக்கு மானந்த முத்திக்கு நேயங்கொள் சிந்தை நொந்து
சித்திக்கு மானந்தச் சேனையுங் கொண்மதன் செய்சமர்க்கஞ்
சித்திக்கு மானந்தச் செய்தருள் வாய்செந்திற் சீரையிரட்
சித்திக்கு மானந்த மிழ்ப்பாடல் கொண்டணி சேயவனே. 21

சேய வனசரத் தையல்சொற் கேட்குஞ் சிறுவமுதிர்
சேய வனச ரவணோற் பவாதுதி செய்கிலர்க்கோர்
சேய வனசரச் சூர்மாய்செந் தூரில்நிற் றேர்ந்துமரன்
சேய வனசரற் றீர்த்தோனென் பார்பலர் தேயத்திலே. 22

தேயா மதியன்ன வாறு முகத்துச் சிவகுருவாந்
தேயா மதியன்ன மையம் வினாவத் தெளிபுலவ
தேயா மதியன்ன மாவென்ற வாதிருச் செந்திலுறுந்
தேயா மதியன்ன டாமுன்ன மீந்தருள் செங்கரமே. 23

செங்கதி ராகத் தவருளந் தோறுந் தினம்விரிக்குஞ்
செங்கதி ராகத்த செந்தூர்க் குமரகண் டீமதியஞ்
செங்கதி ராகத்தர் பாலநின் றோகையின றிக்கத்தக்கச்
செங்கதி ராகத் தகவல்பல் பாந்தளைச் சேதித்தவே. 24

சேதிக்கு மம்புய மாதியைம் பூவுங்கொள் சித்தசனைச்
சேதிக்கு மம்புலிங் கத்தழற் கண்ணர் தெளியச்சொன்ன
சேதிக்கு மம்புண்ட பாடற்கும் வேட்டனன் செந்திலர
சேதிக்கு மம்புலி யென்றாதி யோருந் தெரியநல்கே. 25

தெரியலைக் கொண்ட லொடுவீசுங் கார்கடற் செந்திநகர்த்
தெரியலைக் கொண்டன் மடவாரைப் பாடிச் சிலருய்ந்துளார்
தெரியலைக் கொண்டரு வேன்மயில் சேவற்குச் செங்கடப்பந்
தெரியலைக் கொண்ட புயத்துக்குப் பாடித் திகைத்தனனே. 26

திகையத்தி யானங் கனவாய் விடச்செய்த சிறுவிரலா
திகையத்தி யானங் கலிதீர வந்துயர் சேந்தவினை
திகையத்தி யானங்கள் செய்வார் மிகுஞ்செந்திற் செல்வவெண்டந்
திகையத்தி யானங்கன் மைத்துன வேதத்த தீதஞ்சொல்லே. 27

தீதாங் கவலைக் கடற்சீர்ச்செந் தூர தெரிவருஞ்
தீதாங் கவலை யெறிகூற் றுவனைத் தினந்நினைக்கு
தீதாங் கவலைக் கிளையாம லாண்டு செனனவித்தைத்
தீதாங் கவலைக் குறித்துரற் குத்துந் தியக்கருத்தே. 28

தியக்க மறமகள் பார்கொண்டு கெஞ்சிச் சிறுபதமேந்
தியக்க மறமறி சென்னியிற் சேர்த்தவன் சீறரவாத்
தியக்க மறலணி வார்மைந்தன் வாழ்திருச் செந்திலையேத்
தியக்க மறணிந்த தென்னவுய்ந் தோருஞ் சிலருளரே. 29

சிலவா கனத்தவங் கையான் மருகன் சிகிமுதலாஞ்
சிலவா கனத்தவன் செந்தூர்க் குருபரன் றெள்ளருவி
சிலவா கனத்தவ ளஞ்சேர்பல் கோடி சிலம்பனென்னெஞ்
சிலவா கனத்தவஞ் செய்யவொட் டாதுறுஞ் சேவகனே. 30

சேவகப் பாவலர் கோன்றிருச் சந்நிதித் தேவரையோர்
சேவகப் பாவலஞ் சோர வுதவிமுன் செய்தவன்போர்ச்
சேவகப் பாவல கத்தொன் பதின்மர் திறற்றுணைவன்
சேவகப் பாவலன் கண்டேங்குஞ் செந்திற் சிறுவனன்றே. 31

செந்திற் சிறுவ நிலையாளர் மெச்செழிற் சேந்தவிடச்
செந்திற் சிறுவன்பர் தேடருஞ் சண்முக செங்கதிராற்
செந்திற் சிறுவளர் சீர்த்துணை யென்கலர் தேவதிருச்
செந்திற் சிறுவநின் பொற்றாளை யென்புன்சிரத் தில்வையே. 32

சிரத்தில கந்தைச் சுமைகொண்டு ளேற்குத் திறன்மிகுவச்
சிரத்தில கந்தைய கோன்புகழ் பேரருட் சீரருள்வாய்
சிரத்தில கந்தையங் கும்புவி கொண்டது தீர்க்கசெந்திற்
சிரத்தில கந்தைய லார்மோகிக் கும்புயச் சின்மயனே. 33

சின்மயங் கண்டங்கு மேலோர் பிரானென் சிறியபுன்னெஞ்
சின்மயங் கண்ட திருவடி யானயிற் றிண்புயச்சேய்
சின்மயங் கண்டரு சோலைச்செந் தூரன்பற் றேவரும்ப
சின்மயங் கண்டசம் போலாதற் றீர்த்த சிகாமணியே. 34

சிகாவள மேறிய சேவக தாரகச் சீர்தருதே
சிகாவள மேநிகர் கொங்கைக் கவுரிகைச் செல்வமைவ

சிகாவள மேவிய செந்தூர்க் குமர தினமெனையா
சிகாவள மேகமொல் கீகைத் தொழிற்கைத் திரந்தெரியே. 35

திரத்த வரச னெனச்செந்தி லாள்குக செல்லெனவ
திரத்த வரச மிவர்ந்தாய்வை வேலிற் செறிதருமு
திரத்த வரசண் முகாவெழு கோடி திருப்பெருமந்
திரத்த வாச மறியேற்கு னன்பென்று தித்திக்குமே. 36

தித்திக்கு மாரனை யந்தவிர்த் தொன்றைச் சிவனுக்குப்போ
தித்திக்கு மாரனை வெல்லச்செய் தோன்செந்திற் செல்வனிரு
தித்திக்கு மார னயமுங்கொள் வெற்பினர் சித்தத்துக்குத்
தித்திக்கு மாரனை யாதென்னை யாளிற் செகமுய்யுமே. 37

செகமுத வாவென நீத்தவல் லோர்தினஞ் செய்தவத்தைச்
செகமுத வாரியொப் பாம்விழி யார்க்கஞ்சிச் சிந்தைநொந்தேன்
செகமுத வாவரு முய்யுஞ்செந் தூர சிவன்விரும்போர்
செகமுத வாண்மைப் புள்ளர சஞ்சச் சினத்தவனே. 38

சினத்த வரவணி வார்மைந்த யாருந் தெரிவருமெய்ச்
சினத்த வரவச்செஞ் சீரடி யார்நடஞ் சேர்செந்திலாய்
சினத்த வரவர்தஞ் சிற்றின மாயெனைச் செப்புமுன்னுன்
சினத்த வரவ கடந்தீர் நலம்பெறச் செய்தருளே. 39

செய்தவஞ் சற்றுளத் திச்சைபல் கோடிநின் சீரருண்மஞ்
செய்தவஞ் சற்றுய்ந்து ளாருடன் சேர்வன்கொ றீமலரஞ்
செய்தவஞ் சற்றுதி யார்வாழ்செந் தூர செழும்பவளச்
செய்தவஞ் சற்றுணைக் கையான்முன் னல்கினை தெம்புற்றதே. 40

தெம்பல வாவிறற் காட்டவென் றாடிய சேய்கமலத்
தெம்பல வாவி பொரும்பணைச் செந்திற் சிவகுரு வந்
தெம்பல வாவி மறுகாதன் றப்படிச் செப்பவுண்டாந்
தெம்பல வாவியிற் றீயிற் புனலின் சிதறியதே. 41

சிதறிய வேண படியாட லெங்கணுஞ் செய்யமுன்னாட்
சிதறிய பாடல் பெறநாடி வாடிய சீரறிவாய்
சிதறிய தாமென நல்குநர் வாழ்திருச் செந்திற்கந்தா
சிதறியங் கிவ்வுடற் றின்னாமுன் னீந்தருள் சேவையையே. 42

சேவை யினியதெண் ணீர்த்தென்றல் வெற்பன் சிறுமுனிமுன்
சேவை யினியங்கும் வேலோடு சென்றனை செந்திலுக்கச்
சேவை யினியமம் வைத்துவந் தேன்கொடுஞ் சித்தசனஞ்
சேவை யினியடி யேன்மீதெய் யாது செறுத்தருளே. 43

செறுத்தலை வாளைத் திரளுந்தி வானிடைச் சென்றுடுக்கட்
செறுத்தலை வாளைக் கடலேங்க வீழ்திருச் செந்திற்கந்தாட்
செறுத்தலை வாளைவெல் கண்ணாரைக் கொண்மலைத்
தேவவொன்னார்ச்
செறுத்தலை வாளைய கோவெனக் குத்தினன் சேர்க்கைநல்கே. 44

சேர்க்கைய தாகக் கவுமா ரரைச்செய்து செங்கடப்பஞ்
சேர்க்கைய தாகப் பயனல்கு வாய்புனச் சேயிழைதன்
சேர்க்கைய தாகருங் கோட்டுச்செம் மாவல சீறவுணர்
சேர்க்கைய தாகவின் செந்தூர வெங்குந் திரிபவனே. 45

திரியுங் கருமருப் பாடேறித் தொண்டர் திகைப்பொழியத்
திரியுங் கருமன் றிருச்செந்தில் வாழ்குகன் றேவர்தம்மெ
திரியுங் கருமறை யோமாலைச் செய்துயர் தீர்த்தவன்னத்
திரியுங் கருமற் றவிர்த்தாணன் னீருங்கொள் சிற்பரனே. 46

சிற்பரன் றன்புடன் செய்யு முருவினுஞ் சேர்ந்தொளிருஞ்
சிற்பரன் றன்மமலி செந்தில் வாழருட் டேசிகனெஞ்
சிற்பரன் றன்விழிச் சேயென நாடுஞ் சிலர்க்குண்மா
சிற்பரன் றன்றெனு நீதிக்கு மொத்துச் சிறந்தவனே. 47

சிறப்பன வாயிரஞ் சீரார்செந் தூர்வளர் சேய்கொடுஞ்சூர்ச்
சிறப்பன வாயிரம் போன்றபல் பாடல்கட் சிந்தன்முதற்
சிறப்பன வாயிரங் கென்றற்கு நேயன்கை சேருளுந்திற்
சிறப்பன வாயிர மாகவிட் டானைத் தெளித்தவனே. 48

தெளித்தவித் தாரக் கவிவாணர் சூழ்திருச் செந்திலிறை
தெளித்தவித் தாரவ் வனத்தேனல் காத்த சிறுமியெதிர்
தெளித்தவித் தார மணிமார்பற் சேரச் செலுத்தியசேய்
தெளித்தவித் தாரரு ளானென்னின் மாயுமென் சிற்றன்னமே. 49

சிற்றர மானனை யார்மயல் வாதனை தீர்த்தருண்மெய்ச்
சிற்றர மான வடிவேலோ டென்முற் றிகழ்வதென்றோ

சிற்றர மான விழிவள்ளி கேள்வசெந் திற்செல்வமிஞ்
சிற்றர மானருண் மங்கைபங் காபல் சிலம்பினனே. 50

சிலம்பணித் தாளத்தர் தந்தகந் தாவெழிற் செந்திலுள்ளாய்
சிலம்பணித் தாளத் தனிச்சீர் குலாவத் திகழ்ந்தபல
சிலம்பணித் தாளத்த வாடல்செய் வாய்நின் றிருப்புகழ்பே
சிலம்பணித் தாளத் ததியிது காணருட் சித்தருளே. 51

சித்தத்தை யானனத் தானுனர் தேசிகன் செந்திலில்வ
சித்தத்தை யானனங் கைக்குரித் தாங்குகன் செந்தமிழா
சித்தத்தை யானனத் தானைச் சிறைப்படச் செய்தவனெண்
சித்தத்தை யானன விற்செயக் காட்டுந் திறத்தினனே. 52

திறக்கும் பகம்பக் களிறன்ன கொங்கைச் சிறுமியர்தந்
திறக்கும் பகம்பகற் போதினுங் காண்பவர் சேர்க்கைகொள்ளாத்
திறக்கும் பகம்பரிந் தீந்தருள் வாய்செந்திற் சீர்பகருந்
திறக்கும் பகம்பக டூர்க்கைப்புந் தந்த சிவகுருவே. 53

சிவகுரு வேதண்ட வாணனு மன்பொடு தெண்டனிடுஞ்
சிவகுரு வேசெந்தி லாதிப னேயறு திங்கண்முகச்
சிவகுரு வேர்களை யாறெழுத் தாய்பருஞ் செம்மலர்வா
சிவகுரு வேபொரு ளென்னாமெஞ் ஞானச் செயலருளே. 54

செயலைத் தருநிழற் போற்றுந ராதியர்ச் செற்றுமகிழ்
செயலைத் தருவதுன் பாரங்கண் டாய்பல சேலுகளுஞ்
செயலைத் தரும்வயற் செந்திலாய்வெஞ் செருக்களத்தின்
செயலைத் தருக்குடைப் பேயின மும்புகழ் திண்புயனே. 55

திண்ண னயனம் பறித்தாண்டு ளார்க்குப தேசஞ்சொல்லுந்
திண்ண னயனம்பு விட்டழ நான்கு சிரத்துங்குட்டுந்
திண்ண னயனம்பு காதருள் வான்றிருச் செந்திலில்வாழ்
திண்ண னயனம்ப வல்லாரை நாடுந் திருக்கண்ணனே. 56

திருக்கண்ண னாம்நந்தன் மைந்தன் மருமகன் செந்திலென்னுந்
திருக்கண்ண னானந்த மாறிரண் டாறு சினம்பொருந்துந்
திருக்கண்ண னானந்த வொட்டா னழலுடற் றெவ்வையுண்ணத்
திருக்கண்ண னானந்த மாதி நடுவறுஞ் செஞ்சுடரே. 57

செஞ்சதங் கைப்பறப் பெய்தவொட் டாமலிச் செந்திலினின்
செஞ்சதங் கைப்பதஞ் சூட்டுவை யோமறை செப்பறியாச்
செஞ்சதங் கைக்கனி போனல்கு வாய்கடற் றீயர்பவுஞ்
செஞ்சதங் கைப்படை யாற்புரி வீரருட் சீரியனே. 58

சீரிய மானன்ன கண்ணார்க ளாடற் றிரமிவற்றாற்
சீரிய மானன்ன லஞ்சேருங் கோயிற்செந் திற்குகவென்
சீரிய மானன்ன ருட்பேறு பெற்றுயச் செய்குதியேற்
சீரிய மானன் னணுகாப் பவங்களுந் தீர்தருமே. 59

தீராத னஞ்சயி லம்பரன் மைந்த திகழயிற்கைத்
தீராத னஞ்சயி லந்தீதென் பாருணர் செந்திற்கந்தா
தீராத னஞ்சயி லம்போற்கொள் வாளுயிர்த் தின்பதென்றோ
தீராத னஞ்சயி லம்பேவு மாரன் செருக்குன்றவே. 60

செருக்கு மதனன் மலர்வாளி யுந்தென்றற் றேருங்கொண்டு
செருக்கு மதனக மாமிரு ளாலஞ்சச் செய்யுமடற்
செருக்கு மதனசொற் சேனைக்கு மெய்த்தனன் செந்திற்குகா
செருக்கு மதனடி யார்மோன வாழ்விற் சிறிதருளே. 61

சிறிக்கும் பனிச்சை வழியாடல் செய்குகன் செந்திற்பிரான்
சிறிக்கும் பனிமல ருங்கொண்டு ளான்வெட்குஞ் செவ்வியன்சொல்
சிறிக்கும் பனிய திருப்புக ழான்கலைச் சேயிழைக்குஞ்
சிறிக்கும் பனிவரைச் செல்விக்கு மாவற் செறிப்பவனே. 62

செறிகைக் களப மிகுங்கோயி லாயலைச் சிந்துழக்குஞ்
செறிகைக் களபத் திரளார்செந் தூரத் திறலவுணர்ச்
செறிகைக் களபச்சை மாவேற்கச் சென்றவ செய்யமயில்
செறிகைக் களபகர்ந் திட்டமை செய்யுந் தினமெதுவே. 63

தினந்தினம் வாழுநெற் போல மதனன் செயுஞ்சமரத்
தினந்தினம் வாகை வடிவே லெடுத்துச் சிகியிவர்ந்து
தினந்தினம் வாவெனக் கூவுதற் கேட்கச் செவியிலையோ
தினந்தினம் வார்கர மால்புகழ் செந்திற் றிருமன்னனே. 64

திருமன்ன னாக முகனாதி மூவரைச் செற்றுச் செந்தூர்த்
திருமன்ன னாகநின் றாய்வணங் காதுளத் தெம்புடனெ

திருமன்ன னாக நடுங்கப் புடைத்துச் சிறையில்வைத்தாய்
திருமன்ன னாகப் பணித்தோகை மீது திகழ்ந்தருளே. 65

திகழா னனந்தலை நீழலுற் றார்விழித் தீப்பொறியாய்த்
திகழா னனங்களொ ராறுடை யான்புனச் செல்வியைக்கைத்
திகழா னனங்கனொல் குஞ்செவ்வி யான்சமண் டீயர்தஞ்ச
திகழா னனலம் விளைத்தோன்செந் தூரிற் சிவக்கொழுந்தே. 66

சிவந்த கமலத் திருக்குல வத்தண்ட நீரவந்தாள்
சிவந்த கமலத் திருக்குல வத்தண்டஞ் செந்தில்வ
சிவந்த கமலத் திருக்குல வத்தண்டஞ் சேரச்செய்தாய்
சிவந்த கமலத் திருக்குல வத்தண்டர் சேனையனே. 67

சேனை யவாவி யருகார்செந் தூர்க்குக தேவர்பெறுஞ்
சேனை யவாவியற் றிண்டோண் முருக செழுஞ்சுடர்வேற்
சேனை யவாவிய னந்தத்தி னாயக சேயிழையார்
சேனை யவாவிய கண்ணல்கு மோகஞ் சிதைத்தருளே. 68

சிதைக்குங் கலியுகத் தீமைக்கு மஞ்சிநின் சேவடித்தூ
சிதைக்குங் கலினத் தவாவடைந் தேனல்ல சிந்தையினைச்
சிதைக்குங் கலிமுதற் றீர்த்தருள் வாய்செந் திலாய்தில்லைவாழ்
சிதைக்குங் கலின்மெய்ப் பொருளோதி வைத்தருள் சீலத்தனே. 69

சீலத் தருக்குல நீழல்கொள் வாசவன் சீர்வெறுக்குஞ்
சீலத் தருக்குல கம்புகழ் சித்தியுஞ் செய்தவமெய்ச்
சீலத் தருக்குல வாமையு நல்குந் திருச்செந்திலாய்
சீலத் தருக்குல வந்தீர்கை கொண்டெனைத் தேறச்செய்யே. 70

தேறா மனத்தைக் கரத்தா னயன்முதற் றேவர்கட்குந்
தேறா மனத்தைத் தியானிக்கை கொண்டறத் தேற்றும்விதைத்
தேறா மனத்தைத் திருமேனி யாய்திருச் செந்திலிடந்
தேறா மனத்தயில் வேலாவென் வாய்க்குன் செவிதஞ்சமே. 71

செவிக்குஞ் சரவண மந்திரங் கொண்டுன் றிருவுருவச்
செவிக்குஞ் சரவணம் போறகூர்த்த நெஞ்சைச் செலுத்துகின்றேன்
செவிக்குஞ் சரவணப் பூவுங்கொள் வான்சமர் செய்தனன்றாழ்
செவிக்குஞ் சரவணங் கார்செந்தில் வேல செயந்தந்திடே. 72

செயங்கொண்ட லார்க்கு மலர்ச்சோலை சூழ்திருச் செந்திலன்பு
செயங்கொண்டல் வேட்ட மடவாரைக் கெஞ்சித் தினமுமவர்
செயங்கொண்ட நெற்றன்ன வல்குற் குருகுவஞ் சீர்திருத்தாய்
செயங்கொண்ட வேற்குக னேயுமை பாகச் சிவன்மகனே. 73

சிவனந் தரங்க னயன்றேறு மாறணித் திங்கண்முகச்
சிவனந் தரங்கண்டு சீர்திருத் துங்குகன் செந்துவர்ப்பா
சிவனந் தரங்கந் தருங்கடற் போற்றுசெந் திற்பதிவாழ்
சிவனந் தரங்கத்தி லுள்ளா னெமக்கோர் திடுக்கமின்றே. 74

திடுக்கந் தவிரதங் கொள்வார் விருப்பருள் சேந்ததிடு
திடுக்கந் தவிரப்பல் சந்தவெற் பாள சினத்தொடுமோ
திடுக்கந் தவிரடன் மாவார்செந் தூரவென் சிந்தைகொண்ட
திடுக்கந் தவிர வரவேண்டுந் தோகைச் சிகியிவர்ந்தே. 75

சிகிக்கார னேய மகள்கண் வாகுறச் செல்வியுங்கட்
சிகிக்கார னேரிழையா வளர்த்திட்ட செந்தேகம் விற்றுச்
சிகிக்கார னேரத் தனைவென்ற வாதிருச் செந்தில்வாழ்
சிகிக்கார னேயுன்னை யல்லா தெனக்கொரு தெய்வமின்றே. 76

தெய்வத் தலைமைப் புலவலின் மால்முதற் செப்புபல
தெய்வத் தலைமைப் புலவனைக் காத்தசெந் திற்குகனவா
தெய்வத் தலைமைப் புலவர் கழுவிற் செறித்தவனேர்
தெய்வத் தலைமைப் புலவர்பல் லோர்தஞ் சிரோமணியே. 77

சிரகர மாறுடன் பன்னிரண் டாக்கொளுஞ் சேந்தனெண்கட்
சிரகர னேகரைக் குட்டிப் பணித்துச் சிறையிலிட்டோன்
சிரகர முண்டவன் போற்றுஞ்செந் தூரன்முற் சிந்தெறிதண்
சிரகர வத்தைவென் றானந்த வாழ்வுறுஞ் சிட்டர்களே. 78

சிட்டனை யாண்டரைப் பாடலிற் போக்கிடுஞ் சீலனும்வி
சிட்டனை யாண்டருள் சீர்படைத் தோனெனற் றேர்ந்தனன்வ
சிட்டனை யாண்டல செய்தோன் சுகன்முதற் சீரியர்நெஞ்
சிட்டனை யாண்டலை யான்றிருச் செந்திலைத் தெண்டனிட்டே. 79

தெண்டனைக் கஞ்சிக் கருளப் புடைத்தசெந் திற்குகன்கைத்
தெண்டனைக் கஞ்சிவத் தோடருள் வான்றமிழ் செய்தமுனி

தெண்டனைக் கஞ்சி யறம்வளர்த் தாண்மகன் சீறுமெம
தெண்டனைக் கஞ்சி வருந்தாது சூட்டுந் திருப்பாதமே. 80

திருப்பாத பங்கயஞ் சேர்தினைக் காட்டிடை சென்றுவருஞ்
திருப்பாத பங்கய மீவதென் றோசெந் திலாய்சிலம்ப
திருப்பாத பங்கயங் குற்றேன் கரிமுகத் தேவனிடந்
திருப்பாத பங்கை யடியேன தென்றின்று செப்பவிடே. 81

செப்பயற் சந்த முலையார் மயலிற் றிளைத்துநின்மேற்
செப்பயற் சந்தம் பழுதுகொல் லோதிருச் செந்திலில்வாழ்
செப்பயற் சந்தறை வார்க்குநல் லாய்நின்பொற் சீறடிக்குச்
செப்பயற் சந்தத் தளிராதி சாத்துகை தீண்டுதியே. 82

தீண்டல கம்பலைக் கஞ்சாது மங்கையர் சிந்தித்தொல்குந்
தீண்டல கம்படிந் தேங்குகின் றேனின் செழுமலர்க்கை
தீண்டல கம்பவந் தீர்க்குமென் றேதிருச் செந்திலில்வந்
தீண்டல கம்பந் தவிர்திரு வோலக்கஞ் சேவிப்பதே. 83

சேவின ராதர மென்னத் தொகையிற் றிகழங்கதா
சேவின ராதரச் சண்முக னேதிருச் செந்திலர
சேவின ராதரந் தைக்காட்பட் டேனுனைத் தேடிவந்து
சேவின ராதர மீந்திலை யேன்மிகத் தேம்புவனே. 84

தேம்பா கனைய தமிழ்பாடிச் சூட்டநின் செந்திலில்வந்
தேம்பா கனைய மிகநல்கு வாய்பல் சிலம்பனமாம்
தேம்பா கனையயர் வாழ்வான் றடத்தோர் சிறுகுருந்தாய்த்
தேம்பா கனையன மும்மூன்று வீதங்கொள் செம்முகனே. 85

செம்மு கனக நிகர்முலைக் குஞ்சரி சிந்தைகவர்
செம்மு கனகத்தி னாற்பொரு சேவல சீர்ப்பெருக்காற்
செம்மு கனகனைக் கீன்றான் மருக திருச்செந்திலாய்
செம்மு கனக மணிப்பூணிற் றாழ்ச்சிகொல் செந்தமிழே. 86

செந்தமி ழாகர மாதரன் னார்மொழிச் சித்திரநச்
செந்தமி ழாகர ணங்களைக் கண்கொடு சீர்திருத்தாய்
செந்தமி ழாக ரவிகோடி சூழ்திருச் செந்திற்கந்தா
செந்தமி ழாகர மாமுனி போற்றிய சின்னவனே. 87

சின்னம் பயிலமண் குண்டர்முன் முத்துச் சிவிகையிற்போய்ச்
சின்னம் பயிலவென் றானிகர் வானவர்ச் செய்குவையோ
சின்னம் பயிலமை நீறேயென் பார்மிகுஞ் செந்திலிலைநெஞ்
சின்னம் பயிலருள் கூர்கந்த னேயதி சீதளனே. 88

சீதை யிலக்குமி ழிக்கும்ப யாலஞ்சற் றீர்த்ததுண்டேற்
சீதை யிலக்குமிழ் சங்குல வும்பணைச் செந்திலிலாள்
சீதை யிலக்குமி ணன்போற்றக் கானிடைச் சென்றரக்கர்
சீதை யிலக்குமி யாய்ச்செற்ற மால்புகழ் தென்னவனே. 89

தென்னனங் கத்திருக் கைகொண்ட நீபத்திற் றேன்பயிலுந்
தென்னனங் கத்திருக் கைக்குட்டி னேன்செந் திலான்மதுரைத்
தென்னனங் கத்திருக் கைத்தவிர்த் தாற்குமுன் செய்நலமெய்த்
தென்னனங் கத்திருக் கையாரி னுஞ்சிற் சிலர்சொல்வதே. 90

சிலமா தரைபுகழ் சீர்ச்சந்த வெற்புடைச் செந்திற்பிரான்
சிலமா தரைமுன் விழைந்தானென் பேதைமண் டெள்ளியமுச்
சிலமா தரைமெலி யக்கண்டு ளானவன் சீர்த்திகள்பே
சிலமா தரைமகண் மான்மக ளோடிவட் சேர்த்திலனே. 91

சேரங்க மாயரு நான்மறைத் தாரகஞ் செப்புமெந்தாய்
சேரங்க மாயன் மருகாநன் னாஞ்சிற் சிறப்புடனெற்
சேரங்க மாய குடிவாழ்செந் தூரபொய்த் தேவர்களைச்
சேரங்க மாய வலாரியு நாணுந் திடமருளே. 92

திடமரு ளேயெனச் சிந்தைசெய் யாது தெளிவறுஞ்சேர
திடமரு ளேடணை யாதியிற் சிக்கித் திகைத்தனன்மோ
திடமரு ளேறன்ன சூர்ச்செகுத் தாய்திருச் செந்திலினத்
திடமரு ளேதந் தவிர்த்துன தன்பற் றிளைக்கவையே. 93

திளைக்குங் கனதனத் தார்பலர் வாழ்க்கைக்குஞ் சீரியம
திளைக்குங் கனத னதிவாரிக் குந்தகுஞ் செந்திலெந்தை
திளைக்குங் கனதன மாதருள் ளங்கவர் திண்புயன்வந்
திளைக்குங் கனதன நீடச்செய் கின்றதென் சிந்தனையே. 94

சிந்த னையவிழி மாதர் மயலிற் றிகைத்தறிவைச்
சிந்த னையவிழி வெய்தேன் செந்தூரனைச் செய்யதமிழ்ச்

சிந்த னையவிழிக் கார்நீப னைச்சிவன் செய்தவத்தின்
சிந்த னையவிழித் தெற்பாரென் றேத்தியுந் தேடுவனே. 95

தேடுஞ் சரணஞ் செயுங்கொடுஞ் சொல்லினர் தீயுறவைத்
தேடுஞ் சரணம்ப லென்றொழி வேன்றிதி செய்யுமரி
தேடுஞ் சரணர் குருநாதன் வாழ்திருச் செந்திலினத்
தேடுஞ் சரணத்தின் காட்சியுங் கொள்வதிற் சிக்கிதுவே. 96

சிக்க மயிலப்ப னாஞ்செந்தி லானன்பு சேர்தவத்தோர்ச்
சிக்க மயிலப்ப ரன்றனை யேதுதி செய்தலைநே
சிக்க மயிலப்ப தாம்விழிக் கஞ்சலஞ் சித்திமுத்தி
சிக்க மயிலப்ப னீரிலை நீற்றினைத் தின்பதுண்டே. 97

தின்மைக் குமருந்து நல்கித் தவிர்ப்பவன் செய்யபுனத்
தின்மைக் குமருந்து யர்தீரக் கொண்டவன் சிட்டருயிர்த்
தின்மைக் குமருந்து ணைப்பதஞ் சூட்டினன் செந்திலிற்சேய்
தின்மைக் குமருந்து பல்கோடி வெற்புடைத் தேவனன்றே. 98

தேவ ரதிபதி நான்முகன் மான்முதற் செப்புநர்சேர்ந்
தேவ ரதிபங்கன் போய்மாண்ட நாளிற் சிவன் றனக்கத்
தேவ ரதிபலச் செவ்வேள்செந் தூர்க்குகன் சேவடிப்போ
தேவ ரதிப மரிச்சிம்பு ணேர்பெருஞ் சித்தரதே. 99

சித்தனந் தத்தைத் தருந்திருச் செந்தின்மெய்ச் சீருள்ளதே
சித்தனந் தத்தைத் தருந்திருச் செந்தின்மெய்ச் சீருள்ளதே
சித்தனந் தத்தைத் தருந்திருச் செந்தின்மெய்ச் சீருள்ளதே
சித்தனந் தத்தைத் தருந்திருச் செந்தின்மெய்ச் சீருள்ளதே. 100

நூற்பயன்

செந்தூரந் தாதியர் சூழ்வள்ளி மேவுந் தினைப்புனத்தில்
செந்தூரந் தாதிவர் பூவேங்கை யானவன் றிண்கைவைவேற்
செந்தூரந் தாதிருக் கில்லாதும் வீசுதற் றேர்ந்துய்குவார்
செந்தூரந் தாதிக் கவிநூறுங் கற்றுச் சிறந்தவரே. 101

முற்றிற்று

15

திருச்செந்தூர் திரிவந்தாதி

15

திருச்செந்தூர் திரிவந்தாதி

காப்பு

நடக்குஞ் சரமச ரந்தரு வான்றலை நான்கிற்குட்டி
யடக்குஞ் சரவணன் செந்தூர்க் குகனரி யட்டவன்றன்
விடக்குஞ் சரமஞ்சும் வேலான் விரும்பும் விநாயகனாங்
கடக்குஞ் சரத்தை வணங்குகின் றேறமிழ்க் காவலுக்கே.

நூல்

திருவரு ளாதரச் செந்தூர்க் குமரன் றிருந்துமனப்
பருவரு ளாதரன் பெற்றது தோன்றும் படிசெயுஞ்சேய்
கருவரு ளாதரத் தப்பதஞ் சூட்டிற் கருத்திரங்கா
விருவரு ளாதரந் தைப்பவஞ் சாவெனை யென்செய்யுமே. 1

என்னை யளித்துமுன் னின்றுபன் னீரிலை யேய்ந்தபொடி
தன்னை யளித்துயர் தீர்தரப் பூசுந் தருணமெதோ
புன்னை யளித்துணர்க் காமிகுஞ் செந்திற் புரவலனென்
றன்னை யளித்துங் வேலோடு நின்ற வறுமுகனே. 2

அறுகா லமையளிச் செங்கடம் பாரத்தெ மண்ணல்செந்தின்
மறுகா லாமையதில் வேலேந்திப் பாங்கிரு மாதருட
னுறுகா லமையல் விளைத்தான் மதன னுயர்பொதியைச்
சிறுகா லமையன்ன தோளியைச் செய்துயர் செப்பரிதே. 3

செப்பரு மானன மாறுடை யாய்முதற் சீடனுமா
யப்பரு மானனம் பர்க்கினி யாளெ னயிலணிந்தாய்
மைப்பரு மானன வள்ளிபங் காசெந்தில் வாழ்த்துகிலாத்
தப்பரு மானன வூடுனைக் காணத் தவிர்ப்பர்கொல்லே. 4

கொல்லா விரதத் துடனேநின் மெய்த்தொண்டு கொண்டவரு
நல்லா விரத மெனக்கொன்றுண் பார்க்கஞ்ச ஞாயமுண்டோ
பல்லா விரதந் தவிராது செந்திற் பதியிலுற்றுப்
பொல்லா விரதக் கொடுஞ்சூரன் மாயப் பொருதவனே. 5

பொருந்தடங் கண்ணியர் மால்கொண்டு வாடுமென் புந்தியினு
மிருந்தடங் கண்ணிய மத்தாற் றவிர்த்தரு ளீகுவையோ
பெருந்தடங் கண்ணியஞ் சேர்செந்தி லாய்மதுப் பெய்துவண்டாம்
விருந்தடங் கண்ணி யனந்தமுள் ளாய்வெற்றி வேலவனே. *6*

வேலவ னந்தத்தை யூதியொன் னாரை வெருட்டுதிரு
மாலவ னந்தத்தைப் போற்றரு மாதர் மணாளவொப்பல்
சீலவ னந்தத்தை வாவிகள் சூழ்திருச் செந்திலெந்தாய்
சாலவ னந்தத்தைச் சொன்னாயென் ஞ்சனெ ஞ்சலிக்கின்றதே. *7*

சலியா தவஞ்செயும் பொல்லே னனைவருஞ் சாற்றுபுகழ்
மலியா தவனுந் தொழுந்திருச் செந்திலில் வந்தடைந்தேன்
மெலியா தவந்தந்து காத்தருள் வாய்வெற்றி வேல்புனைதோள்
வலியா தவள நிறச்சேவ லாமயில் வாகனனே. *8*

வாகன மாக மயிலூர்செந் தூரன் மறமடந்தை
மோகன மாகத் தொருமாது கொண்கன் முழுமையுமா
மேகன மாகந்த வென்பார்க் கெளிய னினியதமிழ்த்
தாகன மாகஞ் சிதைத்தார் தவப்பயன் றந்தவனே. *9*

தந்தத் தனத்தத்த வென்றாடு வார்புடை தங்கிநிற்பாள்
சந்தத் தனத்தத்தம் வைத்தமு துண்டு தருக்கும்பரா
னந்தத் தனத்தத்த ரெய்தாத் திருச்செந்தி லம்பதியின்
சொந்தத் தனத்தத்த மீவேனென் றென்னொடு சொற்றதுண்டே. *10*

சொற்ற விதங்களை யந்தான்கொ லென்று துடிக்குமென்னைப்
பற்ற விதங்களைச் செய்யாம னைவுறப் பார்த்தனையே
யிற்ற விதங்களைக் கொன்றையன் மைந்த வெழிற்செந்திலாய்
முற்ற விதங்களைக் காட்டுநல் வேள்விக்கொர் முன்னவனே. *11*

முன்னம் புகன்ற மொழிநாடி வாடுமென் மொய்ம்பன்மதன்
றன்னம் புகன்ற விடலாகுமோ நின்கைத்தத் தைசொன்ன
சொன்னம் புகன்றனை யேனல்ல வாமலத் தோலுடம்பி
லின்னம் புகன்றமிழ்ச் செந்தூர நீவந் திலங்கினன்றே. *12*

இலங்கைத் தலைவனைச் செற்றோன் மருக னெழிற்செந்திலா
னலங்கைத் தலைவனை யாதருள் வான்மறை நான்குரைத்துத்

துலங்கைத் தலைவனை மார்போன் சுதனருட் டோய்முனிவன்
வலங்கைத் தலைவனை வாழ்வொருக் காற்சிறு மாடமொத்தே. 13

மாட மருவு மறுகார்ந்த செந்தில் வரதன்வண்டு
கூட மருவுங் குளிர்தேனுங் கொண்ட குராமுடித்தோன்
வேட மருவு முருவுமென் றோர்ந்துளம் வெற்றிடத்தை
நாட மருவுதெண் ணீர்மலை யாவையு நண்ணுவமே. 14

நண்ணாரைக் கொன்ற வடிவேற் குகன்செந்தில் னாயகன்முன்
வெண்ணாரைக் கொன்றரும் வீடீந்த நம்பன் விழிப்புதல்வன்
பண்ணாரைக் கொன்றமிழ்ப் பாமாலை யாசை படைத்திருந்து
மண்ணாரைக் கொன்றற்ற வச்சமுற் றேன்வெள்ளை யாரணங்கே. 15

ஆரணங் கண்டறி யாப்புகழ் சேர்செந்தி லாதிபனைப்
பூரணங் கண்டறி போல்வாருக் கெய்தும் பொருளெனநன்
கோரணங் கண்டறி வெய்தினல் லான்மல ரோதியர்செவ்
வேரணங் கண்டறி நெஞ்சேயென் மோக மிறுவதின்றே. 16

இறுகுந் தனத்திரு மங்கையர் பங்க னிகலவரைச்
செறுகுந் தனத்திய வாறருள் சேய்திருச் செந்திலிடத்
துறுகுந் தனத்திருப் பூணா லொருகவிக் கோகைநல்கன்
மறுகுந் தனத்திச்சை கொள்பா வலரும் வழுத்தவென்றே. 17

வழுவின் றியதமிழ்ப் பாமாலை யாவும் வனையுமன்பர்
குழுவின் றியமனு மஞ்சுறக் கூடிடக் கூட்டியருண்
முழுவின் றியன்பருள் செந்தூர னேயென் முருகையனே
கழுவின் றியக்கமுன் சாரணர்க் கீந்து களித்தவனே. 18

களிக்கும்பல் வண்டு முரல்கின்ற செம்பொற் கடம்பணிந்தோ
னொளிக்கும்ப யோநிக்கொ ருண்மைசொன் னோன்செந்தி லூர்க்குமரன்
விளிக்கும் பருவமுற் றேனவன் சந்நிதி மேவிநின்றேன்
வளிக்கும் பனிமல ருங்கொண்டு ளாறகஞ்சன் மாறிலனே. 19

மாறிய மானத் தகைசார்ந்து வாடு மனத்திலுன்னைத்
தேறிய மானம் வருவதென் றோதிருச் செந்திலுக்குள்
வீறிய மானன மாறுகொண் டாய்தினம் வேண்டுதுதி
கூறிய மானருண் மங்கைசொல் லாமெனக் கொண்டருளே. 20

கொண்டலைத் தண்டருட் காவல னாமெனக் கொள்குமரன்
றண்டலைத் தண்டருச் செந்தூர் விசாகன் றனைக்குறிக்குந்
தொண்டலைத் தண்டருங் கூற்றுவன் கையிற் றொலைக்குங் கொலோ
மண்டலைத் தண்டரு மாய்த்தமிழ் தேர்கவு மாரரையே. 21

மாரன் றனக்குவட் டுச்சேனை யோடு மயங்குமெழில்
வீரன் றனக்குப்பை சேர்மறு கார்செந்தில் வித்தகனற்
கீரன் றனக்குமுன் னின்றபி ரான்முன்பு கெஞ்சிவருந்
தீரன் றனக்குரி யான்வரை பாழ்விதிக் கென்செய்வதே. 22

என்று மருணசை யாலுனைநாடி யிளைக்கு மென்முன்
னின்று மருணவை தீர்த்தருள் வாய்செந்தி னேயமிகத்
துன்று மருண கிரிநாதன் செஞ்சொற் றுதிக்குவந்தா
யின்று மருண நிறவேல்கொண் டாடு மெழிற்கந்தனே. 23

கந்த மலரவன் குட்டுண்டு வாடுமக் காலநின்முன்
வந்த மலரவண் கேட்டுக் களித்தமெய்ம் மந்திரத்தை
யந்த மலர வனியைவிட் டோடவியம் புவையோ
நந்த மலர வதிதீர் பொழிற்செந்தி னாயகனே. 24

நாயக னாகிப் பலகோடி தேவர் நடுவிருக்கு
நீயக னானிலத் தென்னைமுன் னாள்கை நிசமல்லவேற்
றூயக னாவினிற் போலவந் தாரெவர் சொற்றருள்வாய்
சேயக னாடுங் கழலாய்செந் தூர்க்குரு தேசிகனே. 25

சிகரிக் குமரங்கு தோறாடு வாயலைச் சீர்கொள்செந்தி
னகரிக் குமர குருபர னேயன்பர் நன்மனத்தைத்
தகரிக் குமரவொப் பாமலர் வாளியுந் தாங்குநன்பாற்
பகரிக் குமர விழியுங் குலாவு படையுமுண்டே. 26

படையனந் தம்புனை கையன் மயூரப் பரியிவர்ச்சி
யடையனந் தம்புனை கைதொறுஞ் சேர்செந்தி லூரன் வெற்றிக்
குடையனந் தம்புனை கையுரைக் கேற்ற குகனிகன்முற்
றடையனந் தம்புனை கைதீர்த்தன் போரை யளிப்பவனே. 27

பவனந் தகர வவுணேச னூரினிற் பாயுமொற்றுள்
ளவனந் தகப்ப னணிச்செந்தி லானொப்ப லாறுமுகச்

சிவனந் தகனை யுதைத்தாற் குரைத்தசொற் றேரினல்லாற்
கவனந் தகக்கொண்டு வாடுமென் சிந்தை களிப்பதென்றே. 28

களிப்பாடு வண்டு பெறத்தேன் பிலிற்றுங் கடம்பனென்பா
ணெளிப்பாடு வண்டு விழுவாள்செந் தூர்நல நேர்மையென்பா
ளொளிப்பாடு வண்டுடைக் கையான் மருகனெ னுள்ளனென்பா
டுளிப்பாடு வண்டுணைக் கண்ணிற்கொள் வாளென் சுரிகுழலே. 29

சுரிப்பாருங் கைக்களிற் றானனத் தான்றுணை தூயதுதி
விரிப்பாருங் கையந் தவிர்ந்துய்யச் செய்யும் விசாகன்செந்தூ
ரரிப்பாருங் கையகல் வானமும் போற்றலென் றண்டுமென்னைச்
சிரிப்பாருங் கைப்பன்றி யேத்தலெந் நாளதைத் தேர்ந்திலனே. 30

தேரா மனம்பயந் தேங்குகின் றேற்குச் சிலையுறுங்கைச்
சீரா மனம்பர முண்டோன் வியக்குந் திறலளித்தாள்
சோரா மனம்பவல் லார்பகை மாய்க்குஞ் சுடர்த்துங்கவேல்
வீரா மனம்பர் குரவா திருச்செந்தில் வித்தகனே. 31

வித்தக னத்தை மகளா ரிருவர் விரும்பவத்த
மொத்தக னத்தைமுத் துங்கும ரேச னுவாக்களிற்றின்
மத்தக னத்தைத் திருமேனி யான்செந்தில் வாண னென்னுள்
வைத்தக னத்தைய முற்றே வருந்தினன் மாநிலத்தே. 32

நிலம்பு கழட்டசித் துங்கொடுத் தாட்கொண்டு நீடுதண்டை
புலம்பு கழலுந் தரவேண்டு மாணவம் பொங்குதலி
னலம்பு கழகத் துயர்தீர்த்த வாசெந்தி லாயருட்சீர்
நலம்பு கழல்வண்ண னேவிண்ணு ளார்தொழும் நற்குகனே. 33

நற்குரு வானவன் செந்தூர னேயென நாடுமென்னைப்
பொற்குரு வானவப் பொன்செய்யு மாறு புதுக்குங்கொலோ
தெற்குரு வானவ சந்தரச் செய்யுங்கொல் செம்பவள
விற்குரு வானவ னாமவற் காணலென் வேட்கையதே. 34

வேட்கைக் குவந்த படியாடல் செய்குகன் வேண்டுமொரு
பூட்கைக் குவந்த நெடுமால் மருகன் புகல்செந்திலான்
றாட்கைக் குவந்தன மென்றலை மீதொரு சற்றமைந்து
தேட்கைக் குவந்தறற் றீவெளி நாணுந் திறனல்கவே. 35

திறங்கண் டவுணர் குலவே ரறுத்துயர் செந்திலெந்தை
பறங்கண் டபண்டமெல் லாமுணர் வோ னருட் பேறளித்தான்
மறங்கண் டனையசொல் லார்மய லாதியுள் வாயுவினிற்
கறங்கண் டகைபெறு நெஞ்சசை யாப்பெருங் கல்லொக்குமே. 36

கல்லா மனத்தினர் தம்மனை வாயிற் கடைதொறும்போய்
நில்லா மனத்தின வாறருள் வாயும்பர் நெஞ்சமஞ்சும்
வல்லா மனத்தினங் கட்புதல்வாசெந்தில் வாழ்குமரா
நல்லா மனத்தினம் பாடவல் லார்க்கருண் ஞானத்தனே. 37

ஞானக்கண் ணாயிரம் கோடிகொண் டோன்செந்தி னாதனகல்
வானக்கண் ணார்க்கொரு தாயக னாண்மை மலிந்தெழும்பு
மேனக்கண் ணாவத மீந்தவை வேலனென் றேத்துகிலா
ரீனக்கண் ணாறிய வாயின ராய்ப்பறந் தெய்ப்பவரே. 38

எய்யா விதத்தி லுனைப்போற்றி டாதிங் கிருக்குமென்றன்
பொய்யா விதத்திற் புகாதருள் வாய்புனம் போய்த்திரும்பு
மையா விதத்தினி லாளவல் லாய்செந்தி லாதிபனே
யுய்யா விதத்தியின் றோலுடை யார்தொழு முத்தமனே. 39

உத்தம ரான வடியாரைச் சேர்ந்தில னுண்மையற்ற
பொய்த்தம ரானவ லோகமுந் தேடினன் பூத்தகொன்றைக்
கொத்தம ரானவன் மைந்தாசெந் தூரினிற் கொற்றவைவேற்
புத்தம ரான வனிவாழ மான்முன் புரிந்தவனே. 40

புரிமருப் பாட்டுக் குரற்கஞ்சி னோர்சொற் புகழ்புனைந்தான்
வரிமருப் பாட்டுக் குராமுடித் தோன்செந்தின் மேவிநின்றான்
கிரிமருப் பாட்டுக் குமரிதன் பான்முலை கேட்டமுதா
னரிமருப் பாட்டுக் குவப்பானென் றோதுமிவ் வம்புவியே. 41

அம்புவி லாழியொப் பாவன நாணு மயிலவன்றன்
பம்புவி லாழி மறுகார்செந் தூரினைப் பாடுதொழிற்
கும்புவி லாழி புனைந்துல காளினுங் கோவணச்சீர்த்
தெம்புவி லாழினு மெய்ஞான வீரச் சிறப்பினதே. 42

சிறந்தவ ராகத்தை வென்ற வைவேலன் செழுங்கனலிற்
கறந்தவ ராகத்தை யன்றிருச் செந்திற் கடிநகரிற்

பறந்தவ ராகத்தைத் தெய்யென வாடும் பிரானருள்பெற்
றிறந்தவ ராகத்தை யந்தவிர்ந் தோர்களுக் கெய்துமன்றே. 43

மன்றந் தனிற்றிந்தெ யென்றாடு வார்சுதன் மன்னுமெண்ணில்
குன்றந் தனின்மல ஞானா நுபூதி கொடுக்கும்பிரா
னென்றந் தனித்திய னீடில்செந் தூர்க்குகனி யான்விரும்பும்
பொன்றந் தனியர்தம் பாலிர வாமற் புரக்கின்நன்றே. 44

புரந்தர னாதிய வானவ ரென்பு புனைந்தருளு
நிரந்தர னாதியந் தங்கடந் தோன்றொழு நின்னையன்றி
வரந்தர னாதி யறியாது செந்திலில் வந்தனன்பூஞ்
சரந்தர னாதியற் றனென நாடினன் சண்முகனே. 45

முகமன் பகரச் சலியாது பன்மனை முன்றிலிற்போ
யிகமன் பகர வகரப் பணிக்கச்ச மின்றிநொந்தேன்
குகமன் பகர மயிற்செந் திலாய்புனக் கோதைகொஞ்சத்
தகமன் பகரங் கொடுத்தாள வேண்டுந் தருணமிதே. 46

தருண மறியவல் லாயென நாடித் தயங்குமென்மு
னருண மறியதன் மீதேறி வந்தரு ளாரணமின்
வருண மறியலைச் சாகரம் போற்ற மகிழ்செந்திலாய்
சருண மறியற் றமிழ்வாய னேமற்றோர் தஞ்சமின்றே. 47

தஞ்ச முனையன்றி மற்றறி யேனின் றடங்கரத்து
நஞ்ச முனைக்கதிர் வேற்புக ழன்றி நவில்கின்றிலேன்
கொஞ்ச முனைத்திறங் கூறிய தெண்ணிக் கொதித்துளனென்
பஞ்ச முனைகொலென் செய்வேன் செந்தூரிற் பழையவனே. 48

பழைய திருப்புக ழையன்றொர் தொண்டன் பழுதினின்முன்
னுழைய திருப்புக ழையன்மன் னீருண்கை யொக்கவிடல்
விழைய திருப்புக ழையன்ன கோட்படை வேட்கொல்குமோ
தழைய திருப்புக ழையன்செந் தூரிற் சரவணனே. 49

சரவண வாவியற் றண்குருந் தாகித் தழைத்தெழுஞ்சிந்
துரவண வாவிய தோகை மயூர துகளிலறு
சிரவண வாவியற் றோளா றிரண்டுடைச் செல்வசெந்திற்
புரவண வாவிப் புலவோருளி யானும் புகச்செய்திடே. 50

புகழாறு மானமு நீதரப் பெற்றும் புவியினர்சொ
லிகழாறு மாவென வாடும்புன் மார்க்கத்தி லேகிநொந்தே
னகழாறு மால்தொழுந் தேவரு ளாற்றரு மையசெந்திற்
றிகழாறு மாமுகத் தேசிக னேயினிச் செய்வதென்னே. 51

செய்ய கலாப மயில்வாக னாதிருச் செந்திலில்வா
ழைய்ய கலாப மயில்வா ழிடத்தற் கருள்விளக்கு
மெய்ய கலாப மயில்வாவு சீர்க்குக மேதினியிற்
பொய்ய கலாப மயில்வாரொத் தேன்வினைப் போர்விஞ்சியே. 52

போரா டமரர் துயர்தீர வேறிப் புலைமலியுஞ்
சூரா டமரவர் தம்மொடு மாயத் தொலைத்துச்செந்தி
லூரா டமரப் புகழ்வேல நீமு னொருத்திகண்முற்
சீரா டமரமொப் பாயதன் போர்களைத் தேற்றுகைக்கே. 53

தேற்றுகைக் குந்துயர் தீர்க்கைக்கு முன்னைத் திருச்செந்திலிற்
போற்றுகைக் கும்பலு ளென்னையுஞ் சேர்க்கும் பொழுதுள்ளதோ
வேற்றுகைக் கும்பெரு மான்மைந்த னேயெளவை யேக்கமுற்று
மாற்றுகைக் குஞ்சரத் துக்கிளை யாய்செக்கர் வண்ணத்தனே. 54

வண்ணத் தமிழ்புனை மார்பலங் காரன் வனக்குறத்தி
யெண்ணத் தமிழ்குக னீசர்தம் பங்கின ளேந்துகொங்கைக்
கிண்ணத் தமிழ்துண்ட வாயான்செந் தூரைக் கிளத்துநல
நண்ணத் தமிழ்தரு முற்பிறப் பிற்செய்த நற்றவமே. 55

நற்றவ மானவற் றைப்புரி யேன்கொடும் நஞ்சுறழ்சொற்
சொற்றவ மானம் பிறரைச்செய் வேன்றினநந் தொண்டைச்செவ்வாய்
விற்றவ மானனை யார்கெஞ்சு வேனெனை விட்டுவிடேல்
கற்றவ மானத்து சீர்ச்செந்தின் மாநகர்க் காவலனே. 56

காவகங் காரமர் சீர்காட்டுஞ் செந்திற் கடவுள் கைவேற்
சேவகங் காரணங் குன்றாத வண்ணஞ் செயுங்குமரன்
பூவகங் காரகன் போற்று மகோரன் புகழுரைக்கும்
நாவகங் கார மணிநா வறுக்கைக்கொர் ஞாயமுண்டே. 57

நாயங் களைச்சற்று நம்பாத பாவிநன் னாரியர்தம்
வாயங்க ளையமின் றென்றோதுந் தீயனின் வார்கழலின்

சேயங்க ளையைக் குறிப்பதென் றோதிருச் செந்திலெந்தாய்
மாயங்க ளையவல் லாய்வடி வேற்றிண்கை வானவனே. 58

வானத்த னத்தத் தறலோ டளித்த மகளிருக்கக்
கானத்த னத்தத் தடிபேணுங் காமுகக் கள்வனென்னு
மானத்த னத்தத் தவங்காட்டிச் செந்திலி லாண்மயின்மேற்
றானத்த னத்தத்த வென்றாடு வானையித் தாரணியே. 59

தாரணி யாளத்த காதென நீத்துன் சரண்பணியுஞ்
சீரணி யாளத்த காமியங் கொள்ளவுஞ் செய்குவையோ
நாரணி யாளத்த கான்முளை யாஞ்செந்தி னாயகவேற்
போரணி யாளத்த காலாந்த கன்றொழும் புங்கவனே. 60

புங்கக் கரும்புடை மாரனை வென்ற புனிதர்குழா
முங்கக் கரும்புனற் சாகர நாளு முழங்குசெந்தூர்ச்
சிங்கக் கரும்புகழ்ச் செவ்வேட்கு வேற்கரச் சேவகற்குச்
சங்கக் கரும்புகுந் தாளான வண்மையைச் சாற்றரிதே. 61

அரிதான வப்பகை தன்மரு காசெந்தி லாதிபனே
பெரிதான வப்பணி செஞ்சடை யார்விழி பெற்றமைந்தா
கிரிதான வப்பய னல்குமென் பார்துதி கேட்டுமிகப்
புரிதான வப்படி நீசொன்ன வார்த்தையும் பொய்க்குங்கொல்லோ. 62

பொய்யாம் பலகவி சொல்லவஞ் சாதவென் போலிகட்குஞ்
செய்யாம் பலகவி தழ்வாய் திறந்தருள் செந்திற்பிரான்
கையாம் பலக வியதோகை யாடுடைக் கந்தன்பங்கின்
மையாம் பலகவிர் கண்ணார்க ளென்னை வளர்ப்பவரே. 63

வளரா கவலை முதலாய நோய்வெய்ய வானரமாந்
தளரா கவனிகர் தன்மையுண் டாகுந் தமிழ்ப்பெருஞ்சீ
ருளரா கவந்தவிர்ந் துய்யுஞ்செந் தூரிடத் துற்றுயர்வேல்
கிளரா கவள்ளன்முற் கிள்ளைசொற் பாடல் கிளத்துநர்க்கே. 64

கிளத்துங் கவிதைத் தமிழ்வாணர் தந்துதி கேட்டுமகி
ழுளத்துங் கலிதவிர்த் தென்னையு மாட்கொள்ள வுன்னிலையே
வளத்துங் கவேற்படை வானவ னேசெந்தில் வாழ்குமரா
வளத்துங் கசந்தநெஞ் சார்நிந்தை யாலிளைப் பாகினனே. 65

ஆகார வன்னமு நீரும் பகிரு மரிமருகோ
னாகார வன்னம்பர் தங்கனற் கட்சுத னற்பணையில்
வாகார வன்னந் துயில்செந்தி லான்றிரு வாயிலுக்குட்
போகார வன்னருட் காளாவ ரோவிந்தப் பூதலத்தே. 66

பூதலங் கண்ணிமை யார்வா னுலகம் புயங்கமுறும்
பாதலங் கண்ணிமை யாதிய மூன்றிற் பரவத்தக்க
மாதலங் கண்ணிமை வண்டார்தண் சோலை மருவுசெந்தூ
ராதலங் கண்ணிமை வாகனற் போற்றி யறிந்தனமே. 67

அறிந்தவித் தாரக் கவிவாணர் போற்று மயின்முருகோன்
மறிந்தவித் தாரக் கடற்செந்தி லான்முழு வஞ்சர்நெஞ்சைப்
பறிந்தவித் தாரக் கனமார்ப னான்புலப் பேயினத்தை
யெறிந்தவித் தாரக்க மானான்விண் ணாடர்க் கினியவனே. 68

இனிய வனத்திருந் தாளிடத் தேகி யிறைஞ்சிநிற்குந்
தனிய வனத்திருக் காளாநல் வேள்வித் தலைவன் செம்மை
கனிய வனத்திரு மேனிய னான்செந்தில் காத்தருளு
மனிய வனத்திருங் கோயில்கண் டார்க்கெய்து மாதவமே. 69

மாதவஞ் செய்யவல் லாரெதிர் ரேகி வளைக்கரும்பாற்
போதவஞ் செய்யனங் கன்றனக் கஞ்சிப் புலருகின்றேன்
சீதவஞ் செய்யக லாச்செந்தி லாயயிற் செங்கைகொண்ட
நாதவஞ் செய்ய மயிற்றோகை நீழ னடுவிருந்தே. 70

நடுவிருந் தும்பரை யாள்வானைத் தேனுண்கை நத்திவரப்
படுவிருந் துத்தும்ப போற்றுங் கடம்பனைப் பண்டைமன்னர்
தொடுவிருந் துங்கக் கடற்செந்தி லானைத் துதிப்பதின்றிக்
கெடுவிருந் துன்பமெவ் வாற்றாற் றவிருங் கிளத்துமினே. 71

மின்றந்த மாதரை வேண்டித் தவித்துவில் வேள்கணையாற்
பொன்றந்த மாதரை யாற்கலி நோயிற் பொருந்துகிலேம்
வன்றந்த மாதரை முற்றுஞ்சொல் கீர்த்தி மருவுசெந்தூர்
மன்றந்த மாதரை யென்றேத்தி யின்ப வளங்கொள்வமே. 72

வளங்காட்டுஞ் செந்திற் பதியானை யும்பரு மாதவருந்
துளங்காட்டு வாகன மேறிய சேயைத் துணர்ப்பொழில்சூ

ழிளங்காட்டு வள்ளிக் கிசைந்தானை யேத்துநர்க் கில்லையுள்ளக்
களங்காட்டுன் மார்க்க நமதூதர் வாதனை காமனம்பே. 73

காமனம் பாவன வற்றா விளைத்துக் கலங்குமென்றன்
றீமனம் பாவன மாந்தோய் வதன்திருச் செந்தில்வாழ்
மாமனம் பாவனக் கொங்கையுண் டாய்வஞ்ச மாந்தரைச்சே
ராமனம் பாவனல் லோர்க்கெளிய யாய்சயி லாதிபனே. 74

சயிலாதி யாயநின் றானங்க டோறுந் தமிழ்க்கவிதை
பயிலாதி யானென தென்றிது மாந்து பரிசுகெட்டே
னயிலாதி யானிக்கு மன்பர்கள் வாழ்செந்தி லாயகவு
மயிலாதி யாசில் கவுமார ரூடென்னை வைத்தருளே. 75

வைத்த மனத்தைய மேவாது னன்பை வளர்த்துமிவ்வா
றெய்த்த மனத்தை யமர்நீக்கிச் செய்யவ ளின்பநல்காய்
பைத்த மனத்தை யலரியன் னாரும் பரவுசெந்தூ
ரைத்த மனத்தைய வென்றொடு வார்க்கரு ளானந்தனே. 76

ஆனந்த மாறு பொறியேயென் றோர்ந்து மவற்றைநம்பு
நானந்த மாறு தவிர்நெறிக் கேகில னன்மைதந்தாள்
சேனந்தமாறு குளமென் றுலாம்பணைச் செந்திற்செக்கர்
வானந்த மாறுணைக் கண்ணீந் துளாரை மணந்தவனே. 77

மணத்த கடம்பலர்த் தாரான்மின் னார்தம் மனங்கவருங்
குணத்த கடம்பங் குலாவுசெந் தூர கொடுமையெல்ல
பணத்த கடம்படு சூர்மார்பு கீன்ற பரிதிவைவே
னிணத்த கடம்பயில் வள்ளி மணாளமு னின்றருளே. 78

நின்றசை தன்னிய மாங்குக பார்ப்பதி நேமியம்பு
ளென்றசை தன்னியப் பாலுண்ட வாய வெழிற்செந்திலா
புன்றசை தன்னிய மத்திற்கு மாமெனும் புல்லரெய்தாக்
குன்றசை தன்னியங் கேளாமெய் வாழ்வைக் கொடுத்தருளே. 79

கொடுங்காம ராயனை நான்முக வேதனைக் கூற்றையெண்ணி
நடுங்காம னின்னருட் பேறுதந் தாண்டரு ணாற்புறத்து
நெடுங்கா மருவுசெந் தூர்க்கந்த னேசெழு நீபமலர்த்
தொடுங்காமர் நீங்கருந் தோளா றிரண்டுடைச் சுந்தரனே. 80

சுந்தர மேவிய தோகையின் மீது சுடரயிலோ
டந்தர மேவிய னாறாக வந்தினி தாண்டருள்வா
யெந்தர மேவியற் கண்ணார்க் குருகி யிளைக்குநெஞ்சை
யுந்தர மேவிய வாறுஞ்செய் யேஞ்செந்தி லூரவனே. 81

ஊரகந் தான்கதி யென்றிரந் துண்ணு மொருவ னுண்மைத்
தாரகந் தாங்க விரித்துரைத் தாயருட் சத்திவைவேல்
வீரகந் தானைத் திருச்செந்தி லாய்புன வேடமகள்
வாரகந் தாவெனப் போற்றேனெண் சித்தும் வழங்குதியே. 82

வழங்கு மருமைத் தமிழ்ப்பாட லாலுனை வாழ்த்திலன்கைக்
கழங்கு மருமை விழியாருக் கேங்கினன் காத்தருள்வாய்
மழங்கு மருமை தருபால னேசெந்தில் வாழ்குகனே
கிழங்கு மருமை வனவேட ருந்தொழு கேகயனே. 83

கேகய வாகனத் தையன்செஞ் சேவலன் கிள்ளையுறும்
வாகய வாகனத் தையமர் செந்திலில் வாழ்குமரன்
மாகய வாகனத் தையச கோதரன் வந்தெனதுள்
ளோகய வாகனத் தையரு ணாளுல குய்யுமன்றே. 84

உய்யக் கனகவு மாரர்தம் மோடெனை யூடிருத்தி
வையக் கனகம் விளைப்பதென் றோசெந்தில் வாழ்முருகா
மையக் கனகனைக் கீன்றோன் மருக மதன்பொடியச்
செய்யக் கனகம் பரியா வுரித்துடைத் தேசிகனே. 85

தேசி யணிக்கனி நேர்முலைக் குஞ்சரி செம்பவளப்
பாசி யணிக்கனி யாம்வள்ளி கேள்வன் பசியமயில்
வாசி யணிக்கனி லந்தொறும் போங்குகன் மன்னு செந்தா
ராசி யணிக்க னியமோவெண் டாமரை யங்கனையே. 86

அங்கச மானனை யாராடுங் கோயி லவிர்செந்தில்வேற்
றுங்கச மானமில் லாக்குரு நாத துதிக்கைவெள்ளை
வெங்கச மானவில் வீரகெம் பீர வினோதவென்றி
தங்கச மான மழியாது காத்தெனைத் தாங்கலென்றே. 87

தாங்கரு மானந்த வாரியி லாழ்த்தித் தழலெனவுள்
வேங்கரு மானந்தச் செய்தருள் வாயடல் வெள்விடையார்

பாங்கரு மானந்த னாசெந்தில் வாழயிற் பண்ணவனே
யாங்கரு மானந்த வாதையுற் றேமறிந் தில்லைகொல்லே. 88

இல்லாமை யாலிளைத் தேங்கிடு மென்றற் கிரங்கியொரு
சொல்லாமை யார்முதற் றாரக மீந்தரு டொல்கடலி
னல்லாமை யானவன் றன்மரு காசெந்தி னாயகனே
யெல்லாமை யாநின் செயலேயென் றெண்ணுவ தென்னெண்ணமே. 89

என்னத்த னஞ்ச நிகர்தாய் குருமுதலி யாவுமுன்னு
ளுன்னத்த னஞ்சடக் குந்திற லீந்தரு ளேதமுந்நீர்
வன்னத்த னஞ்சயன் போல்வார்பல் லோருறை வான்செந்திலா
யன்னத்த னஞ்சப் புடைத்தாய்மற் றில்லையோ ராதரவே. 90

ஆதவ னம்புலி யாதியர் போற்று மணிச்செந்திலான்
மாதவ னம்புலித் தோலுடை யானயன் வாழ்த்தும்பிரான்
சீதவ னம்புலி வாழ்வாள் கணவன் திருப்பதத்திற்
பூதவ னம்பு விடுவாருக் கின்பப் பொலிவெய்துமே. 91

பொலியுங் களப முலைமாத ராடும் புனற்செந்திலாய்
மலியுங் களபன் மலர்த்தொடை யாயிரு மாதர்பங்கா
புலியுங் களபமுங் கொன்றார் புகழும் புலவதுதி
சொலியுங் களபயம் பெற்றுமென் நெஞ்சந் துயர்ப்பட்டதே. 92

துயரா வினைத்திரள் மோகக் கடலிற் சுழன்றுமன
மயரா வினையத் தமிழ்ச்சீருண் டாகு மருள்பெருகு
முயரா வினையிவர் வார்மைந்த னைச்செந்தி லூரவனைப்
பையரா வினையஞ்ச வாடும யூரனைப் பாடுநர்க்கே. 93

பாடாண் மையிலுயர் பைங்கிளிக் கின்பப் பதங்கொடுத்தா
யாடாண் மையிலிவர்ந் தாய்சேவ லைக்கொடி யாக்கிக்கொண்டாய்
கேடாண் மையில்லவர் சில்லோர்க்குங் கீர்த்தி கிடைக்கச்செய்தாய்
தாடாண் மையிலங்கு செந்தூர வின்றென் றனக்கிரங்கே. 94

தனக்குங் குமத்துணைக் கோட்டாற் பொருது தவஞ்செய்யுமா
மனக்குங் குமத்துவ நல்குமின் னார்மையல் வாரிசுற்று
மெனக்குங் குமத்துவி தந்தரு வீர்கொ வெழிற்செந்திலீர்
கனக்குங் குமத்து முடிப்பார்க் குவைத்த கருணைகொண்டே. 95

கருமற வன்றனை யன்ன வுருவங் கவினவந்தங்
கொருமற வன்றனை யன்ன வுருவ முறச்செய்தவேள்
குருமற வன்றனை யன்ன வுருவங் குரிக்குஞ்செந்தூர்
மருமற வன்றனை யன்ன வுருவம் வகுத்தவனே. 96

வகுப்பா னலந்தெரிந் தேத்துகி லேனின்முன் வார்விழிநீ
ருகுப்பா னவன்பரை யெள்வே னெனக்கென் றுதவிசெய்வாய்
மிகுப்பா னலியவுங் கண்டனை யேகன்றை விட்டுவருந்
தொகுப்பா னருந்து மலர்ச்சோலைச் செந்திற் சுராதிபனே. 97

சுரபதி யாதியர் போற்றும் பெருமை துலங்குசெந்தில்
வரபதி யானை மயிலானை வள்ளி மணாளனைவேற்
கரபதி யாமுரு கோனைத் துதிப்பவர் கைக்குமவர்
சரபதி யான மடங்கலொப் பாரிது சத்தியமே. 98

சத்தியத் தைக்கரு தும்பரை வாழ்விக்கத் தானவரைக்
குத்தியத் தைக்கரு துங்கக் கடலுங் கொளச்செய்தசேய்
சித்தியத் தைக்க ருதுநீடச் சேருந் திருச்செந்திலில்
நித்தியத் தைக்கரு துந்துமி யார்ப்பொடு நீடியவே. 99

நீடிய மாலையஞ் சேரவொட் டாது நினைப்பவைகை
கூடிய மாலைய மாவது காட்டுங் குலவுசெந்திற்
பாடிய மாலை யணிவான்முன் பன்றியும் பட்சியுமாய்த்
தேடிய மாலையற் கெய்தார் குரவன் றிருவருளே. 100

நூற் பயன்

பந்திற் றிரிவித மாமல மாதிப் பகைவெதுப்ப
வெந்திற் றிரிவு பிடாரருட் பேறு மிகப்பெறுவார்
தந்திற் றிரிவிசை யுங்கருங் கோட்டுத் தகர்ப்பெருமாள்
செந்திற் றிரிபுக் கவிநூறுங் கற்றுணர் சீரியரே.

முற்றிற்று

16

திருச்செந்தூர் பதிற்றுப்பத்தந்தாதி

16

திருச்செந்தூர் பதிற்றுப்பத்தந்தாதி

காப்பு

அறுசீர் விருத்தம்

பன்னு முத்தமிழ்க் குறுமுனி வகுத்துள
பதிற்றுப்பத் தந்தாதி
யென்னு நற்பனு வற்கவி நூறுசொற்
றிலங்கெழிற் றிருச்செந்தூர்
மன்னு மாறிரு புயத்தொரு முருகவேண்
மலரடி களிற்சூட்ட
நன்னு தற்படா மணிந்துள தூண்டுவி
நாயகன் காப்பாமே.

நூல்

கலி விருத்தம்

கடல்கு லாவிய பேரொலிச் செந்திலிற் கைவே
லடல்கு லாவிய முருகனுக் காட்படு மவர்பான்
மடல்கு லாவிய கமலநான் முகவனு மதனுங்
கெடல்கு லாவிய மறலியுங் கீழ்ப்பட னிசமே. 1

நிசமொ ரெள்ளள வாயினு நிகழ்த்தரு நெறியிற்
பசகிடாநடை பயிலுநான் பெற்றிடத் தகுமோ
பசலையங் குயத்தார்மிகுஞ் செந்திலம் பதியி
லசமுகைத்தரு ளாறுமா முகத்தவ னருளே. 2

அருளி லாமனக் கயவர்முற் சென்றுசென் றணுகி
மருளு றாநல மளித்திட வல்லையோ வறியேன்
றெருளு நான்மறை புகழ்திருச் செந்திலந் தெருவி
லுருளு வார்வினைப் பணிமுழு தொழிக்குமுத் தமனே. 3

உத்த மத்தவ வேடமிட் டடியரு டுலவிப்
பத்தர் செய்தொழிற் புரியுநா னென்றருள் பெறுவேன்

சத்த மேகமுந் தவழ்தரு சந்தனா சலத்திற்
சித்தர் வந்துவந் தமர்தரு செந்திலா திபனே. 4

செந்தி லாதிபன் றிருக்கைவேற் குருபரன் திகழ்வெண்
தந்தி யூர்பவன் சரவணச் சண்முகக் கடவு
ளந்தி வானிறத் தான்றரு மதலையோ வன்னோன்
புந்தி நாடிய பொருள்கொலோ வுணர்ந்தெவர் புகல்வார். 5

புகழு முத்தமிழ்ச் சுவைநய மறிகிலாப் புல்ல
ரிகலு மித்துயர்க் கென்செய்வே னிரங்கியாண் டருளினா
யகலு மம்புவி புகழ்திருச் செந்திலி லளவில்
பகலு மோருரு வாய்தொத் தொளிர்குரு பரனே. 6

பரந்த வான்கலைப் பொருண்முழு தறிகிலேன் பலர்சோ
திரந்த ருந்திமா தவமிகப் புரிகிலே னெனையாள்
கரந்த நெஞ்சகக் கள்ளவர்கண் காணருங் கந்தா
நிரந்த ரந்திருச் செந்திலில் வாழுநின் மலனே. 7

நின்ன ருட்டிருப் பெருக்கமே துணையென நினைத்து
மின்னல் வாரியிற் குளித்தன னேனிரங் கிலையோ
பன்ன கத்தினின் றாடிய பச்சைமா மயிலின்
மின்ன னாருடன் விளங்கிய செந்தில்வே லவனே. 8

வேலை யிற்பொரு நையிற்கனற் றிரளிலியான் விடுத்த
நூலை யாவையு மீவதா நுவன்றசொற் பிழையோ
வாலை மாமணங் கமழ்தரு செந்திலி லடைந்தோர்
மாலை வென்றமெய் வாழ்வுறப் புரியும்வா னவனே. 9

வான வாணரு மதித்திட வாழ்வது கருதி
யீன முற்றநா னின்புறப் புரியுநா ளென்றோ
பானல் வாவியம் பொழின்மலி செந்திலம் பதியி
லேன லாள்பரத் தினளுடன் வதிதரு மிறையே. 10

வேறு – தாழிசை

இறையு மெய்யுணர் வின்றிய நாயினே
னிறையு மின்ப நெறியுறச் செய்வையோ

மறைமு ழக்க மலிதிருச் செந்திலிற்
குறைவில் கோயிற் கொளுங்குரு நாதனே. 11

நாத கீத நலந்திகழ் நால்வகை
வேத மும்புகழ் மெய்ப்பொரு ணல்குவாய்
சீத வாரித் திரையொலிச் செந்திலிற்
சூத மொன்றைத் துணித்தவை வேலனே. 12

வையு மென்புன் மனங்களி கூர்நலஞ்
செய்யு நீருன் றிருவுளத் துள்ளதோ
மையு லாம்பொழிற் செந்திலில் வந்துளா
ருய்யு மாறரு ளுத்தமத் தெய்வமே. 13

தெய்வ நான்முகன் சென்னியி லொன்றைமுன்
கொய்வ தாநகங் கொண்டவர் தம்பிரான்
மைவ ரும்பொழின் மன்னிய செந்திலி
னெய்வ ழிந்தலர் நீபவுல் லாசனே. 14

ஆச கன்ற வருட்டிரு மந்திரம்
பேச வல்ல பெருமைபெற் றுய்வனோ
வாச வன்றரு மங்கையும் வள்ளியு
மேசல் காணு மியற்செந்தி லெந்தையே. 15

எந்த லோகமு மேத்தெழிற் செந்தில்வாழ்
செந்த கைக்கும ரேசனைச் சிந்தியார்
மந்த மாருத வான்சக டூர்மதன்
கந்த வாளிக் கனற்சுட நோவரே. 16

நோவ நிந்தை நுவல்பவர்க் கஞ்சுமென்
னாவ றீர வருள்வதெக் காலமோ
காவ லாரி கருதெழிற் செந்தில்வாழ்
தேவ தேவ சிவகுரு நாதனே. 17

நேயம் வைத்துனை நித்தமு நத்திடாப்
பேயர் தம்முற் பிணங்கலென் றோயுமோ
தீய ராமவர் சேரருஞ் செந்திலிற்
றூய சேவற் றுவசவுற் சாகனே. 18

சாக ரத்தரங் கந்தர ளங்குவை
யாக நல்கு மணிதிகழ் செந்திலிற்
பாக சாதன னாதிய பண்ணவர்
சோக நோய்தவிர்க் குஞ்சுட ருள்ளதே. 19

உள்ள மொத்துனை யுன்னில னூர்தொறுங்
கள்ள மோதிக் கழிபடச் சுற்றினே
னெள்ளற் றீர்நல மெய்துவ தெற்றையோ
விள்ள ரும்புகழ்ச் செந்தில்வி னோதனே. 20

வேறு – அறுசீர் விருத்தம்

நோதருங் கவலைப் பேயா
ஹுண்ணறி வனைத்து நீங்கிச்
சாதலு மினிய தாகித்
தயங்குவ தறிகி லாயோ
தாதகி முடிக்கும் பெம்மான்
றழல்விழிப் பொறியா வந்தாய்
சீதளப் பொழில்கு லாவுஞ்
செந்திலம் பதியிற் சேயே. 21

சேயமா முகங்க ளாறுந்
திருக்கைவேற் புயமுந் நான்குந்
தூயமா மறைக ளேத்துந்
துணைப்பத மலருங் காட்டாய்
தீயசூர்ச் செகுத்துத் தேவர்
சிறைதவிர்த் தருளுஞ் செல்வா
காயகந் தவிர்க்குஞ் செந்தூர்க்
கருணையங் கடவு ளானே. 22

கடன்முதற் புனலிற் றீயிற்
கடையனேன் விடுத்த பாடற்
புடவியிற் கொடுத்தா லன்றிப்
பொன்னடி விழையேன் கண்டாய்
நடமிகப் புரியுந் தோகை
ஞமலியி லிருவரோடு
மிடனக திருச்செந் தூரி
லென்றும்வந் திலங்கு வானே. 23

வான்வெளி கனனீர் மண்ணென்
மதியிய மான னாய
கோன்வழி படுநின் றாளே
குறியெனக் குறத்தி லேனோ
தேன்வழிந் தலருஞ் செச்சைச்
செழுமலர் முடிப்பாய் செந்தூர்
தான்வதி தரற்கா நல்ல
தலமெனத் தழைத்துள் ளானே. 24

தழைசெவிக் கடமா வேறித்
தமநிய நகராள் வானு
முழையுமுன் னுதவ வந்தா
ருன்னையொத் துருகா தாரோ
பிழைபொறுத் தருள வல்லாய்
பிஞ்ஞகப் பெருமான் மைந்தா
கழைமலி வயற்செந் தூரிற்
கவின்றரு கந்த வேளே. 25

கந்தநாள் மலர்க டுவிக்
கனிதமிழ்க் கவியா லேத்திச்
செந்தகை கருது மென்னுட்
டியக்கறுத் தருளொண் ணாதோ
மந்தமா ருதவெற் பாளும்
வரமுனி மகிழும் வாழ்வாச்
சந்தனா சலத்துச் செந்தூர்
தனிலமர் தனிவே லானே. 26

வேலையும் விடமும் வாளும்
விசிகமும் விளங்குங் கண்ணார்
மாலைவென் றருட்பே றெய்தி
மகிழுநாள் வருத்தொண் ணாதோ
பாலைநேர் மொழியாள் பாகன்
பரவிய பதத்தம் மானே
யோலைவெந் தூதர் நாடா
துயர்ந்தசெந் தூருள் ளானே. 27

உள்ளகக் கவலை நோயா
லுழலுமிவ் வுலுத்த னேனைப்
பள்ளநீர்ப் புவியும் வானும்
பரவுநாள் வருவிப் பாயோ
தெள்ளமிழ் தனைய தீஞ்சொற்
றெரிதமிழ்ப் புலமைச் செந்தூர்
வள்ளலே மயிலி லாட்டில்
வாரணத் திவர்வல் லானே. 28

வல்லமெய்ப் புலவர் பாடல்
வனைதரு மருமந் தன்னிற்
புல்லனேன் றொடுத்த புன்சொற்
புனையவு மிசைவாய் கொல்லோ
நல்லவர் பலர்வந் தாடு
நளிர்கடற் றிருச்செந் தூரி
லெல்லவர்ப் படித்துச் செய்தாங்
கிலங்குவே லெடுத்துற் றோனே. 29

உற்றவா றுணர்த்து வார்போன்
றுரைத்தசொல் லொன்றா னாலும்
பற்றலர் நடுங்கப் பாரிற்
பலிப்பதே விழைந்தே னந்தோ
கற்றவர் மலியுஞ் செந்தூர்க்
கந்தனே கவுரி பாகன்
பெற்றபா லகனே யன்பா
பிறப்பிறப் பறச்செய் வானே. 30

வேறு – கலித்தாழிசை

செய்ச்சீர் மலிசெந் திலில்வந் தயில்வேற்
கைச்சீர் ருறுகந் தன்முனின் றிடினே
பைச்சீர் திகழல் குல்படைத் தவர்தம்
பொய்ச்சீர் விழையுந் துயர்பொன் றுறுமே. 31

பொன்றா தநலம் பொலியும் புகழ்மீ
தென்றா கமிருப் பதறிந் திலையோ
நன்றா யிரநந் தியசெந் திலிலோர்
மின்றாழ் கதிர்வேல் கொடுமே யவனே. 32

மேயும் புயன்மிக் குறுசந் தனவெற்
பேயுந் திகழ்செந் திலிடத் தொருவன்
தாயும் பொருவின் றியதந் தையுநூ
லாயுங் குருவா தியுமா மவனே. 33

ஆமா மெனவன் றறையும் பலசொ
லேமா றவெனைச் செயல்கண் டிலையோ
தேமா வடுசீர் திகழ்செந் திலினிற்
கோமா னெனநின் றகுணக் கடலே. 34

குணமுங் குறியுங் குலையும் படிகண்
டணவுங் கலியென் றழியும் பகராய்
பணவங் கதகங் கணர்பங் கினள்பா
லுணவுண் டுயர்செந் திலுறைந் தவனே. 35

உறையின் றியவா மெனவொள் ளியசூர்
குறையுங் குறையென் றுகுலைந் திடுமோ
மறைவிஞ் சிவயங் கியசெந் திலில்வந்
தறையுந் துதியா ளர்தமக் கரசே. 36

அரசா கியறம் பொலிசெந் திலில்வாழ்
குரவா வயில்கொண் டவிர்திண் புயனே
பரசா ழிபருங் கரகத் தினர்நீர்
விரவா மலெனக் கருண்மெய் யருளே. 37

மெய்யா ளர்மிகுத் துறுசெந் திலில்வா
ழையா வெழிலா றுமுகத் தரசே
யெய்யா துவிரும் புமெனிச் சையெலாம்
பொய்யா துபுரிந் திடனின் கடனே. 38

நின்னன் புநிறைந் துளநெஞ் சதனிற்
பொன்னன் புபுகுந் ததுமெவ் விதமோ
தென்னன் புகழ்சீர் பெறுசெந் திலிடந்
துன்னன் புடையா ருணர்தூ யவனே. 39

தூய்மைக் கொருவித் துறழ்தொல் பெரியோர்
லாய்மைக் குமறுப் பகர்வன் புடையேன்

சேய்மைப் புகழ்சேர் தருசெந் திலவன்
பாய்மைப் பரியே நிகர்பண் பினனே. 40

வேறு

பண்பாடும் வண்டுமலி பசுங்கொன்றைத் தொடையாளா
நண்பாகிக் களிகூர நவில்கவிஞ ளீயெனிலென்
வண்பாடற் கின்றளவு மனமிரங்கா திருப்பாயோ
தண்பாவு மலர்ச்சோலைத் தனித்திருச்செந் தூரானே. 41

ஆனேறும் பெருமாற்கு மரியதமிழ்க் குறுமுனிக்கு
மானேர்கண் ணாருருகும் வனப்பருணைப் புலவனுக்கு
மேனேனன் றருள்செய்தா யெனக்கின்றே னிரங்குகிலாய்
தானேதன் நிகராய தமிழ்ச்செந்திற் றலத்தானே. 42

தலந்தாங்கு முரகபதி தலைநடுக்கங் கொளநடிக்கும்
பலந்தாங்கு மயிற்பரியிற் பாங்கிருவ ரொடுகாண்டற்
கலந்தாங்கப் படிசெய்தே னதையுமறுத் தலைத்தாயே
வலந்தாங்கும் வேற்படைச்சீர் வயங்குசெந்திற் பதியானே. 43

பதியாத புன்னெஞ்சப் படிறனே னாயினுமெய்க்
கதிவேண்டு மவர்வேடங் கவின்றரப்பூண் டிலன்கொல்லோ
சதிதீரத் தடுத்தாண்டுன் றண்டையந்தா டரவேண்டுந்
துதிகூறு மவர்க்கினிதாத் துலங்கியசெந் தூர்க்குகனே. 44

தூர்த்தர்களிற் றலையாகித் துயர்ப்பட்டுச் சுழல்வேனைச்
சீர்த்தபெரி யோரவையிற் சேர்த்தருள வல்லாயோ
கூர்த்தவடி வேலானே குன்றுதொறு நடமாடுந்
தீர்த்தனே வளமோங்குந் திருச்செந்தி னகர்ச்சேயே. 45

சேயதுவர்க் கனிபோலத் திகழுமிதழ்ச் சிறுமியர்தம்
மாயமே லிடநொந்து மறுகினுநின் மலர்த்தாளி
னேயமறந் திலனென்னை நெட்டுயிர்த்துத் தட்டழிவுற்
றாயவிடத் தகுங்கொல்லோ வருட்செந்தூ ராள்வானே. 46

ஆளாகி நின்புகழே யநுதினமு மொழியாமல்
வாளாய கண்ணியர்தம் மனக்களிவேட் டுழல்கின்றேன்
றேளாய நமன்வந்து செருச்செயுமுன் திருத்துவையோ
கோளாளர் மருவரிதாக் குலவுசெந்திற் குருபரனே. 47

குருவாகிக் கவுமாரர் குலதீப மெனக்குலவும்
பெருவாழ்வுள் ளானொருவன் பின்றிரியும் பேறருள்வாய்
மருவாருங் கடப்பமலர் வனஞ்சூழ்செந் தூரிடத்திற்
றருவாணர் நிமித்தம்வருந் தனிவேற்கைச் சண்முகனே. 48

முகமனுரை பலபேசி முழுமூட ரிடத்திரந்தென்
னகமெலிதற் காண்பதுன தருட்பெருமைக் கழகேயோ
சகலபுவ னமும்புகழுந் தனிச்செந்திற் றலத்தோங்குங்
குகநினதா ளெனத்தம்மைக் குறிப்பவரிற் கூட்டாயே. 49

கூட்டமிடு முனிவர்குலங் குலைகுலையக் குதித்தார்க்கு
மாட்டடல்கண் டுவந்தேறி யருள்புரியு முருகாநின்
பாட்டடியார் பலர்மேனாள் பரவுசெந்திற் பெருமைகளி
னாட்டமுறு மெனைப்பிறர்தா நகையாமற் புரந்தருளே. 50

வேறு – கலித்துறை விருத்தம்

புரமூன்று மெரிசெய்த நகைநம்பன்
முதலாய புத்தேளிருக்
கரமாய வடிவேலு ரங்கொண்டு
செந்தூரி லுற்றுள்ளவன்
வரம்வேண படிநல்கு வானென்ன
மிகநம்பு மனமுற்றநான்
கரமாய விழிமாதர் மயனோயின்
வசமாதல் கடனல்லவே. 51

அல்லற் பெருந்தாப மருவுற்று
மெலிபுன்மை யடைகின்றநான்
சொல்லத் தகும்பாடல் களிலொன்றை
யுங்கொண்டு சூடாய்கொலோ
வில்லத் திருந்தாலு மதைவிட்டி
ரந்தாலு மிடைவைகினு
நல்லற் புதக்கந்த னெனிலுய்கை
யருள்செந்தி னகர்வேலனே. 52

நகமாயி ரங்கோடி தொறுமாடி
வருசெந்தி னகராளருட்
குகனேயே னத்தெண்ட னிடுவார்க
ளுடனென்று கூடச்செய்வாய்

புகழ்துன்று மொருமன்னன் விழிபோய்வ
ரச்செய்த புலவோனையே
நிகராம வர்க்கான படிநாளு
முயல்கின்ற நெறியாளனே. 53

ஆளாயு னன்பற்கு ளிக்கின்ற
மெய்த்தொண்ட ரடிபேணுநற்
றாளாண்மை யுற்றுஞ்ச கங்கொண்ட
மாயைத்த ழற்கஞ்சினேன்
வாளாய கண்வள்ளி தெய்வானை
பாகாம லர்ச்செச்சையந்
தோளா திருச்செந்தி லூராவு
மைப்பெண்சு மைப்பாலனே. 54

பாலுங்க சக்கும்ப டிக்கான
வின்பப்ப யன்பெற்றுளார்
மேலுஞ்சி னக்கும்கு ணங்கொண்டு
ளேனென்று மெய்சேர்வனோ
சேலுங்க ணல்லார்ந டிக்கின்ற
செந்திற்றி ருக்கோயிலுள்
வேலும்பி டித்துக்கு லாவுந்த
மிழ்ச்சீல விற்பன்னனே. 55

விற்பன்னர் பல்லோர்வி யந்தோது
செந்தூர்வி சாகன்றனைச்
சற்பங்க யங்கக்கு திக்கின்ற
தோகைத னிற்கண்டுளார்
கற்பங்கள் கோடாநு கோடிக்கு
மாயாத காயத்தராய்
வெற்பந்த மெங்கெங்கு மேவிக்க
ளிப்பார்வெ றுப்பன்றியே. 56

இன்றைக்கி ருந்தார்க ணாளைக்கி
ராரென்றி சைக்கின்றசொ
லொன்றைக்கு றித்துன்னை யுன்னித்த
வஞ்செய்து வப்பெய்திலேன்

குன்றைத்தி ரைச்சாக ரத்தைப்பொ
ருந்துங்கு லச்செந்திலூ
டென்றைக்கு மாறாதி ருக்குங்கு
ணஞ்சேரி யற்றெய்வமே. 57

தெய்வங்கள் கோடிக்கு நீயேமு
கப்பென்று சிந்திப்பதா
மெய்வந்த நெஞ்சத்தி னீவந்து
சொல்லுஞ்சொன் மெய்யல்லவோ
தைவந்த தென்றற்பொ ழிற்சீர்கு
லாவுந்த னிச்செந்திலிற்
கைவந்த வேலோடு நின்றாடல்
செய்யுங்க ழற்கந்தனே. 58

கந்தக்க டம்புங்க ளிச்செச்சை
யுஞ்சேர்க வின்றோள்புனை
சந்தத்த மிழ்ப்பாவ லர்க்காண்மை
முற்றுந்த ருஞ்செந்திலான்
முந்தத்த டுத்தாண்டு கொண்டான
ருட்பேறு முற்றச்செயா
திந்தச்ச கத்தாரி கழ்ச்சிக்குள்
வைத்தானெ னக்கின்பமே. 59

இன்பப்ப குப்பென்ப யாவைக்கு
மேலாமி யற்பேறதாற்
றுன்பப்பெ ருக்கைதொ லைக்கத்து
ணிந்துன்றொ ழும்புற்றுளே
னென்பக்கு வச்சீரை யெண்ணாம
லின்னேயெ டுத்தாளுவாய்
மின்பட்ட வேலாயு தத்தெய்வ
மேசெந்தில் மேவையனே. 60

வேறு – அறுசீர்க்கழிநெடில்

ஐயமின்றி நினதெழுத்தோ ராறையுமே
தினங்கருதி யவலந் தீர்ந்து
செய்யதமிழ்ப் புலவருக்கோர் திலகமெனத்
திகழுநலஞ் செயவல் லாயோ

பையரவ மிசைநடிக்கும் பச்சைமயிற்
பரியூரும் பவளக் குன்றே
வெய்யசினச் சமர்ச்சேவற் கொடியானே
செந்திநகர் விழைந்துற் றோனே. 61

உற்றவரென் றுன்னருட்பேற் றிச்சையுள்ளார்
தம்மையன்றி யுலகில் வாழு
மற்றவரை நம்புகிலா மனத்தேனு
மிவ்வாறு வருந்த லாமோ
பற்றலர்தங் குலமழிக்கும் பரிதிவைவேற்
படையானே பழுதி னூல்கட்
கற்றதமிழ்ப் புலவர்பலர் வருஞ்செந்திற்
பதிபுரக்குங் காவ லானே. 62

காவகத்துப் புத்தேளிர் களிப்பெருஞ்சீ
ரினைப்பொருளாக் கருதா துன்கைச்
சேவலங்கே தனம்வாழி யெனத்துதிக்குந்
தமியேனுந் தியங்க லாமோ
மூவருக்கு மாதரமா முனைக்கதிர்வேற்
படையானே முப்பாற் பான்மைப்
பாவலர்தம் பனுவல்புனை புயத்தானே
திருச்செந்திற் பதிச்செவ் வேளே. 63

செவ்வேளைக் குமரகுரு பரமுருகப்
பெருமாளைத் தேவர் போற்றுங்
கைவேல்கொண் டருட்செந்தூர்த் திருக்கோயி
லிடைநடிக்குங் கடவு ளானைப்
பொய்வேடம் புனைந்தெனைப் போற்புவிபுகழ
நடிப்பார்க்கும் புரையொன் றின்றி
மெய்வேதப் பயன்கருது மேலவர்க்கும்
பொதுவனென விளம்ப லாமே. 64

விளங்கனிநேர் கொங்கைநல்லார் தருங்காமப்
பணிக்கனலில் வெதும்பு முள்ளக்
களங்கமுழு தொழித்துனருட் காரணமே
கருதுநலங் கற்பித் தாள்வாய்

வளங்கவினும் பலகோடி மலையினும்போய்
நடமாடி வரும்பொற் றாளா
இளங்கமுக மடனிழலிற் குரங்குதுயில்
பொழிற்செந்தூ ரிடத்துள் ளானே. 65

இடங்கொண்ட பூவுலகும் வானுலகும்
பாதலமு மிறைஞ்சும் பேறுற்
றடங்கொண்ட பரசமைய மத்தனையு
மடங்கவெலு மாண்மை யீந்தாள்
படங்கொண்ட பாந்தளின்மே னடமாடும்
பச்சைமயிற் பரியி லேறி
மடங்கொண்ட மாதர்மனங் கவர்ந்துசெந்திற்
றிருப்பவனி வரவல் லானே. 66

வல்லாண்மைக் கவுமார நெறியுலகிற்
பெரிதோங்கி வளரச் செய்யு
நல்லாண்மை யருணகிரி நாதன்முத
லோர்க்குமுன்னே னல்கி லாயோ
வில்லாண்மைப் புகழ்பொறுக்கும் வீரவாகுத்
தலைவன் விரும்பும் பாதா
பல்லாண்மைப் பொலிவுதவுந் திருச்செந்திற்
பதிபுரக்கும் பான்மை யானே. 67

பானல்விழிக் குறவள்ளி பகர்குறியுந்
தெய்வமங்கை பரிவு நீயன்
றூனகுவேற் படையொடுவந் துரைத்தமையும்
பிழையாமென் றுன்ன லாமோ
போனகச்சீர் மலிதிருச்செந் தூர்க்குமர
குருபரனே புலவர் கூறுந்
தேனனைய தமிழ்ப்பாடல் விழைந்துலகத்
தூர்கடொறுந் திரிகின் றோனே. 68

திரிவுபடுங் கடுங்கோட்டுச் செந்தகரைப்
பிடித்தேறிச் செலுத்தி லாயே
விரிதிரைநீர்ப் பூவுலகு மேலுலகும்
பாதலமும் விளங்குங் கொல்லோ

கரியுரிப்பாண் டரங்கன்முதற் கடவுளர்க்கோ
ராதரமாங் கைவே லையா
தெரிவருஞ்சீர்ச் செந்தூரா சிறியனேன
ளவும்வஞ்சஞ் செயவொண் ணாதே. 69

ஒண்கொண்ட வேற்பூசைக் குரித்துமிகுந்
தமியெனேனெ னுள்ளத் தேனுங்
கண்கொண்ட மயிற்றோகை நீழலில்வந்
தொருகாலங் கவின வேண்டும்
பெண்கொண்ட பாகத்தார் நுதற்கனற்கட்
புலிங்கமெனப் பிறந்த பாலா
வண்கொண்ட பொழிற்செந்தி மாநகரிக்
கோயிலுக்குள் வசிக்கின் றோனே. 70

வேறு – எண்சீர்ச் சந்தவிருத்தம்

தனத்த தாந்தன தனதன தனனா

வசித்த செந்திலி லொருதரம் வருவார்
மலைப்பெ ருங்குகை தொறுநினை பவர்சேர்
விசித்தி ரம்பெற வருளியு மிருபாழ்
வினைக்கொ டும்பகை யறும்வகை மொழிவா
னசிக்கு லந்திகழ் கரமிகை யுடையா
னசத்தி யம்புரி பவருணர் வரியா
னொசித்தொர் பன்றியி னதுமறு வறுகோ
டுமைக்கி ணங்கினர் கொளவுத வினனே. 71

தனதன தானன தனதன தந்தா

இனனொரு கோடிகள் விழியெதிர் வந்தா
லெனவடி வேலொடு மயிலி லிவர்ந்தே
பனகமெ லாமழ வகவொலி கொண்டோர்
பழுதறு சேவை யதுதவுவ தென்றோ
வனகச தாசிவ னுதல்விழி யின்றீ
யருளிய பாலக னெனவளர் கந்தா
தனதனை நேர்பவர் பலருறை செந்தூர்
தனில்வரு வார்வினை களையும ருந்தே. 72

தனந்த தந்தன தானன தனனா

மருந்து மந்திர மாமணி யெனவே
வழங்கு கின்றவை நாணுற வளர்சீர்
பொருந்த வுந்துப னீரிலை யதிலே
பொதிந்த வெண்டிரு நீறருள் புலவோன்
வருந்த ருந்தவர் வேள்வியி னிடையே
வரும்பெ ருந்தக ரேறிய வயவே
டிருந்து செந்திலி லாடிய குகன்வே
றிகழ்ந்த திண்புய னாறிரு கரனே. 73

தனனத் தானன தந்தன தனனா

கரமொப் பாகிய கண்கொளு மடவார்
கவலைச் சாகர மென்றதில் விழமா
றரலெப் போதுத விர்ந்துன தருளே
தகும்நட் பாகுமெ னுந்துணி வுறுவே
னரனக் காலமு யன்றுள தவசா
லமரர்க் காகவ ருஞ்சர வணனே
சரதச் சீர்திகழ் செந்திலின் முருகா
தமிழ்கற் றார்விழை யுங்குரு பரனே. 74

தனனந் தனனந் தனத்த தனனா

பரமுங் குருவுந் தகப்ப னனைநேர்
பலரும் பிறவுங் கடுத்த பெரியோர்
சரணங் கதியென் றிருக்கு மதுவே
தவமென் றுணருந் திறத்தை யருள்வாய்
சரபந் தருதிண் டிறற்சண் முகனே
சகுணங் களின்மிஞ் சியற்கை யுடையாய்
வரமொன் றியசெந் திலுக்கொ ரிறைவா
மதுரம் பொலியுந் தமிழ்க்கொள் குகனே. 75

தனனத் தந்தன தாத்த தனனா

குகனைத் தொண்டர்கு ழாத்தி னிடைவாழ்
குரவத் திண்புய மூர்த்தி தனைமான்
மகளைக் கண்டடி போற்று நனைவேல்
வயமிக் கொன்றிய கீர்த்தி யனையோர்

சுகமெச் சுங்கவி வாய்த்த வனையீ
சுரனுக் கன்றொரு வார்த்தை சொலுமா
ணகனைச் சந்ததம் வேட்டு மெலிவீர்
ரருமைச் செந்திலி னாட்ட நலமே. 76

தனதன தந்தன தாந்த தானா

நலமுழு தும்பெற வேண்டி மாறா
நளிர்கட லம்புவி மாந்த ரூடோர்
புலவனெ னும்புகழ் தாங்கி வாழ்சீர்
பொலியுமென் நெஞ்சக மேங்க லாமோ
கலகமி டுஞ்சமண் வேந்த ரானார்
கழுமர மென்றதின் மாய்ந்து போமா
றிலகொரு வன்புகல் பாங்கர் பாலா
வெழின்மிகு செந்திலை யாண்ட கோவே. 77

தானன தந்தன தன்னன தானா

கோவைந றுங்கனி துன்னிதழ் வாயார்
கோலநி னைந்துரு கென்னுட னேநீ
பாவைவி ளம்பெனு முண்மையி னாலே
பாடுவ தன்பய னென்னசெய் வாயோ
நாவைவி ரும்பய வெண்ணிற மானா
ணாடும ருங்கலை பின்னிய நாதா
சேவைத ருஞ்சிவ சண்முக வேளே
சீர்பெறு செந்திலை நண்ணிய தேவே. 78

தானன தந்தன தய்யன தந்தா

தேவர்பெ ருந்துய ரெய்தவி டுஞ்சூர்
சீரழி யும்படி செய்தவ னன்பே
நாவலர் தம்புடை கொள்ளுவ தென்பே
னாகரி கம்பெறும் வைகலு மென்றோ
சேவல ணிந்தவிர் கையுறு கந்தா
தீதறு குஞ்சரி வௌவிய மொய்ம்பா
காவடர் செந்திலில் வைகிய நண்பா
காமனை வென்றவர் செய்யகு ருந்தே. 79

தனதன தனதன தந்தன தானா

குருவுனை யலதிலை யென்றுகொ ளாதே
குறைமதி யினரெதிர் சென்றுளம் வாடே
னருவமு முருவமு மொன்றிய மேலா
மநுபவ நலமதை யன்பொடு தாராய்
சருவுண வினர்தரு குஞ்சரி பாகா
தழையுடை வனசர மங்கைம ணாளா
திருவுட னருண்மலி செந்தில்வி சாகா
சிவன்வழி படமுதிர் செந்தகை யானே. 80

வேறு – கலிவிருத்தம்

ஆனை மாமுகத் தவன்றன் பின்வருங்
கோனை வார்கடற் குளிர்ச்செந் தூரனை
மேனை பேரனை விரும்பு மெய்த்தவம்
வானை யாண்டபின் வருநர்க் கெய்துமே. 81

எய்த விற்கரத் தெயினர் தங்குலஞ்
செய்த மாதவச் சிறுமி கேள்வனை
மெய்த ரும்புகழ் மிகுசெந் தூரினில்
வைத பேர்க்குநல் வாழ்வுண் டாகுமே. 82

ஆகு வாகனத் தவனுக் கஞ்சியன்
றேகு மெல்லையி லெனைவந் தாண்டமை
யோகு ளாரென வுலக மோர்தர
நீகு லாவணி நிறைசெந் தூரனே. 83

ஊரெ லாந்திரிந் துழன்று முன்னருட்
சீரெ லாம்பெறச் சிந்தித் தேங்கினேன்
பாரெ லாம்புகழ் பயனென் றீகுவாய்
காரெ லாம்வருஞ் செந்திற் கந்தனே. 84

கந்த நாண்மலர்க் கடம்ப னோடுமென்
செந்த மிழ்க்கவித் தொடையைச் சேர்ப்பையோ
மந்த மாருதம் வருஞ்செந் தூரினிற்
சந்த னாசலத் தலத்து வேலனே. 85

வேலை யார்ப்பொலி மிகுஞ்செந் தூரினின்
மாலை வானென வளரு வான்றனைக்
காலை யாதிமுப் பொழுதுங் காண்பவ
ரோலை யேவுநற் குளமஞ் சார்கனே. 86

அஞ்ச னல்கினை யடுத்து வந்தொரு
வஞ்ச மின்றிய வார்த்தை கூறினை
செஞ்ச ரோருக வாவிச் செந்திலாய்
நெஞ்ச கத்துயர் நீங்கிற் றில்லையே. 87

இல்ல றந்துற வறமென் றேத்திரு
நல்ல றத்தினு மின்றி நைந்துளே
னல்ல தீர்த்துன தருள்சற் றீகுவாய்
செல்ல றாப்பொழிற் றிருச்செந் தூரனே. 88

செந்தி லம்பதிக் குருநிற் சிந்தியா
வந்தி யாரென வருத்த மெய்தினே
னந்தி வெண்பிறைச் சடிலத் தாருடன்
முந்தி யோதிய மொழிசொற் றாள்வையே. 89

ஆள வல்லையென் றடைந்து ளேனெனைக்
கோளர் தம்முடன் குலைய விட்டிடே
றேள னாரணு கரிய செந்திலி
னீள வேல்கொடு நிலவு நித்தனே. 90

வேறு – எழுசீர் விருத்தங்கள்

நித்தமு முனையே கருதுமா தவநன்
    னெறிபிழைத் தொழுகலிற் சிறந்த
பத்தனேன் றானு நின்னதா ளெனுமெய்ப்
    பெயர்பெறப் புரிந்திலாய் கொல்லோ
பைத்தவா ளரவி னடம்புரி தோகைப்
    பரியில்வந் தொருதரங் குலவாய்
செய்த்தலை வாளைக் கயலுகள் செந்தூர்த்
    தெய்வமே சைவதே சிகனே. 91

தேசிகப் பெருமான் திருவருள் வளமைச்
    செந்திலம் பதியுடைச் சிறுவன்

பாசியுங் குறடும் பலகறை யணியும்
பசுங்கதிர்ப் பன்னலோ டணிவா
ளாசிநன் குணர்வே ளவனலா தொருவர்க்
கடிமையா மல்லமென் றறைதல்
வீசிய திரைநீர்ப் புவிமுழு தறிந்தும்
வினைப்பணி மிகையொழிந் திலவே. 92

இலவுறழ் கயமைக் குரியவர் மனைதோ
றிரந்தலைந் திளைத்துளேற் கின்பக்
குலமுழு துதவிக் குறைவின்மெய் யடியார்
குழுவுடன் கூட்டுதற் கிரங்காய்
கலவமென் றுகிலாள் கணவனே தவளக்
களிற்றுமா மகள்புணர் கந்தா
வலகில்சீர்ச் செந்தி லம்பதி புரக்கு
மாறுமா முகத்தனி யரசே. 93

அரசசோ குடையார் முதலிய பொல்லா
ரகமுழு தழிக்குமாண் படைவான்
பரவிநின் றிருமுன் னடைந்துளேன் றனக்கும்
பலவிதத் துயர்தரப் படுமோ
குரவமா லிகையுங் கூதளத் தொடையுங்
குளிர்கடம் பாரமும் பிறவும்
விரவுபன் னிருதோட் குமரநா யகனே
வியன்புகழ்ச் செந்தில்வே லவனே. 94

வேலனே பரமென் றுணர்ந்துளார் தமக்கோர்
மெய்யருள் விழியென விளங்குஞ்
சீலமார் செந்திற் பதியினிற் சென்று
திருப்புகழ்பனு வலாற்று திக்கும்
வாலறி வுடையார் தம்முடன் கூடி
வாழுமாண் பெனக்கருள் வாயோ
சாலவெவ் வேறா முருக்கொடு தோன்றித்
தமிழ்ச்சுவை தருபெருந் தகையே. 95

பெருந்தகைத் தவளக் களிற்றினால் வளர்ந்த
பெய்வளை யிடத்தில்வீற் றிருந்துந்
திருந்துவிற் குறவர் சிறுமியைப் புணர்ந்தாய்
திருப்புகழ்க் கவிமிகச் செப்பு

மருந்தமிழ்க் கிளியொன் றிருப்பினு மெனைநீ
யாண்டுகொண் டருள்செயத் தகுமே
கருந்தனச் சிகரிக் கோயிலஞ் செந்தூர்க்
காத்தருள் கருணைநா யகனே. 96

நாயினுங் கடைய ராகிய புலையர்
நவைநினைத் துளமிக நலியும்
பேயினே னெனினு நின்னருட் பெருக்கம்
பெறுவது குறித்துளே னன்றோ
காயிரும் பனைய தகரிவர்ந் திமையார்
கலக்கமுற் றொழித்தகாங் கேயா
நீயிரங் கிலையே லெவ்வணிங் குய்வே
னசந்திருச் செந்திலி னிகழ்த்தே. 97

நிகரில்பே ராட லுடைத்தெனப் பலரு
நீணிலத் துரைத்திடு நெடுஞ்சீர்
திகழ்தரு வயலூர் மலையுடை யொருவன்
செந்திலிற் செல்லெனத் திடமாய்ப்
பகருமா றடைந்தே னென்றருள் புரிவாய்
பரிதிவேற் படைபுனை பவள
நகமுறழ் குமர நாயகா விருவர்
நடுமயின் முதுகிவர்ந் தவனே. 98

தவமொரெள் ளளவும் புரிகிலேன் றுதிக்குந்
தமிழினும் நின்புகழ் சாற்றா
தவமறுத் தெனையாண் டருளெனு மொழியே
யறைகுவே னஞ்சலென் றருளாய்
பவளமுந் தரளக் குவையும்வால் வளையும்
பசுந்துணர்ப் பாசியு மெறியுந்
திவலையந் திரைநீர்க் கடலொலி மலிசீர்ச்
செந்தில்வாழ் சுந்தரக் குகனே. 99

சுந்தரக் கமல வதனமோ ராறுஞ்
சுடரயிற் புயங்கண்முந் நான்குஞ்
செந்தகைத் திருத்தாட் டுணையுமென் விழிமுற்
றெரிதர வொருதரம் வருவாய்

பைந்தமிழ்க் குறுமா முனிக்கருள் குரவர்
பலமலை தொறுநடம் பயிலுங்
கந்தநா யகனே செந்தின்மா நகரிற்
கவின்றரு கருணையங் கடலே. 100

நூற்பயன்

பொன்னிறைந்த பெருஞ்சீரோ டறமுந் தோய்ந்து
பொருவரிதா விளங்குசெந்திற் புனித வேண்மேற்
பன்னியசெந் தமிழ்விருத்த மொருநூ றுள்ள
பதிற்றுப்பத் தந்தாதிப் பயன்கொள் வார்க்குத்
தென்னிலத்தோன் முதலோர்செய் யிடுக்கண் டீருந்
திருவருட்பே ராண்மை முதற்றிற லுண்டாகுங்
கன்னிவள்ளி தெய்வானை மகனே யென்று
களித்தழைக்கும் பெருநல முங்காண லாமே.

முற்றிற்று

17

திருவேரக வெண்பாவந்தாதி

17

திருவேரக வெண்பாவந்தாதி

காப்புச் செய்யுள்

தாரகத்தை யன்றுசிவ சங்கரனுக் கோதிவைத்தோ
னேரகத்தந் தாதிக் கிசைந்ததுணை - சூரகத்தைக்
கீன்ற வடிவேலுங் கேகயுள்ள வாகனமு
மான்றகுரு குங்களிறு மாம்.

அருணகிரி தானென்றோ னாரோ யன்றான்
தருண மறியா தவனோ - பொருணலமிக்
கோங்கும் பெருங்கோயி லுற்றறிரு வேரகத்தைத்
தாங்குஞ் சிவகுருநா தா. 1

குருநாதா வென்றுதினங் கூப்பிடுமென் சத்த
மொரு நாளுங் கேட்டிலையோ வுன்றன் - திருநாமம்
வேறோவே றென்றால் விளம்பாய் விளங்குபொன்னி
யாறோங்கு மேரகத்தப் பா. 2

அப்பால் வருந்தினன்போ லன்றுகுற மங்கையிடம்
பொய்ப்பாசாங் கிட்ட புனிதன்றான் - முப்பாலுங்
காய்ந்து தகடாங் கவின்சார லேரகத்தில்
வாய்ந்துலகை யாளும்மற வன். 3

மறவன் புலவன் வணிகேசன் மன்னன்
துறவனனைச் சொன்னவரே கூடித் - துறவியென்னுஞ்
சொன்னவித நானறியச் சொல்லாய்பொன் னேரகத்தில்
வன்னமயி லூரும்வய வா. 4

வானவரூர் நாணுமெழின் மன்னுதிரு வேரகத்திற்
கானவரும் போற்றுமயிற் கந்தனே - நானலமாப்
போகாம லுன்னைப் புகழ்ந்து பணிபுரியும்
வாகாள ரோடிருக்க வை. 5

இருக்குமுத லாய மறையெல்லா முந்தேட
மருக்குரவங் கண்டநின்றாள் வாஞ்சை - கருக்குழியை
நீக்குமென நம்புகின்றே னின்கருணை யெப்படியோ
காக்குந் திருவேர கா. 6

ஏரகத்தி லன்றொருநா ளீசனுக்கு மின்னருளாற்
தாரகத்தைச் சொன்ன தனித்தெய்வம் - பாரகத்து
வெற்பனைத்துங் கொண்ட விளையாட்டை யெண்ணியெண்ணி
விற்பனரெல் லாந்துதிக்கு வேள். 7

வேளை யறிந்தென் விருப்பஞ் சிறிதளித்தான்
நாளையென்பார் பாலு நடப்பேனோ - தேளைநிகர்
பொல்லார் மருவாப் புலகமோங்கு மேரகத்தில்
வல்லா ருணருமுனி வர். 8

முனிவ னுருக்கொண்டு முன்னே ரகத்திற்
தனியனென வந்த குகன்றண்டும் - பணியகற்று
மெல்லனைய வேற்படையு மேணிந்தா னென்நிகழும்
புல்லருணர் வத்தனையும் பொய். 9

பொய்ய ருணராப் புகழோங்கு மேரகத்திற்
மெய்யருணர் தெய்வம் விளங்குமே - கையதனிற்
தண்டணிந்து முற்றும் துவளப் பொடிபூசிக்
குண்டலமுங் காதிலிட்டுக் கொண்டு. 10

கொண்டல்வரு மேரகத்திற் கோலா கலக்குகனென
வெண்டமிழைச் சற்றும் விரும்பானேற் - பண்டளவில்
பாவலர் பாடிப் பயன்பெற்றா ரென்பாரோ
நாவலந்தீ வுற்ற நரர். 11

நரனென்ன வந்துமுன்னை நம்பாமல் மின்னார்
விரகத் தழலால் வெதும்பக் - கரவுமிகக்
கற்றுழல லாமோ கதியளிக்கு மேரகத்தி
லுற்றுமகிழ் வேலா வுரை. 12

உரையு முணர்வு மொழிந்திருக்கு முண்மை
திரையழிந்து தோற்றவருட் செய்வாய் - பரையுதவு

மைந்தனே யேரகத்தில் வந்தோர் வினைதவிர்க்குங்
கந்தனே வேற்கைமுரு கா. 13

ஆவென்று கெஞ்சிக் கதறுந் தமியேனை
வாவென் றுரைத்தருள மாட்டாயோ - கோவென்று
பாவல ரேத்தப் பரிசுதவி யேயேகத்தி
காவலொடு நின்றகும ரா. 14

குமரகுரு நாதனெனக் கூறாதார் தம்மைத்
தமரெனக்கொண் டாடத் தகுமோ - வமரர்குலம்
போய்ப்பரவு மேரகத்தின் பொன்மாட வீதிசுற்றும்
நாய்ப்பதத்தின் மென்றுகளா நாள். 15

நாளென் றிருமாந்து தன்மையின்றிச் சாகாமற்
தானென்று நிற்குந் தவந்தந்தாள் - மீனென்ற
கண்ணா ரிருவர்புணர் கந்தனே காருலவும்
விண்ணாரு மேரகக்கோ வே. 16

வேலைத் தகுவர்குலம் வேரறுத்த நீயிருந்து
மாலைக் கடும்பொத் தலமந்தேன் - பாலைநிகர்
வெண்ணீ றளித்தாள்வாய் மெய்யடியார் தம்மடியா
ரெண்ணீரு மேரகத்தோ னே. 17

கத்துதிரைப் பொன்னிக் கவினாரு மேரகத்திற்
தத்துவத்தைச் சொல்லுந் தனிக்குரவன் - கைத்துவசம்
வாழியெனச் சிந்தித்து வாழ்வார் மலர்த்தோளின்
கீழிருக்குஞ் சந்தக் கிளி. 18

கிளியுருவம் போய்பன்னிக் கீழ்மையுற் றாயென்றன்
றெளியனுடன் சொன்னதுபொய் யென்றாற் - களிமலியு
முத்தியொன்றுண் டென்ற மொழியென்னா மேரகத்திற்
பத்திவச மாங்குமரப் பா. 19

பாவனந்த நின்மேற் பகர்ந்தேனே யத்தனையுங்
கேவலந்தாங் கொல்லோ கிளத்துவாய் - சேவற்
கொடியாடு மேரகத்திற் கொற்றவேந் தாகி
மடியாது நின்றபுல வா. 20

புலவ னொருவனிடம் பொய்வேடங் காட்டி
லிலகுதமிழ்ப் பாட்டொன் றியம்பச் - சிலகவியுங்
கேளாம லோர்கவியே கேட்டிலனோ வேரகத்து
வாளார்கண் ணார்க்கோர் மதன். 21

மதனன் றொடுங்கணையால் வாடாம னின்பொற்
பதமிரண்டுங் காட்டப் படாதோ - கதலிவன
மெங்கும் பொலிந்ததிரு வேரகத்தி லெப்பொழுதுங்
தங்குங் குருநாத னே. 22

தனக்கென்றோ ருண்மையிலார் தக்கவர்போற் பேசிச்
சினக்குங் கொடுமைக்கென் செய்வேன் - மனக்கோ
தொழிக்குமெழி லேரகத்தி லோங்குமுரு கையா
விழிக்கெதிர்வந் தோர்சொல் விளம்பு. 23

விளங்கனிநேர் கொங்கைநல்லார் வேட்கை மிகலாற்
களங்கமுற்றுங் கொண்டுழன்றேன் கண்டாய் - வளங்குலவு
மேரகத்தில் வாழ்முருகா வின்றுமயி லேறிவந்துன்
தாரகத்தி னுண்மையினைச் சாற்று. 24

சாற்றரிய நின்புகழிற் சற்றுமறி யாநான்
போற்றலையு மேற்றுப் புனைவாயோ - கூற்றனைமுன்
கொன்ற பெருமானுங் கோதொழிந்த வேரகத்தி
நின்ற முருகேச னே. 25

நேரங்க டோறுமுன்னை நெஞ்சகத்தா னாடுமவர்
வீரங் கடுகளவு மேவிலே - னாரணங்கட்
கப்பால் விளங்குமுத்திக் காசைகொண்டே னேரகத்திற்
சப்பாணி கொட்டியகந் தா. 26

கந்தக் கடம்பமலர்க் காவடரு மேரகத்திற்
சந்தப் புலமைத் தமிழ்வேந்தா - வந்தக்கா
லப்பொழுதே வேண்டு மவையாவு மீந்தருள்வான்
மைப்பொருவுங் கண்டன் மகன். 27

மகனோ குருபரனோ வாரணத்தி லேறுங்
குகனாகு மேரகத்துக் கோமான் - பகலாதி

யாயசுடர் மூன்று மம்பகமாக் கொண்டுமதன்
சாய விழித்தார் தமக்கு. 28

தமறியநாட் குள்ளார் தமைக்காத் தருளுங்
குமரனையே தஞ்சமெனக் கொண்டுஞ் - சமனெடுக்குந்
தண்டதனுக் கஞ்சத் தகுமோ தவமுடையார்
கண்டதிரு வேரக மே. 29

கமலன் றனைப்புடைத்த கையுடைய செவ்வோ
ரமருமெழி லேரகத்தி லன்பர் - குமரகுரு
நாதனே யென்று நவிலுந் தொனிகேட்டா
லேதமெல்லா நீங்குமப்போ தே. 30

போதக் கடல்குளிக்கும் புண்ணியர் வாழேரகத்தின்
மேதக்க வுண்மை விளங்குமே - வாதக்க
ளூறு மனத்தா ருணர்வரிய வொண்பொருளா
மாறுமுக வேள்கருணை யால். 31

ஆலடியிற் நால்வர்க் கருள்புரிந்த பெம்மானுங்
காலடியில் வீழ்ந்திறைஞ்சக் கண்டானே - மூலமறை
யார்க்குமெ ழிலேரகத்தி லன்பர்க் கருள்விளங்கப்
பார்க்கும்விழி கொண்ட பரன். 32

பரந்த கலைமுழுதும் பார்த்துணரா நாயேன்
சிரந்தனிலுன் றாள்களுறச் செய்வாய் - கரந்தமனக்
கள்ளக் கவிஞர் கருதருஞ்சீ ரேரகத்தில்
வள்ளற் றகைபொறுத்த வா. 33

பொறுத்த மனமுடைய புண்ணியரை யென்றும்
வெறுத்தவரைச் சேர்வேன் வினையை - யறுத்தடியா
ருள்ளிருத்த வல்லாயோ வொப்பில்புக ழேரகத்தில்
புள்ளிமயி லூர்வாய் புகல். 34

புகலியில்வந் தன்றுசமண் பொன்றப் புரிந்தாய்
நிகரிற்கொடுந் தீமைசெய்யு நீச - ரிகலொழிந்து
கண்ணீர் சொரியவின்று காட்டுவா யேரகத்தில்
வெண்ணீ றுதவுதெய்வ மே. 35

தெய்வப் புகழனந்தஞ் சேர்ந்ததிரு வேரகத்திற்
சைவப் பயிர்வளர்க்குஞ் சண்முகனே - யைவருக்கா
ளாளாகாம லுன்றனரு ளேகருது மன்புற்
றேகாந்த மாயிருப்ப தென்று. 36

என்று முனதடிமை யானென் றிருக்குமென்னை
வன்றுயரின் மூழ்கியழ வைத்தாயே - யின்று
மயிலேறி வந்தினிய வார்த்தையொன்று சொல்வா
யயிலேந்து மேரகத்தை யா. 37

ஐயந் திரிவற் றடியே னுணர்ந்தபடி
செய்யவொட்டா மற்றடுக்குந் தீவினையைக் - கொய்யவலி
யில்லாயோ வேரகம்வா ழெம்மானே யாதொன்றுஞ்
சொல்லா திருப்பதென்ன சொல். 38

சொல்லும் பொருளுந் துணிவுந் துரந்தனையே
யல்லும் பகலுநினைத் தன்புசெய்யேன் - செல்லும்வழி
யத்தனைக்கு நின்றுணையே யல்லாதுண் டோவழியா
நித்தர்புக ழேரகத்தா னே. 39

தானே தனக்கிணையாஞ் சண்முகசிந் தாமணியே
மானேந்தி யீன்ற மதலையே - பானேர்வெண்
ணீற்றோர் குழாமே நெடுந்திரு வேரகத்தாஞ்
சாற்றோர்சொல் லென்றனிமித் தம். 40

தம்பிரா னானசிவ சங்கரனைச் சண்முகனா
மெம்பிரா னாண்டதிரு வேரகத்தை - நம்பத்
துதிகூறல் வெய்யவினைத் துன்ப மணுகா
விதிநூலும் விட்டு விடும். 41

விடுமவற்றைக் கொண்டு மெலியுஞ் சிலர்போற்
படுமெனது துன்பமறப் பாராய் - கடுகளவு
தீங்குமிலா வேரகத்துச் செவ்வேளே நின்னிதயத்
தோங்குங் கருணையில்லை யோ. 42

ஓரகத்தோ டுன்னை யுணராக் கொடியேனு
மேரகத்தில் வந்தே னிரங்குவாய் - சூரர்களைக்

கொன்ற வடிவேலா கும்பிட்டேன் கோடிதர
மென்றனிடஞ் சோதனைசெய் யேல். 43

ஏலக் குழற்குறத்திக் கேற்றபிரான் னேரகத்திற்
காலத்தை வெல்லக் கருதுவீர் - மூலப்
பழமறையி னுண்மைப் பயனறியே னென்னைக்
குழவியெனக் கூட்டிக் கொளும். 44

கொள்ளத் தகுந்தநெறி கொல்லா விரதமென்று
விள்ளத் துணிவுதவும் வித்தகன்றா னெள்ளரிய
சீராறு மேரகத்தின் செம்பொற் சினகரத்துள்
வீராதி வீரர்தொழும் வேள். 45

வேளுமன தாண விளங்கு மெழிலுடையான்
தாளுதவி யாளுந் தனிமூர்த்தி - வாளுறழுங்
கண்ணாருங் குஞ்சரியைக் கைப்பிடித்த காதலனென்
றெண்ணாதா ரேரகங்கண் டேன். 46

என்றற் கொருசெயலு மில்லை யெனைமுழுது
முன்றற்கென் றன்றே யுதவினேன் - குன்றரிய
மெய்ப்புகழோங் கேரகத்து வேலவனை வேண்டுமென
தெய்ப்பு முனதாகு மே. 47

ஆகு மிசையேறு மைங்கரத்தோன் பின்னுதித்து
வாகுவொரு முந்நான்கு வைத்தோன் - பாகுநிகர்
செந்தமிழ்ச்சீ ரோங்குந் திருவே ரகத்திலென்முன்
வந்தருட்பே றீந்து மகிழ். 48

மகிதலமெல் லாம்புரக்கு மன்னவர்தம் வாழ்வும்
விகிதமெனச் சிறிதும் வேண்டேன் - சிகியிலுனைக்
காண விழைந்தேனென் கண்ணெதிர்வந் தேரகத்தில்
வேணபடி யாடல் விளை. 49

விளையுந் தவப்பயனே மெய்யென் றுணர்ந்தும்
வளைதுன்று கையார் மையலாந் - தளைவந்து
போராட லாமோ புகழோங்கு மேரகத்தி
லாராதிப் பாருணர்வே லா. 50

வேலா வலயமயல் வெற்போடு தட்டழியப்
பாலாவென் றெள்வார் பயந்தோட - மாலாதி
வானோர் மகிழவிடும் வைவேலா னேரகத்தை
யானோ துதித்திடவல் லேன். 51

ஏனே னென்மயின்மீ தெப்பொழுது மேரகத்தோன்
வானே வழியா வருவானேற் - சேனேர்
விழியார் மயற்பணிபோம் வேறொருவ ராலு
மழியாப் புகழ்ச்சியுமுண் டாம். 52

உண்டுபண்ணும் வேத னொழியானோ வொண்கரும்பில்
வண்டுபட வருவோன் மாயானோ - தண்டுடைய
பொல்லா மறலி பொடியானோ வேரகத்து
நல்லான் புகழ்கூறி னால். 53

நால்வேதத் தோனை நகைத்துப் புடைத்தவனாம்
வெல்வேள்பொற் றாளை விரும்பினார் - பால்வேலை
மாயன் பதத்தை மதியாரென் றேரகத்தின்
மேயகிளி கோடிசொல்லு மே. 54

மேகவண்ணத் தம்மான் மிகப்புகழும் வேற்பெருமாள்
பாகநயச் செஞ்சொற் பனுவலான் - மாகர்தொழு
மேரகத்தில் வாழ்முருகோ னென்றுரை யாரெல்லோரு
மாரணத்தோன் கைத்தொழிற்கா வார். 55

ஆர்பூத்த வேணி யமலனருள் புதல்வன்
கூர்பூத்த வேற்கைக் குமரவேள் - சீர்பூத்த
வேரகத்தில் வந்தபின்ன ரெத்தனையோ கோடிதொண்டர்
தாரகத்தி னூடுகலந் தார். 56

தாரார் கடம்பன் றமிழோங்கு மேரகத்தோ
னேரார் தகர்ப்பரியி லேறானேல் - பாராதி
யண்டம் பலவு மணுக்கூட்ட மாகுமெனக்
கண்டவரே கற்றுணர்ந்தோர் கள். 57

கள்ளாருஞ் செச்சைமலர்க் கண்ணி யணிந்தோனை
யெள்ளாப் புகழ்மலியு மேரகத்தி - லுள்ளானை

மாணார் தமிழ்க்கவியால் வாழ்த்தி மகிழாமல்
வீணாள் கழித்துவிட்டோ மே. 58

விட்ட பொருளை விரும்பாத மெய்யுணர்வு
நட்டவரை யெள்ளாத நற்குணமுஞ் - சுட்டழிந்த
ஞான நிலையு நமக்கருள்வா னேரகத்தில்
வானவர்கள் போற்றுமொரு வன். 59

ஒருவன் பலசமையத் துள்ளவரும் போற்றத்
திருவுருவங் கோடிகொண்ட செவ்வேள் - கருவலையிற்
சேராமற் காக்குந் திருவே ரகத்திறைவ
னோரா றெழுத்தென் னுயிர். 60

உயிரைப் பரமென் றுரைப்பாரைச் சேர்ந்து
செயிருற் றழியாமற் செய்வாய் - வயிரப்
படையா லரிதடிந்த பன்னிரண்டு திண்டோ
ளுடையாய்பொன் னேகரத்துற் றோய். 61

ஓயாமற் பொய்சொற் றுலகிற் பொருள்விளைக்குந்
தீயார் மனையிடத்துஞ் சென்றேனே - நீயாக
முந்திவந்தென் னிச்சை முடித்தக்காற் போவேனோ
தந்திமிகு மேரகநா தா. 62

தாய்முதலா நான்குந் தமியேனுக் கேரகத்துச்
சேய்முருகோ னென்றே தினஞ்சொல்வேன் - பேய்முலைப்பா
லுண்டோன் மருகோனென் றோதினாற் குற்றமுண்டோ
பண்டோ ருரைத்த படி. 63

படிற்றுச் சமண்முதலாம் பாழ்மதத்தோ ரஞ்ச
விடித்துப் பொழிதமிழ்ப்பாட் டீந்தாள் - வெடித்துநறை
சிந்துமலர்ச் சோலைத் திருவேரகக் கிரியில்
வந்துமகிழ் கின்றகுர வா. 64

குரவ மலர்புனைந்து கொற்றவே லேந்துஞ்
சரவணனைக் கைதொழுவார் தாமே - யிரவுபக
லில்லாப் பரம்பொருளென் றேரகத்திற் சென்றுணர்வார்க்
கெல்லாப் பெருமையுமுண் டே. 65

உண்டென்று நம்புமவர்க் குண்மைதரு மேரகத்தைக்
கண்டென் புருகக் கவிபாடித் - தொண்டென்றுஞ்
செய்தார்க்கு மேலவரைத் தெண்டனிட்டுப் போற்றாமல்
வைதார்க்குக் கேடே வரும். 66

வருந்தித் தவம்புரிய வல்லா ரெவர்க்குந்
திருந்தவருட் சீருதவுஞ் செவ்வே - ளிருந்தபதி
யத்தனைக்கு மேரகமே யாதியெனத் தேர்ந்தழியாச்
சித்தர்குலம் போற்றி செயும். 67

செய்யா ளகலாத் திருவே ரகத்துறையு
மையாநின் னாறெழுத்தை யல்லாமற் - பொய்யாய
மந்திரங்கள் கற்று வருந்தேனவ் வாறாய
தந்திரங்க ளும்புரியேன் நான். 68

ஏன்றான் பிறந்தே னிலங்குதிரு வேரகத்தி
லான்றார் புகழும் புயல்வேலன் - றோன்றாமை
யெண்ணியெண்ணி வாடியவ னெவ்விதழு முன்வருத
னண்ணித் தவம்புரியா நான். 69

நானம் பெரிதுகமழ் நற்சார லேரகத்து
ஞானகுரு நாதனையே நண்ணினால் - ஈனப்
பிறப்பொழியு மெய்தரிய பேரின்ப முண்டா
மிறப்பொழியு மெய்தா னிது. 70

இதுமெய் யதுபொய்யென் றெண்ணு மடநீங்கி
அதுமெய் யிதுபொய் யென்றாகப் - பதுமமலர்ப்
புத்தேளைக் குட்டும் புனிதன்வா ழேரகத்துக்
கித்தேகத் தோடுசெல்வோ மே. 71

செல்லிற் களிநார்க்குஞ் சீரார்பொன் னேரகத்தாய்
வல்லிக் குடையானால் வாடாம - லெல்லிற்
றிகழு முணர்வளித்துச் செந்தமிழா லுன்னைப்
புகழ்நலந்தற் தாளிப்போ து. 72

போதக் கருணை பொலியு நலந்தந்தான்
மேதக்க சித்தியெட்டும் வேண்டினேன் - சீதப்

பொழிலாரு மேரகத்துப் புண்ணியா வென்னெஞ்
சழியாத வண்மை யருள். 73

அருளாரு மேரகத்தெம் மையனைக்கண் டார்க்குந்
தெருளாளர் தங்குழுவிற் சேர்ந்து - மருளாளர்
தம்மைப் பிரிவதெண்ணிச் சந்ததமும் வாடுகின்றே
னிம்மையுடன் வீடுபெற வே. 74

பெறலரிய மெய்ப்பேறு பெற்றிருப் பதோரா
மறவியுற்ற தீமையற மாற்றாய் - திறமலியு
நெஞ்சகத்தார் போற்ற நிலவுதிரு வேரகத்தி
லெஞ்சலறுஞ் சீர்படைத்தோ னே. 75

படைத்தோனைத் தொண்டர் பயந்தீர்வ தெண்ணிப்
புடைத்தோன் பலகோடி பொருப்போன் - சடைத்தோருக்
கின்பங் கொடுக்குமெழி லேரகத்தோன் பொற்றாளே
வன்பந்த நீக்கு மருந்து. 76

மருந்தின்றிப் பத்தியமும் வையாமல் வந்தோர்
பெருந்துன்ப நோய்தவிர்க்கும் பெம்மா - னருந்தவர்தஞ்
சீர்க்குருவாய் செல்வத் திருவே ரகத்திடைநின்
றார்க்குந் திருவிளையாட் டான். 77

ஆனையுட னாடிவந்தா யன்றுதொண்ட னானதமிழ்க்
கோனைநினைத் தென்றனைக்கைக் கொள்ளாயோ - மேனைமகள்
பாலகனே யாறு பதியிற் சிறந்தபெருஞ்
சீலமுறு மேதகவேந் தே. 78

வேந்தன் படைக்கும் வெருளாத வீரமுடன்
சாந்தம் பொருந்துந் தவத்தோரைக் - காந்தலொழித்
தன்புசெய்யும் போதமளித் தாளாதோ வேரகத்தின்
முன்புதொட்டு நின்ற முதல். 79

முதலாகு மேரகத்து மூவா முருகன்
பதமே கருதிடுமென் பால்வந் - திதவசனங்
கூறி மறைந்த கொடிதாற் கொதிக்குமன
தாறிடுநா ளொன்றும்வரு மா. 80

ஆகா நெறியோ ரகமகிழ்ச்சிக் கஞ்சுமென்னை
வாகாருந் தொண்டர்நடு வைக்குமோ - போகாத
காராரும் பூஞ்சோலைக் கள்ளாற் றருவிதிகழ்
சிராரு மேரகத்துச் சேய். 81

சேய்புக ழோங்குந் திருவே ரகத்தொருவன்
மாய மெவருணர வல்லாரோ - தூயமறைக்
கெட்டாம னின்றரனுக் கின்பக் குருவாகி
நட்டார்க் கெளியவனா னான். 82

நானாவிதத் துயரால் நான்மெலிந்து வாடாமற்
தேனார் கமலத் திருவடிதந் - தூனாகத்
துட்புகுதா தாள்வா யுயர்ந்ததிரு வேரகத்தோர்
கட்புலம்போ னின்றமுரு கா. 83

கானகத்தி லுள்ளகுறக் கன்னிதனைக் கைப்பிடிக்கப்
போனவிதங் கூறாப் புலவர்போலி - யானழிய
மாட்டே னெனக்கருட்சீர் மன்னுதிரு வேரகத்தோன்
றாட்டேன் வலியத் தரும். 84

தருமமிகு மேரகத்துச் சண்முகனை யன்றி
யொருவரையு நான்மதியே னுண்மை - குருமுதலாந்
தெய்வம் பலவுமவன் சீரருளே யென்றுரைத்தற்
கைவ ரிசைந்துகொண்ட தால். 85

கொண்டான் மழைத்துளியோற் கோடாநு கோடிவிதம்
விண்ட பலநூலால் வெருள்வேனோ - வண்டமிழா
லேசுஞ் சிலர்க்கு மிரங்குவா னேரகத்தைப்
பேசும் பெருமைபெற்ற பின். 86

பின்னாசை யுற்றுப் பெரிதுழலும் பேயேன்பான்
முன்னாண் மொழிந்த மொழிபொய்யோ - பொன்னாடர்
போற்றுமெழி லேரகஞ்சேர் புண்ணியரைப் போதவரைக்
கேற்றுங் குமரேச னே. 87

ஏதம் பலவுமொழிந் தின்பமுற வென்னுளத்திற்
போத விளக்கம் பொருத்துவாய் - சூதப்

பொழிலோங்கு மேரகத்துப் புண்ணியர்கள் போற்றும்
விழியா நிரண்டுறுந்தே வே. 88

தேவனைத்து மெச்சுந் திருவே ரகத்தானைப்
பாவனையாற் காணப் படுங்கொல்லோ - சேவலையே
பாடிநால்வே தப்பயன் வெறுத்தபத்த ரைக்கொண்ட
பாடினாற் கண்டுகொள்ள லாம். 89

ஆம்பன் மலரு மணிவாவி யேரகத்திற்
காம்பனை யதோட்குறத்தி காவலனைச் - சாம்பருவம்
வந்தபின்பு கெஞ்சி மயில்வா கனத்தோடுஞ்
சிந்தனைசெய் துய்ந்தார் சிலர். 90

சிலம்பணிந்த பங்கயத்தாட் செவ்வேளைத் தேவர்
குலம்பரவும் வேற்கைக் குகனை - நலம்பகர்ந்து
நாடுவா ரிச்சையெல்லா நல்குதிரு வேரகத்தை
பாடுவா ரெண்ணில் பலர். 91

பலநூலும் பார்த்துலகிற் பட்டசளங் கெட்டுக்
குலவேலைத் தோகையுடன் கூறும் - புலவோர்
திருவே ரகமலைக்குச் சென்றுதுதி செய்து
கருவேலை நீங்கற் கடன். 92

கடக்களிறு போலுங் கவிவாணர் தம்பா
லடக்கமுடன் பேசா ததட்டுந் - தொடக்கர்குலம்
வேரறுக்கும் பேறுதந்தாண் மிக்கதிரு வேரகத்தி
லாரணங்கள் போற்றுமம லா. 93

அமல மவுனநிலைக் காசைகொண்டு பெற்றோர்
கமலமலர்த் தாட்பரசக் காத - லெமதகத்திற்
சேரப்புரிந்தோன் றிருவே ரகத்தை நம்பு
மீரத்தினார்க் கடிமை யாம். 94

யாம்பரவு மேரகத்தி லென்றும்வள ரெம்பெருமான்
மாம்பழத்திற் காகவலம் வந்தானேம் - பாம்பணிந்த
பெம்மான் றனக்குப் பிரணவச்சீ ரோதுவனோ
விம்மா நிலத்திலுள்ளோ ரே. 95

ஓர்ந்த படியே யுஞற்றுந் தவமுமென்னைச்
சார்ந்ததில்லை யென்செய்வேன் தந்தருள்வாய் - பேர்த்தறியா
தெங்கு நிறைந்துமெழி லேரகத்தி லெம்மினர்க்காத்
தங்குஞ் சரவணநா தா. 96

தாதார் பொழிற்குறிஞ்சி தன்னிலுய ரேரகத்தில்
வேதாந்த மோனம் விளைக்கின்றோன் - வாதாடும்
பொல்லாக் குறவர் புனத்திற் புகுந்தொருத்தி
யுல்லாசங் கொள்ளமுறை யோ. 97

ஓகைக் கடலி லுதித்தபடி பாடுமென்னை
நீகைத் திடிற்பிழையே னிச்சயமே - பாகைநிகர்
சொல்லா ரெனநடிக்குந் தோகைமிகு மேரகத்தி
லெல்லாரும் போற்றுமர சே. 98

சேவன் முழங்குந் திருவே ரகம்புரக்குங்
காவலனைப் பன்னிரண்டு கையானை - யாவலொடு
போற்றிப் பணிபுரியாப் பொல்லேனும் புண்ணியவெண்
ணீற்றிற் குரியவன்றா னே. 99

நேயத் துடனே நினைக்கின்ற நித்தியர்க்கு
மாயப் பணிதவிர்க்கு மாமகிமை - மேய
திருவே ரகத்துறையுஞ் சீர்த்தண்ட பாணி
யருவேயென் னாமை யருள். 100

நூற்பயன்

திருவே ரகத்துவளர் சீர்ச்சாமி நாதன்
மருவேய்ந்த வெண்பாவை வாழ்த்திற் - பொருவேலை
யன்ன பலகோடி யாகம்வே தங்களெல்லாஞ்
சொன்னபடி யெய்துஞ் சுகம்.

தனிப்பாடல்

கல்லாலம் பூண்டிக் கடவுட் கடிமைசெய்த
நல்லான் றனைச்சார நல்கினேன் - வல்லார்கள்
கூடிமகி ழேரகத்துக் கோமானுக் கந்தாதி
பாடியதா லுண்டாம் பயன்.

முற்றிற்று

18

முருகன் வெண்பாவந்தாதி

18

முருகன் வெண்பாவந்தாதி

தண்பாவு நீபமலர்த் தாரணிந்த சண்முகன்மேல்
வெண்பாவந் தாதி விளம்புதற்குத் - திண்பாவு
வாகைமலி தானவரை மாய்த்த வடிவேலுந்
தோகை மயிலுந் துணை.

கடல்கொண்ட செந்தமிழைக் கார்மயின்மேனீவந்
திடல்கண்டு நான்களிப்ப தென்றோ - வடலொன்று
தானவரைச் சங்கரித்த சத்திவேற் பெம்மானே
வானவரூர் காக்கும்மற வா. 1

மறவா துனைப்பணிந்து வந்திக்கு மென்னைப்
பிறவா திருக்கவைத்துப் பேணி - யுறவாக்க
வல்லாயோ நானறியேன் வண்டமிழால் வாழ்த்துநருக்
கெல்லாந் தருங்குகவே ளே. 2

வேளைக் குதவிசெய்யு மெய்த்தெய்வ மென்றுனது
தாளைக் குறித்துந் தயங்குகின்றேன் - வாளைவென்ற
கண்ணா ரிருவர் கலந்தொளிரும் பாகத்தா
யண்ணா மலைக்குமரப் பா. 3

குமரப்பா வென்றுதினங் கூவிக் கிடந்த
வமரர்க் குதவலுண்மை யானாற் - றமரொடுநான்
கூடுநலங் கொள்ளக் கொடுப்பாயென் றெண்ணல்வம்போ
வேடுவரும் போற்றுதெய்வ மே. 4

மேலோர்தங் கூட்டத்தின் மேவுவதே முத்தியென்
நூலோர்க் கருட்பார்வை நோக்குவாய் - வேலோங்கு
கையா யெனக்கொருக்காற் காட்சிதரக் கூடாதோ
வெய்யாது நாடுகின்றே னே. 5

ஏலக் குழற்குறத்தி யீன்றமைந்த னானென்று
சாலக் கருதுந் தமியேனைக் - காலத்துக்
கஞ்சவிட்டு நீயிருந்தா லவ்விளப்ப நின்னதன்றோ
நெஞ்சகத்து நின்றகுக னே. 6

நேயத்துட் டோன்றிநின்று நீயுரைத்த வண்மையெல்லா
மாயத் தொழில்போன்றால் வாடேனோ - காயத்துக்
கூறுவரா தந்நா ளொருமலையிற் காத்துநின்றா
யாறுமுகத் தையா வருள். 7

அருளாவல் சற்றுமிலார்க் கஞ்சுவது மன்றிப்
பொருளாசை யும்பொருந்தப் போமோ - விருளாய
வல்லுடலச் சூர்மடித்த வைவேற் பெருமானே
யெல்லுறமும் பொற்பணியா னே. 8

யானே பரமென் றியம்புவார் தம்மைப்போ
னானேன் மெலிவே னலஞ்செய்வாய் - வானே
முதலாய பூதமுமா முன்னின்ற சூர
னதமாகச் செய்தவைவே லா. 9

ஆறு முகமு மவற்றிரட்டி யாந்தோளு
மேறு மயிலு மெழில்வேலு - நாறுமலர்ப்
பங்கயமே போலும் பதத்துணையும் பார்த்தவரே
யெங்கடவு ளென்பதுமெய் யே. 10

மெய்யன்பி லாக்கொடியேன் வேறுதெய்வ கூறிடினும்
வையமுன தன்பனென்கை வம்பன்றாற் - செய்யநிறக்
குன்றனையாய் செந்தூர்க் குமர குருபரனே
யின்றடியேன் முன்வருவா யே. 11

வாய்மையிலேன் புன்மனத்துள் வந்துவந்து நீயுரைத்த
தூய்மையெல்லாம் வம்பிற் றொலைவுற்ற - காய்மனத்து
வஞ்ச ரிகழ மடிவேனே யென்று மெண்ணிச்
சஞ்சலமுற் றேன்குருநா தா. 12

நாதாந்த மோன நவிலுங் குருநாதன்
வேதாந்த வீட்டு விளக்கானோன் - காதார்ந்த

மைக்கட் குறத்தி மணவாள னென்றுணர்ந்து
மிக்கட் டொழிந்திலனே யான். 13

யானை முகத்தோற் கிளையோனை யெங்களுக்கோர்
கோனை வடிவேற் குருபரனை - மேனைமகள்
பாலருந்தும் வாயானைப் பைங்கிளியொன் றுள்ளானைச்
சால நினைவார் தவர். 14

தவஞ்செய்யச் சோம்புந் தமியேனைச் சால
வவஞ்செய்வார் தங்க ரரசை - நவஞ்செய்யும்
பேரருளான் செந்தூர்ப் பெருமானன் றாண்டவித
மாரறிவார் சொல்வ தல. 15

அலமந்து வாடு மடியேன் குகனைக்
கலபங் கொளுஞ்சிகிமேற் கண்டு - நலமிஞ்சப்
பெற்றுவக்கு நாளறிந்தோர் பேசாம லெங்கேனு
முற்றுளரென் பாருணர்ந்தோ ரோ. 16

ஓங்கார வட்டத்தி னுள்ளிருக்கும் பெம்மானை
யாங்காரத் தோரை யழிக்கும்வே - னீங்காத
பன்னிரண்டு தோளானைப் பார்ப்பதா லன்றிமற்றிங்
கென்னிரண்டு கண்களியா வே. 17

களிகொண்டு தொண்டருக்குக் காட்சிதருங் கந்த
னளிகொண்ட செச்சை யணிந்தோ - னொளிகொண்ட
வேலான் வருவதன்றி வேறுநலம் வேண்டாதார்
மாலாமென் றிங்குமகிழ் வார். 18

வாரிதியி லாற்றில் வளர்தீயி லிட்டதமிழ்ப்
பாரினர்கண் டுள்ளுவக்கப் பண்ணானேற் - கூரிசைந்த
வச்சிரஞ் சூலம் வடிவேல் புனைந்தகுக
னுச்சிதனென் றோதுநருண் டோ. 19

உண்டுண்டு தூங்குவதற் கொல்காத நாயேனை
வண்டுண்ட நீபமலர்த் தோளான் - றொண்டு
புரியப் பணித்தாண்டாற் பொல்லா தென்பாரோ
பெரியர்க் குரிமையுற்ற பேர். 20

பேரா யிரங்கோடி பெற்ற பெருமானைச்
சீரார் குறிஞ்சிநிலத் தெய்வத்தை - யாராதித்
தேத்திக் களிகூரா ரெத்தனையோ வாறாய
சாத்திரத்தி னாட்க்கழிப்பார் தாம். 21

தாமக் குழலார் தமக்குந் தரணிக்கு
மேமக் குவைக்கு மிடைவேனை - நாம
வடிவேற் பெருமான் வலியவந்தாட் கொண்டா
வடியார் வெறுப்பார்க ளா. 22

ஆவதையுஞ் செய்யு மரும்பா தகக்குலத்தோர்
சாவதையே நாடித் தவஞ்செய்வார் - நோவதையுங்
கண்டிருக்கு முன்றன் கருணை யிரங்காதோ
தண்டிருக்குங் கைக்குருநா தா. 23

தாதார் மலர்க்கடம்புந் தண்குவளை யுங்குரவுங்
கூதா ளமும்புனையுங் கொற்றவா - வேதாள
மாடப் பொருந்தனிவே லப்பனே யென்றுதினம்
பாடத் துணியார் பதர். 24

பதரனையார் வாழ்வழித்துப் பத்தி வலியா
விதமகிதந் தேறவல்லார்க் கெல்லா - நிதமுமவர்
நாடுநலஞ் செய்யும்வண்மை நான்பெறுவ தெந்நாளோ
வேடுவச்சி யைத்தொழுந்தே வே. 25

வேள்வி மலைக்கு விரைந்தடியேஞ் செல்லுமன்று
வாள்விதிர்க்குங் கைவீர வாகுவந்து - கேள்வியுறச்
சொன்னமொழி பொய்யோ சுடரிலைவேற் பெம்மானே
கன்னல்வில்லி நாணு மழகா. 26

காவுடையான் றந்தமகள் காதலிக்குந் தோட்குகவே
ளாவுடையான் போற்று மறிவாளன் - பூவுடைய
புத்தேளைக் குட்டும் புலவனெனப் போற்றாதார்க்
கெத்தே வருமிரங்கா ரே. 27

காரே யெனத்துலங்குங் கண்ணன் மருகோனைப்
போரேறென் றெல்லவரும் போற்றிசைக்குஞ் - சீரேய்ந்த

செவ்வேளை நாயேன் றெரிசிக்கும் பேறுபெற
லிவ்வேளை யென்றறியே னே. 28

ஏனே னென்மயின்மீ திப்பொழுதே நேர்தோன்றித்
தானேநா னென்றென் தலைதொட்டுப் - பானேருஞ்
சொல்லார்க் குருகாச் சுகப்பேறு நல்குதற்கும்
வல்லாயோ வைவேல வா. 29

வாவா வெனக்கூவி வாடுமென்முன் வந்தருளிற்
காவாணர் பால்வளர்ந்த கன்னிக்கு - மேவாரூர்க்
கொள்ளையிடும் வேடர்குலக் கோதைக்குங் கொண்காநீ
பிள்ளையிலா யென்றசொற்போம் பின். 30

பின்னாசை யற்றபெரியோர் பெரிதிறைஞ்சு
நின்னாசை யுற்றோர்போ னிற்கின்றே - னென்னாசைக்
கேழு கடலு மிணையில்லை யெள்ளாதே
வாழுமலை தோறுநின்ற வா. 31

வாரணமுங் கேகயமும் வன்னப் பசுங்கிளியுஞ்
சார விளங்குந் தனிவேடர் - சூர
னுரங்கிழித்த வேலா யுனைவிடேன் கண்டா
யிரங்கிரங்கு வம்புசெய்யா தே. 32

செய்ய பவளச் சிகரியெனச் சீர்காட்டு
மையனே யாறுமுகத் தண்ணலே - மெய்யருளைக்
கும்ப முனிக்குதவுங் கோமானே யென்றமொழி
வம்பருக்குஞ் சொல்லவரு மா. 33

மாவறுத்த வைவேல் வரதா மயிலேறிச்
சேவலைக்கை யேந்திவருஞ் செவ்வேளே - பாவலர்க்குத்
தஞ்ச மெனவிளங்குஞ் சண்முகனே நீயொருக்கா
லஞ்சலெனச் சொன்னதும்பொய் யா. 34

பொய்யா மொழியைப் புகுத்தாண்ட துண்மையென்றா
லையாயென் றேங்கு மடியேனை - யொய்யாரச்
சித்தனெனப் பாருந் தினம்புகழச் செய்யாயோ
வத்தனருள் வேலாயு தா. 35

வேலா யுதம்பிடித்த வித்தகா வீறுகொண்ட
சூலா யுதனுந் தொழும்பாதா - பாலாழி
மாயோன் மருகா மயில்வா கனாவெனக்குத்
தாயோடு தந்தையுநீ தான். *36*

தானே முளைத்த தனிமுதலா நீதானே
வானே முதலாம் வகையென்று - நானே
யுணர்ந்தேனோ நின்னருள்வந் துள்ளுணர்த்தத் தேர்ந்தேன்
புணர்ந்தாளாய் நீலப் புயா. *37*

புயங்கப் பணியுடையான் போற்றப் புகன்ற
நயங்கமழு மோர்பொருளை நல்காய் - வயங்குலவு
தோளா றிரண்டுடைய தூயவனே நின்பதத்துக்
காளா மெனக்கதில்லை யா. *38*

இல்லையோ நீயென்று மெண்ணிப் பரதவித்தேன்
வல்லை மயின்மேல் வரவேண்டுந் - தொல்லைவிட
முண்ட பெருமா னுளங்குளிர வோர்பொருளை
விண்டபுகழ் கொண்டகுரு வே. *39*

குருமொழியி லையமுற்றுக் கோடிநூ றேடு
மருளரொடு நான்சேர மாட்டேன் - திருமலையின்
மாளா தெனையளித்த வள்ளலே வள்ளிமண
வாளா சரவணப வா. *40*

பவவேலை நீந்திடற்குன் பாதம் பரவித்
தவமே முயலாதார் தம்மாற் - கவலாமல்
வானவரும் போற்றிசைப்ப வாழும்நல மீவதென்றோ
கானமயி லேறுமுரு கா. *41*

முருகாவென் றேங்குமொரு மொய்குழலா டன்னை
யொருகாலம் வந்தளித்த துண்டேற் - றிருகாய
கொம்புத் தகரூருங் கொற்றவா வென்றிறைஞ்சி
நம்புற்ற நான்கெடுவே னா. *42*

நாவார வாழ்த்து நலங்கொடுத்த நீயெனக்கு
மேவாரை வெல்லும் விறலளித்துக் - காவாயோ

குன்றுதோ றாடுங் குமர குருநாதா
வென்றுரைப்பார் தம்முணிற்போ னே. 43

போனகமும் பொன்னும் பொருந்தப் புரியாத
வானவர்கண் முத்திதர மாட்டாரென - றீனர்களுஞ்
சொல்லத் தவிக்குமென்முற் றோன்றியருள் செய்யானோ
செல்லக் குருபரனாஞ் சேய். 44

சேய கனவிற் றிரைகடலிற் செம்பாற்றி
னாயடியே னிட்ட நறுந்தமிழ்ப்பா - வாயவெலாந்
தந்தருள வேண்டுஞ் சரவணா சங்கரற்கோர்
மைந்தனென வந்தகுர வா. 45

குரவருக்குட் கோவாய கொற்றற் பெம்மா
னரவணை யோன்றன்மருக னானோ - னிரவில்வந்தென்
பைங்கிளிதா னீயென்று பல்கா லுரைத்தபின்னு
மிங்கிளைத்து வாடுகின்றே னே. 46

ஏமன் றனக்கு மெழிற்கமல வேதனுக்குங்
காமன் கணைக்குங் கருத்தஞ்சித் - தாமக்
குழற்கவுரி யீன்ற குமரேசன் செம்பொற்
கழற்கருது வாருயர்ந்தோர் கள். 47

கள்ள மனத்துக் கடையேனை யாண்டுனருள்
வெள்ளமதின் மூழ்க விடுப்பாயோ - விள்ளரிய
போராடிச் சூர்தடிந்த புண்ணியனே வெண்ணிறத்துக்
கூரார்முட் சேவற் குகா. 48

சேவற்கொடியுஞ் சிகிப்பரியுங் கொண்டு விண்ணோர்
காவற் புரியுங் கடவுளே - மாவற்று
வீழத் தடிந்த விதிர்வேலா நின்னடிக்கீழ்
வாழத் தருவாய் வரம். 49

வரமொன்றும் வேண்டேனின் வாயுரைத்த வாய்மை
யுரமென் றுணரா துழன்றேன் - பரமகுரு
வான முருகா யயில்வேற்கை யம்மானே
கான மயிற்சேவ கா. 50

காகா வெனவே கதறுமென்முற் காங்கேயா
வாகாய தோகை மயிலேறிப் - பாகாருஞ்
சொல்லா ரிருவரொடு தோன்றாமற் பூவுலகி
லெல்லாரு மேசவைத்தா யே. 51

தாயே தகப்பனே சற்குருவே யென்றழைக்கு
நாயேற் கிரங்காத ஞாயமென்னோ - தீயேய்க்குஞ்
செச்சைமலர்த் தண்குறிஞ்சித் தெய்வமே நின்பதத்துக்
கிச்சைகொண்டேன் றள்ளிவிடா தே. 52

விடமுறைந்த கண்டத்தான் வேண்டுமன்று ஞானத்
திடமுரைத்த வாயைத் திறவாய் - படமுடைய
பாம்பேறுந் தோகைப் பரியூருந் தேசிகனே
காம்பேறுந் தோளியர்பங் கா. 53

பங்கக் குழியிற் பழுதாங் கடிதடத்தார்
தங்கக் குடம்போற் றனங்காட்டி - யெங்கள்
கனவினிலும் போராடக் கற்பித்தோ னாரோ
சினவிதிர்வேற் கொள்ளுமர சே. 54

சேலார் வயன்மலியுஞ் செந்தூர்க் குருபரனே
வேலா யுதம்பிடித்த மெய்த்தேவே - நூலாய்ந்து
நான்வருந்த மாட்டேனின் னற்பதமே கைதொழுவேன்
கூன்வருமுன் னென்னைக் கொடு. 55

கொடுக்குந் தொழிலுனது கொள்கையென்றா லுன்னை
யடுக்குமெனக் கான தருளாய் - நடுக்குந்
தலைக்கிழவ னாகியொரு தையன்முன் போய்நின்ற
மலைக்கிழவா வேலெடுத்த வா. 56

தவறாய புன்னெறியிற் சார்ந்துழல்வார் தம்மாற்
கவலாத வண்ணமெனைக் காவாய் - சிவனார்தங்
கண்ணின் மணியான கந்தனே கைதொழுவார்க்
கெண்ணினதெல் லாந்தருவோ னே. 57

தருவேந்த னாதியரைத் தாழ்மையுறச் செய்த
பெருவேந்தன் மார்பைப் பிளந்த - வொருவேற்கைச்

சேவகனே தெய்வமெனச் சிந்திக்குஞ் சீரடைந்தோர்
ரேவருக்கு மஞ்சார்க ளே. 58

களங்கமிலாச் சந்திரர்போற் காணுமுக மாறுந்
துளங்கலுறாப் பன்னிரண்டு தோளும் - விளங்கவந்து
செஞ்சதங்கைத் தாள்களையென் சென்னிமிசை வைப்பதென்றோ
குஞ்சரத்தி லேறுங் குகா. 59

குகையூடு பெண்ணைவைத்துக் கொற்றவிற்கை வேடர்
பகைமாற்றி யாண்ட பரனே - மிகையாக
நீகொடுத்த வேடத்தை நிந்திப்பா ரும்புகழும்
பாகொடுப்ப தென்றோ பகர். 60

பகலோ டிரவொழிந்த பண்புணர்த்தி யாட்கொண்
டிகல்வே ரறுக்கும்வண்மை யீந்தாண் - முகமாறு
கொண்ட குருவே குவலயத்தைக் கோதுசெய்யும்
வண்டருக்கோர் கூற்றான வா. 61

ஆனே றுடையா னருமைக் குருந்தாய
கோனே வடிவேற் குருநாதா - நானே
யுனைவணங்கி னேனோவந் தோதாத தோதி
யெனைமறந்தாற் போலிருப்ப தேன். 62

ஏனற் குறத்தி யெழிலிப் பரியூரும்
வானத் தலைவன் மகளென்னு - மானன்னா
ரென்னைக் குறித்துநின்பாலி யாதொன்றுஞ் சொல்லாரோ
மின்னைப் பொருமயிற்கோ வே. 63

கோவதைசெய் துண்ணுங் கொடியோர் குலமழிக்குங்
காவலனைக் கண்டு களியாமற் - சீவன்
விடுமாறு செய்யாதே வேலேந்திச் சூரன்
றடுமாற வென்றவர தா. 64

வரதா கவுமார மாதவத்தோர் போற்றுஞ்
சரதா மறத்திமுன்பிற் றாழும் - விரதாவென்
றந்நா ளிறைஞ்சு மவர்போல நான்வாழ்வ
தெந்நா ளெனத்தளர்ந்தே னே. 65

தேனு மடுபாலுந் தீங்கனியுஞ் சேர்ந்தாற்போ
னானுந் தமிழ்பாடு நாளுண்டோ - வானும்
புவியுந் தொழும்முருகா புல்லருந்தற் கொல்லா
ரவியுண் டருளுமெய்த்தே வா. 66

தேவ ரெனினுமொன்றைச் செற்றருந்திற் றீயவரே
யாவ ரெனினு மல்லா ரேற்றமே - பாவரிதை
யொப்பா ரெனவெனக்கு ளூற்றுணர்த்து மொள்வேலா
னிப்பாரிற் றோன்றுவதென் றே. 67

என்றே யனையகுழை யீராறு பூண்டசெவிக்
குன்றே பரம குருநாதா - நன்றே
விரும்பித் தளருமென்னை விட்டுவிட வேண்டா
மிரும்பிற் கொடியநெஞ்சேனி யான். 68

யானெனதென் றோதி யிகத்திற் றிரிவேற்கு
வானென நின்ற மயங்காட்டித் - தானென்று
சிந்தித் தெனைமறக்குஞ் சீர்கொடுக்க வல்லதன்றோ
செந்திற் பதியிலுறுஞ் சேய். 69

சேயாய்த் திரிந்தவன்றே தெண்டனிடு மென்னைமின்னார்
மாயா வினோதமெனும் வாரிக்குட் - போயாழ
விட்டாய் மறந்தேனோ வேலைமேல் வேலையன்று
தொட்டா யுபதேசஞ் சொல். 70

சஞ்சலத்துக் கீடாத் தயங்குந் தமியேனை
யஞ்சலெனச் சொன்ன வறுமுகவா - நஞ்சணைந்த
வாள்காட்டுங் கண்ணார் மயற்கடலிற் றோயாதுன்
றாள்காட்டி யாளத் தகும். 71

ஆளத் தருணமிதென் றையோநான் சொல்வானே
னீளத் தனிவேற்கை நித்தியா - தாளத்தில்
விள்ளத் துலங்குமுலை வேடிச்சி பாகாவென்
னுள்ளத்து நின்ற வுனக்கு. 72

உனக்கு மெனக்கு மிந்நா ளுள்ளவழக் கான
மனக்குழப்பங் கொண்டு மலைந்தேன் - புனக்குறத்தி

தாள்வருடுஞ் செங்கைச் சரவணா நீயிரங்கி
யாள்வதுவே நல்லமுறை யாம். 73

முறையோ வெனக்குகவேண் முன்புநின்று கூவி
யிறையோய் வடிவேற்கை யெந்தாய் - கறையோங்கு
கண்டத்தான் றன்குருவே கண்பாரென் றேத்துமவர்க்
கண்டத்தார் வாழ்வினிக்கு மா. 74

இனிக்கும் பனிமொழியார்க் கிச்சையுள்ள போதே
தொனிக்கும் புகழ்விரும்பிச் சோர்ந்தேன் - கனிக்குலகைச்
சூழ்ந்த முருகா சுடர்வேற்கைச் சுந்தரனே
யாழ்ந்தறியுந் தன்மை யருள். 75

அருளில்லாப் பொய்த்தவர்க்கு மானநலஞ் செய்வா
யிருளில்லா ருள்ளத் திருப்பாய் - தெருளில்லா
னென்றென்னை யெள்ளாதே யேத்தரிய சீரோங்குங்
குன்றெல்லாங் கொள்ளுங் குகா. 76

கொள்ளா நலத்தைக் குறித்தொருவன் போற்றிடினுந்
தள்ளா யெனயுணர்ந்தேன் சத்தியந்தான் - விள்ளாத
மோனப் பொருளா முருகா முதிர்சார
லேனற் புனவேட னே. 77

வேடர்குலப் பேதைக்கும் விண்ணவர்கோன் பாவைக்கு
மூடல்விளைத் தாளு மொருவனே - நாடரிய
சச்சிதா னந்தமென்பார் தண்மலரின் மென்றுகள்சே
ருச்சிதா னந்தமதன் றோ. 78

அன்றோர் கனவி லறுமுகத்தோன் வந்துரைத்த
தென்றோ நிசமாவ தென்றிருப்பே - னின்றோவென்
றெத்தனைநா ளெண்ணி யிடைந்தே னிரங்கானோ
பித்தனையுங் காத்த பிரான். 79

பிரமன் றிருமால் பிறைமுடித்தோன் பெற்ற
வரமன்பர் கேட்டு வருந்திற் - றரமன்றி
நல்குங் குணமுடையா னாரதனா லாடேறிச்
செல்குங் குமக்குவடாஞ் சேய். 80

சேயோனுஞ் செங்கனலுஞ் சேவைசெய்யுஞ் செவ்வேளை
மாயோன் றனது மருகோனைத் - தூயோர்
பரவுங் குருபரனைப் பன்னிருகைக் கோனை
யிரவும் பகலுமுள்வோ மே. 81

ஓமென்ற சொல்லுமறந் துன்னையே யுன்னியுன்னி
நாமென்ற நாட்ட நசித்துப்போய்த் - தேமென்ற
செந்தமிழுங் கைத்துன் றிருத்தாளிற் சேருநலந்
தந்தருளா யென்குருநா தா. 82

குருநாத னென்றநற்பேர் கொல்லா விரதந்
தருநாதன் சத்திவேற் றாங்கு - மொருநாத
னன்றிமற்றோர் சூடுவதற் காகா தரனறிவா
னென்றிசைப்பா ரெம்மினத்தோ ரே. 83

ஓர்பொருளைச் சாருநல மோதுங் குரவரெல்லாங்
கூர்பொருந்தும் வேற்கைக் குகனென்றாற் - பார்பொறுக்கு
மெல்லா மதத்தினரு மெள்ளா ரெனவுணர
வல்லானே யென்றுணையா வான். 84

என்று மிளையோ னெழில்குன்றா னெம்பெருமான்
குன்றுபல கோடிகொண்ட கொற்றவேண் - மன்றுடையான்
போற்றிசைப்பச் சொன்ன பொருளைப் பொதியவெற்பில்
வீற்றிருந்தாற் கும்புகன்றான் மெய். 85

மெய்கொண்ட நான்மறையை வேறுநெறி யோரிகழப்
பொய்கொண்ட வேள்விப் புலையாடு - மைகொண்ட
சிந்தையோர் தம்மைத்திருத்த வல்லான் வாரானோ
தந்தைபுகழ் சற்குருநா தா. 86

தாமரைக்கண் ணான்மருகன் சத்திவேற் கையுடையான்
காமர் மயிலூருங் கந்தவேள் - பூமனழக்
குட்டித் தளைபூட்டுங் கோலா கலக்குமரன்
றிட்டினர்க்கு மீவாஞ் செயம். 87

செயல்சிறிது மோராமற் சிந்தைநொந்து வாடிக்
கயலனைய கண்ணாரைக் கண்டு - மயல்பெருக்கும்

பொல்லா வினையேனைப் போர்வேலா னாண்டுகொண்டா
லெல்லார் களும்புகழ்வா ரே. 88

புகழ்வார் தமைவிரும்பிப் புல்லனே யாமென்
றிகழ்வார் களைவெறுக்கு மென்னைத் - திகழ்வேலா
னாளானோ வென்றிங்கரற் றித்திரியு மென்சொற்
கேளாதோ சந்தக் கிளி. 89

சந்தக் கிளியுமொரு சற்குருவென் றெண்ணுமென்பா
லந்தக் கிளியேநீ யாமென்ற - கந்தனுக்கு
மான மிருந்தால் வலியவந்திங் கென்மனதுக்
கானபடி யாடல்செய்யா னா. 90

செய்யாத குற்றமெல்லாஞ் செய்தேனென் றெள்ளாதே
யையா தகரூரு மண்ணலே - மெய்யாளர்
தம்மாற் றிருத்திச் சதங்கையணி தாள்சூட்டிச்
சும்மா விருக்குநலஞ் சொல். 91

சொல்லற் கரியநலந் தோய்வித்துந் தொண்டுசெய்யா
தல்லற் படுங்கொடிதை யாரறிவார் - வெல்லற்
கரிதாய சூரனைக்கொன் றம்பொனூர் வெள்ளைக்
கரிதாங்கச் சென்றமுரு கா. 92

முருகார் கடம்பணியு மொய்ம்பாவென் றேத்திப்
பெருகார்வங் கொள்ளும் பெரியோ - ரருகாகிச்
சித்தியெட்டுங் கண்டு திரும்பாமற் செல்வதன்றோ
பத்தியினா லெய்தும் பயன். 93

பயந்தடங்கி நெஞ்சம் பதைக்கு மெனக்குஞ்
செயந்தருவ துள்ளதோ செப்பாய் - வயந்தழைக்கும்
வைவேலொன் றேந்தி மயிலேறும் வானவனே
கைவே லவுணரந்த கா. 94

அந்தகன்போற் பொல்லா ரனைவரையுங் கொன்றுழக்கி
வந்தமரத் தக்க வரங்கெட்டுக் - கந்தனுக்குத்
தொண்டுபுரி வாரைத் தொழுவாரைக் காண்பாரும்
விண்டுவென வாழ்ந்திருப்பார் மெய். 95

பார்வேந்தர் வாழ்வும் பழுதென் றருவருத்துன்
பேர்வேண்டிப் போற்றும் பெரியோரைச் - சீர்வேய்ந்த
பொன்னா டுளாரழைக்கிற் போவாரோ பூங்குறிச்சி
மன்னா வடிவேல வா. 96

வாரணங்க ளார்க்கும் மலைதோறும் வாழ்ந்திருக்குங்
காரணனே யீராறு கையானே - நாரணற்காத்
தாருகனைச் செற்ற தனிவேல னேயெனக்கிங்
காருறவு நீயறியா யா. 97

யாரு மிகழு மெளியேனை யாட்கொண்டு
பாரும் புகழ்ந்திருக்கப் பார்ப்பாயோ - சூருடலுங்
குன்றுந் துளைத்துவந்த கொற்றவேற் கோமானே
யென்று மிளமையுள்ளோ னே. 98

உள்ளவன்றன் குற்ற முணராம லில்லானைக்
கள்ளனெனக் கூறுவது கண்டேனே - தெள்ளரிய
பொன்பரவும் வேலோன் புகன்றவிதந் தேராரென்
னன்பதனை நிந்தைசெய்வ தால். 99

ஆல நிழற்கீ ழமர்ந்தோனும் போற்றிசைக்கும்
வேலனரு ளென்னிடத்தின் மேவினாற் - சீலரெதி
ரக்காலத் திட்டதமி ழத்தனையு மித்தனையு
கக்காதோ தெண்ணீர்க் கடல். 100

வண்பாரும் வானகமும் வாழ்த்தும் வடிவேலான்
வெண்பா வொருநூறும் வேண்டுவார் - கண்பார்வை
பெற்றோர் தமக்கும் பிறவா நெறியுறுதற்
கற்றோ ருணர்ந்துவப்பார் கள்.

முற்றிற்று

19

நிரோட்டத் தலைச்செய்யுளந்தாதி

19

நிரோட்டத் தலைச்செய்யுளந்தாதி

கடவுள் வாழ்த்து

நிலைக்கிரிதோ றாடுநன் சீர்நீடு நிரோட்டத்
தலைச்செய்யு ளந்தாதி சாற்றக் - கலைக்குலங்க
ளத்தனையுந் தேர்ந்தாளை யன்றெடுத்தோர் குன்றிலுய்த்த
கைத்தலத்தான் காக்கக் கடன்.

நூல்

ஆனைநண்ணுந் தோழ னடியார்க் கெளியகுக
னேனைய ருந்தானென் றிசைந்துள்ளோன் - ஞான
குருநாத னென்றனை யாட்கொண்டிலனே யாகி
லொருநாளுந் தேறா துலகு. 1

உலகிகழக் கற்கிணற்றா லூறுற் றுழன்றே
னிலகுநல னெய்திடுத லென்றோ - கலகநெடுங்
கட்குறத்தி கொண்கா கதிரயிற்கைக் காராசொல்
லெட்குளெண்ணெ யொத்திருந்தா யே. 2

ஏலக்கு ழற்குறத்தி யிச்சைகொள்ளற் கேற்றதொரு
சீலத்தி ருக்கோலஞ் சேர்ந்தநா - ணீலச்
சிகியாதி யாத்துலங்குஞ்சீ ரெங்கொ ளித்தா
யகியார்தோ ளையர்தனை ய. 3

தனையறியா நாயேனின் றண்ணருளை நாடி
யினைய துயரெய்தி யெய்த்தே - னனைகடுக்கைத்
தாரானுக் கன்று தரலான சட்குணத்திற்
சேராய்செந் தூர்கொ ளரசே. 4

அரசர னையாருக் கஞ்சியொ துங்கிச்
சிரசுகுனி யாதநலஞ் செய்தா - ளிரசதக்குன்
றன்னதிற்ற கோழியங்கை யானே யடியேனுக்
குன்னருளன் றித்துணை யுண்டோ. 5

உண்டுண் டுறங்கியுழல் கைநினைத் துள்செரல்கற்
கண்டுன் கருணைக் கடலாட்டாய் - தண்டுடனோர்
சத்தியணி திண்டோட் சகுண குருநாதா
சித்தியெட்டுஞ் செய்தலிச்சித் தேன். 6

தேனாருங் கொன்றை யணிசித்தருக்குஞ் சற்குருநீ
யானாயென் றோர்ந்த தறியாயோ - கானாற்றுத்
தண்குறிஞ்சி யைத்துதியாச் சண்டா ளரிற்றயங்கிக்
கண்கலங்கச் செய்தாய் குகா. 7

குகனே துணையென் றுகூறித் துதிக்கை
யகநோதற் றீராதென் னாதே - யிகலின்றி
யாயிரங்கண் ணான்களித்தற் காழியுண்ட நாதனருட்
டோயியல்கற் றுத்தெளிந்தோர் சொல். 8

சொல்லிறந்த ஞானகுரு சுந்தரத்தோட் கந்தனெ
னல்லிதயத் தாலுணர்ந்து நாடினா - ரில்வி
லிருந்தாலென் னோடுகைக்கொண் டேற்றாலென் னேதந்
தருந்தாழ்ச் சியாந்தளையெய் தார். 9

எய்தசிலைக் கன்னலங்கை யீனனெ திர்த்திகலச்
செய்ததுநீ யென்றே தெளிந்துள்ளே - னெய்தருதார்ச்
செச்சை யணிதருதோட் சீரார்ந்த தேசிகனே
நிச்சயத்தைச் சொற்றருளின் னே. 10

இன்னே யருள்கூர்ந் திலங்கெழிற்செந் தோகையின்க
ணென்னோ திகழகைக்கி சைந்தாயேற் - றன்னேரொன்
றில்லை யெனச்சொல்லுநெறி யெங்கொளிக்குங் கொல்லிசையாய்
கல்லையாங் காக்கொள்குழ கா. 11

குழந்தையோ ஞானக் குருக்களோ கொன்னீ
ரிழந்தறிசீர்த் தான்றானோ யாரோ - தழங்குகழ
லாதிநட ராயற காறான னத்தொருசெஞ்
சோதியென தாசைத் துணை. 12

துணைத்தாள் கருதியுன்றன் றொண்டரொடு கூடிக்
கணைக்க ராரியிற்க ளித்துத் - திணைக்கொருநல்

லாக்கஞ் செயத்துணிந்தே னாசை யறியாயோ
தாக்கயிற்றிண் டோளுடைக்கந் தா. 13

கந்தக் குராத்தொடுத்த கண்ணியணி காரணனெண்
சந்தத் தொனிகிளருந் தாளானெண் - சிந்தனையி
லன்றுதித்துச் சொன்னசொல்லி னாட லழியாதிங்
கென்றுநிசத் தாங்கொ லினி. 14

இனிதாய சிற்றுண்டி யீந்தார்க் கிரங்குந்
தனியானை சேர்தரனென் றந்தை - யறியாயக்
காரன்றான் கொல்லோ கருங்கற் கிணற்றினிச்சை
யூரறியத் தந்தானந் தோ. 15

அந்தோ குகன்சொல்லா லாழக் கிணறுகெல்லி
நொந்தேன் னனீர்கருதி நோற்கின்றேன் - சந்தோட
நீடக்கொள் ளாதொழிந்தா னீறணிந்தோ ராறெழுத்தை
நாடற்கொல் காரோ நரர். 16

நரநார ணானையார் நானிலத்திற் றோன்றி
யரசாள ராதியர்க ளார்க்குஞ் - சரதாதி
நீதியுணர்த் தற்குறித்து நெட்டுயிர்த்துத் தட்டழிந்தேன்
றீதில்குகா நீயருளாற் செய் 17

செய்யநிறக் கோகனகச் சேயிழையுந் தெள்ளியநூற்
றுய்யநிறத் தையலுஞ்சேர் தொந்தநல்கா - யையநயந்
தாடுங் கருணை யானுக் கருளாக்க
நீடுங் குணஞ்செய்கந்த னே. 18

கந்தனே யென்று கதறிக்க ருத்துருகிச்
சந்தநூ றாயிரநான் சாற்றுகின்றே - னிந்தத்
தருணத் திரங்காது சஞ்சலத்திற் சேர்த்தா
யருணைக் கிளியுறைதோ ளா. 19

தோளார்ந்த கிள்ளையெனச் சொல்லியநீ தொண்டரிற்சேர்த்
தாளா திருக்கை யழகேயோ - தாளா
னடுவின்றோன் றன்னையட்ட நாதனருட் சேயே
கெடுகின்றே னென்சொலெல்லாங் கேள். 20

கேளாத் தகைநின் கிளர்கா தினத்துளதோ
நாளாறங் கோரெயின்னண் ணல்கண்டு - கோளாரச்
சீரளித்தா ருந்துதிக்குந் தேசிகனீ யன்றுகொல்லோ
கூரயிற்கைக் காங்கேயா கூறு. 21

கூறித் துதிக்கரிய கோலங்கொ ளுன்னைநன்கு
தேறிக்கொண் டுள்ளத் திருத்தினையா - லாறிரண்டே
யாகுநெறிக் கூற்றா லயரேன ருள்ளிழ்த்தா
ளாகுயத்து ளான்றுனைத்தோ ழா. 22

தோழ னெனத்துதித்த சுந்தரனே தன்றுயரா
லேழரைநாட் டுச்சனிய னென்றானே - யாழக்
கடலால்கண் டத்தார் கண்கொடுத்தி லாரோ
தடநாகந் தோறுறைகந் தா. 23

தாராத செங்கைத்த லத்தான்கொ னீயுனையிங்
காராதித் திங்ஙன யாகின்றே - னேராகிச்
சொன்னகதை யெல்லாந் துலக்குநா ளெந்நாளோ
நன்னகைச்சீ ரானைகொழு நா. 24

நான்றானெ னுங்குதாக்க நண்ணாத நல்லோராற்
றான்றானென் றோர்ந்துந் தயங்குகின்றே - னேன்றா
னிரங்கா தொளித்துள்ளா யீரிருநோட் டானை
கரந்தாங்கு கன்னிதன்கொண் கா. 25

கொண்கனெனக் குஞ்சரிகைக் கொண்டுங் குறக்கொடிதன்
கண்களெனு நீலக் கடலாடுந் - திண்கனகக்
குன்றன்ன கோலக்குக னைத்து தியாதா
ரென்றன்க ருத்தறியா ரே. 26

ஆரேனுங் கந்தனரு ணாடி யாறிருதோட்
சீரேறத் தோத்திரங்கள் செய்குநரே - லீரே
ழுலகுண்ட காகுத்த னோடுறழ் நீடுற்
றலகின்றித் தோன்றியழி யார். 27

அழியாத கீர்த்தி யளிக்கின்றே னாசை
யொழியாத நெஞ்சத் துறையான் - றொழிலாற்

கடலொலிக்குஞ் செந்தினகர் கண்களித்த நானிங்
கிடருறச் செய்கின்ற திருள். 28

இருளா தியஞ்சித்தற் கேத்துதொழி லீந்தா
யருளா லொருசொலறைந் தாளாய் - தெருளாளா
நண்ணித் துதிக்க நளிர்கட லுண் டோவளத்துள்
ளெண்ணித் தொழுங்குருக்க ளே. 29

குருக்க ணெறிகடக்குங் கோதுடையார் கொண்ட
செருக்குயரக் கண்டு திகைத்தே - னுருக்கயிற்கைச்
சிங்காரக் கந்தா திருக்கூட்டஞ் சேர்த்திகலோர்ச்
சங்காரஞ் செய்யுநலந் தா. 30

நலந்தா னொருசிறிது நானறியே னாடி
யலந்தாரி லுன்னை யடுத்தே - னுலந்தாழுந்
திண்டோட் குகனேயென் சிந்தை குளிர்த்திருக்கைத்
தண்டோடு தோன்றாயத தி. 31

திகண் டருளுந்த யையுனக் குண்டெண்னி
னிதியந் தருகிற்தா நீயன் - றதிகநயஞ்
சொற்றிலையோ நல்கிலதேன் சூட்டுடைச்செங் கோழியினி
துற்றிருந்த தோணிரைபுள் ளோய். 32

ஓயாத் துயரையென்ற னுள்ளத்தி லுண்டாக்கிக்
காயாத் தருநேர் கருத்தார - லாயாசங்
கொண்டுதிண் டாடிக் குலையச் செயலேனோ
தொண்டுதருஞ் சேந்தா சொல். 33

சொல்லிற் கடங்காச்சு காதீதச் சுத்தத்தி
னல்லிச்சை யுற்று நலிகின்றே - னெல்லிற்
றிகழுகின்ற சத்தியங் கைச்சிங்காரா தீயோ
ரிகழுகின்ற துஞ்சகிக்கி லேன். 34

ஏனற் கடத்திதணி னின்குறற்காரக் கோகிலத்திற்
கானநயஞ் செய்த ணைந்தநீ - தேனனைய
சொற்காசை யுற்றுச் சுரத்தேக லேனுரையாய்
கற்காதற் செந்தாட் குகா. 35

காரானைத் திண்கை கணையா லறுத்தகந்தன்
றீராத் துயருஞ் சிறிதுண்டேற் - கூராழிச்
செங்கைக் கரியோன் செருக்களத்தி லண்டர்சிந்தைச்
சங்கையறச் சொல்கனத் தான். 36

தான்சுரர் கோனாத் தழைத்தோ ரகளிற்றலையே
யான்கொடுஞ் சூரனைக்கொன் றாண்டோனே - நானறைந்த
செய்யுட்டொ கையிற் சிறிதுந் திருத்தியின்றோ
கையுற்ற நீறுநல்கிக் கா. 37

காதா றிரண்டுடைய கந்தனே யெங்களுக்கோ
ராதார நாதனென் கையறியார் - நீதான்சொ
லாழாழி யேழுடுத் திட்டத்தணைக்கு ளொன்றிலடி
தாழாசைக் கொண்கனைச்சேர்த் தாய். 38

தாயகநீ யன்றியிந்தத் தாரணியி லில்லையென்னைக்
காயகத்தார்க் கஞ்சா துகாத்தருளாய் - சேயகன்ற
காடனையான் கண்ணருளுங் கார்த்திகே யாகருங்கோட்
டாட்டங்கற் கேறியுகைத் தாய். 39

உகைக்குஞ் சிகிக்குகனென் றோதாதா ரொத்துத்
திகைக்குங் குணங்கொளென்றன் சிந்தை - நகைக்குஞ்
சிறியாருக் கஞ்சியொல்கிச் சீரழிதற் றீர்க்குங்
குறிதேறிக் கொண்டுநிற்குங் கொல். 40

கொல்லா நலத்தோரே கொண்டாடக் குன்றினந்தோ
றுல்லாசத் தாடலு னுற்றுஞ்சேய் - கல்லாதார்
கூட்டத் துயருங் கொடியேனை யாண்டதன்றிச்
சீட்டதனி லுங்குறித்த தே. 41

தேகாதி யையுனது சீறடிக்குய்த் துச்செழுந்தீ
யாகார நாட லருள்கில்லா - யேகாந்தத்
தானந்த நல்கிய கற்றிடாதாள் கையெங்ங
னேனந் தடிந்தகந்த னே. 42

கந்தையி னிற்சோறிரந்து காலங் கழிக்கின்ற
நிந்தையுந் துற்றா லுநிகரன்றே - தந்தை

யொடுங்கித் தொழச்செய் குகனோதியசொற் கேட்டுத்
தொடுங்கற் கிணற்றின்று யர்க்கு. 43

துயரங்க ளெல்லாந் தொலைத்துனது தொண்டர்க்
கயலன் றெனத்திகழ்கை யாற்றா - யியல்கொண்டு
சொல்லுங் கிளியிருந்த தோட்குகநின் றாட்கெனெஞ்சக்
கல்லுரிஞ்சொண் ணாதோ கழறு. 44

கழகத்தி ருந்தோர் கருத்தொல்கற் கண்ட
குழகன் கொடுகொட்டிக் கூத்தன் - றழலனைய
சூட்டுடைய குக்குடத்தோட் சுந்தரச்சேய் தொல்லையிருட்
காட்டுளெனை யுய்த்தான் கழித்து. 45

கழிநாணு நெஞ்சைக் களிக்கடலி லாழ்த்தி
யழியாத நன்னிலையி லாக்கா - யிழிநீரார்
நாடியறி தற்கரிய ஞானானந் தந்தருஞ்சீர்க்
கீடில் குறுக்குத்துறையா னே. 46

யானே யுனதடிக்கா ளென்றடைந்த துண்டோநீ
தானே யுற்றாண்டிலையோ சாற்றிடா - யேனேனிங்
கெல்லோருங் கூடி யெனையிகழச் செய்தாய்கற்
கொல்லோநின் னெஞ்சங் குகா. 47

குகானந்த சாகரத்திற் கூடற் குறித்து
நகாயுதத்தைச் செஞ்சிகையை நண்ணித் - தகாதநடை
யத்தனையுந் தீர்ந்தா ரடித்தொண்டி சையாத
சித்தத் தறாதே திருக்கு. 48

திருக்கு கருங்கோட்டுச் செந்தகரூர் சித்த
னுருக்கயிற்கை யேதுணை யென்றோதா - ரிருக்குணர்ந்து
கொண்டாலு ஞானக் குறியினனத் தென்னுநிலை
கண்டானந் தத்துருகார் காண். 49

காணங் கருதிக் கடைத்தலைதோ றுந்தினநா
ணாணங் கெடத்திரித னண்ணினேன் - றாணயந்தோர்
கூட்டத்தி டைசேருங் கோலா கலங்கொடுத்தா
ளாட்டத் தணிச்சிகிக் காரா. 50

காரார்நெ டுங்கூந்தற் கன்னிகை யார்கடகநுதற்
கூரா னலிந்தேனைக் கூட்டாயோ - சீராடுங்
கோலக் குறத்தி கொழுநா குறைதீர்ந்த
சீலத் தினர்கூட்டத் தில். 51

தில்லாயக் கட்டுஞ் செருக்குஞ் சினத்தீயு
நில்லா தொழியு நெறியீந்தா - எல்லாருங்
கண்டத் தொருத்தனுதற் கண்ணருளுங் காங்கேயா
தண்டத்த டற்குருநா தா. 52

நாதாந்தக் குன்றி னடஞ்செய்யு நாயகனே
காதார்ந்த கட்குறத்தி காதலா - தீதாளாக்
கஞ்சித் தளர்ந்தே னருளா யயிலேந்திச்
செஞ்சிகியூர் கின்றகுருந் தே. 53

குருந்தைநிழற் றாதைதொழிற் கொண்ட குழந்தை
திருந்துசெஞ்சொற் காரர்தொழுஞ் சேந்தன் - றருந்திருத்தா
ளன்றியொன்றை நண்ணார்க் ககிலத் தினரிகழ்ச்சி
துன்றிடலுங் கண்டேனந் தோ. 54

தோலாத திற்றசூரன் றொல்கடலுட் சென்றொளிக்கக்
காலா யுதக்கொடித்தேர்க் கண்ணுற்றோன் - சேலார்கட்
குஞ்சரியாட் கேற்ற கொழுநன் குறத்திகொண்கன்
சஞ்சலந்தீர் குங்குருநா தன். 55

தன்னைத் தலையாக்கித் தானுந் தனியருச்சித்
தென்னனையார் சிந்தை யினுந்தோயுந் - தொன்னலஞ்சேர்
காங்கேய னோகத்தைக் கண்டு துதித்தாரே
தீங்கேதுங் கொள்ளாச் சிலர். 56

சிலரைக் கருதித் தியங்கா துசெந்திற்
றலநலத்தை யென்றென்றுஞ் சாற்றி - யிலகுங்
கதிரயிற்கைக் காரணனைக் கண்டு தொழுதாற்
கதிகிடைக்குந் தீருங் கலி. 57

கலியுகத்துக் கஞ்சிக் கதியாசை கொள்ளா
தொலிகடற்றா னைத்தறையி லுள்ளார் - நலிதல்கண்டு

நானஞ்சு கில்லே னலந்தந் தருள்குறிஞ்சித்
தானந்தோ றாடிடுங்கூத் தா. 58

கூத்தாடு நாதனிடங் கொண்டாடுங் கோதைகொஞ்சுஞ்
சேத்தாட் குகனைத் தினநாடி - யாத்தாள்
குறத்தி யெனத்தேறிக் கூறச் சலியா
ரறத்தினுக்கோர் நல்லுயிரன் னா. 59

அன்னைதந்தை யாசா னருளார் தனிச்சோதி
யென்னச் சுருதிகள்சொல் லீரிரண்டுந் - தென்னனன்னா
டாண்டுதிண்கைச் செண்டதனா லாடக்குன் றின்சிரத்தைத்
தீண்டுகின்றோ னென்றுதெளிந் தேன். 60

தேனுண்ட கூதளத்தார்ச் சேந்தன் றிருத்தாளை
நானுந் துதிக்குநல நல்கியதே - யூனுடலுண்
டாகச் செயுங்கத்தா னாசை நிகராந்தூய்
கோகனகத் துற்ற கொடி. 61

கொடியோ கருணைக் கொடுகொட்டி தானோ
துடியோ நடத்து யருந்தோற்ற - நெடியோனு
நாலா னனத்தானு நண்ணரிய நாதனத்துங்
கோலா கலக்குக னுக்கு. 62

குக்குக்குக் குக்கென்று கொக்கரிக்குங் கோழியொன்றைக்
கைக்குட் டரித்தொளிருங் காங்கேயன் - றிக்கெட்டுங்
கொண்டாடத் தக்க குணங்கொடுத்தா லன்றிநெஞ்சத்
திண்டாட்டந் தீரா ததே. 63

தீராத காதற் றிரைக்கடலுட் சென்றுநின்
தாரா தனத்தைய்யத் தேனோ - சூராய
கொக்கறச்செற் றிட்டசத்தி கொண்டுள்ள குன்றுதொறுந்
தக்கநடஞ் செய்தருள்கந் தா. 64

கந்துகநோ கொங்கைநல் லார்கட்கணைக ளாற்கலங்கி
நொந்துளநா னாறெழுத்தா னோற்கின்றேன் - சிந்துரச்சீ
ரானனத்தா னைக்கனியி னாசையினா லன்றொறுத்துக்
கானகத்திற் சென்றோன் கழல். 65

கழங்காடுஞ் சங்கணிகைக் கன்னியர்க ளாசைக்
கிழங்காரு நெஞ்சைக் கெடாதோ - தழங்காழி
நட்ட நடுத்துயிலு நாராய ணற்கிளையாள்
கட்டுதுகிற் றோய்ந்தசிறு கால். **66**

சிறுகாலு லாயகுன்றின் சென்னிக் குகையி
லுறுநாத னோடுரைத்த தோதா - யறுகா
விசைக்கின்ற செச்சையந்தா ரேய்ந்ததிண் டோர்ந்தாய்
நசைச்சொற் றொடுத்தல்கையே னான். **67**

ஏனா னுலகத்தி னிற்றோன்றி யித்துயருட்
டானா நுழைந்துழலத் தள்ளினா - யானாத
சீலக் கிளியிருந்த சிங்காரத் தோட்குகநின்
னோலக்கத் துய்த்தலெந்நா ளோ. **68**

நாட்டானோ நாழிகையோ நாடுங் கணந்தானோ
கோட்டாட் டிலேறுங் குருத்தோன்றல் - கேட்டாயோ
நெஞ்சே கிலேசத்தி னீயழுந்திச் சோர்ந்துநெகிழ்ந்
தஞ்சே னன்கெண் ணியறி. **69**

அறியுந்தரத் தினதே யன்றுகொலென் னெஞ்சிற்
செறியுந் துயரத் திரளை - யுறியிடத்தி
லங்கையிட்டுக் கட்டுண்ட முந்திருட னார்க்கிளையாள்
செங்கையிற் கொள்ளுஞ்சிறிய சேய். **70**

சிறியசே யாயிதழிச் செஞ்சடிலச் சித்த
ரறியச் சுருதியுரைத் தாண்டோன் - குறியுணரு
ஞானக்கு றத்தி நலந்துய்த் திடல்கருதி
யேனற்கட் சென்றலைந்த தென். **71**

என்னை யுலகோ ரிகழச் சகிக்கின்றா
யுன்னை யிகழ்ந்திடற்கேட் டுள்ளுடைந்தேன் - றென்னை
யெனக்கதலி நீடுசெந்தி லெந்தா யெனையா
ளுனக்கிது ஞாயங்கொ லுரை. **72**

உரைக்கருஞ் சீரககுன்றின் றோகைநடஞ் செய்து
திரைக்கடலிற் சூரைச் செகுத்துக் - கரைக்கடங்காச்

சந்தங் கொழிக்குந் தனித்தத்தை யேநதிநிற்குங்
கந்தனைக்காண் கின்றதென்றென் கண். 73

என்கணுனைக் காணினன்றி யின்ன லொழியாதுசற்று
நின்கணெனை நாட நினையாதோ - தன்கட்
கனலா லளித்த தந்தை கண்டு களிக்கத்
தனதாடல் காட்டியகந் தா. 74

தாதாருஞ் செச்சைத் தடந்தோட் சகுணகுரு
நாதாநீ சொற்றிலையே னானறியேன் - நீதாள
ராயே திரிகின்றோ ராதரிக்குந் தாளாரு
நீயேயென் றுன்னு நெறி. 75

நெறிதோறு நின்றானை நீலச் சிகியூர்
சிறியோனைத் தித்திக்குந் தேனை - யறியாத
காலத்தொல் காது களிக்குங் கருத்தினர்கொள்
கோலத்தா லுண்டே குறை. 76

குறைதீரச் செய்துனது கோகனகத் தாளி
னிறைசீரு ணர்த்த நினையாய் - தறையைக்
கனமுத் துடனளந்த காகுத்தன் சொல்லத்
திகழுநலந் தோய்ந்தசெங்குன் றே. 77

செங்குன் றுறழச்சி றக்குஞ் சினத்தகரி
லெங்குந் திரிதருசீ ரேய்ந்தோனே - கங்குற்
களிறூருஞ் சித்தசனாற் கண்கலங்கி நொந்தே
னளிகூர்ந் தெனையாண் டருள். 78

ஆண்டருளென் றேத்தியுன தாறெழுத்தோ திக்கருதி
யீண்டயாகின் றேனுக் கிரங்காயோ - தீண்டரிய
செங்கனலா கத்தான் றிருக்கண்ணிற் சேயாகி
யங்கணிலத் தாடலிழைத் தாய். 79

இழைக்கே நிகர்சிற் றிடையார்சொல் லேற்குங்
குழைக்காதோ ராறிரண்டுங் கோதோ - தழைக்குநலந்
தந்தாள் குகனேநான் சாற்றுதுதி கேளாது
சிந்தாகு லத்தைச் செயேல். 80

செயங்கொண்ட தாருகனைச் செற்றகுகன் செஞ்சொ
னயங்கண் டருளளிக்கு நாத - னியங்குதிண்கைச்
சங்காழி யானிற் றறையிற் றிரிதருசீ
ரிங்காருக் கீந்திடுங்கொல் லே. 81

கொலையிற் கொடியார் குணக்கேட்டுக் கஞ்சி
யலையத்த குங்கொ லறையாய் - நிலைநிற்குஞ்
சத்தியநின் சொல்லன்றோ சாற்றியதேன் றந்திலைகா
ரத்தியுரித் தோனருளை யா. 82

ஐயரன னத்தார்க் கருளாட்சி நல்கியசேய்
நெய்யாருஞ் செச்சை நிறைதோளா - னொய்யாரத்
தோகைக் குடைசூழ் துரகத்ததிற் றோன்றியரு
ளோகைக்குந் தாழ்ச்சியுள தோ. 83

உளதென் றிலதென்று ரைக்கின்றோர்க் கொல்கித்
தளருஞ் சிறியேனைத் தாங்கா - யளகைநகர்
நாணுந் திருச்செந்தி னாயகனே நன்குனைநேர்
காணுங் குறியென் கருத்து. 84

கருத்த னொருத்தனெனக் கற்றுணர்ந்து கொள்ளத்
திருத்துங் குருநாதற் றேறி - னிருத்தங்கள்
செய்யச் சலியாச் சிகியேறிச் செந்தினகர்ச்
சையத் தலையினின்றோன் றான். 85

தானானென் றெண்ணித் தயங்குந் தருணத்தி
லானாத கீர்த்தியரு ளானே - கூனாருந்
திங்கட்கொ ழுந்துறுதற் சீராந்த குஞ்சரியா
ளங்கட் கினியதிண்டோ ளான். 86

தோளார்ந்த செச்சைத் தொடையற் குறித்துநெடு
நாளாதற் கண்டிருந்து நல்கிலா - னாளாகிச்
சற்றுந்து தித்தறியான் றன்னோ தழற்காட்டி
லுற்றுந்து தித்தியற்கேட் டோன். 87

கேட்டுக்குள் ளஞ்சிக் கிடக்குஞ் சிறியேனின்
றாட்டுணைக் காளாகுநலந் தந்திடாய் - சூட்டுக்

குலுங்கச் சிறையிரண்டுங் கொட்டியுல கங்க
ளலுங்கச் செயுங்கொடிக்கா ரா. 88

காருடற் சூரா யகன்குதத் தைக்கணத்தி
னேருறக்கீன் றிட்ட நெடுசத்திச் - சீருடைய
சேந்தனையே சந்ததஞ்சொற் சீராற்று தித்திறைஞ்சி
யாய்ந்தரிந்தார்க் கில்லை யலர். 89

அலர்நாணி நாகரிகத் தாறெழுத்தே கூறிச்
சலசா தனனெழுத்தைத் தாண்டி - யுலகேழுங்
காணுறக்கூத் தாடற் கருதினேன் காணாதோ
சேணுறுகண் டீர்த்தசெந்தூர்ச் சேய். 90

சேயநிறக் குன்றோ செழுந்தீயோ செக்கர்கொல்லோ
காயலரி யால்லருங்கா டேயோ - தாய
ருடனோது நான்காகி யொன்றாய் குறிஞ்சி
யிடநாடகஞ் செய்கின்றோ னே. 91

ஏயுங் கருணை யிலரொத் தெனையுலகி
லாயுந் துயர்க்கடலி லாழ்த்தினையே – நாயு
நரியுந் தினுஞ்சடத்தை நானென் றிசையே
னெரியொஞ் செழிற்றகரோ னே. 92

தகரேறுஞ் செங்குருந்தைத் தாரகத்தி னாக்கந்
திகழ்தே சிகனையருட் சீராட் - டிகழாதார்
ஞானக்கண் ணாலறியு நற்குகனை நாயடியே
னீனக்கண் காண்டலிச்சித் தேன். 93

இச்சிக்குந் தொண்டர்க் கெளியா னெழிலாருங்
கச்சிக்குருக்கள் சொல்லுங்கா தையினை - நச்சியொரு
கோலந் தரித்துக் குளிர்தில்லைக் கேகியசேய்
சீலந் தெரித வரிதே. 94

அரிதாய தாரகத்துக் காசையுற் றோராழுங்
கிரிதோறு நின்றானைக் கேளீர் - திரிசூலக்
கையனுக்குந் தெண்ணீர்க் கடலுண்டாற் குங்கிளியாந்
துய்யனுக்குஞ் சொன்னானன் றோ. 95

அன்றே யெனைத்தனக்கோ ராளாக்கிக் கொண்டகுக
னின்றே னிரங்கா திருக்கின்றான் - குன்றே
நதியேநற் றாரணியே நாகச் சுடரே
கதிநாடி நின்றோர்க்க ளே. 96

களங்கந் தொலைத்தருளுங் காரணனே கஞ்சத்
தளங்கொண்டு சத்தித் தலைசா - ரிளங்குறத்தி
நாயகனே கால்சார்ந்து நன்னீலங் கொண்டகையாட்
டோய கலத்தானே துணை. 97

துணைத்தாள் கருதியுன்னைத் தோத்திரங்கள் செய்யா
திணைத்தோட் டொயிலாரா லெய்த்தேன் - றிணைக்கோர்நற்
றார்கந்தா னென்னத் தழைக்குநா ளொன்றுளதோ
சூர்கலங் கீன்றகந்தா சொல். 98

சொல்லோட ருத்தந் தொடற்கரிய சூட்சத்தை
யெல்லோர்க்குங் காண்ட லெளிதேயோ - கல்லோ
டுரிஞ்சுநடஞ் செய்திருத்தா ளுன்னி யுருகித்
திரிந்துழலார்க் கெய்துகின்ற தே. 99

தேறாத நெஞ்சே திடுக்குற்றி டேலுனைச்சூ
ழூறா யிரங்களுந் தீர்ந்துய்ந்திடற்கு - நீறாடிக்
கானந் தனிலலகை கண்டுசுற்ற நின்றார்க்கு
ஞானங் கொடுத்தானை நண்ணு. 100

தன்னோ நிரோட்டத் தலைச்செய்யு ளந்தாதி
சொன்னேனை யாளத் துணியாதோ - நன்னேயத்
தொண்டன் கிளியாய்த்தன் றோணிரையிற் றோயுநலங்
கண்டகுரு நாதன் கழல்.

முற்றிற்று

20

குகன் நிரோட்டத் தொருதொடை செய்யுளந்தாதி

20

குகன் நிரோட்டத் தொருதொடை செய்யுளந்தாதி

காப்பு

ஒருதொடை ததற்கருஞ் சீரானன் னுலகுய்ந் திடற்கென்
றொருதொடைக் கோட்டுக்கண நாதனருட் டுணையுன் னுகின்றே
னொருதொடைச் செச்சை கைச்சத்தி குன்றாதி யுடையகுக
னொருதொடைச் செய்யு ணிரோட்டத் தந்தாதி யொளிர்தரற்கே.

நூல்

அருளா னந்தத்தை யறியா திகழ்ந்திட் டழிதருநீ
ரருளா னந்தத்தை யனாறா னனக்குக னாலரந்தா
யருளா னந்தத்தை யண்ணுங் களத்தார்க்கு நல்லானெனையிங்
கருளானந் தத்தையதே நீயென்றானங னாண்டிலனே. 1

ஆண்டலைக் கைக்குக னாறெழுத் தோதி யணுகுநரை
யாண்டலைக் கைக்குநெறி காட்டுஞ் சேய்கல்வி னாழ்கிணற்றா
லாண்டலைக் கைக்குகுந் துணிந்தான் றுயரத்தழுந்தி நொந்தே
னாண்டலைக் கைக்குளிர் நீரூற்றுண் டாகச்செய் தாள்கையென்றே. 2

ஆளாதிருக்கை யென்னான் கேட்கை நல்கரிதாங் கொலயி
லாளாதிருக்கை யென்னே ரிருளர்க் கருளார் குகநின்
னாளாதிருக்கை யென்றுள்ளா னரியா னன்று கொலசொல்
லாளாதிருக்கை யென்றெற் சேரச் செய்த லறைகுதியோ. 3

குதிக்குந்த கரதற் கஞ்சிய நாரதன் கூய்த்தொழநான்
குதிக்குந்த கரச்செயாது கைத்தா யிகற்கொன் றுயரக்
குதிக்குந்த கரக்குகா கலையாதிக் குறியினத்தொ
குதிக்குந்த கரத்துளதாய ஞானக் குணநல்கிடே. 4

குணங்கொண்ட லென்னக் கொடுக்கை யென்றோர்ந்து குகனருட்ச
குணங்கொண்ட நாட்டத்தராய்க் குளிந்தார் குறைகூ றெனினுங்

குணங்கொண்ட ருநிறை சொல்லறகொல் கேலெய்துங் கோதறுநிர்க்
குணங்கொண்ட லாழி நிகராங் கலைத்திறங் கூடுநெஞ்சே. 5

கூடாதரித் துழல்கின் றேற்குத் தன்குழ லிசையாற்
கூடாதரித் துயக்குன் றெடுத்தான் சொற்கொடுக் குதியோ
கூடாதரித் துக்கெடுத்தி கொல்லோ நிசங்கூறு கண்ட
கூடாதரித் துளகூதா ளத்தொங் கற்குகா னந்தனே. 6

குகானந்த னுக்குழைச் சங்கீசனெண் கணன்கொள் குருக்கட்
குகானந்த னுக்குணிக் கின்றோ குழாந்தினங் கூண்டுதொழுங்
குகானந்த னுக்குக் கிரிதோறுந் தோத்திரங் கூறிடற்கே
குகானந்த னுக்குளதே லின்னல் சூழ்ந்து குறுக்கலென்னே. 7

குறுக்குத்துறை தனத்தார் கண்களா லெய்த்துக் கோளரிநேர்
குறுக்குத்துறைக் கலைநீத் தணைகா தற்கொடுத் தருளைக்
குறுக்குத்துறைச் செய்யுள் கற்றலைந் தேனைக்கைக் கொண்டுகுகன்
குறுக்குத்துறை யிலந்நாட் சொன்ன சத்தியங் குன்றுங்கொலோ. 8

குன்றக் குடிசெந்தி லேரகநே ரெண்ணில் கோடிநெடுங்
குன்றக் குடிக்குகன் கோகன கத்தினற் குட்டியகங்
குன்றக் குடிலையைக் கேட்டோனஞ் சாரியைகூட் டிச்சொல்லுங்
குன்றக் குடிகைத் திடத்துய ரீதல் கொடியதன்றோ. 9

கொடியாடுங் காலன்றி யொன்றை யெண்ணாத குணங்கொடுத்தெற்
கொடியாடுங் காலத் தெழக்கண் டடக்குங் கேசகுறக்
கொடியாடுங் காலக்கத்துச் சொச்சந் தோழரைக் கொண்டகந்தா
கொடியாடுங் காலற் செகுத்தார் நுதற்கட் கொழுங்குருந்தே. 10

குருந்தைய நீழலை யாலநிழ லெனக்கொண் டுறுஞ்செங்
குருந்தைய நீடுடற் றேசிகனார் தங்குளக கணலகுங்
குருந்தைய நீதரறி யாக்குகே சனைக்குன் றருஞ்சீர்க்
குருந்தைய நீதுணை யென்றேத்தி நெஞ்சுட்குறிக் கைநன்றே. 11

குறிக்கைக் குணித்துக் கடிக்கணை சிந்துங் குரூரனஞ்சுங்
குறிக்கைக் குணிற்குநிலை காட்டியாள கொடிகொண் டுணர்த்துங்
குறிக்கைக் குணியுறுங் கானகத் தேகுங்குகா நிலத்தோன்
குறிக்கைக் குணிநின் றிருத்தாளென் றோர்கிள்ளை கூறியதே. 12

இயங்கண்டர் சேனைத் திரட்காக்குஞ் சேந்த னிரலையின்றோ
வியன்கண்ட குன்றுங் குறிச்சியுந் தோய்கழ லேய்ந்தகுக
னியங்கண் டனைய குறக்கோதை கொண்கனெனுந் துதிச்சொல்
லியன்கண்ட நீலத்தா னாதியருக் கினிய தன்றே. 13

இனிய துரக்கத் திருகக் கட்டுக் கிட்டிடுங் களிற்றுக்
கினிய துரக்கச் செஞ்சிகியா யியலெய்து தொண்ட
ரினிய துரகரறி யாக்குகா கிளியென்றெற் சொற்றா
யினிய துரகசியங் கொல்லுல கத்தினர்க் குணர்த்தே. 14

இனந்தா னருளிலைக் கங்கொள் நாடுநரென் றுணர்ந்தே
னினந்தா னருளிலை நின்றிருச் சிந்தைக்கிது தகுங்கொ
லினந்தா னருளிலை யாங்குகனே நல்விர சதககுன்
றினந்தா னருளிலை நீறீந்தொரு சொல்லிசைந் திடின்னே. 15

இசைத்திட்டங் கண்டுள நாதற் கஞ்சலெனுந் திருச்சொல்
லிசைத்திட்டங் கண்டுந் தகரூர்குகா நின்னிடத் தெந்நெஞ்சை
யிசைத்திட்டங் கண்டுயின் றாலுங் கொளுந்திற லீந்தருளுன்
னிசைத்திட்டங் கண்டுறழ் சீர்ச்செய்யு ளானன் கிறைஞ்சலுற்றே. 16

இறையாதி யன்றுழல சங்கடத்தா லடலேற் றினைநே
ரிறையாதி யாக்கண்டு நாணாது காத்தருளிண் டைச்சென்னி
யிறையாதி யநடஞ்செய் தணிந்தார்க் கைக்கொ ரேனத்தின்கோ
டிறையாதி யங்கண்டா தங்காற்றளை கொய்திடுங் குகனே. 17

இடுகை யிலாருக்குத் தாங்கேட்கை நல்கச்செ யீட்டுநஞ்சூட்
டிடுகை யிலாருக்குறாதலி னீக்கியெய் தேனையாச் சேரத்
திடுகை யிலாருக்குந் தோன்றநின் றாரையெண்ணா தெனிச்சை
யிடுகை யிலாருக்கு நாடருஞ் சீர்க்குக னென்னையனே. 18

என்னையனேர் குழலார் கொங்கை யாதியை யெண்ணிநண்ண
லென்னையனே யென்றிரந் துண்டா ன்றனிளங் குருந்தை
யென்னையனே குகனே யெனத்தோத் திரித்தீ டிலிக
லென்னையனே கநலத்தா லறக்கண் டிருத்தி நெஞ்சே. 19

இருக்காதி யான்சுருதி யெல்லாஞ் சொல்லிடுந் தெரியு
யிருக்காதி யான்னறி யில்லையென் றோத லிரங்குநலத்

திருக்காதி யானங்குக னறாளைச் செய்தியெதிர்த் திகல்செ
யிருக்காதி யானலருங் கதிசேர்க்கு நெஞ்சென் னுறவே. 20

என்றுங் கருணைத் திருக்கண்களா லென்னையேற் றுக்கொள்ளா
யென்றுங் கருணைக் கிளிசொன்ன செய்யுட்சொற் றியானுய்ந்திலே
னென்றுங் கருணையத் திங்களுந் தீயுங்க ணென்னத்துற்றா
ரென்றுங் கருணையர் தந்தகுகா நனியீர நல்கே. 21

ஈர்ங்காத் தில்லைக் கூத்தா கண்கொட்ட வில்லார்க ணெஞ்சை
யீர்ங்காத் தில்லை யங்கதந் தோய்சித்த ரீன்றகுக
னீர்ங்காத் தில்லை யென்றாலு நன்றிச்சை யேற்றியென்னு
ளீர்ங்காத் தில்லை நீங்காரிலேங் குற்றிடச் செய்தே. 22

இடங்கரை யானையுய்யச் செற்றுளான் றங்கை யேய்ந்ததனா
லிடங்கரை யார்த்த ரீன்றருளுங் குகனென்னைச் செந்தி
லிடங்கரையா நன்கு சொன்னது செய்தற் கிரங்கிடினீ
றிடங்கரை யாககொண் டிடாரைத் துதிக்கைக் கிறுதியுண்டோ. 23

இறுக்குங் கனதனத் தாருக்குச் சூதுக்கிறைச் சிகள்ளுக
சிறுக்குங் கனதனத் தீனரைக் கெஞ்சற் கிசைகிலன்ஞா
யிறுக்குங் கனதனங் கேளிர்கட் கொல்கலெய்தச் சினந்தெ
யிறுக்குங் கனதனங் கொண்டார் கண்ணானல் கெழிற்குகனே. 24

எழுதானையர்க் கடற்சுற்று நங்கைக் களியெய்த னண்ணி
யெழுதானையர்க் கக்குரு குலத்தோர் களிசைக் கதையை
யெழுதானையர்க் கனிகொள் காற்செறுங் குகனெஃ கணிதோ
ளெழுதானையர்க் களிநாடுஞ் சொற்றொ டைக்கேற்ற தன்றே. 25

ஏற்றத்த னாகத் தடங்காத காதலிளங் குயில்கை
யேற்றத்த னாகத்தர் காற்றளை நீத்தரு ளேந்தலிடி
யேற்றத்த னாகத் தயத்தூர் குகனெடுத் தெண்ணருஞ்சீ
ரேற்றத்த னாகத் தலத்தானென் னெஞ்சத் திலங்கலென்றே. 26

இலஞ்சியகத் துந்துறந் தெழுத்தா றெண்ணி யேத்தியெழி
லிலஞ்சியகத் துற்றிடு நாளென்றோ கடத்தே ழையெதி
ரிலஞ்சியகத் துறுஞ்செச்சை யனேநித் தரீன்ற ருள்சிற்
றிலஞ்சியகத் துந்தக ரூர்குகா தொண்ட ரிட்டத்தனே. 27

இட்டர் தரித்துலகோர்க் கொருதா யொத்திலங் கியுகந்
திட்டர் தரித்துய்த லெய்துங் கொல்லோ நல்லிளங் குறத்தி
யிட்டர் தரித்துள் கூதாளத் தாயநக் கெயில்களெரி
யிட்டர் தரித்துறச் செய்யநின்றார் நத்தியற் குகனே. 28

இயலுந் திருந்தகைச் சீரியர் கூட்டத் தினியதொனி
யியலுந் திருக்குன்று தோறாடிடுங் குகனென் னதுதொல்
லியலுந் திருந்துறச் செய்தானிந் நாளிரங்கார் களொத்தா
ழியலுந் திருக்க னெழுத்தெண்ணி யேங்கின் னலிந்தனனே. 29

தனக்குஞ் சரத்த திருத்தர னென்றெண்ணித் தளர்ந்துழலென்
றனக்குஞ் சரணத் துணையீந்து காக்குங்கொல் சந்தனச்செந்
தனக்குஞ் சரத்துக் கினியான் குறக்கொடி தாடொழுஞ்சித்
தனக்குஞ் சரக்கொன்றை யுந்துதைந் தார்கண்ட ஞுங்குகனே. 30

தருக்குடை யாளரிக் கானந்த நல்கிநற் றார்கந்தந்
தருக்குடை யானை யொறுத்த குகேசன் றழனயனத்
தருக்குடை யாஞ்சினந் தீர்ந்தோனே கரதயங்கக் கண்டு
தருக்குடை யாச்சிறி யேற்கரு ளீயினுந் தாழ்ச்சியின்றே. 31

தாழையனை யகநதிச்செந்தி லந்தணந் தங்கள் சொற்குத்
தாழையனை யயிலாங் கைக்குக னைத்தனி யிதணோ
தாழையனை யறிந்தேத் துய்யலாஞ் சரதந் தணந்த
தாழையனை யலாரன் கூடிறஞ்சர்க் கந்தழைக்கு நெஞ்சே. 32

தழைக்குஞ் சரதநெறி யோர்கிலர்க் கொடுஞ் சாரணர்கைத்
தழைக்குஞ் சரதந்தறை நீங்கச் செய்குகன் றன்னிகரி
தழைக்குஞ் சரதனந்தோ யுரத்தான்றுந் தண்ணந் துழாயத்
தழைக்குஞ் சரத்தாற் கந்நாளுரைத்த சொற்சாற்ற லென்றே. 33

சாற்றயி லார்த்தங் கொள்ளார் கிரிதொறுஞ் சந்தஞ்செய்
சாற்றயி லார்த்த சந்தனக் குன்றத்தனை யனையார்
சாற்றயி லார்த்தஞ் சிந்துறச் சூதந் தறித்தகுகா
சாற்றயி லார்த்தரு குணராய் கொலென் சத்தத்தையே. 34

சத்தத்தை யாதரிக்கின்றோ ரெல்லோர்களுஞ் சராதருநே
சத்தத்தை யாதரிக்குஞ் செச்சையர் கனற்றந் தருளி

சத்தத்தை யாதரியாச் சினச் சூரைத் தடிந்த குகா
சத்தத்தை யாதரித்துத் தரற்கானத்தி யிதன்றே. *35*

ததியான தீதுணர் கென்றுனக் கோதற் குதியன்று
ததியான தீதுயி னீத்தாய ரூரிற்ற னிதிருடுந்
ததியான தீதுன்னச் செய்யாய் கருங்குறத்தை யலிருந்
ததியான தீதுடை யாரறி யார்க்குச் சற்றிரங்கே. *36*

சற்குரு நாதன் குகன்செந்தி லாதித் தலத்திறையீ
சற்குரு நாதன் றனித்திற்ற சூர்கதை சாற்றுகைநச்
சற்குரு நாதன் கணேர்தோன்ற னாடித்தயங் கியிறைஞ்
சற்குரு நாதன் செயலாச்சொல் சீரெய்தறா னரிதே. *37*

தானக் கரிக்குயிர்த் தோழனென் றேத்திச்சரண் டொழலுந்
தானக் கரிக்குச் சுடராழி யெய்துறத் தாருகற்காய்ந்
தானக் கரிக்குறழ நூலுரைக்குங் குகன்றன் கைநல்குந்
தானக் கரிக்குங்கொல் சஞ்சிதக் காடிருட் சத்திகொண்டே. *38*

சத்தியங் கைக்குருக் காயுதக் கூட்டந்தனக் கரசாஞ்
சத்தியங் கைக்குரு நாதற்கு ஞானந்தருங் குகற்குச்
சத்தியங் கைக்குருந் தென்னநின் றாற்குத் தகுந்துதிச்சொற்
சத்தியங் கைக்குரு டொத்துழன் றேங்கதி சார்தலென்றே. *39*

சார்ந்தரங் கத்தடங் கடலாடைத் தறையிடத்தஞ்
சார்ந்தரங் கத்தத் துண்டிக்கு நீரைத்தணந் தனையோ
சார்ந்தரங் கத்தனிச் சந்தத் தோத்திரஞ் சாற்றுதிற்ற
சார்ந்தரங் கத்தக லாக்குகா சச்சிதா னந்தனே. *40*

தானந் தருகை யணியாய் சீர்கொளுந்த நதியொடுந்
தானந் தருகைய தாடாள னாங்குக தாரணியீந்
தானந் தருகை யயத்துணை நாணுந் தனிச்சகியாய்
தானந் தருகை யறாக்கரந் தந்தெனைத் தாங்குதியே. *41*

தாங்கர தலந்தந் துளான்றலை நாகந்தடஞ் சிலையார்
தாங்கர தலந்தகற் கஞ்சுகின்றே னருட்டாக நெஞ்சந்
தாங்கர தலந்ததறி யாய்கொலோ நலந்தந் தெனைநீ
தாங்கர தலந்தண் குகாகுறை தீர்ந்த சடாக்கரனே. *42*

சடங்கறுக் குங்கொலைக் கோனிக நீர்க்குந் தகுதியில்லாச்
சடங்கறுக் குந்தனித் தராகத் தேசிகன் சாரணர்தஞ்
சடங்கறுக் குஞ்சாத் தூர்குகன் சீரருட்டாங் கெழுத்தாஞ்
சடங்கறுக் குங்கொடி யோர்க்கெய் திடாதன சார்ந்துய்தற்கே. 43

சாரங்கத் தானைய னாரணனஞ்சத் தழங்கு கங்கை
சாரங்கத் தானையந் தீர்த்த குகேசனைத் தள்ளருஞ்சீர்ச்
சாரங்கத் தானைய னையாற் கெளியனைத் தாழ்ந்தகுழற்
சாரங்கத் தானையதி காதலானெ னுந்தாரணியே. 44

தாரணிக் குங்கக னத்துக்குந் தாரகன்றண் ணங்குராத
தாரணிக் குங்கக னத்துக்குந் தாரகத்தா ளிறைநேர்
தாரணிக் குங்கக னத்துக்குந் தாரகஞ்சார் குகன்கைத்
தாரணிக் குங்கக னத்துக்குந் தாரகத் தானத்தனே. 45

தானத் தனத்தனத் தத்தெயென் றாடுந்தனிச் சிகியூர்ந்
தானத் தனத்தன யன்றொழுஞ் சீர்க்குகன் றண்குறிஞ்சித்
தானத் தனத்தனந் தண்ணீர் தாற்கந்தண் ணுருத்தோயந்
தானத் தனத்தன நாகத்தன் றோழன்சகத் தண்ணலே. 46

சகசத்தி யானவிந் தெய்த்தடுத் தேற்குன் சடாக்கரத்தின்
சகசத்தி யானந் தனைத்தந் திடாயிளந் தையலர்நே
சகசத்தி யானழுந்தச் செய்திடே லண்டர்தங் களிரா
சகசத்தி யானகொடி சூழ்குகா செழுந்தண் குருந்தே. 47

தண்டையந் தாளகத் தோடுறழ்ந் தண்டர் தலையினிற்குந்
தண்டையந் தாளருளற் கிரங்காய் சத்திதாங் குங்குகா
தண்டையந் தாளத்தனத் தார்கையேற்கு நாதாங் கருதுந்
தண்டையந் தாளரு நெல்லையொத் துள்ளந் தளர்கின்றதே. 48

தளக்கா ரனையகொடுஞ் சூர்க்கொன் றானைசயந் தருகூ
தளக்கா ரனையயிற் றிண்டோட் குகேசனைத் தன்னிகர்குந்
தளக்கா ரனையருட் கொங்கையுண் டானைத்தணிக் கருநோய்
தளக்கா ரனையச்செய் கின்றானைநாடி டிற்சாதலின்றே. 49

சாதனங் கோடியெனக் கூயிடுந் தொண்டர்தங் கட்கண்டுஞ்
சாதனங் கோடித் தயங்குகின் றேனிதுந் தரக்கிகலோன்

சாதனங் கோடிறுத்துச் செய்துளான் றுணைதண் டடத்தெஞ்
சாதனங் கோடிகளி கூர்செந் தூர்க்குகன் றன்செயலே. 50

தன்னந் தனியனென் றெண்ணி னல்லோருணர் சற்குருநா
தன்னந் தனியக் குறத்திக்கு நாயகன் சத்திக்கைச்சித்
தன்னந் தனியற் குருகுங் குகேசன் சரதச்சொல்லோ
தன்னந் தனியர்க் கிரங்காத கோரத் தகையினனே. 51

தகுந்தகுந் தாதித்தெ யென்றாடுந் தோகைத்தனிக் குடைசூழ்ந்
தகுந்தகுந் தாநிலைத் தேசிக னாங்குக சத்தியுறைந்
தகுந்தகுந் தாங்குகளத் தாற்கன் றீந்ததைத் தந்தருளத்
தகுந்தகுந் தாதந்து சொற்சோர் கலாநலஞ் சாதித்திடே. 52

சாதிக் குறத்தியைக் கஞ்சிநொந் தேனின் சாணகருதுஞ்
சாதிக் குறத்தியை யச்செய்திடாய் நகைத்தண் ணிளுஞ்சொற்
சாதிக் குறத்தியைக் கஞ்சற்று நீங்கத் தகைக் கருங்கட்
சாதிக் குறத்தியைத் தோய்ந்த குகா செங்கைத் தத்தையனே. 53

தத்தைய தானத்தெய் யென்றாடி னானுந் தயங்கிடநீ
தத்தைய தானங்கட னீரிற் றாழ்த்த டிந்தகுகா
தத்தைய தானதொண் டரிற்றரித்தா யொண்சதங்கை கொஞ்சத்
தத்தைய தானந்த தேனறுதிக் கூலிதனைத் தரினே. 54

தனைத்தரு கைக்குஞ் சலியாக்குகன் றாட்சற் குருநா
தனைத்தரு கைக்குஞ் சுகாதீதங் காட்டுந்தனித் திற்றசேந்
தனைத்தரு கைக்குநெஞ் சத்தார்க் கெட்டான்றனந் தந்தணைக்குந்
தனைத்தரு கைக்குங் கடிதோய்க்கு நாடகத் தாளினனே. 55

தாளந்தர்க் கொண்டருங் கூத்தியற்று நாதாங் களித்துத்
தாளந்தர்க் கொண்டணித் தோத்திரஞ் சொலிச்சா ரணர்தந்
தாளந்தர்க் கொண்டலின் றிரள தற்றண நத்துகூ
தாளந்தர்க் கொண்டல் சூடிநின் றாங்கொளிர் தார்க்குகனே. 56

தாரா கணத்தைய லார்தனந் தொட்டுண்டு தண்சடிலத்
தாரா கணத்தைய யனாதியர் துயர்த்தள் ளிடச்சூரத்
தாரா கணத்தைய ராற்றொலைக் குங்குகதாங்கு குல்லைத்
தாரா கணத்தையந் தீர்த்தென்னை யாண்டுதயை செய்திடே. 57

செய்யதன் றாளைச் சினைச்சங் குழக்கெழிற் செந்திலெந்தை
செய்யதன் றாளைக் கருதான்சொற் கேட்கைக்குஞ் செல்குகன்சூர்ச்
செய்யதன் றாளையத் தாலுலைந்தே னதுசிந்தை சற்றுஞ்
செய்யதன் றாளைகொ லென்றேங் கற்கண்டு சிரித்தனனே. 58

சிரித்தனந் தானிருக்கக் கொடியோரை யுஞ்சோற் கொல்காச்
சிரித்தனந் தானுயி ரென்றெண்ணி யேங்குந் தியக்கொழியச்
சிரித்தனந் தானை யிரந்தலை யாதருட் செய்துலகஞ்
சிரித்தனந் தாடனல் காய்சிகி யூர்தனிச் சீர்க்குகனே. 59

சீராடுந் தோகை சிகியிருந்துஞ் செழுந்தீத் தருநாற்
சீராடுந் தோகைக் கிசைந்தகுக னைத்தின நெருங்கிச்
சீராடுந் தோகைத் துணைகிலா குன்கொண்கனைச் சிந்தைசெய்யார்
சீராடுந் தோகைக் குலந்தானென் றோருஞ்சிலர் கருத்தே. 60

சிலரைக் கருதித் தியங்காது சிந்தைதெளி தரச்செய்
சிலரைக் கருதித் திறக்கை யில்லாரெனச் சேர்ந்துகுகற்
சிலரைக் கருதிருக் கன்னியொடேத் திற்றிசைக் கண்ணகைச்
சிலரைக் கருதி திளையா நலங்காட்டுந் திருக்கறுத்தே. 61

திருகக் கனத்த கருங்கோட்டுச் செந்தகர்ச் சேந்தனுக்கு
திருகக் கனத்த தண்டார்தங் காற்றளைகொய்த சேயக்கெயினத்
திருகக் கனத்த லுறுங்குகற்காந் தொண்டு செய்திறைஞ்சித்
திருகக் கனத்த னென்னீட நாடருட் சித்தருண்டே. 62

சித்தத்துக் கானந்த நீங்கா திருக்கச் செயற்குனது
சித்தத்துக் கானந்த லைக்கேற்றி டாய்குறத்திக் கெதிர்கெஞ்
சித்தத்துக் கானந்தனிற் றளர்ந்தாய் கிளிச்செஞ் சொலையா
சித்தத்துக் கானந்தந் தீர்த்தகுகா சத்தித்திண் கையனே. 63

திண்ணனை யாண்டலைக் கேதனத் தோட்குகன் செங்கணல்குந்
திண்ணனை யாண்டருளிக் கதிகாட் டியசித் தருணர்
திண்ணனை யாண்டதி லொன்னார்ச் செற்றோன்கொலைச் செய்கையறாத
திண்ணனை யாண்டணு காநெறி சேர்த்திருத் துநனே. 64

திருத்தத் துதிக்கை யிறக்கையென்னுந் துயர்தீர்க் குங்கொலோ
திருத்தத் துதிக்கைக் கயத்தூர் குகனைத் தினங்கருதித்

திருத்தத் துதிக்கைத் திடானெனக் கூறுதல்செய் யுங்கண்டீர்
திருத்தத் துதிக்கை நிகர்தோ ளரியன்ன தீர்த்தரே. 65

தீர்த்தருக் குலஞ்சொற் கேட்டுற்றா லுந்திருக் கனைத்துந்
தீர்த்தருக் குணர்ந்தாலுங் குகேசனைச் சிந்தை செய்யார்
தீர்த்தருக் குறுகண் டரலே கடற்சீ ருலகத்
தீர்த்தருக் குற்றதாஞ் சச்சிதா னந்தஞ் சேரரிதே. 66

சேரலன் காணங் கருதித் துதித்தசொற் றேறியடற்
சேரலன் காணக் கருத்தூடு சென்றனை சிந்துநடுச்
சேரலன் காணந் துடற்கூறி டுங்குக தீயர்களைச்
சேரலன் காணடியே னுய்ய நீயொரு சித்தியற்றே. 67

சித்திக்குஞ் சத்திரத் திங்களுந் தோய்தரு சித்தசனஞ்
சித்திக்குஞ் சத்தியெனக் கீந்திடாய் குறச்சே டியைநே
சித்திக்குஞ் சத்திக்குஞ் சொற்கேட்குஞ் சீர்க்குக தீதிலறஞ்
சித்திக்குஞ் சத்திக்கை யானே குன்றெங்குந் திரியண்ணலே. 68

திரியக் கரத்திரி யாங்குன்ற நாணித்தன் சிந்தையுரந்
திரியக் கரத்திற்ற செண்டா லடித்த செழியனைக்க
திரியக் கரத்திகற் சத்திக் குகேசனைச் சிந்தித்திடார்
திரியக் கரத்திசெய் தூனுண்ண லாதிய தீதினரே. 69

தீதர்நஞ் சிந்தைந் தலையங்க தாதிகொள் சித்தருக்கா
தீதர்நஞ் சிந்தைய னோடிக னீர்க்குக தீரருள்ள
தீதர்நஞ் சிந்தையை நீயிகழேல் கொஞ்சஞ் சீறிடினுந்
தீதர்நஞ் சிந்தையுங் கொண்டுநின் காதன்றுதித் தித்ததே. 70

தித்திக்குஞ் சந்தத்தனத் தார்க ளாதிக்குஞ் சிந்தையழுந்
தித்திக்குஞ் சந்தத்தடங் கடலுஞ் சென்றெய்ததே னருள்சீர்த்
தித்திக்குஞ் சந்தத்தனி நாடகக் குகதே னொல்குறத்
தித்திக்குஞ் சந்தத் தகைத்தோட் கிசைந்தசெந் தெற்றியனே. 71

தெற்றி யணியடற் சிங்காரத் தோட்குகன் செய்யகுஞ்சி
தெற்றி யணியசிறு சடைச்சேந் தன்றெருக்க டொறுந்
தெற்றி யணியடர் செந்தூரனெனன் னத்தினஞ் சொல்லிடார்த்
தெற்றி யணியதியீ தெனக்கூற்றன் சிதைக்கை யுண்டே. 72

சிதைக்கஞ்சி யறஞ்செயத் துணியா ரிலிற்சென் றிரக்குஞ்
சிதைக்கஞ்சி யருந்திடேஞ் செலிற்சூகை யிற்சிற் றுயிருஞ்
சிதைக்கஞ்சி யந்தித் துதியெள்ளி டேங்கதிச் சீரருளாய்
சிதைக்கஞ்சி யந்தணன் சொற்சூழ் குகாநறுஞ் செச்சையனே. 73

செச்சைக் கணியுருக் கெஃகார்ந்த தோட்குகன் செந்தினைசூழ்
செச்சைக் கணியுருக் கொண்டோர் குறத்தி சிறியகொங்கைச்
செச்சைக் கணியுரு குங்குரு நாதன் செழியனறி
செச்சைக் கணியுருத் துங்காலெற் றோய்தருஞ் சித்திகளே. 74

சித்திரந் தந்தக் கரிநடைச்சந் தஞ்சொல்சீர் கொடுத்துஞ்
சித்திரந் தந்தக் காணநொந் தேநின் றிருச்சரணே
சித்திரந் தந்தக் கநேரிலகா யயிற்செங் கைக்குகா
சித்திரந் தந்தக் கரந்தோய்ந் துளர்டொழுந் தேசிகனே. 75

தேசிக னாகியற் சீர்க்குகன் செஞ்சடைச் சித்தருக்கோர்
தேசிக னாகியக் குங்களிற் றின்றுணைச்சேய செக்கர்நேர்
தேசிக னாகியஞ் சுஞ்சிகி யாதிகொள் சீலவென்னைத்
தேசிக னாகியலை யச்செய்தா னினித்தேற் றலென்றே. 76

தேற்றந் தரத்தடியேன் சிந்தையுய்யத் திருத்திநிசித்
தேற்றந் தரத்ததிற் சிக்காது காத்தருள் சீதரனார்
தேற்றந் தரத்தாறி சீர்க்குகா தொண்டு செய்தலறாத்
தேற்றந் தரத்தன் னிலைத்திரு நீறருள் செங்கையனே. 77

செங்கன கத்தைய நாகந் தரித்ததினி நிலத்தினா
செங்கன கத்தையன் றென்குறுக்குத் துறைச்சேந்த னென்னோ
செங்கன கத்தைய கேயூர்த் தோட்குகன் சீர்ச்சிகிக்காற
செங்கன கத்தையல் கோனாட லென்னச் சிறக்கின்றதே. 78

சிறக்குந் தனத்தில்லை நெல்லை யருணைச் சிகரிதொறுஞ்
சிறக்குந் தனருட் குறித்தார்க்கென் னீதிகொ றேகத்திலோர்
சிறக்குந் தனகத்துந் தோயானிற் சேயெனுஞ் சொனல்கிச்
சிறக்குந் தனக்கல னீந்தகுகா சித்தர சேகரனே. 79

கரக்குஞ் சரத்தைய யனெடியோ னெயிற் காதகரைக்
கரக்குஞ் சரத்தையன் கொண்டாடுஞ் சீர்க்குக கார்குழற்ற

கரக்குஞ் சரத்தையணை யுநின்றோ ணிரைக்காத லுற்றேன்
கரக்குஞ் சரத்தையழித் தார்க்கு நீர்தந்து காகடிதே. 80

காகாகுகாக் கைக்கைக் கொக்குக்கைக் கோக்குக்கை கக்கக்கக்காக்
காகாகுகாக் கைக்ககிக் கைக்கக் கைக்குகக் குகுகோக்
காகாகுகாக் கைக்குக்கூ கூகிக்கீக் கைக்கக்கா கைக்கொக்கக்
காகாகுகாக் கைகிக்கா தேக்காக் கைக்கைகாக் கைக்குக்கே. 81

காக்கைக் கரியதன் றோழனைச் சூழுங் கடலுலகங்
காக்கைக் கரியன செரலரற்றற குகனை கதிநெறிக்கட
காக்கைக் கரியனை யார்க்கரு ளானைக் கருதிடனீங்
காக்கைக் கரியதொன் றுண்டோ சகலகலை யணங்கே. 82

கலையணங் குக்குரை கூறுந்தொன் னூலுடைக் காரணனைக்
கலையணங் குக்குணந் தீர்த்தாள் குகேசனைக் கராதுயில்சீர்க்
கலையணங் குக்குட் கேதனத்தா னைக்கருங் குயிலொக்
கலையணங் குக்குகந் தானையெந் நாளுங் கருதுநெஞ்சே. 83

கருங்கோட் டுயர்த்த காடக்குங் குகன் காஞ்சனங்
கருங்கோட் டுயர்த்த காடற சூரிகலக ரக்கையின்
கருங்கோட் டுயர்த்த காக்குழ லியர்கா தலிலயோ
கருங்கோட் டுயர்த்த கரனற னாசை கதிக்குயிரே. 84

கதிக்குந் தனத்திரு கன்னியர் நாயகன கத்துதகர்க்
கதிக்குந் தனத்திருங் குன்றங்க ளாளகுகன் காசிலருட்
கதிக்குந் தனத்திருத் தாளாசை தோய்ந்த கருத்திலியக்
கதிக்குந் தனத்திருளூற் சாகச் சீருங் கசக்கின்றதே. 85

கசங்கத் தரங்கத்தை நீத்தெழுந்தான் றங்கை கைக்குழந்தை
கசங்கத் தரங்கத்தை யாஞ்சூர்ச் செற்றோனுளங் கரந்துகல
கசங்கத் தரங்கத்தை யந்தீர்த்த சீர்க்குகன் காதிலிடு
கசங்கத் தரங்கத்தை யரருரத் தாடிய காலினனே. 86

காலியங் கண்டத் தனையற் கொன்றானன்னர் காசினிகொள்
காலியங் கண்ட சரீரந் தந்தாண் டுகலந் திலையெக்
காலியங் கண்டழைக் குங்காட்சி நல்கல் கருத்தழிந்தேன்
காலியங் கண்டர் தொழுங்குக னேயருட் காங்கெயனே. 87

காங்கே யனையச்சி தன்களி கூரக்கன் னற்நிறைக்
காங்கே யனையயி லாங்கைக் குகேசன் கணியுருக்கொள்
காங்கே யனையடிக்கி யான்றொண்டு செய்தல்கணைச் சிலைக்கைக்
காங்கே யனையடர்த் தோனன்ன தீரரைக் காட்டுகென்றே. 88

காட்டா தனசலசத் துந்தியான் கண்கலங் குறுநி
காட்டா தனசலங் கோடியுள் ளாய்தினைக் காட்சிதருங்
காட்டா தனசலந் தீர்க்குங் குகாநிற் கருதெனக்குக்
காட்டா தனசலஞ் சூழுல கோர்சிலர் கண்டதுண்டே. 89

கண்டதுண் டஞ்செய்ய துத்தித்தனத் தர்கனி யிதழ்ச்சொற்
கண்டதுண் டஞ்செய்ய னங்கனுக்கெய்த் தன்னகாதை யொன்றாற்
கண்டதுண் டஞ்செய்ய றுகுக்கிளைய கந்தா கடுஞ்சூர்க்
கண்டதுண் டஞ்செய்ய யிற்றோட் குகாசற் றுகைதந்திடே. 90

கைதந்தை யாய்துணை யாதிய சுற்றக் கடற்கடக்கக்
கைதந்தை யான்னற் கோதிடற் கூறுதிகா துதுதிக்
கைதந்தை யானையைக் குன்றொடட் டாய்கலைக் காரிகைதோ
கைதந்தை யாங்குக ஞானானத் ததண்கடைக் கண்ணனே. 91

கடைக்கண் ணருளடிக் கொண்ணாயொத் தேனண்டர் காணக்கடற்
கடைக்கண் ணருளத்தொடு கூறுங்கீர்த்தி கருதச் செய்துன்
கடைக்கண் ணருளதிற் றோயத்தாள் குகாநல்கு கையிலாதங்
கடைகண் ணருளலுண் டென்றேகி யேகியென்கா னொந்ததே. 92

கானங் கடந்தகை யாழத்திறத்தான் சொற்கருதி யெண்ணில்
கானங் கடந்தணியேனலிற் கன்னியைக் காண்டற் குள்ளொல்
கானங் கடந்தரு சூர்ச்செகுத் தோங்கயிற் கைக்குகனெக்
கானங் கடந்தனுண் ணினறாடல் செய்துகளிக் கின்றதே. 93

களிக்குஞ் சிறையளிக் கூட்டங்குன் றாச்செச்சைக் கண்ணியனெக்
களிக்குஞ் சிறையளிக் கண்ணார் குகேசன்கடி கொளைந்தார்
களிக்குஞ் சிறையளிக் காட்டுங் கடலின்றகண் டிகழிக்
களிக்குஞ் சிறையளித் தேங்கச்செய் தானகைக் கலனுகுத்தே. 94

கலங்காத கண்டநிலை யேகுக னெனுங்கா றுணர்ந்துங்
கலங்காத கண்டனிச் சத்தியைத் தோகையைக் காணலெய்தேங்

கலங்காத கண்டந் தறையாதி நன்குணர்கைக் கிளிசொற்
கலங்காத கண்டர் கைக்கா சேற்றுழல கொடுங்கா சடர்ந்தே. 95

காசாசை யைத்தணி தழார்க்கெஞ் சுநர்கண் ணருள்செங்
காசாசை யைத்தணி கைக்கிரியா தியகற் கிறைகூக்
காசாசை யைத்தணி யலாதருள் குகன்காட் டழனோ
காசாசை யைத்தணி யானென் னிலுய்தலிக் காலத்தின்றே. 96

காலத் தினையட் டருந்தெயி னக்குலக் கன்னிசிறு
காலத் தினையட்ட யோகத்த ராயுங் கருதுகுகன்
காலத் தினையட்ட நாதனுக் கோர்சொற் கழறுநலங்
காலத் தினையட்ட நெஞ்சத்தர் தேறுங்கணக் கதன்றே. 97

கணக்கா ரரிநிறை கூதாளத் தானைக்கடற் றுயிற்செங்
கணக்கா ரரிக்குச் சுடராழி நல்கிய கைக்குகனைக்
கணக்கா ரரியகுன் றுள்ளானை நாடிக் கருத்துருகுங்
கணக்கா ரரிலடி யேனுற நாடல் கலிக்கிடரே. 98

கலிக்குள் சத்தியஞ்சொல் கைக்குநாடுங் கசட்டு நெஞ்சீர்
கலிக்குள் சத்தியங் குந்திருக் கூத்தை கருதிடிலார்
கலிக்குள் சத்தியங் கங்கொள லாகுங்கடை யெனச்சொல்
கலிக்குள் சத்தியஞ் சத்தியங் கைக்குகன் காரணத்தே. 99

காரணத் தாலுளத்தீரரிக் காரணற் காற்ற னல்கோர்
காரணத் தாலுடைச் சீலரிற் சீருற்ற காட்டுகுகா
காரணத் தாலுழித் தீதற்ற காயெனுட் காட்சியினீ
காரணத் தாலுதித் தாயெனக் கூறுசொற் காத்தருளே. 100

செய்யுந் தனங்காசுஞ் செய்யிழையாருஞ் செறியச்
செய்யுநெஞ்சுந் தேறியுய்யச் செய்யுங்காண் - செய்யைந்ததுஞ்
செய்யகுக னந்தாதிச் செய்யநிரோட்டத் தொர்தொடைச்
செய்யுளொரு நூற்றின் செயல்.

முற்றிற்று

21

கலிவிடந்தாதி

21

கலிவிடந்தாதி

தென்குருகை வயிணவன் முன்சிறைவிடந் தாதிப் பனுவ
னன்குரைத் துன்னடியவர்தந் நடுவிருக்கை நிசமாகின்
மென்குதலை யேன்சொல் கலிவிடந்தாதி வீண்போமோ
வென்குருவாகிய முருகா யானைமுகற் கிளையோனே.

கடல்சூழ முலகோரு மெனையுன்ற
னாளென்று கழறச்செய்தா
யிடர்நீடு மிடியா லிளைத்தேனெனக்
கேதிளப் பஞ்சொலாய்
யுடலாதியைத் தந்தபோ தொப்பு
நின்னெஞ்ச மொல்காததோ
வடபாவி முருகா வுனருளிப்படிப்
போன தநியாயமே. 1

ஆயுந் தமிழ்ப் பாட லறையாத
சிலருக்கு மருள்செய் தநீ
யேயுந் தொனிச்சந் தமொழி வேனை
மிடியாலிளைக் கச்செய்தாய்
தோயும் புகழ்க்கீதோ ரழகென்
றுளாயோ துறந்தோர்களைப்
பாயுந் தகர்க்கோர நெடுமாவி
லேறும் பரஞ்சோதியே. 2

சோதிப் பெனும்பொய்த் தொழிற்கொண்டெ
னெஞ்சைத் துயர்ச்சாகரத்
தேதிக்கிலா மற்றவிக்கச் செய்கின்றா
யிதேற்றங் கொலோ
வாதிக்கு மூடர்க்கு நானொல் கலாமோ
வரந் தந்திடாய்
காதித் தினுந்தீயர் காணாத
ஞானக் கழற்கந்தனே. 3

கந்தக் கடம்பாதியைப் போலு
மென்றன் கவின்பாடலை
யந்தத் தினத்திற் புகழ்ந்தோது
நின்வா யடைத்திட்டதோ
விந்தக் கலிப்பேயை வெல்லுந்
திறன்சற்று மில்லாய் கொலோ
குந்தச் சிகிக்காவலா குன்ற
முற்றுங் கொளுந்தெய்வமே. 4

தெய்வத்தை நம்பத் தகாதென்று
பல்லோர்சிரித் தேசவென்
மெய் வற்றிடக் கண்டிருந்தாய்
கலிக்குன் கைவே லஞ்சுமோ
பொய்வக் கணைச்சொற் புகன்றாயி
துண்மைப்புகழ்க் கானிகாண்
சைவக் கொழுந்தே யெழுத்தா
றுணர்த்துந் தனிச்சீலனே. 5

சீலங்க ளில்லார் தெருத்தோறு
நாளுந்திரிந் தெய்த்துவீண்
காலங் கழிக்கக் கலிப்பேய்
வெருட்டக் கனங்குன்றினேன்
வேலங் கையோ டின்றோ
ராடற்செய் தென்றுன்ப வேர்கெல்லிடாய்
மாலங்க ணல்குந்துணைப் பேதைமார்
வெளவுமார் பத்தனே. 6

பத்தர்க் கிரங்குங் குணத்தைய
வென்னப் பராவுற்றநா
னித்தத்துறக் கண்டி ருந்தா
யெனைக்கிள்ளை யென்றிட்டதோர்
சத்தத்தினா லெய்துறுஞ்சீர்
மிடிப்பேய் தனக் கஞ்சலோ
சித்தர்க்கு முத்தர்க்கு மாதாரமா
நின்ற செவ்வேலனே. 7

வேலாயுதத் தெய்வமே மிக்க
        தாமென்று மெச்சிக்கொளார்
போலாக மெய்த்துக் கிடக்கப்
        புரிந்தாய் பொருட்சீலர்தம்
பாலாடலொன் றென்னி நித்தஞ்
        செய்தானிற் பழிப்பெய்துமோ
வாலால முண்டார் நுதற்கண்டரும்
        பால னா மையனே. 8

ஐயம் பெருத்துத் தவிக்கின்ற
        நாயே னகத் துற்றுநீ
மெய்யன்பருக் கோதுமா றோதியுந்
        தீயர்வீ டெங்கணும்
பொய்யந் தரங்கத்த ரிற்போத
        நீரப்பொருட் டந்திடாய்
வையஞ் சுமக்கும் பொருப்பெங்கு
        நின்றாடும் வாழ்வாளனே. 9

வாழ்வாயிரத் துக்கு முயர்வான
        மெஞ்ஞான வழியைத்தொடாத்
தாழ்வாளரிற் செம்பொன் விழையுங்
        கொடுந்தீமை தழையச்செய்தா
யூழ்வாதனைத் தொந்த மெனினு
        தவிர்த்தாள வொண்ணாததோ
வேழ்வாரமு தன்னவா மென்றி
        னடுவைகு மெழில்வேலனே. 10

அறுசீர் ஆசிரிய விருத்தம்

எழிலித் திரளைத் தருவினத்தை
        யீனர்கரங் கட்கிணை யோதிக்
கழியக் கலிநோய் தனைவிட்டாய்
        கவலைக் கடலினிடைப் பட்டேன்
பொழிலிற் றிகழ்பன் மலைதோறும்
        போய்நின் புகழே புகன்றுய்வான்
விழியில் பொழிபேரரு ணல்காய்
        விரைப்பூங் கடம்பு மிலைந்தோனே. 11

மிலையோ வேம்பு முடித்ததிலும்
        வேடனுருக் கொண்ட விர்ந்ததிலுங்
கலையா ரூமை யாயதிலுங்
        கணியா நின்ற காட்சியிலுந்
தொலையா வறுமைக் கனலவித்
        தென்றொழும்பு கொளலோர் சுமையாமோ
மலையாறி ரண்டிற் றிகழ்தோண்மேல்
        வடிவே லணிந்த வானவனே. 12

வானும் புவியு மதிக்கு நலம்
        வலிதிற் றருதுமெனக் கூறித்
தேனு மமிழ்து மனையகவித்
        திரண்மிக் கணிந்துஞ் சிறியேனை
யூனு நுகருங் கொடியோர்பா
        லுளநொந் திரக்க விடலாமோ
கோனுங் குருவுங் கடவுளுமாங்
        குமரா வமரர் குலக்கொழுந்தே. 13

குலவு மதுரத் தமிழ்க்கவிதை
        கொழிக்குந் திறமை கொடுத்துள நீ
யிலவிற் கடையாங் கயவரிடத்
        திரந்து மறுக விடலாமோ
புலவர் பெருமா னெனுந் திருப்பேர்
        பொய்யா யினதோபுகன் றருளாய்
கலகந் தவிர்ப்பான் மதுரை நகர்க்
        கழகத் தமர்ந்த கான்முளையே. 14

கானக் குறத்தி மணவாளா
        கனகநகர்க் கோன்மகள் கணவா
ஞானக் குரவா வெனத்தினமு
        நவிலச் சலியா நன்னாவு
மீனத் தொழிலோரிட மிரந்தா
        லிளப்ப முனக்கே யெனல்பிழையோ
வானத் தமரரினம் பரவ
        மயின் மீதேறி மகிழ்வானே. 15

மகிழ நறும்பூந் தொடையலணி
மருமத் தொருவன் மகுடநிகர்
நகில மடவாரினுங் கொடிதா
நவைசால் பசும்பொன் னனிவிரும்பி
யகிலத் தலைய விடலாமோ
வடிமை நினக்கே யல்லேனோ
முகின்முன் னடிக்கு மயிலூரு
முருகா திருமான் மருகோனே. 16

மருவார் துளவத்தினன் பதமே
வணங்கு மொருவன் றனைவலிதன்
றிருகால் விலங்கிட் டரியதமி
ழேற்றா யெனக்கே னிரங்குகிலாய்
திருநீ றணியாப் புலைநெறியோர்
தெய்வத் தடையாற் றிகைத்தனையோ
முருகா வொருகா லனைத்தினும்வாழ்
முதனா னெனவும் மொழிந்தனையே. 17

மொழிந்த மொழிபோ னடத்திமகிழ்
முறையுன் யுளத்தி லுளதாகி
விழிந்த மனத்துக் கயவரிட
மிரந்து திரிந்திங் கிளைப்பேனோ
பொழிந்த மதுரத்தமி ழுணரும்
புலவர்க் கருளும் புகழீதோ
குழிந்த விழிமாருதி யொருபேர்
கொடுக்கப் புரிந்த குகவேளே. 18

வேளைக் கருள்வா யெனத்துதித்து
விரும்புந் தமியேன் மிகமகிழ
நாளைக் கெனுஞ்சொற் பகர்ந்துநெடு
நாளாகியு மேனடத் திலையோ
தேளைப் பொருவுமிடி நோயைத்
தீர்த்தா யெனினுந் திகைத்தயரேன்
காளைப் பருவக் குமராநின்
கருணைப் பெருஞ்சீர் காண்பரிதே. 19

காணங் கருதிப் பலர்வாயிற்
கடைதோ றலைந்து கலங்குதலா
னாணம் பெருத்தே னுனையதுதா
னணுகா ததுவோ நாடொறுநின்
றோணம்பிய வென்மன வீரந்
துலங்கா தொழியத் தகுங்கொல்லோ
மாணம்புயத் தோன்றனைப் புடைத்து
மறைச்சீர் விளைத்த வலியோனே. 20

கலிவிருத்தம்

வலியதுன்ப வலைப்படக் காணு மென்
கலியை வெல்லுங் கடைக்கணில் லாய்கொலோ
புலிமுன் னாட்டிற் புலர்ந்தது போதுமொண்
குலிச னல்கிய குஞ்சரி பாகனே. 21

பாக சாதன னாதிய பண்ணவர்
சோக நீக்குந் தொழின் மறந்திட்டதோ
வாக மெய்த்த தறிந்தி லையோமயில்
வாக னத்தின் மருவு சிங்காரனே. 22

கார ணத்தைக் கழறிய நின்னருள்
சீர ணப்படச் செய்பிழை யுள்ளதோ
நார ணன்றகை நல்கலிவ் வண்ணமோ
வாரணக் கொடி யேந்திய வள்ளலே. 23

வள்ள லந்தகை மன்னிய நின்னுளந்
தள்ள ரும்கலி யைத்தரத் தக்கதோ
புள்ள லம்பு கடம்பணி புண்ணியா
வெள்ள நீர வெனக்கரு ளீகையே. 24

ஈகை நாடு மெனக்குமிவ் வின்னறீர்த்
தோகை நல்கிலை யுன்மன மென்னது
பாகை நேர்தமிழ்ப் பாவிழை கின்றதேன்
வாகை வேற்கை மலைப்பெருந் தெய்வமே. 25

தெய்வ மன்ன சிலரு முன்செப்பிடா
மெய்வ ழக்கை விளம்பிடச் செய்தநீ
கைவறக் குங்கலி சுடக் கண்டதேன்
சைவ நாதன் றழல்விழிப் பாலனே. 26

பால றாத்தமிழ் வாயருட் பாவலன்
போல வாழும் புகழ்விழைந் துள்ளநா
னீல னாற்ற ளரச்செய னீதியோ
சூல பாணி தொழுங்குரு நாதனே. 27

நாத னென்றுனை நம்பிலர் போலநான்
போத நொந்து புலம்பிட லாகுமோ
காதல் கொண்ட கருத்தறி யாய்கொலோ
சீத ளந்திகழ் செங்கடம் பாரனே. 28

ஆர ணங்க ளறிந்தறி யாதநின்
சீர னந்தந் தெரிந்தவர் சேருமோர்
பேர ணிந்தும் பெருங்கலிக் கெய்த்துளேன்
சூர னஞ்சத் துரந்த திண்டோளனே. 29

தோள னேகஞ் சுமந்தனை யேயெனை
யாள வல்லதவற்றி லொன்றில் லையோ
மீள மீள மிகுகலிக்கென் செய்வே
னீள வேல்புனை நின்மல மூர்த்தியே. 30

அறுசீர் விருத்தம்

மூர்த்தி யாயிரங் கோடியுண் டவற்றுள்வேன்
முருகனே யுயர்வென்னுங்
கீர்த்தி வேட்டுனைக் கருதின னெனைத்தமிழ்க்
கிளி யென மிகச்சொற்றாய்
வார்த்திகக் குறிதோன் றியுநன வின்முன்
வந்திலை மயிலூருங்
கார்த்தி கேயனே வரிலெனைச் சூழ்கலி
கருக்குமென் றஞ்சேலே. 31

அஞ்ச நேர்நடைப் பாவையர்க் குருகலி
னாடக மயன்மீறிப்

பஞ்ச பாதகர் மனையினு மிரந்துழல்
பருவர லொழியென்னக்
கெஞ்சல் கேட்டி லையோசெவித் தொகைமிகக்
கிளர்ந்தன பழுதேயோ
குஞ்ச ரானனக் கடவுளுக் கிளையவேற்
குருபரக் கோமானே. 32

மானியார் விடும்முடங் கலில்வரைந்துள
வாசக மதித்தாயென்
பானிறத் தமிழ்ப்பனுவல்க ளனந்தமும்
பழுதென விகழ்வாயோ
நானி லத்தின ரறியவோ ரற்புத
நடத்திடா விதமி யாதோ
வேனி லானுள நாணுறச் சிகிமிசை
விளங்கிய வேல் வேளே. 33

வேளை யீதெனக் குறித்து மவ்வாறருள்
விளைத்திலாய் மிகநொந்தேன்
றாளை நல்கலு நிசங்கொலென் றையுறுந்
தமியன்மேற் றவறுண்டோ
கோளை வெல்வலி யுனக்கிலை யென்பவர்
குழுவையு மதிக்கில்லேன்
வாளை நேர்விழிக் குறமகள் கவணெறி
மலர்க்கைதொட் டுவந்தோனே. 34

வந்தடைந்த பேராசைக ளனைத்தையு
மறுத்திடா துளங்கொண்டு
கந்த நாயகன் றிருவரு டருமெனக்
கருதிமிக் கிறுமாப்பே
னொந்த வேளைகண் டருள்செயா யாகின்
முன்நுவன்றமை பிழையாதோ
செந்தகைத் துவர்க்கிரி யெனத்தொண் டர்தந்
திருவுளத் தமர்வானே. 35

அமரர் காவல னாதியர் பெறலரு
மநுபவ மளித்தாய்நின்
சமர வேற்படைப் பூசனை மறக்கிலன்
றமநிய மயலெய்திப்

பமர நேர்விழி யாரடித் தொழும்புசெய்
படிறரிற் றவிக்கின்றேன்
குமர தேசிகனே யருட்செயன் மிகக்
கொடுத்தருள் விரைந் தின்றே. 36

இன்றிரா விலோரா டல்செய் குதுமென
வியம்பியபடி நண்ணி
னன்றி லாவிடி னான்செயற் பாலதெ
னவின்றுள பலமாற்றத்
தொன்றி தாகுமென் றுன்னலே யாயினு
முடலிளைத் துழன்றேன்காண்
வென்றி வேற்படைக் குருபரா வின்னமும்
வெருட்டுதன் முறையன்றே. 37

அன்று தொட்டென துளத்துள் வந்துரைத்தவற்
றனந்தமெய் யாகாவாற்
றின்று சொற்றலை மதித்திடா விதமுணர்ந்
தியைந்தபேரு டையான்பாற்
சென்று கூறலும் பிழைபடி லென்செய்வேன்
றிருவுளக் குறிப்பேதோ
குன்று தோறுநின் றாடிய முருகனே
குறைபொறுத் தருள்வாயே. 38

அருளையே மதித்தல மருந்த மியனே
னகமலரினு மம்பொ
பொருளை நாடியும் புண்படத் தகுங்கலி
புணர்ந்திடச் செய்தாயே
யிருளை மாயையை வினையினைத் தணந்துவீட்
டிசைத்திட லெவ்வாறோ
குருளைநாய்க் கருள்சுரந்த மாமு னிக்கருள்
குரவனாகிய கோவே. 39

கோவை வாயிதழ்ச் சிறுமியர் மயலினுங்
கொடியபொன் மருளெய்திப்
பாவை நல்கிமிக் கிரந்தனன் றிருவருள்
பழுத்திலாய் பலமாந்தர்

நாவை யேசவுந் தூண்டினை யென்செய்வே
    னலஞ்சிறி தருளின்னே
காவை யாண்டுவப் புறத்தகு பலவிழிக்
    கடவுளர்க் கருள்சேயே. 40

அறுசீர் ஆசிரிய விருத்தம்

சேயமலர் முகமாறுந்திர ணெடுந்தோ ளீராறுஞ்
    செழும்பொற் பூவே
யாயதிருவடி யிரண்டு மவிர்தரமுற் பிறப்பனும்வந்
    தாண்ட துண்டே
னீயறைந்த வண்ணமிந்நா ளிரவில் விளையாடி
    யருணிறைக்க வேண்டுங்
காயக நெஞ்சின ருணராக் கந்தனே
    மயிலூருங் கடவுளானே. 41

கடவுளர் பற்பலர்க்கு மொருதலைவ னாகிய
    பெருமைகவி னப்பெற்றாய்
திடமிகு மெய்யடியவரைப் பலவாறு
    சோதனைகள் செய்யலாமோ
புடவியிற் பொய்ப்பொருள் வழங்கற் கித்தனைபா
    டெனைப்படுத்தப் போமோ சொல்லாய்
நடனமயிற் பரியேறுங் குமர குருபர
    முருகாநல மீதன்றே. 42

அன்றுமலைக் குவட்டேறி யுருண்ட தினத்
    தெனைப் புரந்த தகிலந் தன்னிற்
பொன்றுதலிற் கொடிதாய மிடி நோயால்
    வருத்த வென்றோ புகன்ற சொற்க
ளென்று மெய் யா மெனக் கருதி யிடைந்துள மெய்த்
    தொண்ட ரெவ ரிருந்தார் சொல்லாய்
மன் றுடையார் களிகூர மறை முடிவைப்
    பகர்ந்த கனிவா யுள்ளானே. 43

உள்ளபடி யுனைக்கருதிப் பலவாறு பரதவித்து
    முலகம் தன்னிற்
கள்ளவிழ் பூந்தொடைய னிகர்கவிப் பனுவன்
    மனிதருக்கே கழறுவாரு

மெள்ள மிடிக்கனற் சூடுண் டிடைகின்றே
　　னிவ்விளப்பமெவர்க் கோசொல்லாய்
துள்ளரி மாமுகம் பலவுந் தோள்பலவு
　　மொருமொழியாற் றொலைத்தகோவே. 44

கோவின் முற்றுங் குறிஞ்சியெனுங் குறிப்புணரு
　　தமியேற் மிக் கொடுமை செய்யு
நீவிதிநூற் கடவு ளரிலொரு வனெனப்
　　பரவுநர்க்குநினை விற்றோன்றி
யாவி யுய்யத்தக்க பரகதி யளிக்கை
　　நிசமாமென் றறையலாமோ
காவியுஞ் செச்சையுங் கடம்பும் புனைவானே
　　யாறிரண்டு கரத்தம்மானே. 45

மானுதவு மகளி ருந்தவித ணருகி
　　லொருவேங்கை மரமாமைந்தா
யானுனக் காளான துண்மை யெனைமிடியா
　　லிளைக்க விட்டா யெனதுபாடற்
றேனுனது செவியி னுக்குக் கசப்பாமோ
　　கீரனன்று செப்புமாறிங்கு
கூனுதிரங் கலந்துள பச்சரிசி பெய்யும்
　　புலைப்பூசை யுரைத்திலேனே. 46

உரைத்திடுதற் கரிய பைம்பொற் செங்கலொரு
　　புலவனுக்கன் றுதவும்பெம்மான்
பரைக்கு அருளுமிள மதலா யென்னளவு
　　நீ கொடுமை பண்ண வேண்டாங்
கரைத்துருகு நெஞ்ச மிலேனா யினுமென்
　　கவிச்சுவையைக் கைப்பென்பாயோ
விரைக்கம லாதன னெழுத்தை நின்றிருத்தா
　　ளழிக்குமென்கை விளங்கச்செய்யே. 47

செய்ய ரியபெருந் திருக்கூத் தனந்தம்
　　விளையாடி நின்றாள்சேரும் பெட்பால்
வையகமும் வானகமு மதிக்கு நலங் கருதி
　　மிகவழுத்து மென்னைப்

பொய்யர் மொழிநம்பி மனம்புண் படப்பாழ்
மிடிக்கனலாற் புலர்த்தலாமோ
பையரவின் மாய னெனப்ப ரதமிடும்
பசுந்தோகைப் பரியூர்வானே. 48

வானாட்டுப் புட்தேளிர் மகிழ்கூர
மண்ணுலகின் வளங்கண் டிந்த
வூனாரு முடலொடு நின்றிருத் தாளுட்
கலக்குநல முன்னுமென்னை
மேனாளைக் கனல்போலு மிடிநோயாற்
றளரவிட்டுவிட லாங்கொல்லோ
தேனார் தண்டமிழ் முனிக்கோர் பொருளுணர்த்துங்
குறியவிர்ந்த செங்கையானே. 49

செங்கையிற் பொன்னரிய தமிழ்ச்சீ ரினுமே
லாயதென்றோ திகழ்வெண்பூவிற்
றங்கை மகிழ்கவிதை நலம்பெறக் கொடுத்து
மிடிநோயாற் றளரச்செய்தாய்
கொங்கை மருப்பாற் பொருமென் குஞ்சரத்துக்
கினியானே குறவரேனன்
மங்கை புணர்மண வாளாவுனைப் புலவோர்
வணிகனென்கை வழக்கின் பாற்றே. 50

வேறு – அறுசீர் விருத்தம்

வழக்கினுக் கடங்கே னென்ன
மறுத்தனை யாயி னின்பான்
முழக்கு பேராண்மை யுள்ளார்
மூவுல கிடத்து மில்லை
யுழக்கும் வெங்கலிப்பேய் நீத்துள்
ளுறுதி தந்தருள வேண்டுங்
கிழக்கெழும் பரிதி போலுங்
கிளரொளிக் குமர வேளே. 51

வேளினைச் சமனை நீத்து
விரிஞ்ச னூர்க்கனுப்பா துன்பொற்
றாளினிற் கலந்தா ளென்னத்
தமிழ்கொடு துதித்த வென்னைக்

காளிருட் குழம்பு போலுங்
கலியினாற் கவற்ற லாமோ
வாளிணைக் கருங்கட் கான
மறத்தி கைம்மாத்தின் றோனே. 52

மாத்திரைப் போதுன் பொற்றாண்
மறப்பினு வருந்து நெஞ்சு
டாத்திரக் கலிச்சூ டோர்பா
லழலெனத் தழைய லாமோ
பாத்திர மல்லே னாகிற்
பலவிதம் பகர்ந்த தேனோ
தோத்திரக் கிளியைத் தோளிற்
சுமந்திடச் சலியாதானே. 53

தானெனு நிலையி னின்று
தமிழ்கொடு துதிக்கு மென்னை
நானெனு மகங்கா ரத்தோர்
நகைப்பதுஞ் சகிக்கின் றாயே
ஏனெனக் கிரங்கு கில்லா
யிசைத்தவா றியற்ற லென்றோ
மீனெனும் விழித்தா யான
வேல்புனை விளையாட் டானே. 54

ஆட்டருந் தவத்தோ ருய்வா
னமர்ந்துல கனைத்துஞ் சூழ்ந்தாய்
பாட்டவா விருந்த வண்ணம்
பசும்பொனே னுதவு கில்லாய்
கேட்டவா யலுத்த தந்தோ
கீழ வரென நாணாம
னாட்டலைந் திரந்திட் டாலு
நல்குநர்த் தடுக்கின் றாயே. 55

தடுத்த வாளரவே யென்னத்
தமியனேன் றயக்கக் கண்டுந்
தொடுத்த பாட்டனந்தந் தோளிற்
சூடியுந் துயர்தீர்த் தில்லா

யடுத்தவர்க் கருளும் பான்மைய
யத்தனை போலு மந்தோ
படுத்த மான்மருகா விண்ணோர்
படைக்கொரு பதியாஞ் சேயே. 56

ஆஞ்செயல் பலவு மொவ்வோ
ரருந்தமிழ்க் கவிதை கொண்டு
தாம்செய லுடையா ராண்மை
தருக வென்றிரந்த வென்னை
வேஞ்செயற் கலியால் வாட்டல்
விகிதமோ விலக்கி யாள்வாய்
சாஞ்செய லொழிந்தோர் போற்றுஞ்
சரவணந் தர வந்தோனே. 57

வந்தியர்க் குலக மன்னர்
வழங்கு புன்மாழை தானு
நொந்திடும் ததிகண் டீயு
நுண்ணிமை இல்லா நீயோ
மந்திர முடிவை நல்கி
வருபிறப் பொழிப்பா யந்தோ
விந்திரன் மருகா வேற்கை
யிறையவா விரங்கு வாயே. 58

வாயச மனைய கள்வர்
மாதவப் பயனென் றுள்ளுந்
தீய பொன்விருப் பிலேனைத்
தினமதே நினையச் செய்தாய்
நீயருள் கருணை யீதோ
நிசம்பொய் போனிலவ லாமோ
மாயவன் விழிக ளீன்ற
மகளிரார் மகிழும் வாழ்வே. 59

வாழ்வெனக் கனந்த மீந்து
மாழையின் பிணக்க மென்னுந்
தாழ்வினை வருத்தி வீணே
தயங்குறக் கண்டா யந்தோ

வேழ்வகைப் பவந்தீர்த் தாள்வாய்க்
கிதுவு மோரியற்கை கொல்லோ
வீழ்வொருங் களிப்போ னாகி
வெற்பினந் தொறு நின்றோனே. 60

கலித்துறை

நின்ற தாவரத் தினைக்கொலை செய்தலு நெறியன்
றென்ற ஞான மிக்கீந்தனை யீனரு மெய்தும்
பொன்ற ராவித யாதெனக் கேனதுன் பொய்மை
நன்ற தென்றிடப் புரிந்தது வள்ளி நாயகனே. 61

நாயை நேர்மனக் கடையனேற் கத்தனை நவின்ற
நீயை யோமிடிக் கனலிடை வெதுப்புத னெறியோ
தீயையேந் தியசிவபிரான் மனங்கவர் தெய்வத்
தாயை வேற்படை யாக்கிய சண்முகத் தரசே. 62

அரச ராதியர்க் கஞ்சுபு நாணுறு மடியே
னிரச தக்கடன் றீர்தரற் காம்வித மியற்றாய்
முரச கேதனன் றூதனில் வாழ்நல மொழிந்தி யான்
பரசல் கேட்டுள பன்னிரு காதுடைப் பரனே. 63

பரவை வாழ்மனைத் தூதர்கண் ணீன்ற நின்பான்மைக்
கிரவி லென்கலி தீர்தரு நிமித்த மோரேமத்
துரமுளா னுளத்தொளிர் தரி னிழிவுறா துண்மை
சரவணோற் பவவிது பலர்க்கி யற்றிட றானே. 64

தான மால்கரிக் கஞ்சிய நாளையிற் றடுத்தாண்டு
டூன வெங்கலிக் காட்படச் செய்தலு மியல்போ
மானமுங் கொடைப்பெருக்க முந்தணந் திடல்வழக்கோ
கான வேட்டுவக் கன்னியை மணந்த காமுகனே. 65

முகம னோதிய சிலர்க்கு நல்வாழ்வருண் முறைபோய்ச்
சகள நிட்கள மிரண்டு நீயெனத் தெளிதகையே
னகநொந் தேங்கிட மிடியினாற் படுத்தலு மறமோ
விகட மால்கரி முகவனுக் கிளைய வித்தகனே. 66

வித்தையிற் சிறிதருளவும் வெருளு நீமிடிநோய்த்
தத்தை நல்கிடத் துணிந்தவா றென்கொலோ சாற்றா

யத்தை யீதலிந் கயமை பாராட்டிலா யந்தோ
முத்தை யாமறை நான்கினு முடிந்ததோர் முடிவே. 67

முடிவில் பாழ்மிடிச் சாகரந் தன்னிடை மூழ்கிப்
படியின் மாய்பவர் தமக்கு நின்யடி யிணைபரவு
மடிமை யென்னுமோர் திருப்பெய ரமையுமோ வறையாய்
வடிகொள் வேற்படை வயவனாஞ் சுப்பிர மணியே. 68

மணிகு லாவிய மயிற்பரி யுகைத்தடல் வடிவே
லணியும் வாழ்வையுந் தரவலா யென்றுனை யடுத்தேன்
பிணியின் மூத்த வெங்கலியையும் பெயர்த்திலாய் பிறங்கும்
பணில வார்செவியார் விழிதரு குருபரனே 69

குருவுந் தெய்வமு நீ யலதிலை யெனக் குறிக்கும்
பருவ மெய்தியும் பாழ் மிடிக் கஞ்சுறப் படுமோ
நிருபர் போற்றுற நிலத்தினும் புகழுட னிறுவா
வருவவாதிக ளறிவரு மறுமுகத் தமுதே. 70

வேறு

அமுது முதற் சிற்றுண்டியினமு நீத்திட்
டான் பாலென் றொருபெயர்கொ ளறலே மாந்திக்
குமுதமல ரனைய நின்வாய்மொழியா லுய்யக்
குறித் திளைத்தேன் மிடிநோயாற் குலைய லாமோ
சமுசயந் தீர்தரப் பலவா றுரைத்த சொல்லு
தவறினா லென்செய்வேன் றாலி சூழு
கமு கனைய மிடற் றிருவர் பாகா வேற்கைக்
கடவுளே யொரு சிறிது கருணை செய்யே. 71

கருணை மலிதரு கடவுணீயே யென்னக்
கருதி வழிபடு மெனதுகன விற்றோன்றி
யருணகிரிக் கிளிப்புலவ னீயே யென்ன
வாயிரம் போதுரைத்தனை யேயது மெய்யாகின்
மருண்மலி பாழ்மனத் தோர்க்குமெளி தாம்பைம்பொன்
வாதனையா லிந்தவண்ணம் வருத்த லாமோ
தருணமறிந் துதவி செய்யவல்லா யன்றோ
சரவணோற் பவமுருகா தயைசெய் வாயே. 72

செய்யவள் கோனெனப் புவியில் வாழவைத்துச்
சிவைகேள்வ னெனக்ககனஞ் சேரச் செய்வே
னைய முறேலென் றுரைக்க வீரவாகை
யனுப்பியது மறந்த னையோ வடியனேனைப்
பொய்யனெனப் பலரிகழப் பொருள்வேட் டுள்ளார்
போலலைய விடலாமோ பொறுக்கின் றில்லே
னெயருவிக் கடம்பொடு கூதளமுஞ் சூடி
நீல மயிற்பரியேறு நிமல வேளே. 73

நிமல பரம்பரைக் கடவு ளினங்கட் கெல்லா
நிறைமதுரத் தமிழ்க்கிரங்கு நேயமுண்டென்
றமல னடியார்முத லோர்மொழியாற் றேறி
யதைவிதித்தோன் குருவாநின் னடிக்கா ளானேன்
கமலமக ளுறவை நம்புமூடர் வாயிற்
கடைதோறும் பொருளி ரந்துங் கலங்கலாமோ
முமல மறக்களைந்திடு மாறெழுத்துஞ் சொல்வார்
முன்னியவா விளையாடு முருக வேளே. 74

முருகவிழ் பூந்துணர் மலிகற்பகப் பொன்னாட்டு
முனிவினவ முதல்வீரன் மொழியா லொப்ப
வொருகனவின் முக்காலு முரைத்த மாற்ற
முலகறியா தெனினுமென் நெஞ்சுணர்ந்த தன்றோ
வருகனவு நனவொன்றென் றொருமெய்த் தொண்டன்
மனங்குளிரப் பகர்ந்ததனை மறந்திட் டாயோ
பொருகலி நோயறக் களையும்வலி யில்லாயோ
புரந்தரனுக் கரசளித்த புனித வேளே. 75

புனிதநறுந் தமிழ்மணக்கு நெஞ்சந் தோறும்
பொல்லா வெம்கலிக் கொடுநோய் புகுதாவண்ண
மினிதகிலத் தாடுநலம் விரும்பு மென்னை
யிரந்தலைய விடலாமோ விறைச்சி யுண்ணு
மனிதவுருக் குறையெழுதும் பொருளா விந்த
வாறு வருத்திட வுனதுமனம் வெட்காதோ
தொனிதரு செந்தக ரேறிப் புவனியெங்குஞ்
சூழ்வானே யாறிரண்டு தோள்வல் லானே. 76

வல்லவர் சொன்னூன் முழுதும் வியந்துகூறும்
வைராகத்தா பலபேர் மாளக் கண்டும்
புல்லறிவாண் மையிற்பெரி யார்தமக்கு மெய்தும்
பொருணசையாற் கொடுவிரதம் பூண்டு நின்றேன்
சொல்லனந்தத் தொன்று நிசமாகக் காட்டித்
துயர்மலி பாழ்வறுமை யினைத்தொலைத்தி ன்றாளவ
யெல்லவர் பன்னிரு வரையுமுருக் கிச்செய்தாங்
கிலங்கெழில் வேற்படை தாங்குமீ டுள்ளானே. 77

உள்ள மொத்துக் கருதிடினு மறந்திட்டாலு
முனதருளுண் டெனமகிழு முறுதி நல்கிக்
கள்ள ரெனப்பர தவிக்கப்பொருட் பேய்தன்னைக்
கடனு ருவமா விடுத்துக் கலக்க லாமோ
பள்ளவயற் றிருச்செந்திற் பதியிற் சொன்ன
பலமொழி யும்பிழை படிலெப் படியீண் டுய்வேன்
றெள்ளமுத மனைய திருப்புகழ் கேட்பானே
திருகியகார் மருப்பாடூர் திறற்றோ ளானே. 78

தோளிலணி கிளியென வென்றனைப் பல்காலுஞ்
சொல்லியதுன் னுணர்ச்சி கொண்டோசுர பானஞ்செய்
வாளிணைக்கண் ணன்னை குணங்கொண்டோ பித்தன்
மகனான நீர்மைகொண்டோ வகுத்துச் சொல்லாய்
நாளிகத்திற் பொருள் வினையாற் கழிக்கச் செய்த
னலங்கொல்லோ நீயறியா ஞாயாய முண்டோ
பாளித மெள்ளுண்டை பொரிகடலை யாதி
பருகுகளிற் றுடன்பிறந்த பவளக் குன்றே. 79

குன்றிடத்திற் கிறைமைக்கச் சொல்லிப் பொல்லாக்
கொடுங்கடனும் வட்டியு மேற்கொள்ளச் செய்து
தின்றிடலுண் டிடற்றணந்த விரதத் தாக்கிச்
செட்டிக ளூர்ப் பொருள்விழைந்துந் தியங்கக் கண்டா
யென்றினி யென்றளை நேர்வெங் கலிநோய் மாற்றி
யிவ்வுல கன்னடிமை யெனவியம்பக் கேட்பாய்
வென்றிவிற் கொண்டடித் தாற்குங் கணையொன் றீந்த
விமலர் விழியுதவ வரும்விந்தை யானே. 80

கலிவிருத்தம்

விந்த மால்வரையை முன்வெகுள் கரத் தொருதவன்
சிந்தனைக் கினியபொற் றிருவடிக் குமரனே
யிந்த வெங்கலி யினாலெனை வருத்திடுதனின்
செந்தகைப் புகழ்பெறுஞ் சிறுமையென் றுணர்தியே. 81

உணர்வறும் புலையர்கை யுடைமை நத்துறுமெனக்
கணவரும் புகழளித் தருள்வ தென்றறைகுவாய்
கணபணந் தலைவடங் கமடமென் பிதழியார்
மணமுகந்தவள் கைமேன் மகிழிளம் புதல்வனே. 82

புதனின் மிக்குயர் தமிழ்ப்புலவர் பற்பலர்தினத்
திதமுரைப் பதுகுறித் தெனைவெறுத் தனைகொலோ
திதலை மொய்த்தவிர் முலைச்சிறுமி யைப்புனமதிற்
சதமெனப் பணிதொழிற் றகுபுகழ்க் குழகனே. 83

குழல்வளம் பொலிகருங் குயில்பொருங் குறமினாண்
மழலையம் புதல்வனேர் மகிமை பெற்றுளவெனைப்
பழவினைக் கலிபொரிற் பழுதுனக் கிலைகொலோ
வழகனந் தழுமொருங் கடையிளங் குமரனே. 84

குமரனம் கடவுளென் றுருகுமெய்க் கொள்கையோர்
தமரெனக் கருது நற்றகை யளித்திட்டபின்
சமரவன் கலியினிற் றளரவிட்டனை யையோ
வமரர்வெண் களிறெடுத் தவளுளத் தனகனே. 85

அனக முத்தமிழ் நயத்தருமை மிக்கருளுநீ
கனக முற்றுயர் மனைக்கடைகளிற் றிரியவிட்
டெனதுடற் றளர வைத்திட லறத் தியல்பதோ
தனதனுக் கினியர் நற்றனையரில் சிறுவனே. 86

சிறுவளிக் குன்றுடைச் செந்தமிழ்க்கா வலன்
பெறுநலந் தருகெனப் பேணுமென் றன்னைநீ
தறுகண் வெங்கலியினிற் றளரவிட் டிடலெனோ
வறுமுகக் கமலமா மருணெறித் தலைவனே. 87

தலைமை பெற்றுள்ள நின்றன்னையே நம்புமென்
னுலைவறக் கலியொழித் துண்மைதந் தாள்வையோ
சிலைவலிக் கானவச் சிறுமியைத் தேடியன்
றலையு முற்சாக னென்பாருளத் தையனே. 88

ஐயமற் றுன்னையே யநுதினம் பரவுமென்
செய்யசொற் றொடைகணின் றிருவருட் கயல்கொலோ
பொய்யரிற் கலியிடைப் புலரவிட்டனை யையோ
கையயிற் படையினைக் கருதுநர்க் கெளியனே. 89

எளிதெனக் கருள்செய்தா விழிவுனக் கெய்துமோ
களியறக் கலியினைக் கதுவ விட்டனையருட்
டெளிவிலேனெனி னுநின்செயலை நம்பிடல் பொய்யோ
வெளிமுகட் டளவுசூர் வெருளும் வேல்வீரனே. 90

வேறு

வீரரி யாவரும் போற்றிடத் தகுங்கூர்
 வேலணிந்த நின்விறற் பெரும்புயங்கள்
சார முத்தமிழ்த் தொடையிடுந் தமியேன்
 றனது பாழ்மிடிதனை வெலாதனவோ
வீர முன்னுளத் தெள்ளள வேனு
 மில்லையோ யுனக்கிது முறைதானோ
பூர வாகனத்தி வரும்வெண் கொடியும்
 போற்றும் வீறுடைப் புலமைசால்குகனே. 91

சால வித்தை செய்மனித ரிலொருவன்
 றானும் நல்கிடத் தகுநலம் விழைந்தேன்
கால தாமதஞ் செய்திடத் துணிந்தாய்
 கவிதை யீனர்கைக் காசினு மெளிதோ
பால னென்றெனைத் தழுவலும் பொய்யோ
 பரமலோப நின்பாங்கினுக் காமோ
நீல மாமயிற் பரிமிசை யேறி
 நெடியவேல் கொடுநிலவு சேவகனே. 92

சேவி லேறுநின் றாதையோர் புலவன்
 சிந்தை யின்புறச் செம்பொன் மிக்கீந்தா
னாவி னாலடி யேன்பகர் பாட
 னலமிலாதன வெனநவில் வாயோ

வாவியோடு டவிளைத்தது கண்டு
மருள்செயாதுற லறமெனத் தகுமோ
பாவி நான்முகன் றலையொரு நான்கும்
பதறமோது கைப்பவள வான்குருந்தே. 93

குருந்த மாமணிக் குன்றுறழ் மேனிக்
குமரநின் றிருக்கோலமே கருதி
யிருந்த நெஞ்சினும் பொருண்மயல் வந்தா
லென்செய்வே னெனக்கேனது நீயோர்
திருந்து கற்கிண றமையெனச் சொல்லித்
தியக்க மீந்தனை சிந்தைமிக் கயர்ந்தேன்
பொருந்து மாடலொன் றிக்கணம் விளைத்துப்
புவியும் வானமும் போற்றிடப் புரியே. 94

புரிமுந் நூலுடைப் பனவருந் தவரும்
புலையராள் கையிற்புலர் வதுசகியா
தரியநின் றிருப்புகழ் சொலத்தொ டுத்தே
னறிவிலார் பொருட்டல மரக்கண்டாய்
பெரிய சீரருட் பயனிது தானோ
பெற்றமூர்பவர் பெறுந்தவப் பேறே
விரியு மாயிரங் கட்பசுந் தோகை
விகிர்தனே கலிவிட விலக்குதியே. 95

குதிக்கும் பேரொலித் தகர்வரப் பயந்து
கூவும் நாரத னாதியர்க் கருளி
விதிக்கு நான்முகற் புடைத்த கைக்குகனே
வேளை யீதறி மெத்தவு மெலிந்தேன்
மதிக்கு ணீயிலை யென்றிட லாமோ
வருத்த மித்தனைவைத் திடத்தகுமோ
சதிக்கு மாயிரஞ் சனிவளைந் தாங்கு
தவிக்கின்றேன் கலிதவிர்த் தருள்விரைந்தே. 96

விரைகொள் பூம்பொழின் மலிதிருக் குருகூர்
வேதியன் சிறைவிடத் துதித்திடுநாள்
கரையில் பேரருட் செயலினை யெளிதிற்
காட்டியாண் டனைகலி விடத்தமியே

னுரைசெய் கின்றவிப் பனுவல் கேட்டிலையோ
வோர வஞ்ச முன்றனக் காமோ
பரைதன் பானுகர் பாற்குணம் தமமோ
பகர்தி யாறுசெம்பவள வாயினனே. 97

வாயி னாலொரு தமிழ்ப்பழங் கவியும்
வழுத்திடார்களும் வாழ்வுறச் சிலர்பாற்
போயி னானென தாளெனப் பகர்ந்தும்
பொருளளித்து மெய்ப்புகழ் மிகப்புனைந்த
நீயிந் நாள்வரை யெனைத்துயர்ப் படுத்தி
நெருப்பில் வீழ்புழுநேர் படக்கண்டாய்
பேயி னாற்சிறைப் படுமவன் வாழ்வான்
பிறங்கல் கீன்றசீர்பிறங் கவாண்டருளே. 98

ஆண்ட நின்செய லறிதர முயலாத
வல்வெங்கலிக் காட்படன் முறையோ
கூண்ட மெய்யடியவர் நடுக்குலவுங்
கொள்கை யாதியகொற்ற மத்தனையும்
வேண்டல் கண்டி லையோயுனை யன்றி
வேறுதெய்வமு மெய்வழிக் காணேன்
றாண்ட வன்றிரு மான்முதற் பலருந்
தனையலா லிலாததகை பகர்குகனே. 99

பகரொ ணாத நின்றிருவருட் பயனே
பயனென்றோர் கிலாப்படிறரிற் றமியே
னிகரில் வெங்கலிப் பிணியிடை தளர்ந்தே
னிக்கிமெய் யறநெறி யளித்தாள்வாய்
திகழும் வேற்படைப் பூசனை வீணோ
திருக்கணா லொருசிறி தெனைப்பாராய்
ககன வாணர்தஞ் சேனையி னதிபா
கழிக்கொணாப் பெருங்கருணை மாகடலே. 100

நூற்பயன்

கந்த னருளாற் கலிவிடந் தாதிப்பனுவற்
செந்தமிழைப் போற்றுந் திறத்தோருக் - கெந்தவிதச்
செல்வமு முண்டாகுந் திருக்கொழிந்த மெய்வீட்டு
ளெல்வழிபோம் பேறுமெய்து மே.

முற்றிற்று

22

குருநாதனந்தாதி

22

குருநாதனந்தாதி

காப்பு

வெண்பா

ஒருநாத னாகியொப்ப லோங்காரத் துற்ற
குருநாத னந்தாதி கூறிப் - பெருநாத
னென்னும் பெயர்பெற் றிகபரத்தில் வாழ்வதற்குப்
பொன்னுறழ்வே லாயுந்தங் காப்பு.

நூல்

கட்டளைக் கலித்துறைகள்

திருவரு ளாற்றொழி லைந்தும் புரியுஞ் சிவன்றனக்குச்
சருவ சடாக்கரத் துண்மையைப் போதித்த சண்முகனா
மொருவனை யேகுரு நாதனென் றேத்தி யுருகுமென்னுள்
வருவதற் கன்னவ னொப்பா திருப்பது வஞ்சகமே. 1

வஞ்சக மேனின் மலர்த்தாளை நாடி வணங்குமென்ற
னெஞ்சக மிப்படி வாடிடக் காண்பது நீதிகொல்லோ
வெஞ்சகத் தார்நிந்தை கேட்பதற் காளென விட்டுவிடே
லஞ்சக ளக்குரு நாதாபல் கோடிவெற் பாள்பவனே. 2

ஆளாக்கிக் கொண்டவர் போற்பல வார்த்தை யறைந்தபின்னர்
மீளாத் துயரக் கடலூ டுழல விடுத்தனையே
தோளார்ந்த கிள்ளைக் குருநா தனேமெய்த் தொழும்பரெதிர்
தாளா னடந்தொரு தண்டோடு தோன்றுந் தனித்தெவமே. 3

தெய்வமெல் லாமுநின் சீர்வடி வேயெனத் தேர்ந்தபின்னு
முய்வதெவ் வாறென் றெனைவாட விட்டிங் குறங்க னன்றோ
சைவமுற் கூறுஞ் சமயங்க ளாயினுஞ் சார்ந்துதவி
செய்வதற் கான குருநாத னேயயிற் சேவகனே. 4

சேவேறு மீசன்முன் னால்வருக் கீந்த திறமையெண்ணிப்
பாவேறப் பாடிநின் றாட்கணிந் தேனருட் பார்வைகொண்டு
பூவேறும் மங்கைய ரின்பம்நல் காய்மத பூதரத்தின்
கோவேறு சற்குரு நாதாவெண் சேவற் கொடிக்கையனே. 5

கொடியோர்கள் வாழ்வது கண்டென துள்ளங் கொதித்தயரும்
படியோரஞ் செய்வது நீதிகொல் லோபெரும் பாரளந்த
நெடியோனில் வாழ்வுறச் செய்தருள் வாய்செந் நெருப்புமிழு
முடியோங்கு மெய்க்குரு நாதா வோறாறு முகத்தண்ணலே. 6

அண்ணாந் தொருகுள்ள னானையி லேகு மரசனிடஞ்
சுண்ணாம்பு கேட்டுத் தவித்திடல் போலுன் றொழும்புசெய்து
தொண்ணாந் தலைந்து துயரமுற் றேன்புலித் தோலுடுத்தோன்
கண்ணாம் பரம குருநாத னேயருட் காட்சிநல்கே. 7

நல்கறி யார்தம் மனைதோறு நாளு நடந்தவர்க்காம்
பல்கதை பேசித் திரியாது நின்புகழ்ப் பாடன்மிகச்
சொல்கவு மார ருடன்சேர்ப்ப தென்றுகொல் சூழ்வினையை
வெல்கரு ணைக்குரு நாதாபல் கோடி விழிக்கந்தனே. 8

விழிக்குங் கருணைத் திருநாட்டத் தாலென் வினைமுழுது
மொழிக்குந் திறமை யுனக்கில்லை யோவமிழ் தொத்ததமிழ்க்
கொழிக்கும் புலவர் குருநாத னேபெருங் கோரமுற்றுப்
பழிக்குஞ் சிலர்க்கஞ்சி னேனறி யாய்கொல் பகர்ந்தருளே. 9

பகர்ந்தநின் சொற்களை நம்பயென் னெஞ்சம் பரதவித்தீண்
டகந்தையுள் ளார்க்கஞ்சு கின்ற தறிந்து மருள்செய்திலாய்
திகழ்ந்தவை வேற்கைக் குருநாத னேயுனைச் செந்தமிழாற்
புகழ்ந்ததற் கீதுகொ லோபய னாமிப் புவியிடத்தே. 10

இடங்கொண்ட பாருல கிற்றமி யேனுன்னை யேத்தலுற்றும்
மடங்கொண்ட மாயைப் பெரும்பேய்க்குள் ளஞ்சி வருந்துகின்றேன்
றிடங்கொண்ட சித்தியு முத்தியு மீந்தருள் செஞ்சிகிமே
னடங்கொண்ட ஞான குருநாத னேகந்த நாயகனே. 11

நாய்போ லலைந்திரந் தெய்த்துன்னை யிவ்வண நாடுகின்றேன்
றாய்போற் கருணை புரிந்தாள்வை யோபெருஞ் சஞ்சலத்தாற்

பேய்போன் மருள விடுப்பாய் கொலோவுமை பெற்றெடுத்த
சேய்போலும் வந்த குருநாத னேவினை தீர்ப்பவனே. 12

தீராக் கயமை யுடையார்தம் முன்றிலிற் சென்றலைந்து
பேராண்மை முற்று மிழந்தினைத் தேனெனைப் பேணியுன்னை
யாராதிக் கும்படி செய்தருட் பேறு மளித்தருள்வாய்
கூராரும் வேற்கைக் குருநாத னேயெண்ணில் கோலத்தனே. 13

கோலா கலப்பசுந் தோகையி லேறிக் குலவுதுங்க
வேலா யுதத்தொடு தோன்றலென் றோவுன்னை வேண்டுமென்னை
நாலா விதத்தில் வருத்துவ தேன்கட னஞ்சமுண்டோன்
பாலா பரம குருநாத னாமுதற் பண்ணவனே. 14

பண்கொண்ட வேத மொருநான்குந் தேடும் பதுமமலர்த்
தண்கொண்ட சேவடி தந்தருள் வாய்முன்பு தானவரால்
விண்கொண்ட சேர்கந் தவிர்த்தகந் தாவெற்றி வேற்றெய்வமே
கண்கொண்ட தோகைக் குருநாத னாகிய காரணனே. 15

காரண மும்பல காரியமி யாவுங் கரத்தில்வைத்த
வாரண கேதனத் தானெனத் தேறுமெய் வாழ்வடைந்து
நாரண னாதியர் போல்வாழப் பெற்றில னான்மறைசொல்
பூரண சற்குரு நாதாவிண் ணூரைப் புரப்பவனே. 16

புரந்தரன் வேதன் திருமாலொப் போரும் புகழுநல
நிரந்தர நல்கவல் லாயென்ன வேமிக நேடுமென்னுட்
கரந்தறி யாதவர் போலிருந் தாயினிக் காதலித்த
வரந்தரு வாய்குரு நாதாவெங் கெங்கும் வசிப்பவனே. 17

பவந்தவிர்ந் துய்கை நினைத்துன்னை நாடிப் பணியுமென்னை
யவந்தரும் புன்னெறிக் கேன்விடுத் தாய்குன்றி லாடல்செய்து
சிவந்தபொற் றாட்குரு நாதா வெனது திருப்புகழ்ப்பாட்
டுவந்தனந் தந்தரம் பல்கோடி வார்த்தை யுரைத்தவனே. 18

உரைக்கடங் காப்பர மானந்த வாரிதி யூடலரு
நிரைக்கம லம்பொரு நின்றாள் சுமக்குநன் னேயமுற்றும்
வரைக்குலந் தோறு மகிழ்வார்தம் மோடென்னை வைப்பதென்றோ
விரைக்குர வக்குரு நாதாவை வேற்கர வித்தகனே. 19

வித்தையிற் சற்றுமுதவா திவ்வண்ண மெலிய விட்டாய்
தத்தையென் றென்னைப் பகர்ந்திலை யோவயிற் சத்திகொண்ட
முத்தைய னாங்குரு நாதா தொடுத்து மொழிந்துமுள்ளப்
பத்தைவெல் லாதுழன் றேனறி யாயெனப் பேசரிதே. 20

பேசுந் தமிழ்ப்பய னீநல்கு மாறு பெறாமையெண்ணிக்
கூசுங் கொடுமை தவிர்வதென் றோபொடி கொண்டமட்டும்
பூசும் பரம குருநாத னேபல பூதரத்தும்
வீசும் பரிமளப் பூந்தாளி னாசையு மிஞ்சியதே. 21

மிஞ்சிய மாதவஞ் செய்தறி யாதருள் வேட்கைகொண்டு
கெஞ்சிய வென்னை மறந்தனை யோதமிழ்க் கிள்ளையெனக்
கொஞ்சிய வாயுமடைத்தது வோகுறக் கோதைகண்முன்
னஞ்சிய சற்குரு நாதாநின் சொற்படி யாடல்செய்யே. 22

செய்ய பவளத் திருமேனி யும்பொடிச் சீருமொரு
கையணி தண்டுமற் றோர்கையின் முத்திரைக் காட்சியுமிவ்
வையக மும்புகழ் வேல்புனை மார்பும் வயங்கவந்து
மெய்யளிக் குங்குரு நாதனல் லாற்றெய்வம் வேறில்லையே. 23

இல்லையென் றூர்தொறுஞ் சென்றலைந் தேற்றுட லெய்க்கவிடுந்
தொல்லை வினையைத் தொலைத்துன் றுணைப்பதஞ் சூட்டும்வண்ணம்
வல்லைநின் னுள்ள மிரங்காத தேனெண்ணில் வண்டுகிண்டு
குல்லையந் தார்க்குரு நாதாவை வேற்கரக் கொற்றவனே. 24

கொற்றவை வேற்கைக் குருநாத னேயெனக் கூவுமென்னை
மற்றவர் போலப் பரதவித் தேங்கி வருந்தவிட்டாய்
சற்றருட் பேறளித் தாண்டா லெனக்குத் தகாதுகொல்லோ
பற்றகன் றோருறுங் குன்று தொறாடிய பாதத்தனே. 25

பாதங் கருதித் தொழுவார்க் கிரங்கும் பரமகுரு
நாதனென் றுன்னை யறியார்தம் பாற்பொய் நவிலவை கொல்லோ
வேதம் பகர்ந்தவ னாதிய ரஞ்ச விரிந்தசைந்த
சூதந் தறித்தவை வேல்புனை தோளுடைத் தூயவனே. 26

தூயவெண் ணீற்றணி தோன்றவந் தென்னுடன் சொன்னசொற்கண்
மாயு வுலகினிசமாக வேண்டி வருந்து மென்னை

நீயறி வாயுன்னை நானறி யேனிது நிச்சயங்காண்
சேயபொன் மேனிக் குருநாத னாமயிற் சித்தசனே. 27

சித்தருஞ் சற்குரு நாதனென் றேத்தச் சிவன்விழியி
லுத்தமச் சேயென வந்தாய்நின் சீர்த்தி யுரைக்குமென்னைப்
பத்தனென் றூரவரேசுகின் றாரினிப் பேணிநின்மெய்ப்
பத்தனென் றோதப் பணித்தாள வேண்டும் பரமுனக்கே. 28

பரந்தாம னான்முக னாதியர் போற்றும் பரமன்முன்னா
ளிரந்தா னவன்மைந்த னீயெனக் கேட்டுன் னிடத்தெனக்கோர்
வரந்தாவென் றேற்று மறுகுகின் றேனெதிர் வந்தருள்வாய்
புரந்தா தரிக்குங் குருநாத னாமயிற் புண்ணியனே. 29

புண்கொண்ட நெஞ்சம் புனித பரானந்த போதமுற்றுக்
கண்கொண்ட தோகை மயின்மீ துனைத்தினங் காண்பதுண்டோ
தண்கொண்ட தென்பொதி யைக்குறு மாமுனி தன்னுளத்தி
லெண்கொண்ட தாட்குரு நாதாவென் றென்று மிளையவனே. 30

இளையமின் னார்தம் முலைப்போக மேநல மென்னுமயற்
றளையடைந் தோரெனத் தோற்ற விட்டாய்நின் சடாக்கரத்தால்
விளையுமெஞ் ஞானமென் றீந்தருள் வாயெழு வேலையினு
மளையுங் கரத்தெங் குருநாத னேயுமை யாண்மைந்தனே. 31

மைந்தா வெனவுமை கூவி வருந்த வருங்கருணைக்
கந்தா வுனைக்குரு நாதனென் றோர்ந்து கருதுமென்முன்
வந்தார்வ நல்கவித் தாமத மேனென்றன் வாழ்வனைத்து
நிந்தாதி யாமிழி வெல்லாமுஞ் சத்திய நின்னருட்கே. 32

நின்னரு ளேகதி யென்றெண்ணி நாடுமென் னெஞ்சகத்தி
லுன்னது கோல மிலங்காத தென்கொ லுரகமுண்ணும்
பொன்னவிர் தோகை மயிலேறி யும்பர் புகழவருந்
தென்னவ னான குருநாத னேயயிற் றிண்புயனே. 33

திண்ணிய மெய்யுணர் வுள்ளார்கள் போலத் திகழ்ந்தடியேன்
பண்ணிய பாவ மளவு படாது பரிந்தளித்தாண்
டெண்ணிய வாழ்வுறச் செய்வாய் கொல்லோபுனத் தேனல்வள்ளி
நண்ணிய தோட்குரு நாதாமுச் சங்கத்து நாவலனே. 34

நாவலம் பொன்னிற் சிறந்தபல் பாட னவின்றுமென்
தாவன்முற் றும்படி செய்திலை யேயினி யாகிலுமிக்
கேவலந் தீரக் கிருபைசெய் வாய்தமிழ்க் கிள்ளைமெச்சுஞ்
சேவலங் கைக்குரு நாதாவிண் ணோர்குல சேகரனே. *35*

சேகர நின்றிருப் பாதங்க ளேயெனச் சிந்தைசெய்தும்
பாக மதுரத் தமிழ்பாடிச் சூட்டியும் பைம்பொனிச்சைச்
சோக மொழிக்கத் துணிந்திலை யேபசுந் தோகைமயில்
வாகனச் சற்குரு நாதாசற் றேனும் மனமிரங்கே. *36*

இரங்காத வன்நெஞ் சுடையார்தம் முன்றிலுக் கேகிநித்தங்
குரங்கா மெனப்பறக ளெல்லாமுங் காட்டிக் கொதித்தயரார்
வரங்கா தலிப்ப தறிந்திலை யோவென்று வந்தருள்வாய்
மரங்காதும் வேற்குரு நாதாநின் போற்றுணை மற்றிலையே. *37*

மற்றையர் பாற்சென் றிரவாது னீகையில் வாஞ்சை கொண்டே
னற்றையிற் சொன்னசொற் போலரு ளாத தெனச் சொல்வம்போ
பொற்றையி லாடுங் குருநாத னேநின்சொற் பொய்த்தொழியா
திற்றையி லிப்போழு தேவிளை யாட்டொன் றியற்றுதியே. *38*

இயலா தியதமி ழோர்மூன்றும் பாடு மெழிற்புலமைச்
செயலா னதைத்தர நீயேயென் றாலினிச் செம்பொன்வெஃகு
மயலால் வருந்த விடாதருள்வாய்குற வள்ளிவிழிக்
கயலான் மருண்ட குருநா தனாமயிற் காவலனே. *39*

காவகத் துற்றவர் தம்பெரும் போகமுங் கைத்துனருட்
பாவல னென்றுல கோர்பகர் பேறும் படைத்துளநான்
சேவலங் கேதனச் சீர்காண வேண்டற் றெரிந்திலையோ
மூவருக் குங்குரு நாதாவை வேற்கை முருகையனே. *40*

முருகாவென் றோர்மொழி மாத்திரங் கூறிய மொய்குழற்பெண்
ணருகாகி யங்கைமுன்னீதன்மெய் யேலென்னை யாண்டுகொளு
மொருகால முண்டென நம்புகின் றேன்சங்க மூதியமான்
மருகாவை வேற்குரு நாதாவென் னெஞ்சினுள் வஞ்சமின்றே. *41*

இன்றே யெனைத்தடுத் தாண்டுகொண் டுன்னரு ளேற்றம்நல்கி
நன்றே விளைக்கவல் லாயல்லை யோகுரு நாதனென

நின்றேதந் தீர்த்தரன் றன்னுட னோர்சொன் நிகழ்த்தியபொற்
குன்றே யளவற்ற குன்றுதொ றாடிய கூத்தினனே. 42

கூத்தாடுந் தோகை மயிலேறி யன்பர் குழாத்தொடென்னைக்
காத்தாள வேண்டி வருநாளென் றோதினைக் காட்டுவள்ளி
சேத்தாள் வணங்குங் குருநாத னேவுனைத் தேடிநொந்து
நீத்தாருட் சீரியன் போல்வேடங் காட்டியு நின்றனனே. 43

நின்ற நிலையுந் தடுமாறி யுண்மை நெறிபிழைத்து
முன்றன் றிருவருட் பேராசை யொன்று மொழிந்ததின்றா
லென்றன்பர் தம்முடன் கூட்டுவை யோயிகத் தெண்ணில்பல
குன்றங் கொளுங்குரு நாதா சடாக்கரக் கொற்றவனே. 44

கொற்றவை வேற்குரு நாதாவென் றேதினங் கூவுமென்னை
நற்றகை சாலும் முனிவோர் குழாத்தின் னடுவைத்திடா
துற்றவர் போற்பல யுண்மைசொற் றிவ்வ னுழலவிட்டாய்
சற்றருட் பார்வைசெய் தாளினி மேலுஞ் சகிக்கரிதே. 45

அரிதாமுன் நாமங்க ளாயிரத் தொன்றை யறைந்ததனா
லுரிதா னுழக்கி ரண்டாகிய வுண்மை யுணர்ந்தபின்னும்
விரிதா ரணியிலிவ் வாறடி யேன்மனம் வேவதென்னோ
பெரிதான சீர்க்குரு நாதாவை வேலைப் படித்தவனே. 46

பிடிநிகர் மென்னடை யோடிம வான்பெற்ற பெய்வளையை
வடியயி லாக்கிப் புனைந்துபல் கோடி மலையினும்போய்க்
கொடிநட மாடுங் குருநாத னேயுனைக் கும்பிடுமெய்
யடியவர் தம்புடை யூடெனைக் கூட்டி யருள்வதென்றே. 47

என்றுநின் றாட்சுமை வேண்டி யுருகி யிளைக்குமென்னைப்
பொன்றுமுன் னாளக் கருதுகண் டாய்வளம் பூத்தபல
குன்றுதொ றாடுங் குருநாத னேமுன் குறித்தவற்றை
நன்றுநன் றென்றொப்ப யிப்போது கைவிடன் ஞாயமின்றே. 48

ஞாயம் பலவு மறிந்துள்ள நீயென்னை நாட்டிலுள்ளார்
பேயனென் றேச விடலாகு மோவினிப் பேணியொரு
தாயக மாகிமுன் நின்றருள் வாய்நெடுஞ் சத்திகொண்ட
சேயதிண் டோட்குரு நாதாவிண் ணோருட் சிறந்தவனே. 49

சிறந்தபல் குன்றங்க டோறுநின் றாடுநின் சீரடியை
மறந்தவர் போலப் பரதவித் தேன் மயில் வாகனத்தி
னிறந்தழைக் குங்கதிர் வேலோடு வந்துமுன் னின்றருள்வாய்
யிறந்தழி யாக்குரு நாதாவென் னுள்ளு மிருப்பவனே. 50

இருப்புவன் னெஞ்சக் கொடியேனு நின்னருட் கிச்சைகொண்டு
திருப்புக ழாயிரஞ் செப்புகின் றேன்மெய்த் திருத்திநல்கி
நெருப்புறழ் மேனி யொடுதோகை மீதெதிர் நின்றிலையே
பொருப்புடைச் சற்குரு நாதா கடம்பு புனைந்தவனே. 51

புனைந்துரைக் குங்குணஞ் சற்றுமில் லாதவென் புன்கவியும்
வனைந்தபொன் னீப மொடுசேர்வ தென்றுகொன் மாமலர்த்தா
னினைந்துமிவ் வாறு வருந்தனன் றோவஞ்சர் நெஞ்சமஞ்ச
முனைந்தகை வேற்குரு நாதா குறக்கொடி மோகனனே. 52

மோகக் கடலிற் குளியாம லுன்னருண் முத்தியினுக்
கேக மனத்தொடு மெய்த்தவ மேசெய் திளைப்பவர்போற்
றேகம திற் குறி காட்டியு மிவ்வணஞ் சீரழிந்தேன்
காகரு ணைக்குரு நாதா மனோன்மணி கைக்குருந்தே. 53

குருந்தையின் கீழொரு வேதிய னாசெவி கொள்ளும்வண்ணந்
திருந்துசொற் கூறிய தேசிக னாருஞ் சிரங்குனிய
வருந்திருத் தாட்குரு நாதா கலாப மயிற்பரிமேற்
பொருந்துகை வேலொடு முன்றோன்றி யாளது புண்ணியமே. 54

இயமான னாகிய வெட்டுநின் சீருகு வென்றுணர்ந்துங்
கயல்போலுங் கண்ணியர் மோகாந்த காரக் கடற்குளித்தேன்
வயமீறும் வேலுடன் வந்தருள் வாய்குற வள்ளிமின்மேன்
மயலான சற்குரு நாதா மெய்ஞ்ஞான வரோதயனே. 55

வரந்தந்த வண்ணம் பலியாது கண்டு வருந்தவிட்டாய்
கரந்தந்து காக்குங் கடனுனக் கேயிந்தக் காசினியி
லுரந்தந்து ளார்மற்று ளாரோ விருப்பனு முன்னருளே
பரந்தந்த சற்குரு நாதாவை வேற்கைப் படைத்தெய்வமே. 56

படைக்கும் பரமனைப் பாலிக்கு மாயனைப் பாசமின்றித்
தொடைக்குஞ் சிவனை நினைத்தென்ற னெஞ்சந் துடிக்கின்றதாற்

புடைக்குங் குமநிறத் தோள்பாடு மென்னைப் புவிப்பணக்கி
லடைக்கும் பரம குருநாத னேவிரைந் தாண்டுகொள்ளே. 57

கொள்ளத் தகுபவுங் கொள்ளா தனவுங் குறித்தறியே
னெள்ளற்குள் ளச்சமொத் தேத்தும் புகழினுக் கிச்சையுள்ளேன்
றள்ளப் படாதுகை தந்தாள வேண்டுந் தமிழ்முனிவ
னுள்ளத்தி லாடுங் குருநாத னேயெண்ணி லூரவனே. 58

ஊரனந் தங்குன்று கோடாநு கோடி யுடையவுன்றன்
பேரனந் தங்களி லொன்றே பகருமப் பேதையைப்போற்
சீரனந் தந்தரு நின்னருள் வாழ்வினிற் சேர்வதென்றோ
நீரனந் தந்தரு ளுங்குரு நாதவென் னேயத்தனே. 59

நேயம் பெருத்து மலைதோறும் போய்த்தின நின்புகழ்சொல்
வாயன்பர் தம்மிடை நாயேனும் வாழ்வுற வைப்பதென்றோ
மாயன் பரவும் மருகாவில் வேடர் வளர்த்த பெண்முற்
போயங் கிரந்த குருநாத னேசெச்சை பூண்டவனே. 60

பூண்ட வராவணிப் பெம்மா னுதற்கட் பொறியெனவந்
தாண்ட வுணேசனைக் கீன்றாய்நின் பொன்னடிக் கன்புசெய்து
வேண்டலெல் லாம்தர வல்லாயன் றோவெற்றி வேல்பிடித்துத்
தாண்டவஞ் செய்குரு நாதாபல் கோடி சயிலத்தனே. 61

சயிலங்க டோறுந் தமிழ்பாட நாடுமென் றன்முனெழின்
மயிலின்க ணேறி வருவதென் றோவஞ்ச மாவைவென்ற
வயிலங்கை கொண்ட குருநா தனேயெண் ணிலாதவர்தம்
வெயிலந்த மேனிய னேமுழு தோர்ந்துள்ள வித்தகனே. 62

வித்தைக ளெட்டும் பறவாத முத்தியும் வேண்டி நின்கைத்
தத்தைசொற் பாடல்க ளாற்றுதி யாதவர் தம்மையொத்தே
னித்தை யறிந்து மிரங்குகில் லாயினி யென்னசெய்வேன்
முத்தைய னான குருநாத னேவள்ளி மோகத்தனே. 63

மோகக் கடலிற் குளிக்கின்ற வென்னை முதிரருட்சீர்த்
தாகத் தழுந்தவுங் கண்டனை யேயினித் தாமதியா
தாகத் தமைந்தவிர் கண்களுங் காணவந் தாண்டுகொள்வா
யேகத் துவக்குரு நாதாவை வேலொன் றெடுத்தவனே. 64

எடுத்தபொற் றாளொன் றுடையானுக் கானந்த மீந்தவுன்னை
யடுத்தவென் றுன்ப மழியாத தென்கொ லறைந்தருள்வா
யுடுத்தலந் தொட்டு வளரிம வான்மக ளொண்முலைப்பான்
மடுத்தசெவ் வாய்க்குரு நாதா கலாப மயூரத்தனே. 65

அத்தனுங் கும்ப முனியுநின் றோள்புனை யஞ்சுகமு
மொத்தமெய்ச் சித்தனென் றென்னையும் வாழ்விக்க வுன்னுவையோ
புத்தமு தன்னசொற் குஞ்சரி வள்ளி புணர்கணவா
வுத்தமச் சற்குரு நாதனென் றேத்துந ருள்ளத்தனே. 66

உள்ளத்தி லூன்ற னுருவமுன் னாமற்பலொண் டொடியார்
வள்ளத் தனத்திச்சை கொண்டலைந் தாலுநின் மாமலர்த்தாள்
கொள்ளத் தகுமவ னென்றொரு நாமங் கொடுத்திலையோ
கள்ளத் தொழிற்குரு நாதாவை வேற்கரக் காங்கெயனே. 67

காங்குடற் சூரனைக் குத்தித் திறந்த கதிரயிலைத்
தாங்குகைச் சற்குரு நாதனை யேதினந் தஞ்சமென
லோங்குசொற் பாடலுரைக்கின்ற வென்னை யுலகிகழும்
பாங்குற யேன்விதித் தாய்கஞ்ச மாமலர்ப் பண்ணவனே. 68

பண்ணுங் கொடுமை யனந்தங் குலாவு படிறனுன்னை
யெண்ணுந் தவர்கொள்ளு மிச்சைகொண் டேனினி யென்செய்வையோ
விண்ணும் புவியும் வியன்பா தலமும் விரும்பநித்தம்
மண்ணுங் கருணைக் குருநாத னேயென்னை யாண்டவனே. 69

ஆண்டலைக் கேதனம் வாழிவென் றேத்தி யருட்பெருக்கம்
வேண்டவிட் டாருனை யன்றியுண் டோவெற்றி வேல்புனையுந்
தூண்டகு பன்னிரு தோட்குக னேபசுந் தோகைமயிற்
றாண்டவச் சற்குரு நாதா வகோர சடாட்சரனே. 70

சடமெடுத் திட்ட பயன்வேண்டிப் போற்றுமென் றன்மிசைநீ
யடமெடுக் கின்றது நீதிகொல் லோசெம்பொ னம்பலத்திற்
றடமெடுத் தாடுநர் சற்குரு நாதா தழல்விடவாய்ப்
படமெடுக் கும்பணி மீதாடுந் தோகைப் பரிக்கந்தனே. 71

பரிக்குங் கலாப மயின்மீ துணைத்தினம் பார்க்கநண்ணிச்
சிரிக்கின்ற வர்க்கொ ரிலக்காகி னேனெனைத் தேற்றலென்றோ

வரிக்கு மருமக னெங்குரு நாதனென் பார்க்கெளியாய்
கரிக்குங் கிரிக்கும் வடிவேல் விடுத்த கரத்தண்ணலே. 72

கரத்திற் றுலங்குங் கதிர்வேலுந் தோகைக் கனமயிலுந்
முரத்திற் கமழ்ந்த குராமலர் மாலையு மும்பரெல்லாஞ்
சிரத்திற் சுமந்த திருத்தாளு மென்முற் றிகழவந்தாள்
வரத்திற் சிறந்த குருநாத னேவள்ளி மாப்பிள்ளையே. 73

மாப்படச் செற்ற வடிவேற் குகனை மலிந்தவெள்ளைக்
காப்பணி வார்நுதற் கண்மணி யாவரு கந்தனைப்பல்
பாப்பகர் கின்றவர் தங்குரு நாதனைப் பற்றிநின்று
கோப்பனந் தம்பெற்று வாழ்ந்தா ரளவற்ற கோடியுண்டே. 74

கோடாத வுண்மை நெறியாளர் தந்திருக் கூட்டமின்றிக்
கேடாளு வாரொடு பன்னாட் பழகிக் கிலேசமுற்றே
னாடாவது மயிலா வதுகுஞ் சரமா வதுகொண்
டோடாவந் தாள்குரு நாதாவை வேற்கரத் துத்தமனே. 75

உத்தம மாய திருவேட மிட்டு முலகிலுள்ளார்
பித்தனென் றேசத் திரிந்தலுத் தேனருட் பேறளித்துச்
சித்தரு மெச்சத் தகும்வாழ்விற் சேர்த்தருள் செந்தமிழ்ச்சொற்
பத்தருக் கான குருநாத னேயுமை பாலகனே. 76

பாலன்ன சொற்குறப் பேதைதன் கொண்கனைப் பன்னிருகை
வேலனைக் குன்றங்க டோறுநின் றாடும் வினோதனைப்பல்
கோலம் பொருந்துங் குருநாத னென்று குறித்துணருஞ்
சீலன் பொதியை முனிநாதன் போலுஞ் சிறப்பினனே. 77

இனனொரு கோடிக ளொப்பாநின் கோலத்தை யென்னதுபுன்
மனநினைக் கத்தக்க வண்மைய தோமயில் வாகனத்தி
லனநடை மாத ரிருவர்தம் மோடும்வந் தாண்டருள்வாய்
கனகவை வேற்குரு நாதா கருணைக் கடாட்சத்தனே. 78

கடமாவிற் செங்கதிர் வேலோடு தோன்றிப்பல் கற்கடொறு
நடமாடும் பங்கயத் தாள்சூட்டி யாண்டரு ணாகமணிப்
படமாகு மல்குமின் னார்நெஞ்சமி யாவும் பதிவதற்கோ
ரிடமான தோட்குரு நாதாவெண் சேவ லெடுத்தவனே. 79

எடுக்குங் கலாப மயின்மீது தோன்றியின் றென்கலியைக்
கெடுக்குங் கருணை யுனக்கில்லை யோபசுங் கிள்ளையொன்று
தொடுக்குந் தமிழ்க்குரு நாதாவென் றேத்தித் தொழுதுருகி
யடுக்குந் தவர்க்கெளி யோனேயெங் கெங்கு மமர்ந்தவனே. 80

அமரர்பல லோர்க்கொரு தாரக மாகி யவிர்ந்தவுன்னைத்
தமரவ ரோடுந் தொழுவேனை யாளத் தகாதுகொல்லோ
பமர முலாமலர்ப் பூசைசெய் கென்னப் பகர்ந்திலையோ
சமரச போதக் குருநாத னேயயிற் சண்முகனே. 81

முகமா றுடைய குருநாத னென்றுன்னை முன்னுமென்ற
னகமான கோயிலு ண்ணீவந் திராவிடி லாழிசுற்றுஞ்
சகமாயை சூழ்ந்துமிவ் வாறுன்னை நாடித் தவிப்பன்கொலோ
மகமாயி ஈன்ற புதல்வா பலகோடி மலைக்கந்தனே. 82

கந்தக் கடம்ப மலர்மாலை போலென் கவியையுங்கொண்
டிந்தக் கடற்புவி முற்றும் புகழுமியல் பளித்தாள்
சொந்தக் கடவு ளெனத்தினம் போற்றுந் தொழும்புடையா
ரந்தக் கரணக் குருநாத னேசயி லாதிபனே. 83

ஆதியினீ சொன்ன சொற்களை நாடி யலமருவேன்
கோதின்மெஞ் ஞான நெறிசேர்வ தென்றுகொல் கொற்றமிகுஞ்
சோதிவை வேற்குரு நாதாவிவ் வாறெனைத் துன்புறுத்த
வீதியன் றன்றைய னேயினி யேனு நிசஞ்சொல்லிடே. 84

நிசமொன்று பொய்பல கூறுகின் றேனை யிந்நீணிலத்தோர்
பசகனென் றோதவுங் கண்டனை யேயினிப் பேணியருள்
வசமுறுஞ் சிந்தையு ளாருடஞ் சேர்ந்து மகிழவைப்பா
யசமுகைக் குங்குரு நாதாமின் போலு மயிலத்தனே. 85

அயிலேந்தி யோரிரு மங்கைய ரோடு மணிக்கலப
மயிலேறி வந்தருட் செய்குவை யோயிம வான்வளர்த்த
குயிலே யனைய பராட்டிமைந் தாபல கோடிபெருஞ்
சயிலேச னான குருநாத னேதுயர் தாங்கரிதே. 86

தாங்கா வறுமைக் கனலூட மூந்தித் தயங்குமெனக்
காங்கா ரணம்பகர்ந் தாயந்த வாறினி யாள்வதென்றோ

காங்காருந் தோகை மயில்வடி வேயெனக் கற்றவர்சொல்
லோங்காரச் சற்குரு நாதா வெனையு முடையவனே. 87

உடைமணி தண்டைச் சிலம்பார்க்கத் தோகையி லோடிவந்து
விடையவன் றன்னிடஞ் சொன்னதைச் சொற்றருள் வென்றிவைவேற்
படையணிக் கைக்குரு நாதா வமரர் பயந்தவிர்த்துத்
தடையறக் குன்றங்க டோறுந் திரியுந் தனித்தெய்வமே. 88

தனித்துன்னை நாடுமப் போதுமென் நெஞ்சஞ் சகமயக்காற்
பனித்திடச் செய்யும் வினைப்பேயை வென்றுன் பதமலர்த்தே
னினித்திடு நாளொன்று முண்டுகொல் லோயினி யென்செய்குவேன்
றொனித்தவெண் சேவற் குருநாத னேயயிற் றோட்கந்தனே. 89

தோட்டாமை யொன்றுகொன் றாற்கிளை யானைத் துலங்குபர
வீட்டாவற் காரர் குருநா தனைவெற்றி வேற்குகனைப்
பாட்டாற் றுதிக்கவல் லார்க்கெளி யானை பரங்குறத்தி
தாட்டா மரைத்தொண்ட னென்பார்க்கு மெய்துந் தவப்பயனே. 90

தவப்பெரு வாழ்வைக் குறியாமன் மங்கையர் தம்மைநத்து
மவப்புலை யாட்டில் விடலா குமோவிரைந் தாண்டருள்வாய்
சிவப்பொருங் குள்ள திருமேனிச் சண்முகத் தெய்வமென்பா
ருவப்புறச் செய்யுங் குருநாத னேவெங்கு முற்றவனே. 91

உற்றசொ லொன்றுரைத் தொவ்வாமை பற்பல வோதுமுன்னைப்
பற்றல்விட் டுய்யும் வகையறி யேனருட் பார்வைகொண்டென்
குற்றமெல் லாந்தவிர்த் தாண்டருள் வாய்குறக் கோதைபுணர்
மற்றடந் தோட்குரு நாதாதெய் வானை மனத்தவனே. 92

மனங்கொண்ட மட்டுக்கு மேலாய துன்பம் வருத்தியென்னைத்
தனங்கொண் டலைய விடலாகு மோசெழுந் தாமரையோ
டனங்கொண்ட வேதனைக் குட்டிச் சிறையி லடைத்ததனாற்
கனங்கொண்ட கைக்குரு நாதா குறிச்சியங் காவலனே. 93

காவலில் லாத பயிர்போல வாடிக் கலங்குமென்ற
னாவலெல் லாந்தர வல்லாய்கொல் லோமுன் னறைந்ததெல்லாம்
பாவலர் கண்முன் னிசமாகும் வண்ணமும் பார்த்திலையே
மூவலில் சற்குரு நாதாவை வேற்கர முன்னவனே. 94

முன்னம் பகர்ந்த மொழியாவு நாடொறும் முன்னுமென்னு
ளின்னம்பல் வார்த்தையு மேன்சொல்கின் றாய்சொல்லி யென்னபயன்
சொன்னவண் ணஞ்செயக் கண்டில னேபசுந் தோகையிவர்
சின்னவ னான குருநாத னேயயிற் செங்கையனே. 95

கையா மதுரத் தமிழ்ப்பாடல் கேட்டுங் கருத்திரங்கி
மெய்யான பேரின்ப மீந்திலை யேவெற்றி வேற்குகனே
பையா டரவ மிசையாடுந் தோகைப் பசியமயி
லையா வருமைக் குருநாத னேமுற்று மானவனே. 96

ஆனந்த வாரி கடந்தோருக் கெய்து மதீதமென்னு
மோனந் தரநினைக் கின்றதென் றோமுழு துந்தெரிந்த
ஞானந் தழைத்த குருநாத னேமறை நான்குரைத்த
கோனந்த நாளினு மஞ்சப் புடைத்தகைக் கொற்றவனே. 97

கொற்றக் கலாப மயின்மீ தருகிரு கோதைநல்லா
ருற்றவுல் லாசத் தொடுதோன்றி யாண்டரு ளேதமுந்நீர்ச்
செற்றவை வேற்கைக் குருநாத னேநற் றிருப்புகழ்நூல்
கற்றவர்க் கோர்துணை யாய்விளை யாடிடும் கந்தப்பனே. 98

கந்த மதகரி மீதேனுங் கோரக் கருமருப்புச்
செந்தகர் வாகன மீதேனுந் தோகைச் சிகியெனச்சொல்
பைந்தகைப் புட்பரி மீதேனும் வந்தருட் பாங்குநல்காய்
சுந்தரச் சற்குரு நாதாவெண் சேவற் றுவசத்தனே. 99

துவசம் பொருந்தனி வீரம் பெருக்கித் துகளணுகாக்
கவசமு மாகியடியாரை நாடொறுங் காக்குமொன்னா
ரவசங் கொளத்திகழ் வேலுடை யானெண்ணி லாடலுள்ளான்
சிவசங் கரனுந் தொழுங்குரு நாதன் திருவருளே. 100

நூற்பயன்

வெண்பா

செந்தா மரையான் றிடுக்குற் றழப்புடைத்துக்
கொந்தாரு நீபமணி கொற்றவேண் - முந்தாதி
யான குருநாத னந்தாதிக் கன்புடையா
ரீனமுழு துந்தவிர்வா ரே.

முற்றிற்று

23

ஏகத்தாளிதழகலந்தாதி

(உரையுடன்)

23

ஏகத்தாளிதழகலந்தாதி – உரையுடன்

காப்பு

சேயே கத்தாளிதழ கலந்தா திசெயச் செய்திரே
சேயே கத்தாளிதழ கலந்தா திசெயச் செய்திரே
சேயே கத்தாளிதழ கலந்தா திசெயச் செய்திரே
சேயே கத்தாளிதழ கலந்தா திசெயச் செய்திரே.

இதன் பொருள்:

சேயே - பிள்ளைவருக்கங்களி லக்கிரகண்ணியரான விநாயகரே.
கத்து - பிரமகபாலத்தின்.
ஆளி - ஆள்கையுடையவரான சிவபெருமானே.
தழு - ஆலிங்கனஞ் செய்கின்ற.
அகலம் - மார்பினிடத்து.
தாதி - தனதடிமைப் பெண்ணாகிய லட்சுமியையுடைய விட்டுணுவே.
செய் - தவத்தோர் பாவனைப்படி
அச்சு - திருமேனி.
எய்து - கொண்டருளும்.
இரே - வியாபகப்பொருளே.

சேய் - தூரத்தில்.
ஏகு - செல்கின்ற.
அத்து - செம்மைப் பொருளான சூரியனே.
ஆளி - சிங்க வாகனத்தை.
தழு - அங்கிகரித்த.
அகல் - விருத்தியடைகின்ற.
அம் - அழகுள்ள.
தாதி - சத்ததாதுக்களுக் கதிட்டானமான பராசத்தியே.
செய் - சிவப்பின்.
அச்சு - அடையாளமுள்ளவைகளெல்லாம்.

எய் - இளைக்கத்தக்க.
திரே - மேன்மையும்.

சேயே - செவ்வாயென்னுங் கிரகமும்.
கத் - சுவர்க்கலோகத்திற்கு வேண்டிய.
தாள் - அநுகூல முயற்சியும்.
இதழ - இதழ்களை யுடையனவான பூமாலைகளும்.
கல் - மலைகளும்.
அந்து - பொருத்தமான.
ஆ - வியப்புள்ள.
தி - அறிவுத்தன்மையும்.
செய - வெற்றிக்கு.
செய் - விளைநிலம் போன்ற.
திரு - தெய்வீகமும்.
ஏ - பொருந்திய.

சேய் - முருகக் கடவுளைக் குறித்த.
ஏக - ஒன்றே போன்ற.
தாள் - அடிகளோடுகூடிய கவிகளாற் சொல்லும்.
இதழகலந்தாதி - இதழகலந்தாதி யென்னும் பிரபந்தத்தை.
செய - பாடும்படி.
செய்திர் - அநுக்கிரகியுங்கள்.
என்றவாறு. ஏ - ஈற்றசை.

கருத்துரை:

விநாயகருஞ் சிவபெருமானும் விட்டுணுமூர்த்தியுங் குருவென்றும் பரமென்று நிதானிக்கப்படாமற் பாவனைப்படி விளங்குகின்ற வியாபகப் பொருளுஞ் சூரியனும் பராசத்தியுமாகிய நீங்கள் சமானமில்லாத செந்நிறத்தையும் அங்காரகனென்னுங் கிரகத்தையுந் தேவலோக முய்வதற்கான முயற்சியையும் பலபூமாலைகளையு மலைகளையு மிசைவான வியப்புற்ற பேரறிவையுஞ் செயம் விளைகின்ற நிலம் போன்ற தெய்வீகத்தையுமுடைய முருகக்கடவுளுக் கேகபாதத்திகழகலந்தாதி பாடும்படி எனக்கநுக்கிரகஞ் செய்யுங்களென்பதாம்.

ஞாயம்:

சண்மதங்களையுஞ் சண்முகமா வுணர்ந்த கவுமாரன் பாடும் பிரபந்த மாதலி னங்ஙன முள்ளவாறு மூர்த்திகளையும் வேண்டியவாறு மவற்று

ளொன்றன்றோ கவுமார சமய மென்னிலதன் முடிவான குருத்துவமு மளவுபடாப் பொருளாதலிற் சமயாதீதத்திற்கூட்டிப் பிரித்துக் கொண்டதுபோற் காட்டியவாறு மதனா லம்மூர்த்தியின் வணக்கமுந் தோற்றாதுற்றவாறுஞ் சண்மதங்களின் விபரஞ்சொல்வார் சிலர் காபாலிகத்தைச் சேர்த்துக்கொண்டு கவுமாரத்தைக் கழிப்பதுண்டாயினு மஃது சைவத்தின் பிரிவேயாதலி னதைக் கழித்துச் சருவமத சம்மதமான குருத்துவப் பிரதிபாத்தியமுள்ள விதனைக் கூட்டபட்டவாறு மதற்குப் பிரமாணம் வேதத்தினஞ் சுறாணியான வைதிக மார்க்கத்தோ ரநுட்டிக்கின்ற பஞ்சமூர்த்தி யுபாசனையே யென்பது மிங்ஙனம் பலவாறு கூறினு மாறுசமயங்களையு மங்கமாகக் கொண்டவாற்றாற் றெய்வமொன்றென்றே விளங்குகின்றவாறு மிதனாற் சகுணப் பிரமோபாசனை யுள்ளபோதே சமயாதீத சமரசத்தை யறிவதற்கான மார்க்கமக் கவுமார மேயாகின்றவாறும் பிறவுமறிக.

இலக்கணம்:

பண்புநோக்கி மூர்த்திகள் வகுக்கப்பட்டன. தாதியென்ற சொல்லிற்குப் பூந்தாதிலளைகின்ற லட்சுமியென்று கூறினுமமையு மன்றியுஞ் சூலபாணி பரசுபாணி யென்ற விதிவழி தாதியையுடையவனை யங்ஙனங் கூறப்பட்டதென்னினுந் தகும். பாவனை மனத்தின்றொழிலாதலாற் செய்யென்ற சொல்லை யதற்குபயோகப் படுத்தப்பட்டது. அன்றியுஞ் செயலென்ற சொல்லின் விகாரமாக்கி யொழுக்கமுறையெனக் கொள்ளவுங் கூடும். ஏகாரமிரண்டிடத்தில் விளியாயு மிரண்டிடத்தி லெண்கூட்டுப் பொருளாயும் வந்தமை பற்றி மயங்காது வேறுவேறுழியென்று மப்பத மவ்வுழியப் பொருடரினே விரோதமென்று மறியவேண்டுவது. இருவே திருவே யென்ற பதங்களிரே திரேயென வந்தவாறும் வேறொரு பொருளை விளைக்குமாயிற் கூறியது கூறினுங் குற்றமில்லை யென்ற விதிப்படி முற்கூறிய செய்யென்ற பகுதியுடைய செய்யவென்றுஞ் செய்திரென்று முள்ள பதங்களை வாக்கின் றொழிலாகிய பாடுதலுக்குங் கருணைப் பகுதியாகிய வநுக்கிரகத்திற்கு முபயோகப்படுத்தி யிருப்பதுமறிக. விவற்றுட் பிற்பகுதி யவ்வுழி மற்றோரடியினு மப்பொருள் குறித்தன்றென்பதுங் காண்க. விங்ஙனம் விரிப்பிற் பெருகுமெனச் சுருக்கின மாதலி னழுக்காறின்றி யருமை பாராட்டும் பெரும்புலவர் முகத்திற் கேட்டுத் தெளிதல் கடமையாம்.

நூல்

1. சீரா ரயிலணிந் தான்றலத் தேற்றநஞ் செந்திலதே
சீரா ரயிலணிந் தான்றலத் தேற்றநஞ் செந்திலதே

சீரா ரயிலணிந் தான்றலத் தேற்றநஞ் செந்திலதே
சீரா ரயிலணிந் தான்றலத் தேற்றநஞ் செந்திலதே.

இதன் பொருள்:

சீர் - செல்வங்களுக்கு.
ஆரை - மதிள் போன்றுள்ள.
இல் - மனைவியாகிய லட்சுமியை.
அண் - பொருந்தியவரான விட்டுணுவும்.
இந்தான் - சந்திர சூடனான சிவனும்.
தல - பூமியையுடைய.
தேற்ற - தெளிந்த தன்மை பொருந்திய.
நம் - நம்மென்னும் பீசாட்சரத் தோனான பிரமாவுமாகிய மூவர்களினது.
செம் - செவ்விதான.
தில - விருப்பங்களைப் பொருந்திய.
தே - கிருபையையும்.
சீரார் - சொற்சீர்களையுடைய புலவர்களையும்.
ஐ - தலைமையான.
இல் - வீடாகிய மோட்சத்தையும்.
அணிந்து - அலங்கரித்துக் கொள்வதனாலுள்ள.
ஆன்றல் - பெருமையையும்.
அத்து - செந்நிறத்தையும்.
ஏற்று - இடப வாகனத்தையுடைய.
அனம் - அன்னம் போன்ற வுமையவளிடத்து.
செம் - செனிக்கின்ற தன்மையையும்.
தில - எள்ளைப் போன்ற.
தேசு - காரொளியான சனியனால்.

ஈரார் - இழுக்கப் படாதவர்களின்
அயில் - புத்திக்கூர்மைக்கு.
அணிந்து - சமீபமான நிலையையும்.
ஆன் - ஒருக்காற் பசுவடிவான சிவபெருமான்.
தலத்து - விரித்தகையில்.
ஏற்ற - ஏற்றுக்கொண்ட.
நஞ்சு - ஆலகாலவிடத்தை.
எந்து - தாங்கிய.
இல - இடமான கூர்மையுள்ள.
தே - தெய்வத்தன்மையான.

சீர் - சிறப்பு.
ஆர் - பொருந்திய.
அயில் - வேலாயுதத்தையும்.
அணிந்தான் - தரித்துக் கொண்டவரான முருகக்கடவுளின்.
தலத்து - வாசத்தலமான முப்பத்தாறு படைவீட்டுள்ளும்.
ஏற்றம் - உயர்ச்சியானது.
நம் - எங்களுடைய
செந்தில் - திருச்செந்தூ ரென்னும்.
அதே - அத்தலமே. எ-று.

கருத்து:

திரிமூர்த்திகளினது செவ்விதான விருப்பங்களை யங்கிகரிக்குங் கிருபையையும் வித்துவான்களையு மோட்ச வீட்டையு மலங்காரப் பெருமையு மிடபவாகனத்திலேறு முமையவளுக்குக் குழந்தையான தன்மையையு மெட்போன்று கருநிறச் சோதியான சனியாற் பீடிக்கப் படாதவர்கட்குச் சமீபமாகத் தோற்றுகின்ற நிலையையு மொருக்காற் பசுவடிவமாயுந் திருவிளையாடற் செய்த சிவபெருமான் கையாலேற்றுக்கொண்ட வாலகால விடந்தங்கிய கூர்மையோடுகூடித் தெய்வத்தன்மை பெற்றுள்ள வேலாயுதத்தையுந் தரித்துக் கொண்ட முருகப்பெருமான் வசிக்குந் தலமான முப்பத்தாறு படை வீட்டுள்ளுந் திருச்செந்தூரே யுயர்ச்சியுள்ள தென்பதாம்.

ஞாயம்:

செல்வத்திற் கதி தேவதையாகையா லிலக்குமியை யதன் மதிளென்று மவளாகிய பத்தினியின் பொருத்தமென்றதால் விட்டுணுவென்றும் விநாயகர் முதலோருஞ் சந்திரனைத் தரித்திருப்பினு மவனுக் கபயப் பிரதானர் சிவபெருமானே யாதலி னவரை யீந்தானென்றுஞ் சிட்டித்ததாற் பூமியையுஞ் சரசுவதி சம்பந்தத்தாற் றெளிவையும் பிரமாவுக்குச் சொன்னதன்றி நம்மெனும் பெயர் கூறியது பஞ்சகிருத்திய தேவதைகளின் பீசமான பஞ்சாட்சரத்தின் முதலக்கர மஃதாதலானு மெவ்வகைப்பட்ட பீசங்களுக்கு மகரவொற்றுப் புணர்தல் வழக்காதலானு மென்று மறிக. குட்டியதாலுஞ் சக்கரந் தாருகனிடத் திருந்து மீட்டுக்கொடுத்ததாலு முபதேசித்ததாலுந் திரிமூர்த்திகள் விருப்பங்களையுடைய கிருபை யென்று முழுதுணர் புலவனாதலிற் புலவர்களையும் பரமகுரு நாதனாதலின் மோட்சத்தையு மகாடம்பனென்னு நாமத்தா லலங்காரப் பெருமையையுஞ் சொற்றமை போன்ற ஞாயங்களைப் புராண வாசனை யூகத்தாலு மான்றோர்

பழக்கத்தானு மறிய வேண்டுவது உமையவளுக்குத் தனித்தோ ரிடப வாகன முண்டென்பது விசாரித்தரிய வேண்டுவது சிவபெருமானுட னிடபத்தேறுதலானுமமையும். எள்ளுக் கதி தேவதையாதலானு மற்றைய கோட்களிற் சிறுத்தவடிவின தாதலானுஞ் சனிக்கு நிறத்தன்மை யன்றியு மஃது பொருந்தியவாறுந் தீக்கோட்களால் வாதனைப்படாதவர்க்குத் தெய்வ நிலை சமீபமாகத் தோற்றுமாதலி னங்ஙனங் கூறியது மனுச்சோழனைச் சோதிக்கும் பொருட்டுச் சிவபெருமான் பசுவடிவ மெடுத்தா ரென்பது முரையின் முப்பத்தாறு படைவீடென்றது திருவருட் சம்மதத்தாலுள்ள தன்கோளென்பது மற்றையவு மறியு மாறறிதல் கடனாம்.

இலக்கணம்:

ஆரை யென்றதிலுள்ள வைகாரம் போலியாய் நின்றது. இரண்டாமடியினு மவ்வுழி யங்ஙனமே நின்றது. உவமைத் தொகை யாகு பெயரா உமையவளுக்கு வந்த வன்னமென்ற பதமனமென மெலித்தது. அணித்தென்ற பத மணிந்தென மெலித்தல் விகாரமாயிற்று. ஏந்தென்ற பத மெந்தெனக் குறுக்கல் விகாரமுற்றது. ஆனாகிய சிவனை யங்ஙனங் கூறிய முறை மூர்த்த பேதமாதலி னதைப் பற்றிய விகாரமின்று அனத்தின் கட் செம்மென வர வேண்டுவதனஞ் செம்மென வந்த வுருபுத்தொகை முதலியவற்றை விரித்தில மாயினுங் கண்டு கொள்க. *(1)*

2. செந்திலையா நின்றன தடியாரிற் செறியென் னையே
செந்திலையா நின்றன தடியாரிற் செறியென் னையே
செந்திலையா நின்றன தடியாரிற் செறியென் னையே
செந்திலையா நின்றன தடியாரிற் செறியென் னையே.

இதன் பொருள்:

செந்தில் - சீவகோடிகளிடத்திலும்.
லயா - ஒடுங்கியிருப்பவனே.
நின்றன - நிலைபெற்றிடல் போன்ற.
தடி - மின்னாகிய பெண்கள்.
ஆர் - பொருந்தி வசிக்கின்ற.
இல் - வீட்டுக்கெல்லாம்.
செல் - போகின்ற
தி - புத்தியுடையோன்.
என் - என்று சொல்கின்ற
னையே- இகழ்ச்சியினிடத்து.

செம் - உண்டாகின்ற.
தில் - விருப்பத்தோடு கூடிய.
ஐ - சுவாமியே.
ஆனின் - பசுக்களாலுண்டான.
தன - சம்பத்துடையோராய.
தடியார் - வில்லாளிகளுமான விட்டுணு மூர்த்திகளுக்கும்.
இல் - மனைவியானவுமையவளே.
செறி - தன்னிற் கலந்து கொண்டதும்.
எல் - சூரியனை.
நை - துக்கப்படுத்தியதுமான.
ஏ - வியப்பும்.

செம் - செவ்விதான.
திலை - தில்லைத்தலமும்.
ஆன் - உடையவனான சிவனுக்கும்.
இன் - சந்தோடத்தைச் செய்கின்ற.
தன் - தன்மையுடையவனே.
தடு - இசைவுற்றும்.
இயாரில் - தம்மையொப்புக் கொடாத பெண்களைப் போன்று.
செறி - ஊடலாற் கோபிக்கின்ற.
என்னை - என் தன்னையாகிய வள்ளிநாயகியை.
ஏ - பொருந்துதலுற்று.

செந்தில் - திருச்செந்தூரிலெழுந்தருளிய.
ஐயா - அப்பனே.
நின் - உன்னுடைய.
தனது - சொந்தமான.
அடியாரில் - மெய்யடியார் கூட்டத்தில்.
செறி - சேர்த்தருள்.
என்னை - அடியேனை.
எ-று - ஏ - ஈற்றசை.

கருத்து:

ஆன்ம கோடிகளிலுங் கலந்திருப்போனே நிலையான மின்னல்களைப் போன்ற பெண்கள் வசிக்கும் வீடுதோறும் போகின்றவனென்று மிகழ்ச்சியை விரும்புகின்ற சுவாமியே பசுக்களாலுண்டான செல்வத்தையும் வில்லையுமுடைய விட்டுணுக்களுக்கு

மர்த்தநாரீச்சுர மூர்த்த மெடுத்தவருஞ் சூரியனைத் துன்பப்படுத்தியவருந் தில்லை சிதம்பரத்தை யுடையவருமான சிவனுக்குஞ் சந்தோடத்தைச் செய்கின்ற தன்மையுடையோனே யந்தரங்கத்திசை விருந்துமில்லார் போன்றூடுகின்ற வெந்தன்னையான வள்ளிநாயகியைக் கலந்து செந்தின் மாநகரத்தி லெழுந்தருளிய வப்பனே யுனது சொந்தமான மெய்யடியார்கள் கூட்டத்திலடியேனைச் சேர்த்தருளென்பதாம்.

ஞாயம்:

சருவாந்தரியா மித்துவ முள்ளோனென்பது தோற்ற வான்ம கோடிகளிற் கலந்தோ னென்றதும் போக மூர்த்தியுமவனே யென்பானலர் விரும்புமாறு சொன்னது மசுரர்களைக் கெடுக்கும் போரையு முபதேசஞ் செய்யுங் குருத்துவத்தையும் வகித்தமையால் விட்டுணுவுக்குஞ் சிவனுக்குஞ் சந்தோடஞ் செய்வோ னென்றது மங்ஙன மூடுந்தன்மை மறக் கற்பினதாதலின் வள்ளி நாயகிக் கமைத்ததுஞ் சித்திமுத்தி யிரண்டுஞ் சாத்தியப்படாமையின் மெய்யடியாரிற் சேர்க்கப்பட்டில மென்றோர்ந் தங்ஙனஞ் சேர்க்கும்படி வேண்டியது மறிக.

இலக்கணம்:

செந்திலயாவென வரவேண்டுமுழி செந்திலையா வெனவந்தது போலி யைகாரமாயது அச்சொல்லிடையுற்ற வேழாமுருபாமில்லீற்று லகர வொற்றை வருமொழி முதலா மவ்வுயிர் மெய் கொண்டு நின்ற வியற்கைப் புணர்ப் பறியாது மயங்குநர் பலராம். நிலைபெற்ற மின்போலி யென்றமையாற் பெண்ணென வருவித்திட நோக்கிப் பன்மையாக் கொள்ளப்பட்டது. புத்தியோ னென்றற்கு புத்தியெனல் பின்மொழித் தொகை. விட்டுணு ந்தாவதார முடையவராதலிற் பன்மை பொருந்திற்று. தடியாரென்ற சொற்குப் பசுமேய்க்குங் கோலுளாரென்னினும் பெருத்தவடிவுள்ளா ரென்னினுமமையும். தக்கன் வேள்வியிற் பற்களைந்தமையாற் சூரியனைத் துன்பப் படுத்தியதாகக் கூறப்பட்டது. முதலடியீற்றேகாரம். வீடேயிருப்பினு மென்ற பிரகாரமேழா முருபிற் குபயோகப்பட்டது. இரண்டிலங்ஙன முள்ளவது வியப்பிற்குச் சொன்ன துலகவழக்கால். மூன்றிலங்ஙன முள்ளவதையேய்த லென்னும் பதத்தின் பகுதியென்றும் விகாரமென்றுஞ் சொல்வாருளா ரவற்றுளொன்றுந் தள்ளற் பாற்றன்று. ஈயாரிலென்னும் பதமியரி லெனக்குறுக்கல் விகாரக முற்றது. (2)

3. என்னை யாதிய நான்காய நாதனிளங் கந்தனே
என்னை யாதிய நான்காய நாதனிளங் கந்தனே
என்னை யாதிய நான்காய நாதனிளங் கந்தனே
என்னை யாதிய நான்காய நாதனிளங் கந்தனே.

இதன் பொருள்:

எல் - சூரியனையும்.
நனை - தேனையும் போன்ற.
ஆ - வியப்புள்ள.
தி - அறிவுக்கு.
அனான் - உவமைப்பொருளாய் வரும்.
காய - சரீரத்தின்.
நாது - இன்மை.
அன் - உடையனான மன்மதன்.
இளங்கு - தாழ்ச்சியடையத்தக்க.
அந்தன் - அழகியரும்.
ஏ - பாணத்தை.

என்ன - போன்று.
நை - சங்காரத் தொழில் செய்கின்ற.
ஆதி - சிவனாகிய.
அனான் - அவர்.
காய் - மோகத்தால் வெதும்பத்தக்க.
அநா - உலகமாதாவான வுமையவள்.
தன் - உடைய.
இளங்கம் - இளக்கமென்னு முருக்கமாகிய.
தன் - தன்மையின்.
ஏ - பொருத்தமானவரும்.

எல் - இகழ்ச்சியால்.
நனை - முழுகப்பட்டு.
ஆது - குற்றமான.
இய - வார்த்தைகளைப் பேசுகின்ற.
நான் - எனதான்ம சொருபம்.
காய் - பிரகாசிக்கத்தக்க.
அ - அந்த.
நாதன் - ஒலியையுடையவரும்.
இளம் - உன்மத்தத்திற்கு.
கந்தன் - கிழங்கு போன்றவரும்.
நே - விரும்புகின்ற.

என் - என்னுடைய.
அனை - தாய்.
ஆதிய - முதலான.
நான்கு - நால்வகையுறவும்.
ஆய - ஆகிய.
நாதன் - இறைவனாரென்றால்.
இளம் - இளமைத்தன்மை நீங்காத.
கந்தனே - கந்தக்கடவுளே.
எ-று. அன்றியும் முதலடியிலுள்ள - காயநாதனிளங் கந்த னென்றலைச் சீரத்திற் காதாரமான பிரமா தாழத்தக்க முடிவையுடையா ரென்று மூன்றா மடியிலுள்ள ஆதிய நான்காய நாத னென்றலைக் குற்றமாகிய காட்டிலுள்ள வகங்காரத்தைக் கெடுக்கின்ற வகரத்தொனி யுடையாரென்றும் பொருள் கூறினுமமையும்.

கருத்து:

சூரியனையுந் தேனையும் போன்ற வியப்புள்ள வறிவுக் குவமைப் பொருளானவரு மன்மதன் றாழத்தக்க வழகையும் பிரமா தாழத்தக்க பொருண் முடிவையு முடையவரும் பாணம்போன்று சங்காரத் தொழில் செய்கின்ற சிவபிரான் மோக வெப்பமடையத்தக்க வுமையவளுருக்கத் தன்மைக்குப் பொருத்தமானவரு நிந்தையின் முழுகிக் குற்றவார்த்தைகளைப் பேசுமெனதான்ம சொரூபம் விளங்கும்படிக்கு மகங்காரங் கெடும்படிக்கும் பேசுமொலியை யுடையவரு முன் மத்தத்திற்குக் கிழங்குபோன்றவரும் விரும்புகின்ற வெனது மாதா பிதா குரு தெய்வமென்னு நால்வகை யுறவுமான வருமாரென்றா விளமைப் பருவ நீங்காத கந்தக் கடவுளே யென்பதாம்.

ஞாயம்:

பிரகாசத்தாற் சூரியனையு மினிமையாலும் பலவாறு கூட்டப்படுந்தன்மையாலுந் தேனையு மறிவுக்குவமை கூறியது மதினும் பெரும்பேறின்மை யாதற்குவமைப் பொருளென்றவனைக் கூறியது மழகாலும் புலமைத்திறத்தாலு மன்மதனையும் பிரமாவையுந் தாழ்த்தியதும் விரைவாலுங் கொடுமை யாலுஞ் சங்கராத் தொழிற்குப் பாணத்தை யுவமித்தது முமையவளின் வல்லபந் தோற்றச் சிவன் வெதும்புந் தன்மை கூறியது மகவாசையின் பெருமையும் பாட்டுடைத்தலைவ னருமையுந்தோற்ற வப்படிப்பட்ட வுமையவளி னுருக்கத்தைக் காட்டியது மவன் வார்த்தையின் மகிமையினைக் குறித்தான்மப் பிரகாசத்தையு மகங்கார நாசத்தையுங் காட்டியதும் வீரமும் பிரபுத்துவமுந் தோற்ற வுன்மதத்திற்குக் கிழங்கு போன்றவ னென்றது மவனைத் தவிர வேறுற

வறியே மென்பானால் வகையுறவு மவனேயென்றது மாதாவாதிய நாற்பொருள் பிதா குரு தெய்வமென்பன சேர்ந்தவையே யெனள் சருவ சாத்திர லோகப்பிரசித்த மென்பது மிரட்டுறமொழிந்த பொருளையுங் கருத்துரையிற் கூட்டிக் கொண்டவாறுங் காண்க.

இலக்கணம்:

முழக்கமென்ற பெயர்ச்சொல் வினைவழி பெயரெச்சமாம் போது முழுங்கு முகிலெனவருமாறு. இளக்கமென்ற தாழ்மைப் பெயர்ச் சொல் லிளங்கந்தனாயிற்று. அன்னா னென்ற பத மனானென மெலிந்தோருழி போல் வானெனப் பொருடந்து மற்றோருழியவ னென்னுஞ் சுட்டுப் பொருடந்தது. பிற்பொருள் பலர்க்கையந் தருமாதலின் "அன்னான் சேவலு மயிலும் போற்றி" யெனலாதிய வான்றோருரையாற் றெளியக் கடவர். அன்னையென்ற தாய்ப்பெயர் மெலிந்து அனாவென விளிபோன்றமைந்ததின் மருளா தம்மா வந்தாள் அப்பா வந்தாரென்னு மொழிவழியெனக் காண்க. அதனடுத்த தன் சாரியை யுடைமை காட்டி நின்றது. இளக்கமென்னு முருகப்பெயரிளங்கமென மெலித் தாறா முருபு தொக்கு நின்றதடுத்த தன்மைப்பெயர் மை விகுதி கெட்டு நின்றது. இகழ்ச்சியினனைத் தன் முழுகல் பற்றி நின்றது. அது வெப்பமாதலிற் குளிர்ச்சிக் குறிப்பு கூடாதென்பார். வஞ்ச நிந்தைபோலுமென்றுங் குளிர்மிகினுந் தாங்கலரி தென்றுங்காண்க. தீயென்னு மறிவுப் பெயர் தி என வந்ததற்கும் சிறப்பு னகரம் பொது நகரமாறி நின்றதற்கு மனையவாய பலவற்றிற்கும் பெரும்புலமை யுடையோரைக் கேட்டுத் தெளிய வேண்டும். இப்பிரபந்தத்திற்கு முந்திய சிவனேக பாதத்தந்தாதி யுரையானு மனேகம் வெளியாமாறுங் கண்டுகொள்க. (3)

4. கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங்கடைத் தகைத்தே
கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங்கடைத் தகைத்தே
கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங்கடைத் தகைத்தே
கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங்கடைத் தகைத்தே.

இதன் பொருள்:

கந்தன் - பொதியமலையை யுடைய வகத்திய முனிவரது.
ஐ - சுவாமியும்.
எண் - இகழப்பட்ட.
இக்கனி - கரும்பனான மன்மதனையுடைய கடிதடத்தாலுண்டாகும்.
ஆது - குற்றத்தோடு கூடிய.

அசித்தம் - அஞ்ஞானிகளாகிய வெமது.
கள் - கள்ளத்தனத்தை.
தைத்த - அடைத்துள்ள.
கை - சிறுமைபொருந்திய.
தேகம் - சரீரத்தின்.
தனை - அளவை.
எண்ணிக்கு - தொகைப்படுத்துகின்றவனான பிரமாவுக்கு.
அனிய - சமபந்தமில்லாத.
அத - அத்திமரம்போன்ற.
சித்து - ஞானத்துக்கு.
அம் - அழகாயிருப்பவரும்.
கடு - விடமாகிய.
ஐ - அதை.
தகைத்த - தடைசெய்த.

ஏகம் - ஒரு பொருளான சிவபிரானுக்கு.
தனை - குழந்தையும்.
எண் - எட்டென்னுந் தொகையுள்ள.
இக்கன் - தேன்போலு மினிமையுற்றேனும்.
நியாத - அங்கந்நியாச கரந்நியாச மென்னுங் கிரியாசம்பந்தமுள்ள.
சி - நெருப்பில்.
தங்கு - அதிட்டித்து வசிக்கும்.
அடு - சங்கராத் தொழிற்பெற்று.
ஐத்த - தலைவரான வுருத்திரர்களையுடையனவான.
கை - கைகளைக் கொண்ட.
தே - தெய்வமுமான.

கந்தனை - கந்தமூர்த்தியை.
எண்ணி - தியானஞ் செய்து.
கனியாத - முதிர்ச்சியடையாத.
சித்தம் - மனமானது.
கடை - கீழ்மையான.
தகைத்தே - குணமுடையதே. எ-று.

- அன்றியு முதல் வரியிலுள்ள விக்கனியா தென்ற சொல்லிடையுற்ற இகரத்தை யெண்வடிவாகக் கொண்டு பெண்கள் சரீரத்தின் பாதியிலுள்ள மன்மதன் வாசத்தலமான கடிதடத்தாலுண்டாங் குற்றமெனப் பொருள் கூறினுமமையும்.

கருத்து:

பொதியை முனிவருக்கிட்ட மூர்த்தியும் காம விகாரத்தாற் குற்றப்பட்டு கள்ளத் தனத்துக்கிருப்பிடமாகின்ற வெமது சரீரங்களின் கணக்கினோக்கமுள்ள பிரமாவுக் கெட்டாம லத்திமரம் போன்றுள்ள ஞானத்துக் கழகாயிருப்பவரும் ஆலகால விடத்தைத் தடுத்த சிவபெருமானுக்குக் குழந்தையும் எட்டுவிதச் சந்தோடத்தை யுடையவரும். கருமா நுட்டானங்களுக்கு முக்கியமான நெருப்பிற் சம்பந்தப்பட்டுச் சங்காரத் தொழிற்குத் தலைமை பெற்றுள்ள வுருத்திரகணங்களாகிய வாயுதந்தரித்த கையோடிருக்குந் தெய்வமுமான கந்த சுவாமியைத் தியானித்துக் கனிவடையாத சித்தந்தாழ்மைப்பட்ட குணமுடைய தேயென்பதாம்.

ஞாயம்:

மன்மதனுக் கரசாட்சித் தானங்கடி தடமே யென்பது மதனாகமப் பிரசித்தமென்பதும் பிரமாசரீரஞ் சிருட்டிக்கும் வேலைக்காரனாதலிற் சலிப்பா லொவ்வொருயிரைப் பற்றியுமிதற்கித்தனை சரீரஞ் செய்தோ மேயின்னுமெத்தனை செய்ய வேண்டுமோ வென்றெண்ணுங் கணக்குடை யனாவா னென்பதும். ஞானவியாபகத் தடங்கும் பிரகிருதியை யனேகங்காய்களோடுள்ள வத்திவிருட்சமாச் சொல்வதான்றோர் வழக்கென்பது மெட்டென்னு மினிமை யட்டமாசித்தி முதலிய பல பொருடரு மென்பது மறிக. அன்றியகத்தியருக்குச் சுவாமியாதல் சிவபெருமான். விடத்தைத் தடுத்தல் உருத்திர கணங்களாயுதமாய்க் கையிலிருத்தலாதிய சாதாரணத் தோர்க்கும் வெளிப்படையாதலின் விரித்திலம்.

இலக்கணம்:

இக்கனையுடைய பெண்குறியை யிக்கனியெனச் சொல்லியிருக்கின்றது. தனையன் - தனையளென்னும் பதத்தின் பகுதியான தனையைக் குழந்தைக்குபயோகப்படுத்தி யிருக்கின்றது. நியாச மென்ற பதத்துள்ள சகரந்தகரமா முறைவழி வந்திருக்கின்றது. ஐ யென்னும் பதத்திலொருமைப் பொருளினுடைமை காட்டுந் துவ் விகுதியும் பன்மைப் பொருளினுடைமை காட்டும். அகரமும் புணர்ந்துடைய து களென்னும் பொருடந்தது. அன்றியுந் தேகத்தின் றனையை யென வரவேண்டுவது தேகந்தனை யெனவந்தமை போலு முருபுத் தொகை யாதிய வற்றை விரித்திலம். *(4)*

5. கைத்தந்தி யானனதற் கிளையா னெண்ணில் கல்லின்னே
கைத்தந்தி யானனதற் கிளையா னெண்ணில் கல்லின்னே
கைத்தந்தி யானனதற் கிளையா னெண்ணில் கல்லின்னே
கைத்தந்தி யானனதற் கிளையா னெண்ணில் கல்லின்னே.

இதன் பொருள்:

கைத்து - பொன்மலையைத் தாங்கிய.
அந்தி - செவ்வானம் போன்ற சிவபெருமான்.
ஆல் - ஆடும்படி செய்கின்ற.
நல் - உத்தமப் பகுதியான.
நத்து- மூக்கணிதரித்த.
அல் - இருண்ட நிறமுள்ள வுமையவள்.
கிள் - சந்தோடத்தாற் கிள்ளிக் கொள்வதற்குரிய.
ஐயான் - அழகையுடையவனும்.
எண் - யாவராலு மதிக்கத்தக்க.
இல் - மனைவியாகிய பூமியை.
கல்லினன் - தோண்டிய விட்டுணுவுக்கு.
நே - பிரியமானவனும்.

கை - ஒழுக்கத்துக்காதாரமான.
தந்தி - நூல்களை யுடையவனும்.
ஆன் - போரேறு போன்றவனும்.
அனத்தற்கு - அன்னவாகனனான பிரமாவுக்கு.
இளையான் - தோல்வியுறாது வென்றவனும்.
எண் - எட்டுவிதமாய்.
நில் - நிலைபெற்ற.
கல்வி - ஓசையாகிய வண்ணத்தை யுடையவனும்.
நன் - நன்மையின்.
ஏ - பொருத்தமுள்ளோனும்.

கைத்து - வெறுப்பினால்.
அம் - அழகுபெற்ற.
தியான - யோகாநு பூதியை.
நத்தல் - விரும்புந்தன்மையுற்ற.
கிளையான் - அருணகிரிநாதரான கிளியையுடையவனும்.
எண் - ஆன்மவிசாரத்திற்கு.

இல் - இடமானவனும்.
கல் - விடந்தீர்க்கு மணிபோன்றவனும்.
இனன் - சூரியனால்.
ஏ - வியக்கத்தக்க.

கை - துதிக்கையுற்ற.
தந்தியான னத்தற்கு - ஆனைமுகமுள்ள விநாயகமூர்த்திக்கு.
இளையான் - பிற் சகோதரனுமான முருகக் கடவுள்.
எண்ணில் - எண்ணிக்கையிலடங்காத.
கல்லின்னே - மலைகளை யுடையவனே. எ-று.

அன்றியு மிரண்டாமடியி லனத்தற் கிளையானென்ற சொல்லை யாவருக்கும் விபரீதஞ் செய்த சூரனை வென்றோனெனப் பொருள் கூறினுமாம்.

கருத்து:

சிவபெருமானாடும்படி செய்கின்றவளு மூக்கணிதரித்தவளுமான வுமையவள் கிள்ளிக்கொள்ளத் தக்கவழகனும் வராகாவதார மெடுத்துப் பத்தினியான பூமியைத் தோண்டிய விட்டுணுவுக்குப் பிரியமானவனு முத்தம நூல்களையுடையவனும் போரேறு போல்வானும் வாதத்தாற் பிரமாவையும் போராற் சூரியனையும் வென்றவனு மெட்டுவிதமாக நிலைத்த வண்ணத் தொனியுள்ளவனு நன்மையிற் பொருந்துவோனு நிராசையென்னு மலங்கார முற்ற வருணகிரி நாதரான கிளியுள்ளவனு மான்ம விசாரத்திற் கிடமானவனும் விடந்தீர்க்கும் மணிபோன்றவனுஞ் சூரியனால் வியக்கத்தக்க விநாயகருக் கிளையவனுமான முருகக் கடவு ளனந்தமலைகளை யுடையவனே யென்பதாம்.

ஞாயம்:

கைத்தென்ற சொல்லிற் பொன்னெனும் பொருளே பிறப்பதாயினு மேருவிற் பெரும் பொன்னின்மையா லது வருவிக்கப்பட்டது. அந்திவண்ணமுள்ள சிவனையாடும்படி செய்யு முமையவள் கிள்ளிக்கொள்ளு மழகென்றதா லதன் பெருமை விளங்கும். பத்தினியைத் தோண்டிய விட்டுணு வென்றதாலுலக நலத்தின் பொருட்டுத் தனது நட்டத்தையுஞ் செய்வாரென்பது வெளியாம். அவருக்குப் பிரியனென்றதா லதொழிலின் முயல்வானெனப் பொருடரும். நூலுள்ளோ னெனுஞ் சொன்முழுதுணர் புலவனென்னும் பெயரைக்குறிக்கும். பிரமாவையுஞ்

சூரனையும் வென்றமை ஞானவீரங்களின் முதிர்ச்சிகாட்டும். சந்தத்தொனி தமிழ் விருப்புணர்த்தும். நன்மையிற் பொருந்த றீமையின் வெறுப்பைக் காட்டும் நிராசை தவத்தின் பெருமையையுங் கிளியைக் கொள்ளல் கருணைப் பொலிவையுமான்ம விசாரங் குருத்துவத்தையும் விடந்தீர்க்குமணி யுவமை தீட்சாப் பிரபாவத்தையும் விளக்குமெனக் காண்க. விநாயகர் விசுவரூபத்திற் சூரியமண்டல மரையளவினின்றதா லவனால் வியக்குந் தன்மை சொல்லப்பட்டது. தானுறபவித்த பின்பே தேவோற் பவமின்மையான பெருமை தோன்ற விளையோனென்றது மெய்ச்சமயத்தோ ரெத்தேவரைக் குறித்தேனு மலையி லாராதனஞ் செய்யிலஃதி வனையே சாருமென்பான் பல மலைகளையுடையா னென்றது மறிக.

இலக்கணம்:

முற்கூறிய பண்பாலல்லென்ற சொல் லுமையவளாயிற்று. பூமியைக் குறித்த இல்லென்ற பதந்திரிய வேண்டுவ தொழிந்தமை யிடத்தால் வந்தவமைதி ஆனென்ற பொதுப்பெயரைப் போரேறெனச் சிறப்பாகத் தழுவப்பட்டது. எட்டுவித வோசையென்றதால் வண்ணமெனக் குறிக்கப்பட்டது. அன்னத்தனை யனத்த னென்றும். நன்மையை நன்னென்றுங் கிள்ளையைக் கிளையென்றுஞ் சொன்னவாறும் பிறவும் பலவாறு முன்விரித்துள்ள மாதலானும் புலவர்வாய் பாட்டிற் சேர்ந்தனவே யாதலானுந் தெரியக்கடவர். (5)

6. கல்லனந்தத் தற்கடி யேனந் நாளிலங்கைக் கிளியே
கல்லனந்தத் தற்கடி யேனந் நாளிலங்கைக் கிளியே
கல்லனந்தத் தற்கடி யேனந் நாளிலங்கைக் கிளியே
கல்லனந்தத் தற்கடி யேனந் நாளிலங்கைக் கிளியே.

இதன் பொருள்:

கல்லன் - ஓசையையுடையவன்.
அந்து - தன்னைத் தழுவிக்கொள்ளும்.
அத்தற்கு - சிவனுக்கு.
அடி - வமிசத்தினடியாயிருப்பவன்.
ஏனன் - வராகமூர்த்தியும்.
ஆளி - நரசிங்கமூர்த்தியும்.
லங்கைக்கு - இலங்காபுரிப் பட்டினத்துக்கு.
இளி - அவமதிப்பான நிந்தையெல்லாம்.

ஏகு - போய்ச்சேர்வதற்கான.
அல்லல் - துன்பத்தை.
நந்து - விருத்திசெய்த.
அத்தற்கு - கையுடைய ராகவ மூர்த்தியுமான விட்டுணுவுக்கு.
அடி - நெருக்கமானவன்.
ஏ - பாணங்களின்.
நன் - நன்மையுள்ள.
ஆள் - அடிமையான வீரவாகு முதலாயினோரால்.
இலங்கு - பிரகாசிக்கின்ற.
ஐ - சுவாமி.
கிளி - கிள்ளியெடுத்தல் போலுஞ் சொற்பஞ் சொற்பமாய்.
ஏ - தனக்கு வேண்டியவற்றை.

கல் - கற்கின்ற.
அனம் - அன்னப்பட்சி போன்ற சரசுவதியின்.
தத்து - ஆபத்துகளையும்.
அல் - அஞ்ஞான விருளையும்.
கடி - கோபிக்கத்தக்க.
ஏனன் - பாத்திரமானவன்.
ஆள் - தன்னாலாளப்பட்ட.
இலம் - தெய்வானை வள்ளியென்று மனைவியரின்.
கைக்கு - சீலத்திற்கு.
இளி - இணக்கமானவன்.
ஏ - வியப்பான.

கல் - மலைகள்.
அனந்தத்திற்கு - அனேகமுடையவனான முருகக்கடவுளுக்கு.
அடியேன் - தொண்டனாகிய நான்.
அந்நாளில் - பூர்வகாலத்தில்.
அங்கை - அவளதழகிய கையினிடத்திருந்த.
கிளியே - கிளியான வருணகிரிநாதனே. எ-று.

கருத்து:

ஓசையுடையோனு மெடுத்தணைத்துக் கொள்ளுஞ் சிவபெருமான் வமிசத்தி னடியானவனும் வராகன் நரசிங்கன் இராமனென்னு மவதாரஞ் செய்த விட்டுணுவுக்குப் பொருத்தமானவனும் பாணங்களானன்மை பெற்ற வீரர்களை யடிமையாயுள்ள சுவாமியுங், கொஞ்சங் கொஞ்சமாத் தன்னிடத்திற் கல்விகற்கின்ற கலைமகளாபத்தையு மஞ்ஞானத்தையுங்

கோபிக்கின்ற பாத்திரமானவனுந் தெய்வானையம்மன் வள்ளியம்மனென்னு மனைவியர் சீலத்திற் கிணக்கமானவனும், பலமலைகளையுடையவனுமான முருகப் பெருமானுக்குத் தொண்டனான நான் ஆதி நாளிலவனது கையிலிருந்த கிளியே னென்பதாம்.

ஞாயம்:

முழுதுணர் புலவனாதலி னோசையுடையோ னென்றதும். சிவபெருமான் வம்மிசத்தின் முருகனுக்குப் பிந்தினோரின்மையா லடியென்றதும் வீரவாகு வாதியரிருக்க வங்ஙனஞ் சொன்னதே தென்னி லுமாதேவியின் புத்திரரைக் குறித்த வுண்மையென்றதும். விட்டுணுவைப் போன்ற சுரரைக் கறுவுதலாவருக்கு நெருக்கமென்றது மேற்கூறிய விபகாரந்தோற்ற வீரவாகு வாதியரை யடிமை யென்றதுங் கலைமகள் கல்வி கற்கை முருகனிடத்தே யென்றல் வீராகமமாதிய நூற்பிரசித்த மென்றதுங் கற்பகத்தரு நிழலிற் கொலுவிருத்தலாதிய வற்றாலுங் குறிச்சிவா சமாதியவற்றாலு மிருமனைவியர்க்கு மிணக்கமுடையா னென்றது மலைத் தெய்வமென்ற துயர்ச்சிதோற்ற வென்றதுந் தன்னைக் கிளியென்ற தநுபவரகசிய மென்பது மங்ஙனம் பொய்கூறிற்றானும் புகழ்ச்சிப் பொருட்டமைத்ததென்னி லங்ஙனங் கூறுநர் தாமும் பெருத்த நரகவாதனைக்குப் பாத்திரராதல் சத்திய மென்பது மறிக.

இலக்கணம்:

அடிமைப் பெயராகிய ஆளென்று மொருமையை முற்குறித்த பண்பால் வீரர்கட்குப் பன்மையா யுபயோகப்படுத்தி யிருக்கின்றது. சுவாமியென்னும் பொருடந்த ஐக்கடுகத்த ககரவொற்றுச் செய்யுள் விகாரத்தான் மிகலே யா மியல்பென்பாரு முளார். ஏனந்தா ளென்ற பதத்திற் கடைவரியல்லா மூன்றிடத்து நகரமிரட்டல் சாதாரணப் பாடல்களினு மகரமிரட்ட லாதியவற்றைக் காணும் புலவர்க்கு விகற்பமாகத் தோன்றாதனவாம். கிள்ளியென்றற்குக் கிளியென்றும் அன்னமென்றற் கனமென்றும் இல்லமென்றற்கு இலமென்றுஞ் சொற்றுள்ளனவும் பிறவு மான்றோர் வழக்கேயாம். *(6)*

7. கிளியென் றிசைத் தனை யாண்டிலேயே யிதக்கே டென்னையே
கிளியென் றிசைத் தனை யாண்டிலேயே யிதக்கே டென்னையே
கிளியென் றிசைத் தனை யாண்டிலேயே யிதக்கே டென்னையே
கிளியென் றிசைத் தனை யாண்டிலேயே யிதக்கே டென்னையே.

இதன் பொருள்:

கிளி - சோழராசனால்.
என்று - எந்நாளும்.
இசைத்த - கலகமின்றிப் பொருத்தியாளப்பட்ட.
நய - மேன்மை தங்கிய.
ஆண்டு - சோழ நாடாகிய வவ்விடத்துள்ள.
இலை - படைவீடாகிய திருவேரகத்தை.
ஏயி - பொருந்திவாழ்வோனே.
தக்கு - தகுதியான.
ஏடு - இதழுள்ள தாமரைக்கும்.
எல் - பகற்பொழுதுக்கும்.
நை - துன்பத்தின்.

ஏகு - நிவிர்த்திக்கும்.
இளி - இணக்கமுற்ற.
என்றி - சூரிய மண்டலத்தை யுடையவனே.
சைத்த - இகழ்ச்சிக்குறிப்புள்ளனவான.
தையாண்டி - சரசவினோத.
லயே - கூத்துடையோனே.
இதக்கு - நன்மைக்கும்.
ஏடு - சுவடியைத் தரித்துக் கொண்டிருக்கிற.
என்னை - எமதன்னையான சரசுவதிக்கும்.
ஏ - வியப்புச் செய்வோனே.

கிளி - சமுத்திரத்துள்ள வொருசாதி மீனை.
என் - உவமிக்கத்தக்க.
திசை - முத்தியின்.
தனை - அளவாயிருப்போனே.
ஆண்டி - தவவேடமுள்ளோனே.
லய - ஒடுக்கமான.
இயி - இயமென்னும் வார்த்தையுடையானே.
த - பிரமாவாலுண்டான.
கேடு - பொல்லாங்கைக் கொண்ட.
என்னையே - அடியேனை வற்புறுத்தி.

கிளியென்று - உன்னுடைய கிளியென்பதாய்.
இசைத்தனை - சொல்லிய நீ.

ஆண்டிலேயே - ஆண்டு கொள்ளாதிருக்கின்றாயே.
இத - உனதுரிமையை
கேடு - அழிக்கத்தக்கது.
என்னை - யாதிருக்கின்றது. எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

சோழநாட்டிலுள்ள படைவீடாகிய திருவேரகத்தில் வசிக்கின்றவனுந் தாமரைக்கும் பகற் பொழுதுக்குஞ் சந்தோடத்திற்கும் பொருத்தமான சூரிய மண்டலத்தை யுடையவனு மிகழ்ச்சிக்குறிப்பான சரசக் கூத்தாடுவானு நன்மைக்குஞ் சரசுவதிக்கும் வியப்பைச் செய்வானுஞ் சமுத்திரத்துள்ள மீனை யுவமிக்கத்தக்க முத்தியினளவா யிருப்பவனுந் தவவேடத் தோனு முடிவான வார்த்தைக்காரனுமான குமரக்கடவுளே பிரமாவாற் பொல்லாங் கடைந்திருக்கின்ற வென்னை யுனது கிளியென்று சொன்ன நீயதற்கானபடி யாண்டு கொள்ளவில்லை யுனதுரிமையை யழிக்கப்பட்ட தியாதிருக்கின்ற தென்பதாம்.

ஞாயம்:

தக்கவிதழென்ற சொல்லா லஃதுள்ள தாமரை வருவிக்கப்பட்டது. பகற்போதே யெவ்வுயிர்க்கு மினியதாதலிற் றுன்ப நிவிர்த்திக் கிணக்கமுள்ளது சூரியனெனச் சொல்லப்பட்டது. அதன் மத்தியிற் றியானிக்கு முறை சண்மதங்களுக்கும் பொதுவாதலின தையுடையா னென்றமை பொருந்திற்கு சல்லாப வினோதத்தானு மாவேசத்தானு மாதலாற் சரசக்கூத்தனென்று சொல்லப்பட்டது. நன்மைக்குஞ் சரசுவதிக்கும் வியப்பைத் தருதலென்ற சொல் பழுதற்ற கீர்த்தியையுங் கல்வித்திறத்தையும் விளக்கியது. பொதுப்பட வெமதன்னை யென்ற சொல் வித்துவான்களனைவரையும் பற்றிநின்றது. ஏடுதரித்த பண்பாற் சரசுவதி யென்றற் கிடமுண்டாயிற்று. சமுத்திரத்து மீனை முத்திக்குவமித்த வாற்றா லதுபோன்று. தன்னைப் பரத்துளமிழத்திப் பிரிவற நிற்றலே யந்நிலையெனுங் குறிப்புப்பொருடந்தது. அளவென்ற சொல் வியாபகத்தை விளக்கியது. தவவேடந் தண்டபாணி மூர்த்தத்தையு மொடுங்கிய வார்த்தை ஞானோபதேசத்தையும் ஆண்டிலேயே யென்றல் சாத்தியதிசை வாராமையாற் கொள்ளு மாத்திரத்தையும் என்னை யென்ற வினாவொருவாறான சந்தேகத்தையுங் காட்டின. மற்றுநேரிடு மையங்களுண் டானாற் பெரியோர்களாற் றேறக் கடவர்.

இலக்கணம்:

கிள்ளியென்னுஞ் சோழன் பெயர் கிளியென மெலிந்தது. என்றென்னுஞ் சொல்லி லும்மை தொக்கதாகக் கூறினும் வினாவாக்

கொண்டதன் விடை யெங்ஙனமா மெனக் கருதினுங் குறித்த பொருடரும். இல்லையென்றற் கிலையென்றதும். நைவு என்ற சொல்லை யுகரச்சாரியை யின்றி நையென்றது முருபுத்தொகைகளும் மலை யென்ற பத மீருழி போலியா நின்றதும் லய, இயி லயேயியான வியல்புப் புணர்ச்சியும் பிறவு மறியக் கடவர். (7)

8. என்னகத்தாடல் செய்யாறக் கரத்திலிய லண்ணலே
என்னகத்தாடல் செய்யாறக் கரத்திலிய லண்ணலே
என்னகத்தாடல் செய்யாறக் கரத்திலிய லண்ணலே
என்னகத்தாடல் செய்யாறக் கரத்திலிய லண்ணலே.

இதன் பொருள்:

எந்நக - எந்தமலையின்.
தாள் - அடிவாரமும்.
தல் - தலங்களும்.
செய் - விளைநிலமும்.
ஆறு - கங்கையாதியநதிகளும்.
அக்கர் - நேத்திர பொலிவுள்ள விந்திரர்களின்.
அத்து - பொன்னாலு மணியாலுஞ் செந்நிறங்காட்டும்.
இல் - மனைகளும்.
இயல் - முதன்மைத் தமிழும்.
அண்ணல் - பெருமையும்.
ஏ - பாணம்.

என் - என்று சொல்லத்தக்க.
அகத்து - அகங்காரத்தோடு கூடிய.
ஆடு - தகர்வாகனமும்.
அல் - மதிள்களும்.
செய் - திருத்தப்பட்ட.
ஆறு - வழிகளும்.
அ - அந்த.
கர - ஆலகால விடத்தின்.
திலி - விருபினனான சிவனும்.
அலள் - பிரகிருதிக்கதி தேவதையான பராசத்தியும்.
நல் - நன்மையும்.
ஏ - வியப்பும்.

எல் - சூரிய மண்டலமும்.
நக - காலிலுள்ள நகத்தால்.
தாடு - தலைமை பெற்றதான சேவற்கொடியும்.
அல் - அல்ல.
செய் - செந்நிறமான வீரத்தன்மை.
ஆற - குன்றிக்கெடும்படி.
காத்து - கையிடத்து.
இல் - யாதுமின்மையான மிடியின்.
இயல் - குணப்பகுதிகள்.
அண்ணல் - பொருந்திய தேயா மப்படிப்பட்ட.

என்னகத்து - அடியேன் மனத்தில்.
ஆடல்செய் - நடனஞ்செய்வீராக.
ஆறக்கரத்தில் - சடாட்சர மந்திரத்தில்.
இயல் - பொருந்திய.
அண்ணலே - இறைவனான முருகக்கடவுளே. எ-று.

கருத்து:

மலையடிவாரங்களு முத்தமத்தலங்களுந் தினைப்புன மாதிய விளை நிலங்களுநதிகளு மிந்திரர்களி னரண் மனைகளுந் தமிழும் பெருமையுமம்பு போலுங்கூரிய கோரகுணத்தின தானவாட்டுக் கடாவாகனமு நகரங்களைக் காக்கின்றனவான மதிள்களு நல்வழிகளுஞ் சிவபிரானு மிருண்ட மாயைக்கதி தேவதையா யந்நிறத்தோடு விளங்கு முமையவளு நன்மையும் வியப்புஞ் சூரியமண்டலமுங் காலாற் சண்டை செய்வதான சேவற்கொடியுமன்றோ தேவரீராடல் செய்தற்குரிய தானங்களவைகளி லியாதுமல்லாததாய் வீரங்குன்றற் கேதுவான தரித்திரத்திற் சம்பந்தப்பட்டிருக்கின்ற வடியேன் மனத்தினு மாடல் செய்ய வேண்டுஞ் சடாட்சரமகா மந்திரத்தின் பொருத்தமுற்ற முருகப்பெருமானே யென்பதாம்.

ஞாயம்:

எந்த மலையடிவாரங்களு மல்லவென்றதா லெல்லா மலையடிவாரங்களு மாடற்குரியன வென்பது விளங்கும். குறிஞ்சி நிலப்பொருளான சிலாவிக்கிரகங்களைக் காரணமாகக் கொண்டு தலங்களெல்லா மவர்க்குரியனவெனப் பொருடரும்படி சொல்லப்பட்டது. மற்றைய பொருள்களை யாடற்கிடமாக் குறித்தவாறு வெளிப்படையாதலின் விரித்தில மன்றியுந் திருமுருகாற்றுப் படையாதிய வான்றோர் நூல்கள், சதுக்கஞ் சந்தி புதுப்பூங்கடம் பாதியவற்றையு

மிடமாகக் குறித்துள்ளவாறுங் கண்டு கொள்க. இங்ஙனமுள்ள வென்மனத் தாடல் செய் யென்றமை தக்கனவாய யவற்றிலாடலோர் பெருமையன்றிழிந்ததாய விதனிலாடலே நின் கருனைக் குயர்ச்சியா மெனப்பொருடந்தது ஆறக் கரத்திலிய லண்ணலென்றதா லம் மந்திரத்தினு முரித்துள்ளன வேறின்மை காட்டியது.

இலக்கணம்:

தலமென்ற சொல்லைச் சாரியை தள்ளித் தல்லெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அது முதலான சில சொற்களுக்கமைதி நோக்கிப் பன்மை வருவித்திருக்கின்றது. அக்கரென்ற னேத்திரத்தாரென்றே பொருடரு மாயினு மிகுதி நோக்கி யிந்திர ரெனச் சொல்லப்பட்டது. கொடுமையாலும் விரைவாலு மாட்டுக்கடாவிற்குப் பாண முவமைப் பொருளாகியது. அல்லளென்ற பத மலளெனவிதி வழி மெலிந்தது. அதன்முன், தில்லுடையானைத் திலியெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. முற்கூறிய பண்பாற் சேவற்கொடியெனப் பொருடந்தது. மறுத்தற் பொருடரும் அல்லென்ற சொல்லை முற்கூறிய பதங்கடோறுங் கூட்ட வேண்டுவது. நிறத்தால் வீரமுரைக்கப்பட்டது. மற்றும் விரிக்கத்தக்க வாறுள்ள வேயா மாதலிற் றக்கோராற் கேட்டுத் தெளிதன் முறையெனக் காண்க. *(8)*

9. இயலிசை நாடகத் தாசான் சிகிநடத் தேந்தலன்றே
இயலிசை நாடகத் தாசான் சிகிநடத் தேந்தலன்றே
இயலிசை நாடகத் தாசான் சிகிநடத் தேந்தலன்றே
இயலிசை நாடகத் தாசான் சிகிநடத் தேந்தலன்றே.

இதன் பொருள்:

இ - தனது பாதியில்.
அல் - இருண்ட நிறம்.
இசை - பொருந்தியவரும்.
நாடகத்து - நடனத்தில்.
ஆசான் - விரைவுள்ளவருமான சிவபெருமானுக்கு.
சிகி - தீபமாவானும்.
நட - கானப்பாட்டின்.
தேம் - இனிமையை.
தலன் -இடமாக கொண்டவனும்.
தேய் - உருவங் குறைகின்ற.

இயலி - குணத்தையுள்ளவனான சந்திரனுக்கு.
சை -இகழ்ச்சி யுண்டாம்படி.
நாடு - விரும்பிய.
அகத்து - மனமுடைய.
ஆசான் - வியாழன்.
சிகி - மலையான மேருவில்.
நடத்து - செய்த.
ஏந்தல் - பெருமையை.
அன்று - அந்நாள்.
ஏயி - பொருந்தியவனும்.
அலி - இயமனானவன்.
சைநாள் - சமணரை.
தக - ஏற்றுக்கொள்ளும்படி.
தா - வென்ற.
சான் - விற்போன்ற வனும்.
சிகி - கேது வென்னுந்தீக்கோளால்.
நன் - அபேட்சிக்கப்படுகின்ற.
தத்தேம் - ஆபத்தையுடைய வெமக்கு.
தலன் - நன்னிமித்தமாவானும்.
தே - தெய்வத்தன்மை வாய்ந்த.

இயலிசை நாடகத்து - இயலென்று மிசையென்று நாடகமென்றுமுள்ள மூன்று தமிழுக்கும்.
ஆசான் - பரமாசாரியனானவனு மாரென்றால்.
சிகி - மயிலே.
நடத்து - வாகனமாகச் செலுத்துகின்ற.
ஏந்தல் - அரசன். எ-று. அன்றே - அசைச்சொல்.

கருத்து:

திருமேனியிற் பாதி கருத்தவரு நடனத்தில் விரைவுள்ளவருமான சிவபெருமானுக்குத் தீபமானவருங் கானப் பாட்டி னினிமையில் வசிக்கின்றவருஞ் சந்திரனுக்கிகழ்ச்சியை யுண்டு பண்ணிய வியாழனான் மேருவிற் செய்யப்பட்ட பெருமையையே யேற்றுக் கொண்டவரு மெமதருமன் சமணரைக் கைக்கொள்ளும்படி செயித்த விற் போன்றவருங் கேது வென்னுந் தீக்கோளா லாபத்துப் படுகின்ற வெமக்கு நன்னிமித்தங் காட்டுவாருந் தெய்வீகம் பொருந்திய முத்தமிழ்க்கு மாசாரியராவாரு மயிலை நடத்துகின்ற வரசனான முருகக் கடவுளே யென்பதாம்.

ஞாயம்:

அர்த்த நாரீச்சுர மூர்த்த மெடுத்தாற் பாதி கறுப்பென்றதுங் காளியை நடனத்திற் செயித்ததாலதில் விரைவுள்ளாரென்றதும் பிரணவார்த் தத்துள்ள சந்தேகந் தீர்த்ததாற் றீபமென்றது நாததத்துவத்தி னிலையுணர்ந் தோரென்பா னதனை யிடமாவுள்ளா ரென்றதுஞ் சாபத்துட்பட்ட சந்திரன் சகிதமாயெல்லாத் தேவரு முய்யும்படி வியாழன் பிராத்தித்தமையு மதனையேற்றுக் கொண்டதுங் கந்த புராணத்துள்ளதோர் சரித்திர மென்பதுஞ் சமணரை வெல்லும் பொருட்டுச் சரமழைப்போற் கவிபொழிந்தாலுங் கோரங்காட்டாமற் சமவாதத்துக் கிடங் கொடுத்த லாகிய வளைவாலும் விற்போல் வானென்றதுந் தீக்கோள் வாதனையிற் பட்டுள்ள போதுந் தமக்கு நன்மை வருமாறொரு வாறுணர்த்தலா னன்னிமித்த னென்றதும் பலவற்புத மாதிநாள் விளைத்தமையாற் றமிழ்க்குத் தெய்வத்தன்மை சொன்னது மதைச்செய்த வகத்திய மகாமுனிவர்க்கு மாசாரியராதலிற் பரமாசாரித்துவஞ் சொன்னது முபாசிப்போர் பெருமை நோக்கி மலையாதற் பொருட்டு மயிலை நடத்துமேரரசனென்றது மறிக.

இலக்கணம்:

முதலிகரத்தை யெண்வடிவாகக் கொண்டு பாதியெனக் கூறப்பட்டது. சைநர்களென்ற சொல்லைச் சை நாளென வுலக வழக்கத்தைத் தழுவிச் சொல்லப்பட்டது. தாவென்னுஞ்சொற் பொருளான தாண்டுதலைக் குறிப்பாற் செயித்தற் குபயோகப் படுத்தி யிருக்குது. சானுவென்னும் விற் பெயரி லுகரச் சாரியை யியல்பின்வழி தள்ளப்பட்டது. மற்றுமொரு பதத்தோ டொருபதம் புணர்ந்து பொருடருமாறும் பிறவு நன்காலோ சித்தும் பெரும்பழக்கத்தாலும் பெரும்புலவர் வாய்மொழிகளாலு மறிய வேண்டும். *(9)*

10. ஏந்தலைச் சாகரத் திற்றீயி னானிட வீதலென்றே
ஏந்தலைச் சாகரத் திற்றீயி னானிட வீதலென்றே
ஏந்தலைச் சாகரத் திற்றீயி னானிட வீதலென்றே
ஏந்தலைச் சாகரத் திற்றீயி னானிட வீதலென்றே.

இதன் பொருள்:

ஏந்தல் - அரசர்களின்.
ஐ - தெய்வமாகிய விட்டுணுவுக்கு.
சா - மரணத்தைக் கொடுக்கத் தக்க.
கர - ஆலகால விடமாகிய.

திற்றீயினான் - புசிப்பையுடையவரான சிவபெருமான்.
இடு - தரித்துக்கொண்ட.
அலீ - ஆம்பலோடிருப்பவளான கங்கையின்.
தல் - ஆழத்திலுதித்த.
என்று - சூரியன் போல்வானே.
ஏ - இகழ்ச்சிக்காரணமான.

ஏம் - இறுமாப்பில்.
தலை - முதன்மையுற்ற.
சா - பேய்போன்ற வகங்காரத்தையும்.
கர - வஞ்சத்தோடு கூடிய.
தில் - விருப்பத்தையும்.
தீ - தீய்ந்துபோகச் செய்கின்ற.
இன் - களிப்புள்ளோனே.
ஆனிடு - ஒருகாற்கெடுகின்றதான.
அல் - இருண்ட.
ஈது - இவ்வஞ்ஞானம்.
அல் - அல்லாத.
என் - என்னுடைய.
தே - கடவுளே.

ஏந்தல் - பெருமையுற்ற.
ஐ - அலங்காரம்.
சாகரத்து - பலகோடிகளுக்கும்.
இல் - வாசத்தலமா யிருக்கின்றோனே.
தீ - கொடிய.
இனா - துன்பமானது.
நிடல் - வளர்கின்றதா யிருக்கின்றது.
ஈ - ஈய்களின்.
தல் - கலப்புள்ளதான தேன்.
என் - என்று சொல்லத்தக்க.
தே - உனது கிருபையானது.

ஏந்து - தாங்கிய.
அலை - அலைகளையுடைய.
சாகரத்தில் - சமுத்திரத்திலும்.
தீயில் - நெருப்பிலும்.

நான் - அடியேனால்.
இடல் - போடப்பட்டுள்ளவற்றை.
ஈதல் - கொடுப்பது.
என்றே - எந்நாளோ. எ-று.

கருத்து:

அரசர்களுக் கதிட்டான தேவதையான விட்டுணுவுக்கு மரண மூர்ச்சை யுண்டு பண்ணிய காளகூட விடத்தைப் புசித்த சிவபெருமான் றரிதிருக்கிற கங்கையி னாழத்திலுதித்த சூரியன் போல்வானே இகழ்ச்சியைத் தருகின்ற விறுமாப்பு வடிவான வகங்காரத்தையும் வஞ்சக விருப்பத்தையுங் கெடுக்கின்ற வானந்த மயமானவனே யொருக்காற் கெடுக்கின்றதா யிருண்ட வடிவோடிப்போது போராடுகின்ற வஞ்ஞானத்துக் கன்னியமான வென்றெய்வமே பெருமையான பலகோடி யலங்காரங்களும் பொருந்திய முருகக் கடவுளே துன்பம் விருத்தியடைகின்றது தீரும்படி யீய்களைத் தன்னிற் கலக்குந் தேன்போன்ற வுனது கிருபையடியேன் கடலினுந் தீயினும் போட்டிருக்கின்ற பிரபந்தங்களாதியவற்றைத் தருவதென்றோ வென்பதாம்.

ஞாயம்:

தன்மைகளால் விட்டுணு சிவன் கங்கை முதலினரை வருவித்துரை கூறியவாறுந் தேனாசை மிஞ்சியதில் வீழ்ந்த வீய்கள்போ லநுபூதி மேலிட்ட போதீசுர கிருபையு மான்மாக்களை விடாதிழுத்துக் கொள்ளுதலால் அவ்வுவமை கூறியதுந் துன்பத்தின் விருத்தி சொல்லவந்த பதமாகிய நீடலென்பது நிடலெனக் குறுகியது பின்வரு நன்மைக் குறிப்பாயதும் பிரபந்தங்களன்றி வேல்வேங்கை மணியாதியுங் கடலிற் போட்டிருப்பதா லங்ஙனங் கூறியதும் பிறவு மறிக.

இலக்கணம்:

சாவைக் கொடுக்கும்படி வந்தகரத்தைச் சாகரமென்ற பிரயோகஞ் சிலர்க்கே மயக்காது பொருடரும். அதனிடையிறக் ககரவொற்று வராமையின் உவமைத் தொகையாயது திற்றியென்பது திற்றியென நீட்டல் விகாரமுற்றது. ஆழமென்றுங் கலப்பென்றும் பொருடரும்படி வந்ததல மென்ற பத மிரண்டிடத்துஞ் சாரியை கெட்டுத் தல்லென நின்றது. அல்லி யென்ற பத மலியென்றாய்ப் பெண்பாலுடைமை காட்டுமிகரம் புணர்ந்துற்றெழுத்து நீண்டு கங்கை யெனப் பொருடந்ததும் இன்னாவென்ற பதமினா வானதும் பிறவுமறியக்கடவர். மனச்சாட்சியாய்த் திருவருட்பிரசாத மென்னுங் கூலியை விரும்பிச் செய்கின்ற தொண்டிற்

புகழ்ச்சிப் பொருட்டில்லாத பதப்பிரயோகங்கள் செய்திருக்கிறதாகவு நினைத்துக் கெடாமையின் பொருட்டிளம் புலவர்களின் பெருங் கெருவத்தைப் பிரார்த்திக்கிறேன். *(10)*

11. என்றடியா ரிடையா னாகச்செய் கையிசைத் தியின்றே
என்றடியா ரிடையா னாகச்செய் கையிசைத் தியின்றே
என்றடியா ரிடையா னாகச்செய் கையிசைத் தியின்றே
என்றடியா ரிடையா னாகச்செய் கையிசைத் தியின்றே.

இதன் பொருள்:

என்று - சூரியன்.
அடி - குரு.
ஆர் - ஆத்திமாலையை.
இடு - தரித்துக்கொண்ட.
ஐ - தலைவனான சிவன்.
ஆன - பசுக்களுக்கு.
ஆ - வியப்பைச் செய்யும் விட்டுணு.
கச்சு - முலைக்கச்சின்.
எய்கை - பொருத்த முள்ள பராசத்தி.
இசை - புகழ் பொருந்திய.
தியின் - புத்தியென்னுஞ் சத்தியையுடைய
தே - விநாயகக் கடவுள்

என் - என்று சொல்லப்பட்ட
தடி - இசைவாகிய வாறுமுகங்க ளுடையவனே.
ஆர் - அருமையான.
இடையான் - ஞானவேழத் தோனே.
நாக - மலையின்.
செய் - விளைநிலமான தினைப்புனத்தின்.
கையி - இடத்தையுடையவளான வள்ளியின்.
சை - இகழ்ச்சியான.
தி - இனிமை தோய்ந்த.
இன் - ஆனந்தத்தோனே.
தே - உன்கிருபை.

என - என்னவிப்படியிருக்கின்றது.
தடி - மின்னலுக்கு.

ஆர் - பொருத்தமான.
இடை - பெண்களிடையில்.
ஆல் - ஆடுகின்ற.
நாக - பாம்புபோன்ற கடி தடத்தின்.
செய்கை - தொழிலான கலவியை.
இசைத்தி - சேர்க்கின்றாய்.
இன்றே - அஃதில்லாமலே.

என்று - எந்நாளில்.
அடியார் - உன்னடியவர்களின்.
இடை - மத்தியில்.
யான் - அடியேன்.
ஆக - இருக்கும்படி.
செய்கை - நீ செய்கின்றது.
இசைத்தி - சொல்லக்கடவாய்.
இன்றே - இன்றைக்கே. எ-று.

கருத்து:

சூரியன் குரு சிவன் விட்டுணு பராசத்தி விநாயகரென்னுமறுவரின் சம்பந்தமான சண்முகங்களுடையோனே திருஞான வேழத்தோனே குறிஞ்சி நிலத்துள்ள தினைப் புனத்தை யிடமாகக் கொண்ட வள்ளி நாயகியினூடலிலுண்டா மிகழ்ச்சி யினிமை தோய்ந்த வானந்தத் தோனே யுன்கிருபை யென்ன விப்படியிருக்கின்றது பெண்களின் கலவியிற் சம்பந்தப்படுத்து கின்றா யஃதின்றிப் பெரியோரான வுன்னடியார் கூட்டத்தின் மத்தியிலியானிருக்கும்படி செய்வதென்றதை யின்றே சொல்லக் கடவாயென்பதாம்.

ஞாயம்:

அனேகமுறை சொல்லியபடி யறுவரைச் சொற்றமையான் முகங்களென வருவிக்கப்பட்டது. சில பண்பாற் பண்புடையார் நாமங்களையும் வருவிக்கப்பட்டிருக்கின்றன. பாம்புக்கு மின்னல் விரோத மாதலினதனோடு பொருந்திய தெனக் கூறியது. அதிசயோத்திலங்காரமதனாற் பரம்பினுங் கொடிது கடிதடமெனப் பொருடருமறியாது மயங்கு நர்பலராம். படமெனத் தோற்றும் பொருட்டாடுந் தன்மை கூறப்பட்டது. மற்றுள்ளன வெளிப்படையாமாதலின் விரிக்கிலம்.

இலக்கணம்:

எய்த லென்னும் பதத்திலுள்ள தல் விகுதியை நீக்கிக் கை விகுதி சேர்க்கப்பட்ட திரண்டும் வினைச்சொல் விகுதி யென்றறிவார் சிலரே. தடுதலென்னும் பதத்தின் பகுதியான தடுவி லுடைமை காட்டு மிகரம் புணர்ந்து தடியெனவிசை வுள்ளானுக்கு வந்தது. இனிமையின் பெயரும் புத்தியின் பெயருமான தீயிரண்டிடத்துந் தி யெனக் குறுக்கல் விகாரமுற்றது. என் னென்னும் பதத்திற் சிற்றிகழ்ச்சிக் குறிப்பும் வினாவு மிருப்பதாலங்ஙனம் விரித்துக் கூறப்பட்டது. இன்றென்னும் பதமே யின்றி யென்னும் பொருடருமுறை யாலின்றே யென்றற் கில்லாமலே யெனக் கூறப்பட்டது. 'நீரின்றமையாதுல' கென்றதாலது நன்கு விளங்கும். *(11)*

12. இன்றே கலியறத்தாக் கெனதாணை யெளிதிதன்றே
இன்றே கலியறத்தாக் கெனதாணை யெளிதிதன்றே
இன்றே கலியறத்தாக் கெனதாணை யெளிதிதன்றே
இன்றே கலியறத்தாக் கெனதாணை யெளிதிதன்றே.

இதன் பொருள்:

இன் - இனிதான.
தே - கிருபையும்.
கலி - மலைகளுமுடையவனே.
அற - தருமத்தின்.
தாக்கு - வலிமைக்கு.
எல் - பகல்போல் பிரகாசிப்பவனே.
ந - சூனியசம்பந்தமான.
தாள் - முயற்சியின்.
நை - துன்பத்தை.
எள் - இகழ்கின்ற.
இதி - உறுதிக்கு.
தன் - சொந்தமான.
தே - தெய்வமே.

இன்றே - இல்லாமலே.
கலி - விருத்தியடைகின்ற.
அல் - மாயையிருளாலுண்டாம்.
தத்து - ஆபத்தின்.
ஆ - ஆச்சரியத்தை.
கெல் - வேரோடு கெல்லிகளையும்.

நத - ஒரு விதநதிபோன்ற.
ஆண் - ஆண்மையோடிருக்கும்.
ஐ - சுவாமியே.
எள் - தள்ளத்தக்க.
இதி - பேய் போன்ற.
தன் - தன்மையை.
தேய் - அழிக்கின்ற.

இன் - ஆனந்தமயமான.
தேகு - திருமேனி.
அலி -அக்கினி போல்வானே.
அறு - ஆறென்ற தொகையின்.
அத்து - சம்பந்தமான சமயங்கள்.
ஆக்கு - உண்டுபண்ணுகின்ற.
என - வினாவைய மிகழ்ச்சி யபிமானமா மிவற்றிற் சூரியோனே.
தானை - கூட்டமாகிய.
எளி - எள்ளையுடைய வெண்ணெய் போன்ற.
தீத - நிலைமையின்.
அன்றே - பழமையோனே.

இன்றே - இன்றைத்தினமே.
கலி - கலிபுருடன்.
அற - நாசமடையும்படி.
தாக்கு - மோதக்கடவாய்.
எனதாணை - உனக்குரிய வடியேன்பேரி லாணையிட்டேன்.
எளிதிது - இக்காரியஞ் செய்வ தெளிதேயாகும். எ-று. அன்றே - அசை.

கருத்து:

இனிதான கிருபைக்கு மலைகட்கு முரியோனே தருமத்தின் வல்லபத்தை விளக்குவோனே சூனியமுயற்சியை யிகழ்வாருறுதிக்குத் துணையான தெய்வமே யில்லாதிருந்தும் விருத்தியாகின்ற மாயையிருட்டாலுண்டாகு மாச்சரியத் துன்பங்களைக் களைவதிற் புண்ணியநதிபோன் றாண்மை யோடிருக்குஞ் சுவாமியே தள்ளத் தக்க பேய்க்குணத்தை யழிக்கு மானந்த மயமான திருமேனியக்கினி போல்வானே சண் மதங்களா லுண்டாகு நன்மை தீமைக்குரியோனே அனேக மெட்களிலுண்டாகுமோ ரெண்ணெய்போலு நிலையிற் பழையோனே யுனக்கென் பேரிலாணை யிட்டிருக்கிறேனின்றைக்கே

கலிபுருட னாசமடையும் படி தாக்கக் கடவா யிது செய்தலுன் றகுதிக்கெளிதே யாகுமென்பதாம்.

ஞாயம்:

தருமத்தை விளக்குவோனென்ற ததன் விரோதிகளான வசுரரைக் கெடுத்தலா லென்றுஞ் சூனிய முயற்சியை யிகழுமுறுதி சகள வுபாசனை யென்று மாயையாலுண்டா மாபத்தைக் கெல்லுந் தன்மை குருத்துவ மென்று நதியிற் பிறந்தமையா னதமென்னுமாணாற்றை யுவமித்த தென்றுஞ் சண்மதங்களு முகங்களானதா லதனன்மை தீமைக்குரியோ னெனக் கூறியதென்று நாம ரூயம்பலவாய் வியாபகப் பொருளொன்றாதலி னெண்ணெய்யை யுவமித்த தென்றுங்கலி நாசத்தா லெல்லா நலமு முண்டா மாதலினதனை விரும்பிக் கேட்டதென்றுங் தன்பேரிலாணை யிடத்தக்க வுரிமையாதோ விருக்கின்ற தென்று மன்றியும் பேய்க்குணம் விபரீத பாவனை யென்றுந் தெரிவதோடு பிறவுமாலோசித்தறிக.

இலக்கணம்:

கல்லுடையானைக் கலியென்று சொல்லப்பட்டது. நைவு என்னும் பதத்தி னுகரச்சாரியை நீக்கப்பட்டது. தேகம் தாணையம் என்பவற்றைத் தேகுதாணையெனச் சாரியை நீக்கப்பட்டது. என்னென்னு மொரு பதத்தின் பொருணான்கு மவ்வுழியுபயோகப் படுகின்றமை யுரையில் விரித்த தஃதுடையானை யென வென்ன விளித்திருக்கின்றது. திதவன்றே யென்றற்குத் திதன்றே யென நாகணை யாதிய வாய்பாட்டாற் கூறப்பட்டது. மற்றுள்ளனவற்றையு மழுக்காறில்லா வமைதியாலறியு மாறறிவது கடனேயாம். (12)

13. அன்றந் தரத்தாத்தரை யாண்டாயென் றன்னைய கற்றிடலே
அன்றந் தரத்தாத்தரை யாண்டாயென் றன்னைய கற்றிடலே
அன்றந் தரத்தாத்தரை யாண்டாயென் றன்னைய கற்றிடலே
அன்றந் தரத்தாத்தரை யாண்டாயென் றன்னைய கற்றிடலே.

இதன் பொருள்:

அன் - ஒருமை விகுதிக்குத்தக்க.
தந்தர் - புத்தியோரை.
அத்தர் - சொற்பொருளுணர்வோர்க்கு.
ஐ - அரசாகிய வகத்தியரென்றும்.
ஆண் - ஆண்மைத்தன்மையில்.
தாய் - மூலமாகிய விட்டுணுவென்றும்.

என் - சொல்கின்ற.
தன் - தன்மையின்.
ஐய - கோழைபோலு மருவருப்புப் பகுதிகளை.
கற்றிடு - கற்கின்ற.
அல் - இருள்போலு மறிவீனத்தை.

ஏயன் - பொருந்த மாட்டேன்.
தந்த - உன்னைப்பெற்ற.
ரத்தர் - சிவந்த நிறத்தினரான சிவபெருமானது.
வயது - பிரமாணப்படி.
ஐயாண்டாய் - ஐந்தாம் வயது நடக்கின்ற குழந்தைப்பருவமுடையவனே.
என்று - சூரியனை.
அன்ன - போன்ற.
ஐய - அழகுள்ளோனே.
கல் - மலைகளாகிய.
திடலே - மேடுகளையே.

அன்று - அல்லாமல்.
அம் - அழகிய.
தா - சிலாக்கியமான .
தரை - பூமியென்னும்.
ஆண்டு - அவ்விடத்தையும்.
ஆய் - தெரிந்தேற்றுக் கொண்டு.
என்று - எக்காலத்தும்.
அன்னை - தாயான வுமையவள்.
அகற்று - விசாலப்படுத்தும்.
இடலே - ஈதலென்னுந் தருமத்தின் வடிவா யிருப்போனே.

அன்று - ஆதிகாலத்தில்.
அந்தரத்தரை - ஆகாயவாசிகளான தேவரை.
ஆண்டாய் - அடிமை யாக்கிக் கொண்டநீ.
என்றன்னை - அடியேனை.
அகற்றிடல் - நீக்கிவிட வேண்டாம். எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

அவனிவனென வொருமையாய்ப் பேசத்தக்க வற்பப் புத்தியோரையும் வித்துவ சிகாமணியான வகத்திய முனிவரென்றும்

புருடோத்தமனான விட்டுணு வென்றுஞ் சொல்லு மருவருப்புப் பகுதிகளைக் கற்றிடுதலான வஞ்ஞானத்தைப் பொருந்த மாட்டேன் றனது பிதாவான சிவபெருமானுக் கோராண்டெவ்வளவு காலங்கொண்ட தோவவ்வளவுப்படியைந் தாம் வயது நடக்குங் குழந்தையான வால சுப்பிரமணியத் தெய்வமே. சூரியனைப் போல பிரகாசிக்கும் மழகுள்ளோனே மலைகளையன்றிப் பூமியிலுஞ் சிலாக்கியமான தலங்களைக் கொள்வோனே தாயானவுமையவளா லெக்காலத்தும் வளர்க்கப்பட்ட தருமத்தின் பயனாயிருப்போனே யந்நாளிற் றேவர்களையாண்டு கொண்ட நீயடியேனைக் கைவிட்டு விடவேண்டா மென்பதாம்.

ஞாயம்:

பெருமையினு மொருமை யுண்டாதலி னங்ஙனங் கொள்ளாது சிறுமையி னொருமை யெனக் கொள்ளவேண்டுவது மப்பெருமை யொருமையுமிச் செய்யுளிருப்பது மனிதரைப் பாடும் புலவரகத்தியரையும் விட்டுணுவையு முவமிப்பது பெரும்பான்மை யென்பது மெத்தனையோ கோடி கற்பங்கூடியோ ராண்டா மென்னும் விபரமுமலைகளல்லாது மற்றைய நிலங்களினு முருகப் பெருமானாலய முள்ளவாறு தோற்ற வங்ஙனங் கூறியதுந் தாய்க்குச் சந்தோடமுண்டு பண்ணுங் குழந்தையானதால வள்வளர்க்குந் தருமத்தின் வடிவாயிருக்கின்ற தென்றதும் போகத்தை விரும்பிய தேவர்களையுங் கொண்ட நீயதனோடு முத்தியையும் விரும்புமென்னைக் கைவிடலாகா தெனக் குறிப்பித்தவாறு மறிக. அங்ஙனமாயிற்றே வரினுந் தானுயர்வேன்னுங் குறிப்போவெனகாது பலஞான நூல்களினுஞ் சொன்ன பிரகார மனச்சாட்சியான மோட்ச காமியாயி னாகலா மன்றென்னிற் றெய்வத் தண்டனை நேரிடுமென்றுணர்ந்து தம்மைக் குற்றத்துட் புகுத்தாது பாதுகாக்கக் கடவர்.

இலக்கணம்:

அன்னென்னு மொருமை விகுதி யவனிவனென்னும் பதங்களிற் சுட்டெழுத்துக்களோடு கூடிவருமாறு காண்க. அகத்தியர் விட்டுணுவாதியரைப் பண்பால் வருவித்துரை கூறப்பட்டது. தன்மை தன்னென்றாதல் போன்ற பதங்களனேகங்களுக்கு முன்னமே விபரஞ் சொல்லியிருக்கின்றன. உலக வழக்கினும் ஐயென்றருவருப்பைக் குறித்துப் பேசுதலாதிய விபரங்களெழுதி முடியாதாதலிற் சுருக்கிக் கூறப்பட்டது.

(13)

14. அகத்திய னாரை யளித்தான லாற்றஞ் சறிகிலனே
அகத்திய னாரை யளித்தான லாற்றஞ் சறிகிலனே

அகத்திய னாரை யளித்தான லாற்றஞ் சறிகிலனே
அகத்திய னாரை யளித்தான லாற்றஞ் சறிகிலனே.

இதன் பொருள்:

அகத்து - மனத்தினிடத்து.
இயல் - பொருந்திய.
நரர் - அன்பிற்குரிய.
ஐ - சுவாமி.
அளித்தான் - தன்னைப் பெற்றவனான சிவனுடைய.
நல் - உத்தமமான.
ஆற்று - மார்க்கத்துக்கு.
அம் - அழகானவன்.
சல் - பெருங்கோபத்தோடு கூடி.
திகிலன் - பயமுற்றோனை.

ஏய் - போலப்பொய்ம்மை காட்டிய.
அ - அந்த.
கத்தியன் - வாளேந்தியவனான சூரனை.
நார் - பாசமேந்திய.
ஐயள் -தலைமையுற்ற பராசத்தியான வேலால்.
இ - பப்பாதி.
தான் - ஆகவே.
அல் - இராப்பொழுதில்.
ஆற்று - செய்தவனான.
அஞ்சு - அச்சம்.
அறி - அற்றவன்.
கிலன் - சிறுமையான.

நேய - எண்ணமுள்ள.
கத்து - பிரமாவின்.
இயன் - வார்த்தைகளை.
ஆரை - மதிள்போன்று தகைந்தவன்.
அளித்தான் - வண்டுகளையுடைய மாலைக ளணிந்தோன்.
அல - துன்பத்தை.
ஆற்று - தணிக்கின்ற.
அஞ்சல் - அபயசம்பந்தக் கைக்குறியோடு.
திகு - எல்லாத்திக்கிலும்.

இலன் - தேற்றாமரம் போல்வான்.
ஏ - வியப்புப்பொருந்திய.

அகத்தியனாரை - அகத்திய மகாமுனிவரை.
அளித்தான் - பிரணவார்த்த முரைத்திரட்சித்தோன்.
அலால் - அப்படிப்பட்ட முருகக்கடவுளேயன்றி.
தஞ்சு - சகாயம்.
அறிகிலன் - யான்றியேன். எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

அந்தரங்கபத்திக்குரிய தெய்வமும் பிதாவான சிவபெருமானுடைய நன்மார்க்கத்துக் கழகானவனும் பெருங்கோப முற்றிருந்தும் பயந்தவன் போலே மாற்றிப் பின்பு வாளோடு வந்த சூரனைப் பாசந்தரித்த பராசத்தி வடிவான வேலாலிராக் காலத்திற் பிளந்தெறிந்தவனும் பயமற்றவனு மற்பமாக நினைத்த பிரமாவின் வார்த்தைகளைத் தர்க்கத்தாற் கட்டுப்படுத்தியவனுந் துன்பத்தைத் தணிக்கின்ற வபயக் குறிப்போ டெல்லாத் திசைகளிலுந் தேற்றாமரம் போல வியாபிப்பவனு மனேகம் வியப்புற்ற வகத்திய மகா முனிவருக் குபதேசஞ் செய்திரட் சித்தவனுமாகிய முருகப்பெருமானை யன்றி யாதொரு துணையு மறியே னென்பதாம்.

ஞாயம்:

எம்மதத்தோர் செய்யுமந்தரங்கபத்திக்கு முரியோனெனன்பான் பொதுப்படச் சொன்னதுந் திருஞான சம்பந்தப் பிள்ளையாராய்ச் சைவத்தை நிலைநிறுத்தியதா லதற்கழகிய னென்றதுஞ் சூரன் பயந்தோன் போலே மாற்றியது கடலிற் புகுந்த தென்பதும் பராசத்தியே வேலென்பது பிரசித்த மென்பது மிரவிற் பிளக்கினன்றி யவனோடாறு நாள் பொருததாகச் சொல்வ திசையாதென்பதும் பிரமா வைத்தகைந்தது விலங்கிட்ட தென்பதும் மாலையெனப் பொதுப்படச் சொல்லல் பலமாலைகளைக் காட்டுமென்பதுங் கலக்கத்தைத் தெளிக்கின்ற வித்துப்போன்ற குரவர்களை யுண்டு பண்ணலாற் றேற்றா மரத்தை யுவமை கூறியதுங் கடலுண்டன் முதலிய வியப்பனந்த மகத்திய முனியவரிடத்துள்ளன வென்பது மவர்க்குபதேசித்த சகுணப்பிரம சொரூபமான மூர்த்தியன்றி மற்று முள்ளவணு பட்ச மூர்த்திகளாற் றான்றிருத்தியடைதல் கூடாதென்பா னங்ஙனங் கூறியதும் பிறவுமறியக் கடவர்.

இலக்கணம்:

சலமென்ற பதஞ் சல்லென நின்றது. கத்தியைச் சுட்டிய வகரத்தடுத்தோர் மெய்வரவேண்டுவது செய்யள் விகாரத்தா லொழுகியது. கத்தியனை யென்னுஞ் சொல்லி னிரண்டா முருபும் ஐயளாலென்ற சொல்லிலுள்ள மூன்றா முருபு மாதிய தொகைநிலைகள் கண்டுணர்ந்து கொள்ளற் பாலவாம். இகரத்தை யெண்ணுருவாக் கொண்டு மொருபாதி யுண்டாம் போது மற்றொரு பாதியு முண்டா மாதலானுபப் பாதி யெனப்பொருள் கூறப்பட்டது. அஞ்சுதலை யஞ்சென்று மறுந்தன்மையோனை யறியென்றுங் கிலத்தைக் கிலலென்று மியத்தை யியனென்றுஞ் சொற்றமை போன்றவற்றை யெல்லாம் விரிப்பிற் பெருகுமென விடுத்தாம் ஆயினு மவையறிவார் பலருளாரென்பது சித்தம்.

(14)

15. அறியத் தகாதன யானதில்லை யில்லை யகண்டத்திலே
அறியத் தகாதன யானதில்லை யில்லை யகண்டத்திலே
அறியத் தகாதன யானதில்லை யில்லை யகண்டத்திலே
அறியத் தகாதன யானதில்லை யில்லை யகண்டத்திலே.

இதன் பொருள்:

அல் - இருண்ட.
தி - புத்தியின்.
அத்த - பொன்சம்பந்தமான.
காதல் - மோகத்தை.
நை - கெடுக்கின்ற.
ஆ - வியப்புற்ற.
தில்லை - சிதம்பரத்தை.
இல் - வீடாகக் கொண்ட.
ஐ - தலைவனான சிவபெருமான்.
அ - உடைய.
கண் - நேத்திரத்தை.
தத்து - தவழ்கின்ற.
இல் - இடமாக.

ஏ - பொருந்திய தன்மையும்.
அறு - ஆறுவிதமான.
இயத்த - தொனியுமுடையவனே.
கா - கற்பகத்தருவையுடைய தேவர்களின்.

தனயா - புத்திரியாகிய தேவயானையின்.
தில் - விருப்பமும்.
அயில் - வேலாயுதமுமுள்ள.
ஐய - அப்பனே.
கண்டத்து - துவிதபாவனையின்.
இலேயு - அற்பத்தன்மை.

அறி - அற்றவனே.
அத்த - சொற்பொருண் முற்றுடையோனே.
காத - செவிப்பெருக்கத்தோனே.
நய - நயகுணத்தோனே.
அதில் - வேண்டாமையை.
அயில் - அநுபவிக்கின்ற.
லய - ஒடுக்கநிலையான.
கண்டு - கற்கண்டு போலு மினிமை.
அத்தில் - பொருந்துமாகில்.
ஏ - வியப்பின் பகுதிகளில்.

அறியத்தகாதன - அறிந்து கொள்ளத் தகாதவைகள்.
யாது - எத்தன்மைத்துள்ளதாம்.
இல்லையில்லை - இல்லவேயில்லையாம்.
அகண்டத்திலே - யாவுந்தன்மயமான பரவெளியில்.
எ-று. ஆதலின வ்வினிமை யெனக்குத்தர வேண்டுமென்னும் பொருளெஞ்சி நின்றது.

கருத்து:

இருண்ட வஞ்ஞான புத்தியாலுண்டாகும் பொருளாசையைக் கெடுக்கின்ற சிதம்பரத்திற் கோயில் கொண்டருளிய சிவபெருமானது நேத்திரத்தைத் தவழ்ந்து விளையாடு மிடமாகக் கொண் டாறெழுத்தொலி யோடிருப்போனே. தேவலோகத்தில் வளர்ந்த தெய்வயானையின் விருப்பமும் வேலாயுதமுடைய வப்பனே. யற்பமான துவிதபாவனை யற்றவனே முழுதுணர் புலமையுஞ் செவிப் பெருக்கமு நயகுணமுமுடையோனே வேண்டாமையை யநுபவிக்கு மானந்தஞ் சித்தித்தா லெல்லா வியப்புமறியத் தக்கனவேயாய் விடுமன்றி வேறிராதாதலின கண்டபரவெளியின் சம்பந்தமான வதனை யெனக்கருள வேண்டுமென்பதாம்.

ஞாயம்:

பொன்னம்பல மாதலிற் பொருளாசையைக் கெடுக்கின்ற தென்றதுங் கண்கணினின் றுற்பவித்தமையாலு மவற்றிற் கன்னிய மல்லாத சூரிய மண்டல வாசத்தாலுந் தவழுமிடமென்றது மம்முருகக் கடவு ளநுபவத்திற்று விதபாவனையற்றமையா லதனையிகழ்ந்து கூறியது மற்றைய விபரங்கள் வெளிப்படையா யறியத்தக்கனவே யென்பதும் வேண்டாமையன்ன செல்வமீண்டு மாண்டு மின் றென்னும் வேதவாக்கியத்தா லதனைவியந்து வேட்டவாறு மறிக.

இலக்கணம்:

காவையுடைய தேவரைக் காவெனலாதிய செய்யுள் வழக்கேயா முன்விபரங் களனேகமாக வெழுதப்பட்டிருக்கின்றன. தில் விழைவாதலி னதில் வேண்டாமை யென்னும் பொருடந்தது. அத்திலென்ற வொருபதத்திற்குப் பொருந்துமாகி லெனப் பொருள் விரித்திருக்கின்றா மங்ஙனமுள்ள பதங்களைப் பற்றி விபரீதமாக நினைப்பார் பலருளா ரென்பது மறிவா மாயினுந் தெய்வமு மனமுமே சாட்சியாகும். அதன் விபரமாவது அந்த லென்னும் பதத்தின் விகாரமென்னினுந் தைப்பென்னும் பொருடருதல் பற்றியமைத்த தென்னினுந்தகும். அவ்வில்லுருபு எதிர்கால வினையெச்சமா நின்றது. மூன்றா முருபைக் கொண்டு பொருந்தினாலெனவருவது முண்டு. இங்ஙனந் தும்மலிரு மலாதிய பதங்கட்குந் துகட்பிரவேச மென்றும் பித்தம்வாத மென்னுமிரண்டின் பொலிவென்று முரைகூறினுமமைதி பெறாரு முளாரென்னு முண்மை பற்றியொருவாறு கூறிவருகின்றாம். *(15)*

16\. அகளச களத்தனி நாயக னல்ல யிலத்தனே
அகளச களத்தனி நாயக னல்ல யிலத்தனே
அகளச களத்தனி நாயக னல்ல யிலத்தனே
அகளச களத்தனி நாயக னல்ல யிலத்தனே.

இதன் பொருள்:

அகள - அகமுகத்தினளான ஞானசத்திக்கும்.
சகள - உலக மென்னும் வெளிமுகத்தினளான மாயா சத்திக்கும்.
தனி - சொந்தமானவன்.
நாய் - நாய் போன்ற.
அகன் - மனத்தின்.
அல் - அஞ்ஞான விருட்டை.

அயில் - விழுங்கத்தக்க.
அத்தன் - சொற் பொருளுடையோன்.
ஏய - யாவற்றினும் பொருந்திய.

கள் - தேன் போலு மானந்த சொரூபன்.
அசகளத்தன் - ஆட்டுத்தலையோனா னதக்கனுக்கு.
இனா - துன்பஞ் செய்தவரும்.
யகன் - பதினோரு ருருத்திரரானவரும்.
அல் - மதிலோடு கூடிய.
ஐ - ஐந்தாகிய.
இல் - தலங்களையுடைய வருமான.
அத்தன் - சிவபெருமானிடத்து.
நேய - அன்புள்ள.

களச - பிரம்பேந்தியவரான நந்திக்கு
கள - கபடஞ்செய்த.
தனி - தன்மையோன்.
நாய - யாவரையு மடிமைக் கொள்ளும் பண்பும்.
கனல் - அக்கினியின்.
ஐயில் - அழகையொத்த.
அத்தன் - செந்நிற முள்ளோன்.
ஏ - வியக்கும்படி.

அகளசகள - அருவமுமுருவமுமான.
தனிநாயகன் - சமானமில்லாத தலைவனப்படிப் பட்டவனா ரென்றால்.
நல் - உத்தமோத்தமமான.
அயில் - வேலாயுதத்தை.
அத்தனே - கையிலுடையவனே. எ-று.

கருத்து:

ஞானசத்திக்கு மாயாசத்திக்குஞ் சொந்த மானவனு நாய் போலலையு மனத்தி னஞ் ஞானத்தைச் செயிக்கு மந்திரார்த்தமுள்ளவனும் வியாபிக்குமானந்த சொரூபனுந் தக்கனுக்குத் துன்பஞ் செய்து பதினோரு ருத்திரருந் தாமேயாய்ப் பஞ்சதலத்தில் வசிக்கின்ற சிவபெருமானிடத் தன்புள்ளவராய்ப் பிரம்பேந்திய நந்தியினிடத்துக் கபடஞ் செய்தவனு மியாவரையு மடிமை கொண்டு நெருப்புப்போன்ற செந்நிறத்தோடிருப்பவனு நிடகளமுஞ் சகளமுந் தானேயாய்ச் சமானமற்ற

தலைவனு முத்த மோத்தமமான வேலாயுதத்தைக் கையிலுடையவனே யென்பதாம்.

ஞாயம்:

அயத்தலை யுடையோனை யயக் கிரீவனென்ற முறைப்படி யசத்தலை யோனை யசகளத்தனென்றதும். யகனென்ற சொல்லை யெண் வடிவாக் கொண்டு ருத்திரர்க் குபயோகப் படுத்தியதும் பஞ்சபூதத்தலங்கள் சிதம்பர முதற்றிருவாரூரீறாகச் சொல்லப்பட்டவை யென்பது நந்தியினிடத்துக் கபடஞ் செய்தது பிரமாவின் றளை விடும்படி சிவாக்கினை யெனச் சொல்லவந்த போது பயஞ்செனிக்கும்படி பேசியவாறென்பது மற்றவை வெளிப்படை யென்பது மறிக.

இலக்கணம்:

அகள் சகளென்னும் பதங்களி லகரம் புணர்ந் தாறா முருபின் பயன் பெற்றுச் சொந்த மென்னும் பொருடருந் தன்னெனுஞ் சொல்லி னெழுவாயாய் நின்றவற்றை யிரட்டலி னான்காமுருபாக்கித் தொகையும்மையும் புணர்த்திப் பொருள் கூறிய வாசக நடைப் பொருத்தமு மறியார்க்கென் சொல்லற் பாற்றுள்ளது. அச்சொல்லின் முப்பாற்கு முரிமை காட்டு மிகரம் புணர்த்தி யாண்பா லொருமைக் குபயோகப் படுத்தியிருக்கின்றது. நாய்போலு மகனென்ற பதம். நாயகனென வந்த வுவமைத்தொகை யாதிகளறியு மாறறிதல் கடமையாம். கள்ளென்ற சொல்லி னினிமை பற்றி யானந்தம் வருவிக்கப்பட்டது. இன்னாவென்ற சொல்லை யினாவெனச் சொல்லப்பட்டது. அதில்நகரம் பிறழ்ந்தது. களாச மென்ற பதங் களச மெனக்குறுகி நின்றது. ஐகாரமும் போலியும் பிறழ்ந்தும் வந்திருக்கின்றன. *(16)*

17. அத்தத் தையாசித் தலையா தளித்தி யடியனையே
அத்தத் தையாசித் தலையா தளித்தி யடியனையே
அத்தத் தையாசித் தலையா தளித்தி யடியனையே
அத்தத் தையாசித் தலையா தளித்தி யடியனையே.

இதன் பொருள்:

அத்தத்தை - அந்தக் கிளியாகிய வருண கிரிநாதருடைய.
ஆசி - தோத்திரத்தை.
தலையா - இடமாகக் கொண்டு வசிப்போனே.
தளி - குளிர்ந்த.
தி - புத்திக்கு.

அடி - மூலமானவனே.
அனை - மாதாவை.
ஏய் - போன்ற.
அத்து - பொருத்தமுள்ள.
அத்து - சிவந்த.
ஐயா - அப்பனே.
சித்த - சித்தந்தோறும்.
லயா - கலந்திருப்போனே.
தள் - யாவருங்கழிக்கத்தக்க.
இத்தி - துவர்ப்பண்பை.
அடு - கெடுக்கின்ற.
இயல் - குணத்தின்.
நயே - நன்மையுடையோனே.

அத்த - திருக்கரங்களின்.
தயா - தயையான கொடைத்தன்மையும்.
சித்து - ஞானமும்.
அலையாது - அலைகளையுடையதான சரவணத் தடாகத்தின்.
அளித்தி - வண்டுள்ளதான பூவுமுள்ளோனே.
அடி - சுடுகின்றதாகிய நெருப்பை.
அனை - போன்றவனே.

ஏ - வியப்பைத் தருகின்ற.
அத்தத்தை - பொன்னை.
ஆசித்து - விரும்பி.
அலையாது - சஞ்சரியாது.
அளித்தி - இரட்சிக்கக்கடவாய்.
அடியனை - அடிமையாகியவென்னை. எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

கிளியாகிய வருணகிரிநாதருடைய தோத்திரப்பாடல்களை யிடமாகக்கொண்டு வசிப்போனே. சாந்தம் பொருந்திய புத்திக்கு மூலமானவனே. மாதாவைப் போலும் பொருத்தமுஞ் சிவந்த நிறமுள்ளவப்பனே யெல்லாச் சித்தங்களிலுங் கலந்திருப்போனே. யாவருங்கழிக்கத் தக்க துவர்த்தன்மைகளைக் கெடுக்கின்ற குண நயத்தோனே. கொடையுஞானமுஞ் சரவண தடாகத்தின் பூவுமுள்ளோனே. சுடுகின்ற நெருப்புப் போன்றோனே வியப்பைத் தருகின்ற பொருளை விரும்பி யலையாதபடி யடியேனை யிரட்சிக்கக் கடவாயென்பதாம்.

ஞாயம்:

கருணை மிகுதிபற்றி மாதாவைப் போன்ற பொருத்தஞ் சொல்லப்பட்டதும் வியாபகம் பற்றி யெல்லாச் சித்தங்களிலுங் கலந்தோனென்றதுந் துவரப்பண் பென்றது பகையையு மருவருப்பையுங் காட்டுமென்பது நெருப்புப்போன்றமை வீரத்தைக் குறிப்பிக்கு மென்பது மத்தத்தை நாடி யலைதலே பெருந்துன்பமென்பா னங்ஙனங் கூறியது மற்றவை சாதாரண மென்பது மறிக.

இலக்கணம்:

ஏய்த்த லென்னும் பண்புச்சொல் பெயரெச்சத்துக்கு வரும்போதே யென்றானது. நயத்தை யுடையோனே யென்றனயே யென்றானதும் அன்னா யென்ற பத மன்னை யென்றாயனை யென்றும் போல்வா யென்றற்கு வந்ததும் பிறவுமியற்கையேயாம். *(17)*

18. அடிக்கல னந்தலை யிற்சேர லெற்றை யறைதியன்றே
அடிக்கல னந்தலை யிற்சேர லெற்றை யறைதியன்றே
அடிக்கல னந்தலை யிற்சேர லெற்றை யறைதியன்றே
அடிக்கல னந்தலை யிற்சேர லெற்றை யறைதியன்றே.

இதன் பொருள்:

அடு - பொருகின்ற.
இக்கு - கரும்பும்.
அலன் - இருளுமுடையவனான மன்மதனையும்.
நந்து - சங்கத்தோடு கூடிய.
அலை - சமுத்திரத்தை.
இல் - உறைவிடமாகக் கொண்டு.
சேர் - மாலைதரித்த.
அல் - இருணிறமுள்ள விட்டுணுவையும்.
எற்று - தன்மையாலெதிர்கின்ற.
ஐ - சுவாமியே.
அறை - சிற்றிற் சம்பந்தமான.
தியன் - புத்தியுடையோனே.
தே - கிருபையும்.

அடி - தெய்வத் தன்மையும்.
கலன் - மலையுமுடையோனே.
அம் - அழகில்.

தலை - முதன்மையானவனே.
இல் - மனைவியான வள்ளியம்மனை.
சேரல் - அணுகுந்தன்மையும்.
எல் - சூரியனை.
தை - தழுவுந்தன்மையும்.
அறு - ஆறுவிதமான.
ஐ - தலைமைத்தன்மையு முள்ளோனே.
தி - நெருப்பை.
அன்று - அல்லாமல்.
ஏ - ஏகாரத்தினுரிமையும்.

அடி - மோதுகின்ற.
கலன் - ஓசையுமுள்ளவாயுவின்.
அந்தல் - பொருத்தமுமுடையானே.
அயில் - வேலாயுதத்தால்.
சேரல் - பகைவரை.
எற்று - சங்காரஞ் செய்வோனே.
ஐ - ஐந்துவிதக் குற்றங்களையும்.
அறு - கெடுக்கின்ற.
ஐதி - விரைவுள்ளோனே.
அன்றே - பழையோனே.

அடிக்கலன் - உனது திருவடிகளாகிய கிரீடம்.
நம் - எங்களுடைய.
தலையில் - சிரசில்.
சேரல் - சூடப்படுதல்.
எற்றை - எந்நாள்.
அறைதி - சொல்லக்கடவாய். எ-று. அன்றே - அசை.

கருத்து:

மன்மதனையும் விட்டுணுவையுந் தன்மையா லெதிர்கின்ற சுவாமியே சிற்றில் விளையாட்டிற் செல்லும் புத்தியுடையோனே கருணையுந் தெய்வத் தன்மையு மலைகளும் பேரழகு முள்ளோனே மனைவியான வள்ளியை யடுத்தலுஞ் சூரிய மண்டல வாசமு ஆறுவகைத் தலைமையு முள்ளானே நெருப்பை யன்றி யேகாரமுள்ள வாயுவின் சம்பந்தமுடையானே வேலாயுதத்தாற் பகைவரைச் சங்கரிப்போனே யைவகைக் குற்றங்களையும் விரைவிலறுப்பவனே பழையோனே யுனது

திருவடி களாபரணம் போன்றெங்கள் சிரத்திற் சூடப்படுவதென் றென்பதாம்.

ஞாயம்:

முற்கூறிய பண்பான் மன்மதனையும் விட்டுணுவையும் வருவித்ததுஞ் சல்லாபத்திலு மசுரவிரோத மாதிய தன்மையிலு முயர்ச்சி யெய்தலி னவர்களை யெதிர்கின்றவனென்றது மிளமை நீங்காமை தோற்றச் சிற்றிற் பிரியஞ் சொன்னது மாறுவகைத் தலைமையாவ தங்ஙனமுள்ள சமயாசாரித்துவ மென்பது மக்கினியிலுங் காற்றிலும் பொருந்த லவதரித்த சரிதத்தால் விளங்குவது மகர முதலான வைந்தெழுத்திலே ஏகாரம் வாயுக் கூறாதலு மைவகைக்குற்றம் புலப்பகுதி யென்பது மன்றென்பது காலதத்துவத்தினடியைப் பற்றலிற் பழமையெனப் பொருள்கூறியதுந் தலையணியிற் சீரியது கிரீடமாதலி னங்ஙனம் வருவித்தது. மற்றவை வெளிப்படையென்பது மவற்றிற்கு ஞாயங்கூறிற் பெருத்துக் கெடுமென்பது மறிக.

இலக்கணம்:

கல்லனென்னுஞ் சொல். கலனென மெலித்திரண்டுழி வந்தது. தீ யென்னுஞ் சொல்லு மங்ஙனமே வந்தது. சூரியனைக் குறித்த எல்லென்ற பதமும் வேலைக்குறித்த வயிலென்ற பதமு மீற்றுள்ள லகரந்திரியப் பட்டமை யிரண்டு மூன்றென்னு முருபைத்தொக்க வாற்றால் அன்றியும் எற்றென்னுங் கொலைப்பெயரை யதுடையானேயென முன்னிலை யாண்பாற் குபயோகப் படுத்தியதாதிய செய்யுள் விகாரம் பொருணோக்க முன்மொழி பின்மொழிப் பொருத்த முதலியவற்றால் வந்தன வென்பதும் பிறவு மயக்கமற்ற வானறோர் விதி வழியறியக் கடவர். *(18)*

19. அறைதற் கடங்கரி தாகிய சித்தி யதிசயனே
அறைதற் கடங்கரி தாகிய சித்தி யதிசயனே
அறைதற் கடங்கரி தாகிய சித்தி யதிசயனே
அறைதற் கடங்கரி தாகிய சித்தி யதிசயனே.

இதன் பொருள்:

அறை - சிறுவீடாகிய.
தற்கடு - அதன்மேற் சினஞ்செய்கின்ற.
அங்கர் - அடையாளத்தோரான சிறுவர்களுக்கு.
இத - அநுகூலஞ் செய்கின்ற.
ஆகி - பெருச்சாளி வாகனத்தோனான விநாயகமூர்த்தி.

அ - உடைய.
சித்தி - உபபலமானவனும்.
அதிசயன் - அதிகரித்த செயத்தை யுடையவனும்.
நே - அன்பு.

அறு - அற்ற.
ஐது - ஆத்திரமான.
அல் - அஞ்ஞான விருளுக்கு.
கடு - விடம் போல்வானும்.
அம் - அழகிய.
கரி - ஞானவேழத்தின்.
தாகி - விருப்பமுள்ளவனும்.
அசித்து - மாயையாகிய.
இய - காட்டினிடத்தும்.
திசயன் - நோக்கமுள்ளவனும்.
ஏ - நிந்தையுள்ள.

அறு - புறச்சமயங்களாறின்.
ஐ - அருவருப்பான.
தற்க - வாதஞ்செய்யும்.
டங்கர் - தூர்த்தர்களின்.
இத - சொல்லாகிய.
அகி - சற்பங்களையும்.
அசி - ஆயுதங்களாகிய.
தி - நெருப்பையும்.
அதி - அதஞ்செய்வோனும்.
சயன் - பருவதங்களுக்கதிபனும்.
ஏ - யாவனென்றால்.

அறைதற்கு - சொல்வதற்கு.
அடங்கரிதாகிய - முடிவுபெறாதனவான.
சித்தி - அற்புதங்களும்.
அதிசயனே - ஆச்சரியங்களுமுடைய வொருவனே. எ-று.

கருத்து:

சிற்றிலாடும் பேதைப்பருவப் பெண்கள் கெஞ்சும்படி யதனை யழிப்பார் போற் சினக்குஞ் சிறுவர்க்கு நலஞ்செய்யும் விநாயகர்க்குச் சகாய பலமானவனு மதிகரித்த செயப்பிரதாப முள்ளவனு மன்பின்றி விரைகின்ற

வஞ்ஞானத்தைக் கெடுக்குந் தன்மையுடையவனு ஞானவேழத்தில் விருப்பமுற்று மாயைக் காட்டினு நோக்கமுள்ளவனு மிகழ்ச்சியுற்ற புறச்சமயத் தோரான வறுவர்களின் வாதச்சொற்களையும் பிரயோக வாயுதங்களையு நாசஞ் செய்வோனு மலைகளுக்கதிபனு மியாவனென்றாற் சொல்லுதற்கரிய வற்புதங்களு மதிசயங்களு முடையவனே யென்பதாம்.

ஞாயம்:

திருவருணாட்டமில்லார்க்கே யாத்திர மிகுமாதலி னஞ்ஞானத்திற்கதனை யடையாகக் கூறியது. மாயையுந் தனது பின்னா சத்தியாதலினதனிடத்து நோக்கமுள்ளானென்றது நிந்தையு மருவருப்புஞ் சொன்னதாற் புறச்சமயங்களெனப் பொருடந்தவாறும் பரத்துவப் பொருளே யவனெனப் பயனிலை நிகழ்ந்தவாறு மற்றவை சாதாரண மாதுலங்கத்தக்கன வென்பது மறிக.

இலக்கணம்:

தற்கடு வென்ற சொல்லிற் றன்னென்னுஞ் சாரியையு மிரண்டா முருபுமிருக்கின்றன. இயவு என்னுங்காட்டின் பெயரி லுகரச்சாரியை நீக்கப்பட்டது. நீங்காதிருப்பது போலு மதிசய மறிவார் சிலரேயாவார். அதனடுத்து வந்ததிசயனிலு மதனடியிலுள்ள சயனிலுமுள்ள போலி யை காரமாயது தூர்த்தப் பெயராகிய இடங்கர். மொழிமுத லல்லாத நிமித்த மிகர நீக்கிடங்கரெனப் பிரயோகிக்கப்பட்டது. முதலடியிலுள்ள இத ஆகியும் மூன்றாமடியிலுள்ள இத ஆகியும் இதாகியென வொன்று போனின்றது. இங்ஙனம் வரும் புணர்பினங்களை யோசைநிதான முணராச் சில புலவர் வடமொழிக்கே யுரியன வெனச்சிறிது நாணாது கூறுதலு மதுகேட்டிவர் கூறுத றென்மொழி யென்று முணராரர் போலுமென வருந்தி நகுவாரு மிவ்வுலகத்துளார். நெருப்பின் பெயராகிய தீ தியெனக் குறுக்கல் விகார மவ்வுழி மிகவு மழகாப் பெற்றது மாயையினிழிவு நோக்கி யுரையிலோ ரிழிவும்மை வருவித்ததும். வினாக்குறிப்பெகர நீடலும் பிறவு மறியு மாறறிதல் கடனேயாம். *(19)*

20. சயந்தன் கனாத்தகை யெண்ணி யிந்நாளிற் றயங்கினனே
சயந்தன் கனாத்தகை யெண்ணி யிந்நாளிற் றயங்கினனே
சயந்தன் கனாத்தகை யெண்ணி யிந்நாளிற் றயங்கினனே
சயந்தன் கனாத்தகை யெண்ணி யிந்நாளிற் றயங்கினனே.

இதன் பொருள்:

சயந்தன் - பருவத்தின்.

கன - கூட்ட முடையோனே.
ஆ - வியப்பான.
தகை - குணம்.
எண்ணி - எட்டுடையானே.
இன் - இனிதான தேனை.
ஆள் - அநுபவிக்கின்ற.
இல் - மனைவியான வள்ளியோடு கூடி.
தயங்கு - பிரகாசிக்கின்ற.
இனனே - சூரியன் போல்வானே.

சை - இகழ்ச்சிக்குரிய.
அந்தன் - இயமனது.
கல் - ஆரவாரத் தொனியின்.
நா - இன்மையையும்.
த - பிரமாவின்.
கை - சிறுமையையும்.
எண்ணி - மதித்துச் செய்த சிவபெருமான்.
இன் - உடைய.
ஆளில் - அடிமையைப்போன்று.
தை - தழுவவேண்டிய வற்றைத்தழுவி.
அங்கு - மதுரை யாகிய வவ்விடத்து.
இனன் - கூட்டமிட்டோனே.

ஏசு - குற்றம்பொருந்திய.
ஐ - பஞ்சப்புலன்களின்.
அந்தன் - முடிவானவனே.
கல் - கற்கத்தக்க.
நாத்தகை - நாவலங்காரமான புலமையும்.
எண்ணி - கணிதத்திறமுள்ளோனே.
இன்னாள் - துன்பத் தினளான செட்டிப் பெண்ணின்.
இல் - வீட்டினிடத்து.
தயங்கினன் - நடனஞ்செய்தோனே.
ஏ - வியப்பான.

சயந்தன் - இந்திர குமாரன் கண்ட.
கனாத்தகை - கனவின் பெருமையை.
எண்ணி - நினைத்து.
இந்நாளில் - இக்காலத்தில்.

தயங்கினன் - அடியேன் றிகைக்கின்றேன். எ-று. ஏ - ஈற்றசை. என்கனவு மங்ஙனம் பலிதமுற வேண்டு மென்னும் பொருளெஞ்சி நின்றது.

கருத்து:

பருவதக் கூட்டத்தோனே வியப்பான வெண்குணத்தோனே தேனைப் புசிக்கின்ற வள்ளி நாயகியோடு கூடிச் சூரியனைப்போற் பிரகாசிப்போனே யெமது கெருவ நாசத்தையும் பிரமாவி னிளப்பத்தையுங் கருதிச் செய்த சிவபெருமானது பத்தனைப் போன்று சைவ சின்னங்களை யெல்லாம் பாதுகாத்து மதுரையிற் கூட்டமிட்டோனே குற்றம் பொருந்திய பஞ்சப் புலவன்களை முடிப்பவனே புலமைத் திறமுங் கணிதத்திறமு முள்ளோனே கை வெட்டுப் பட்டதாற்றுன்ப முற்ற செட்டிச்சி மனையிற் போய் நடனஞ் செய்தோனே யக்காலத்திற் சயந்தன் கண்ட கனவு பலித்ததுபோ லிக்காலத்தி லடியேன் கண்ட கனவும் பலியாமை யெண்ணித் திகைக்கின்றே னென்பதாம்.

ஞாயம்:

தினை மாவிற் றினந்தோறுந் தேன் சேர்த்துண்ணலா லதை யநுபவிக்கு மனையென்றலும் வள்ளிநாயகியென வருவிக்கப்பட்டது. எமனார் வார்த்தையின்மை யாக்கலுதைத்துக் கொன்றது பிரமாவைச் சிறுமை செய்தது தலை கொய்தல் அடிமை போன்று மதுரையிற் கூட்டமிட றிருஞான சம்பந்தப் பிள்ளையாராயவதரித்தது. புலன்களை முடித்த லாசாரித்துவம் செட்டிப்பெண்ணாரெனின் முருகாவெனு நாமமொன்றே சொல்லி யுய்ந்த பிரசித்த சரித்திரமுள்ள வோரடிமையெனத் தெரிவதோடு சயந்தன் கனவை யெடுத்துக் காட்டி யங்கலாய்த்தது தான் கண்ட கனவு மங்ஙன்னம் பயன்றர வேண்டும் பிரார்த்தனைக் குறிப்பென்று மறிக.

இலக்கணம்:

கடைவரி யொழிந்த மூன்றடி முகத்துஞ் சகர வைகாரம் போலியாய் மெலித்து நின்றது. இனிமையுடைய தேனை யின்னெனப் பின்மொழித்தொகையாச் சொல்லப்பட்டது. சூனியப் பொருடருநகர நீட்டல் விகாரமுற்றது. கனவாத் தகையைக் கனாத்தகையென்று மின்னாவுடையாளை யின்னாளென்றுஞ் சொன்னதன்றி யிடநோக்கி மதுரையென்றும் புலன்களென்றும் வருவித்ததும் பிறவும் மறிக. *(20)*

21. தயங்காத சத்தியத்தைத் தாக்கத்தா நல்ல தண்ணளியே
தயங்காத சத்தியத்தைத் தாக்கத்தா நல்ல தண்ணளியே
தயங்காத சத்தியத்தைத் தாக்கத்தா நல்ல தண்ணளியே
தயங்காத சத்தியத்தைத் தாக்கத்தா நல்ல தண்ணளியே.

இதன் பொருள்:

தயங்கு - சலனப்படுகின்ற.
ஆத - குற்றமுள்ள.
சத்தி - மாயாசத்தியின்.
அத்து - பொருத்தமான.
ஐ - ஐந்துவித.
தா - குற்றங்களும்.
கத்து - தொனிக்கின்ற.
ஆன் - பசுக்களை.
அல் - மதிள்போற் சூழ்ந்து காக்கும்.
அது - விட்டுணுகலையானது.
அண் - பொருந்தத்தக்க.
அளி - அன்பின்.

ஏது - காரணமான தவத்திற்கும்.
அயம் - ஆட்டின்.
காது - கொலையை.
அசத்து - யாவரு மறக்கச் செய்யும்.
இயத்து - வார்த்தைப் பிரசங்கத்தின்.
ஐ - அலங்காரத்திற்கும்.
தா - கேடாயிருக்கின்றன.
கத்தான் - வானுலகிலிருப்போனே.
அல் - இருண்ட.
அதள் - ஆனைத்தோலை.
களி - விரும்பியவனான சிவபெருமான்.
ஏ - வியக்குஞ்சொல்.

தை - புகுகின்ற.
அங்காத - அழகிய காதுள்ளோனே.
சத்திய - கைவேலுடையோனே.
தைத்தா - தைத்தாவென்னுந்தாள சம்பந்தமுள்ள கூத்தாடும்.
கத்த - கடவுளே.
அனல்ல - அக்கினி சம்பந்தமானவனே.
தண் - தரித்திரமாகிய.
நளியே - விலாசத்தில்.

தயங்காது - திகைப்படையாமல்.
அசத்தியத்தை - பொய்மையாவையும்.
தாக்க - அடித்துச் செயிக்கும்படி.
தா - கொடுத்தருள்.
நல்ல - உத்தமமான.
தண் - குளிர்ந்த.
அளி - கிருபையை. எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

சலனசத்தியாகிய மாயையின் சம்பந்தமான வைங்குற்றங்களும் பசுக்களைக் காக்கும் விட்டுணுகலை தங்கத்தக்க தவத்திற்கு முலகத்திலாட்டுக் கொலை நீங்கும்படி செய்யும் பிரசங்கத்திற்குங் கேடாயிருக்கின்றன வாதலாற் சுவர்க்கலோகத்தை யுடையவனே கறுத்த யானைத்தோல் போர்த்த சிவபெருமான் வியந்து கூறும் வார்த்தை கேட்குங் காதுள்ளோனே வேலாயுதமேந்திக் கொண்டாடுவோனே சருவ சுதந்தரமான கடவுட்டன்மை யுமக்கினி சம்பந்தமு முடையோனே யடியேன் றரித்திர விலாசத்திற் றிகையாமல் அசத்தியங்க ளெல்லாவற்றையு நாசஞ்செய்யும்படி யுத்தமமான வுனது கிருபையைக் கொடுத்தருளென்பதாம்.

ஞாயம்:

ஐங்குற்றங்கள் பஞ்சப் புலன்களென்பதும் பசுக்காப்புங் கொலை நிவிர்த்தியுஞ்செய்ய வேட்டமையாலவை சித்திக்கும்படி செய்யுமுயற்சிக் கவ்விடயங்கள் கேடாயிருக்கின்றன வென்றது மிருண்ட தோலென்றமையாலானைத் தோலென்றதுங் குருத்துவத்தாற் சிவன் வியக்குஞ் சொற்புகுங் காதுள்ளானென்றதுங் குடைகொடியாதிய நடனத்தாற்றாளத்தைக் கொண்டு கூத்தனென்றது முற்கூறிய புலன்களும் பொய்மைப் பகுதியாதலினவற்றையெல்லாம் வெல்லும்படி யருளைக் கேட்டவாறும் பிறவுமறிக.

இலக்கணம்:

தன்மையால் விட்டுணுகலை வருவிக்கப்பட்டது. தவமுதலிய சொற்களு மங்ஙனமே யாயவாறு காண்க. அசதியென்னு மறதிப்பெயரினின்று மறக்கச் செய்கின்றவெனப் பொருட்டரு மசத்தென்னும் பெயரெச்சச்சொற் பிறந்தமையாதிய வெளிதிலறியத்தக் கவேயாம். இடநோக்கி யொருமை பன்மைக்குப யோகப்படுவ தான்றோர் வழக்காகவே யிருக்கின்றது. நள்ளியென்றல் நளியென மெலித்தது.

தய்யென்ற போலியைத் தையெனக் கொள்ளலும் பிறவு நன்கு மதித்துணர்ந்து கோடல் கடமையேயாம். (21)

22. தண்ணாரஞ் செச்சையணி கையினானிணைத் தாளகதியே
தண்ணாரஞ் செச்சையணி கையினானிணைத் தாளகதியே
தண்ணாரஞ் செச்சையணி கையினானிணைத் தாளகதியே
தண்ணாரஞ் செச்சையணி கையினானிணைத் தாளகதியே.

இதன் பொருள்:

தண் - தாழ்மையான வணக்கமும்.
நாரம் - அன்புமுடைய வெமது.
செ - செனனத்தாலுண்டான.
சை - இகழ்ச்சியும்.
அணி - நிரைநிரையாயுள்ள.
கை - சிறுமையும்.
இனான் - துன்பமுஞ் சொந்தமாக வகிக்கின்றவன்.
இணைத்து - தனக்குவமைப் பொருளாக்கி.
ஆள் - ஆண்டுகொள்ளும்.
கதி - நடைக்குத்தக்க.

ஏது - காரணத்தை.
அண்ணார் - பொருந்தாதவர்கள்.
அஞ்சு - பயப்படும்படியான.
எச்சை - குறையுள்ளவன்.
அணிகை - அலங்கரித்துக் கொள்வதாலுண்டாம்.
இன் - சந்தோடமுற்ற.
ஆன் - காளைபோல்வான்.
இணை - இச்சையோடு கூடிய.
தாள் - முயற்சியில்
கதி - பொருந்துகின்றவன்.
ஏ - பாணத்தை.

தண் - இகழத்தக்கதும்.
ஆர் - நிறைந்த.
அம் - அழகுள்ளதுமான.
செச்சை - திருநீற்றின்.
அணி - பொருத்தமுள்ள சமயங்களின்.

கை - ஒழுக்கத்திற்கு.
இல் - உறைவிடமானவன்.
நால - நானாவிதமான.
நிண - ஊனின்.
ஐ - அருவருப்பை.
தாள் - பொருந்திய.
கதி - கோபக்காரியான வள்ளியம்மனும்.
ஏ - வியக்கத்தக்க.

தண் - குளிர்ந்த.
ஆரம் - கடப்ப மாலிகையும்.
செச்சை - வெட்சிமாலையும்.
அணி - தரித்திருக்கின்ற.
கையினான் - தோள்களையுடையவன்.
இணைத்தாள் - அவனதுபய திருவடிகளும்.
கதியே - முத்தி சொருபமேயாகும். எ-று.

கருத்து:

வணங்குகின்ற வன்புள்ள வெமது சென்ன நிந்தையும் பலசிறுமையுந் துன்பமுந் தனதாக வகிப்பவனுந் தன்னைப்போலாக்கி யாண்டு கொள்ளத்தக்க பக்குவமில்லாதவர்கள் பயப்படுங் குறைவுள்ளவனு மலங்காரச் சந்தோடமுற்ற காளைப்பருவத்தோனுஞ் சீவர்களின் முயற்சியிற் கூடிநிற்பவனும் பாணத்தையு மிகழத்தக்க விபூதி சம்பந்தமுள்ள சமயங்கட் குறைவிடமானவனு மாமிச சம்பந்தத் தருவருப்புங் கோபமுமுள்ள வள்ளிநாயகியும் வியந்து கொள்ளுங் கடப்பமாலையும் வெட்சிப்பூமாலையும் புனைந்த தோளுள்ளவனுமான முருகக் கடவுளினிரண்டு பாதங்களுமே முத்திசொருபமாகுமென்பதாம்.

ஞாயம்:

தம்மை முற்றுவனுக்கே கொடுத்துவிட்டமையாற் றமதிழிவாதியும் வகிப்பவனென்றதுந் தவஞ் செய்தற்கும் பிரசாத சித்தியை விரும்புவதற்குந் தகுதியில்லா தவபக்குவர் பயப்படுங் குறைவுள்ளவ னென்றது நிந்தை போலுந் துதியென்பதுஞ் சீவகோடி கண்முயற்சியிற் கூடல் சருவ சாட்சித்துவத்தை விளக்கிநின்றதும் பாணத்தைப்போற் கெடுதன் மாத்திரஞ் செய்யாமற் கேடு நலமுஞ் செய்தலாலதனையிகழத்தக்கது விபூதியெனச் சொன்னது மத்தன்மை சமண்கழுவேறல் பாண்டியன் கூனிமிர்தலாதியாற்றுலங்கு மென்பது முட் சமயங்களதனிடம் பொருத்தமுள்ளனவவற்றிற் கவனபிமானி யென்பது தோற்றவுறை

விடமானவனென்றதுங் கோபமுள்ள வள்ளிநாயகி வியக்கு மாலையென்றதாற் றெய்வயானை யாதியர் வியக்குமாறு தானே துலங்குமென்பதுங் குருபாதமே கதியென்பது சருவ சாத்திரலோகப் பிரசித்த மாதலினங்ஙனங் கூறியதும் பிறவு மறிக.

இலக்கணம்:

ஒன்று மூன்றடி முகங்களிற்றண்மை யென்ற பதம் விகுதிகெட்டு நின்றது. இன்னா - இனாவென மெலிந்தன் சாரியை புகுந்தினானென வந்தது. எச்சனை யெச்சை யென்றது பெண்பாற் போலியாய் நின்றது. கதுவலுடையானையுங் கதமுடையாளையுங் கதியென்றது மண்ணியென்றற் கணியென்றதும் போல்பவு நன்குற்றுணராது விபரீதபாவனை செய்யாமையைப் பற்றிப் புலமைத் தொழிலின் கெருவத்தைப் பிரார்த்திக்கின்றாம். நிண - ஐ - நிணையெனவான்றோர் மொழிவழி பிரயோகித்திருக்கின்றது. ஆன்போல்வானை யானென்றது முருபுத்தொகை சொற்றொடர் பாதியும் விரித்திலம். (22)

23. கதியளித் தாளத்தக் கானலனே லான கண்ணெளிதே
கதியளித் தாளத்தக் கானலனே லான கண்ணெளிதே
கதியளித் தாளத்தக் கானலனே லான கண்ணெளிதே
கதியளித் தாளத்தக் கானலனே லான கண்ணெளிதே.

இதன் பொருள்:

கதி - உச்சேச் சரவக்குதிரை நடையின்.
அளி - சந்தோடத்தைக் குறித்த.
தாள் - முயற்சியும்.
அத்த - பொன்னின் சம்பந்தமான.
கா - கற்பகச்சோலையின்.
நலன் - நன்மையும்.
ஏலர் - மயிர்சாந்தூட்டிய வளக பாரத்தோரான வரமகளிரும்.
அன் - உடையவனான தேவேந்திரனது.
கண் - இடமான வமரா பதிப்பட்டணம்.
நெளி - நிலைபிறழ்தற் கேதுவான.

தேக - அசுரர் சரீரத்துக்கும்.
தி - புத்திக்கும்.
அளி - பாணமுதலிய கூரிய வாயுதங்கட்கும்.
தாள் - கால்கட்கும்.

அத்தக்கு - கைகட்டும்.
ஆனல் - கெடுதல் செய்யுந்தன்மை.
அன் - உடையவனும்.
ஏல் - சோர்வடையா தொருமிக்கும் பண்பில்.
அரன் - அரம்போல்வானும்.
கண் - கணுக்களுடைய கரும்பை.
எளி - இகழத்தக்க.
தே - கிருபையின்.

கதி - பொருத்தமுள்ளவனும்.
அளித்து - புட்பங்களாற் செய்யும்.
ஆள் - அடிமைத் திறத்தையும்.
அத்த - சொற்பொருளின்.
கான் - வாசமான புலமைத் தொழிலையும்.
அலன் - மதிள்போற் சூழ்கின்றவனும்.
ஏல் - பொருந்திய.
அரன் - குகையுடையோனுமான முருகக் கடவுள்.
கண்ணு - தியானிக்கின்ற.
எள் - எட்போலுஞ் சிறுவடிவுள்ள.
இது - எனதான்மாவானது.
ஏ - ஆச்சரியமுறும்படியான.

கதி - மோட்சத்தை.
அளித்து - கொடுத்து.
ஆள - ஆண்டு கொள்ள.
தக்கான் - தகுதியுடையவன்.
அலனேல் - அல்லாதவனாயிருப்பானானால்.
அரன் - சிவபெருமானுடைய.
கண் - நேத்திரங்கள்.
எளிதே - அற்பப்பொருளேயாகும். ஏ-று.

கருத்து:

உச்சேச்சரவக்குதிரை யேற்றமுங் கற்பகத் தருவினன்மையுந் தெய்வப் பெண்களினது சல்லாபமுமுடைய விந்திரனது பட்டினநிலை புரளும்படி செய்கின்ற வசுரர்களின் சரீரங்களு மவயவங்களுமாயுதங்களுங் கெடச் செய்கின்றவனும் வீரத்திலரம் போன்றவனுங் கரும்பை யிகழத்தக்க கிருபையுள்ளோனும் பூமாலைப் பணியையும் பாமாலைப் பணியையும் பாதுகாப்பவனுங் குகைவாசத்தோனுமான முருகப்பெருமானவனைத்

தியானிக்கின்ற வெனது சிறியவான் மாவிற்கு முத்தி கொடுக்குந் தகுதியில்லாதவனானாலவனைப் பிறப்பித்தற்குக் காரணமான சிவபெருமானது நேத்திரத்தின் பெருமைகுன்றிவிடு மென்பதாம்.

ஞாயம்:

பின்வரு முன்வரும் பொருணோக்கத்தாற் குதிரையிந் திரனாதிய வருவிக்கப்பட்டன. தேக்கக்கேடு சொன்னதன்றி யவயவக்கேடுஞ் சொன்னது பல வசுரராதலிற் பொருந்திற்று. அளியென்றல் பாணத்துக்கு முழுப்பெயராயுங் கூர்மையுடைய தெனப் பொருடலினாயுதப் பொதுவிற்கு முபயோகப்படுதலிங்ஙனம் விரித்துரை கூறப்பட்டது. தேவரியாவரையும் வென்றதன்மை தோற்றத் தன்னின மாமிரும் புருக்கனைத்தையும் வெல்லுமரத்தை யுவமை கூறப்பட்டது. கரும்பிற்கோ துண்டாதலினதனை யிகழத்தக்கது கிருபையெனச் சொல்லப்பட்டது. வண்டுடையதெனப் பொருடருமளித்தென்ற பதத்தைப் பூவிற்கிடப்பட்டிருக்குது. தியானிக்குந் தன்மையாலு மிதென்னு மண்மைச்சுட்டாலு மெனதான்மாவெனக் குறிக்கப்பட்டது. சிவபெருமானது நேத்திரங்களிலுயர்ந்து ஞானமயமான வக்கினிக் கண்களிலுற் பவித்தவராதலிற்றான் குறித்த பிரசாத மனைத்துந் தரத்தக் காரேயெனப் பொருடரு மாறங்ஙனங்கூறியதும் பிறவு மழுக்காறொழிந்த முழுப்புலவ ரெளிதிற்றெரிதற் பாலவேயாம்.

இலக்கணம்:

சில பண்படுக்கிய பின் னாண்பாலொருமை விகுதியைப் புணர்த்தி யுடையானெனப் பொருள்கூறல் பலர்க்கிசைந்த வாறன்று. ஆதலினதற்கிசை வாரான சிலரைக் கலைமகளாதியர் நன்கறிவாரென்பது சித்தம். கணுப்பெயரான கண்ணென்ற பதத்திற்கதனாற் சிறந்த கரும்பெனப் பொருள்கொண்ட தங்ஙனம் வரும் பெயரினத்துட் சீரியதேயாகும். எள்ளியென வினையெச்சம் போலுள்ள பெயர்ச்சொல்லொன் றெளியென மெலித்தது. அன்றி யொருமைக்குப் பன்மைப்பொருள் கூறலாதியவற்றிற்கு விபரங்கண் முன்னெழுதப் பட்டிருக்கின்றன. எங்ஙன மெழுதினு மொன்று மெழுதாவிடினுங் களிப்பு வெறுப்பென்னு மிருபகுதியைச் சார்ந்தோரு மிருப்பாரென்பதுமறிவாம். *(23)*

24. கண்ணன ந்தத்தையனாறானனத் தனங்காதலனே
கண்ணன ந்தத்தையனாறானனத் தனங்காதலனே
கண்ணன ந்தத்தையனாறானனத் தனங்காதலனே
கண்ணன ந்தத்தையனாறானனத் தனங்காதலனே.

இதன் பொருள்:

கண்ணன் - விட்டுணுவினுடைய.
நந்தத்து - சங்கத்தைப்போன்ற.
ஐயன் - வெள்ளிய வழகுள்ளானும்.
ஆல் - ஆலமரத்தின்.
தான் - இடத்தை.
நத்தன் - விரும்பிய சிவபெருமானது.
அங்காதலன் - அழகிய புத்திரனும்.
ஏ - பாணங்களை.

கண்ணு - கருதுகின்ற.
அல் - இருண்டவேடர் கூட்டத்தில்.
நந்து - வளர்ந்த.
அத்தையல் - அப்பெண்ணாகிய வள்ளிநாயகியின்.
நாறு - திருமேனி வாச மணக்கின்ற.
ஆன் - காளைபோல்வானும்.
நல் - நல்ல.
நத்து - மூக்கணி பூண்ட.
அனம் - அன்னம் போன்ற தேவயானையின்.
காதலன் - நாயகனும்.
நே - அன்பை.

கண்ணன் - உறைவிடமாக்கொண்டவனும்.
அம் - அழகிய.
தத்தையன் - கிளியாகிய வருணகிரி நாதரையுடைவனும்.
ஆறான் - கங்கையிலுற்பவித்தவனும்.
நன - நீங்காத சாக்கிரமாகிய.
தனம் - தன்மையும்.
கா - கற்பகத்தருவாகிய.
தலன் - இடமுமுள்ளவிந்திரன்.
ஏ - வியந்துசொல்லும்.

கண் - நேத்திரங்கள்.
அனந்தத்து - அனேகமுடைய.
ஐயன் - செகதீசனுமான.
ஆறானனத்தன் - சண்முகக்கடவுளே.

நம் - எங்களுடைய.
காதலனே - பிரியத்துக்குரியவனாவான்.

கருத்து:

மகாவிட்டுணுவின் பாஞ்சசன்னியத்தைப்போன்ற வெள்ளை நிறமுள்ளவனும் ஆலடியை விரும்பிய சிவபெருமானுடைய புத்திரனும் பாணங்களை விரும்பும் வேடர்கூட்டத்தில் வளர்த்த வள்ளிநாயகியின் சீரவாசம் பொருந்திய காளை போல்வானு நல்ல மூக்கணி பூண்டிருக்கு மன்னம் போன்ற தெய்வயானையினாயகனு மன்பையிடமாக் கொண்டவனு மருணகிரிநாதரான கிளியுடையவனுங் கங்கையிலுற்பவித்தவனு முறங்காத்தன்மையுங்கற்பகத்தருவுமுடைய விந்திரன் வியக்கும் மனந்தங்கண்களுடைய செகதீசனுமான சண்முகக் கடவுளே யெங்களுடைய விருப்பத்துக் குரியவனென்பதாம்.

ஞாயம்:

அசுரர்களைச் செயிக்கும் வெற்றிப்பிரதாபத் தொனியாலும் விபூதிதாரணத்தாலும் பாஞ்சசன்னியத்தை யுவமித்த தென்றும் பாணங்களை விரும்புகின்ற விருளென்ற தன்மையால் வேடர் கூட்டமென வருவிக்கப்பட்ட தென்றுங் கங்கையோ னெனப்பொருடரு மாறானென்ற சொல்லிற்கிசைவு நோக்கியதிலுற்பவித்தோ னெனக் கூறப்பட்டதென்று மிந்திரனாயிரங் கண்ணுள்ளோனாதலினவனால் வியக்கு மனந்தங்கண்ணென்ற தினிதாயிற்றென்று மற்றவை வெளிப்படை யென்பது மறிக.

இலக்கணம்:

நனவு என்னும் பதம் உகரச்சாரியை கெட்டு நனவென வியப்பநின்றது. அன்னமனமானது போல்வன மிகைபடும் வாய்பாடாதலின் விரிக்கிலம். இச்செய்யுள் பாகமா முடிவு பெற்றமை பற்றிக் களிப்புற்றமை பற்றிக் களிப்புற்றாம். என்பது பற்றி யிம் முறைச்செய்யுள் பாடும்போதெத்தகைப் புலவோரு மவற்றின் பின் செல்லுங்கடமையோரே யென்னுந் துணிவுண்டாம். (24)

25. காதாரக் கேட்டடியே னின்னலாழிகளைக் கடத்தே
காதாரக் கேட்டடியே னின்னலாழிகளைக் கடத்தே
காதாரக் கேட்டடியே னின்னலாழிகளைக் கடத்தே
காதாரக் கேட்டடியே னின்னலாழிகளைக் கடத்தே.

இதன் பொருள்:

காதார் - கொலை செய்யாதவர்களுடைய.
அக்கு - நேத்திரத்திலும்.
ஏட்டு - சுவடியிலும்.
அள் - கூரிய.
தியே - புத்தியிலும்.
நில் - நிற்கின்ற.
நல் - உத்தமமான.
ஆழி - அழுத்தமுள்ளோனே.
களை - தேவகலை முழுமைக்கும்.
கட - ஒருபாத்திமான.

தேகா - திருமேனியுடையவனே.
தார் - மாலையாகக் கோத்த.
அக்கு - எலும்பும்.
ஏட்டு - கொன்றையாதிய பூவுமுடைய.
அடி - கடவுளாகிய சிவனும்.
ஏன் - வராகாவதாரஞ் செய்த.
இன் - களிப்பும்.
அல் - இருண்ட நிறமும்.
ஆழி - சக்கராயுதமும்.
கள் - கள்ளத்தொழிலுமுள்ள.
ஐ - தலைவனாகிய விட்டுணுவும்.
கட - கடோப நிடத்தையுடைய.
தே - தேவனான பிரமாவுமாகிய மூவரையும்.

கா - காக்கின்ற.
தார் - வெற்றியுள்ளோனே.
கேட்டு - கெடுதலெல்லாவற்றையும்.
அடி - தகிக்கின்றவனே
ஏனின் - என்னுடைய.
அல் - மதிள்போன்று.
ஆழி - வளைந்து காப்போனே.
களை - நல்லோரான பயிர்க்குக் களைபோன்ற பொல்லாரை.
கடு - சினக்கின்ற
அத்து - இசையின்.
ஏ - பொருத்தமுள்ளதான வெனது பாடல்களை.

காதார - உனது செவிகளிற் புகும்படி.
கேட்டு - வினவி.
அடியேன் - என்னுடைய.
இன்னல் - துன்பங்களாகிய.
ஆழிகளை - சமுத்திரங்களை.
கடத்து - கடத்திவிடக்கடவாய். எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

சீவ கருணையோர் கண்களிலுஞ் சுவடியிலும் புத்தியிலு நிற்கின்ற நல்லழுத்தத்தோனே தேவகலை முழுமையும் பொருந்திய திருமேனியுள்ளோனே யெலும்பு கொன்றையாதியதரித்த சிவனும் வராகாவதார முதலிய வடையாளமுள்ள விட்டுணுவு முபநிடத சம்பந்தமுள்ள பிரமாவுமாகிய திரிமூர்த்திகளையுங் காக்கும் வெற்றியுள்ளோனே கெடுதலெல்லாவற்றையுந் தகிப்போனே யென்னை மதிள்போற் சூழ்வோனே பொல்லாரைச் சினக்கின்ற வெனதிசைத்தமிழ்ப் பாடல்களைச் செவியாரக் கேட்டுத் துன்பசமுத்திரங்களுக்கப் புறத்திலடியேனை விடக்கடவாயென்பதாம்.

ஞாயம்:

கொலை செய்யாரென்ற பொதுச்சொல் லெவ்வுயிரையுமெனப் பொருடருமாறு நிற்கின்ற வென்னுஞ் சொறிரு வடிகளைக் குறிக்குமாறும் பன்னிரு கைகளிலுஞ் சட்சமய மூர்த்திகளுடைய சின்னங்களுந் தரித்தமையாற் றேவகலைமுழுமையுந் தங்குந் திருமேனியென்றது முபதேசித்துந் தாரகன் பறித்துக்கொண்ட சக்கரத்தை மீட்டுக் கொடுத்துங் குட்டிவிலங்கிட்டுக் கெருவந்தவிர்த்து மூவர்களை யாண்டமையா லங்ஙனங் கூறியது மென்னைச் சூழ்ந்து காக்கின்றவனென்றுரைத்த பின்றுன்பசாகரங்களைக் கடத்திவிட வேண்டுமென்றமையா லவையாவும் பத்தி சோதனையால் வந்தனவே யென விளங்குதலுமிச் செய்யுளிற் பாட்டுடை தலைவனது நாமமுஞ் சரிதமும் விரியாவிடினுந் தன்மையால் விளங்கும் விதமும் பிறவு மறியக் கடவர்.

இலக்கணம்:

அக்கமென்னு நேத்திரப் பெயரக்கென நின்றது சாரியை நீக்கம் தியென்னும் புத்திப் பெயரொடு புணர்ந்த ஏகாரம் ஏழாமுருபாயியல்புழி நின்றது. ஏடென்னும் பெருருடைய விதழெல்லாப் பூவிற்குமுரிய வுறுப்பாயினு மிதழி யென்னும் பெயராற் கொன்றைக்குச் சிறப்பாதல் பற்றியது முதலிய பூவென விரிக்கப்பட்டது. ஏனமென்ற வராகப் பெயரேனெனச் சாரியை கெட்டுள்ளது. அல்லென்ற விருட்பெயரை யிட

நோக்கி நிறமெனக் கொள்ளப்பட்டது. என்னினென வாறா முருபு தொக்குஞ் சாரியையாற் றொருகாமை போன்றுள்ள பதமே னினென நீட்டல் விகாரமுற்றது. களையென்ற சொற்குப் பொல்லாரென்று மிகைச் பொருத்தமானப் பொருடரு மத்தே யென்னுஞ் சொற்கிசைத்தமிழ்ப் பாடலென்றும் பொருள் விரித்த தாதிய வான்றோராட்சிக்கு விரோதமன்று. செம்பாகச் செய்யுளில் ஆலுக் கணிகல மென்றதை யதனில் வசிக்குஞ் சிவனுக்கெனப்பொருள் கோடலாதிய வற்றானு நன்குணரக்கடவர். (25)

26. கடன்றீரத்தக்க நல்லாடலைச் செய்திடக்காதலியே
கடன்றீரத்தக்க நல்லாடலைச் செய்திடக்காதலியே
கடன்றீரத்தக்க நல்லாடலைச் செய்திடக்காதலியே
கடன்றீரத்தக்க நல்லாடலைச் செய்திடக்காதலியே.

இதன் பொருள்:

கடு - ஆலகாலவிடத்தை.
அன்று - ஆதிகாலத்தில்.
ஈர் - வலிந்தெடுத்த.
அத்த - கையினிடத்து.
கனல் - அக்கினியையுடைய.
ஆடல் - நடனஞ் செய்கின்ற.
ஐ - தலைவரான சிவபெருமானது.
செய் - சிவப்பும்.
திட - வல்லபமும்பொருந்திய.
காதல் - புத்திரனே.
இ - பாதியான.
ஏ - நிந்தையுள்ள.

கடன் - கமண்டலத் தோனான பிரமாவின்.
தீர - மனத்தயிரியமான.
தக்கு - சாத்தியத்தைக் கெடுப்பதற்கு.
அனல் - அக்கினி போல்வானே.
ஆடு - நாரதர் வேள்வியிற் பிறந்த வாட்டுக்கடாவை.
அலைச்சு - தன்னிட்டப்படி நடத்தி.
எய்து - அதனாலடைந்த.
இட - இடபாகத்தில் வசிக்கும்.

காதலி - மனைவியான தெய்வயானையால்.
ஏ - வியக்கப் பட்டவனே.

கடன் - மலைச்சாரலுடையவனே.
தீர - கடற்கரையான செந்திலில் வசிப்போனே.
த - குபேரனை.
கனல் - கோபிக்கும்படியான.
ஆள் - அடிமைத்திறத்தில்.
தலை - முதன்மையான சமயாசாரிகள்.
செய் - உண்டாதற்கு விளைநிலம் போல்வானே.
திட - சத்தியசொருபமான முருகக்கடவுளே.
காது - கொல்லுகின்ற.
அலியே - எமனேயென்று சொல்லத்தக்க

கடன் - கடனாலுண்டான தொந்தரவு.
தீரத்தக்க - முழுமையுந் தீரும்படியான.
நல்லாடலை - நல்ல திருவிளையாடல்களை.
செய்திட - செய்யும்படி.
காதலி - விரும்பு. எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

ஆலகாலவிடத்தை யெடுத்த கையிலக்கினி யேந்திக் கொண்டு நடனமாடுகின்ற சிவபெருமானைப் போன்ற செந்நிறமும் வல்லபமுமுடைய மைந்தனே பாதிப் பேரானிந்தனை யடைந்துள்ள பிரமாவின் மனத்தயிரியத்தைக் கெடுக்கு மக்கினி போல்வானே வேள்வியிற் பிறந்த செம்மறியாட்டுக்கடாவை யடக்கியதாற் கிடைக்கப் பெற்றவளு மிடபாகத்தில் வசிக்கு மனைவியுமான தெய்வயானையால் வியக்கத்தக்கவனே. மலைச்சாரலினுங் கடற்கரையிலும் வசிப்போனே பொருள் வெறுப்பாற் குபேரனை யிகழ்கின்ற மெய்யடியார் ரனேகர்க்கு ளுயர்வோரான சமயாசாரிக ளுண்டாதற்கொரு விளைநிலமாவானே சத்தியசொருபமான முருகப் பெருமானே கொலைத் தொழில்செய்யு நமனுக்குச் சமானமான கடன் முழுமையுங் கெடும்படி நல்ல திருவிளையாடல்களைச் செய்யத் திருவுளங் கொண்டரு ளென்பதாம்.

ஞாயம்:

தாரகன் விட்ட பாசுபதக்கணையைக் கையிற் பிடித்தது மசுர சேனையைக் கினிக்கண்ணா லெரித்தது மாதிய வியப்பாற் சிவனைப் போல்வானென்றது மிருவினைப்பயனாற் செனிக்கின்ற

சிவசமூகத்திற்றீவினைப் பகுதியோர் பிரமாவை யிகழ்தலுலக வழக்கமாதலிற் பாதிநிந்தை யோனென வவனைச் சொன்னது மாட்டுக் கடாவையடக்கியதுந் தேவாநுகூல மேயாதலிற் சூரசங்காரமாதியவற்றை யதனுள்ளடக்கிச் சொன்னதுங் கடற்கரையினும் பெருங்கரை வேறின்மையிற்றீர மென்ற சொல்லைப் பற்றிச் செந்திலை வருவித்தது மன்றியுங் கரையெனப்படு மெத்தலத்தைச் சுட்டினுமமையு மென்பதும் பொருள்வேட்கை யறுதலினும் பெரிய சிறப்படிமைத் திறத்திற்கின்றென்பது தோற்றக் குபேரதூடணை சொன்னதுங் குருத்துவ முடைய பேரெச்சமயத் தோராயினு முருகப் பெருமான மிசமேயாவாரென்பா னவர்க்கோர் விளைநில மென்றதுங் கடனைப் போலுந்துயரு மதனிவிர்த்தியைப் போலுஞ்சுகமு மின்றென்பது தோற்றவங்ஙனம் பிரார்த்தித்தது மறிக.

இலக்கணம்:

ஒருவருமிசையாத விடபானத்தை மனப்பூர்வமாய்க் கருணையாலேற்றமை பற்றி யிழுத்தலெனப் பொருடரு மீர்த்தலென்னும் பதத்தின் பகுதியான வீரென்னுஞ் சொல்லைப் பெயரெச்சமாகப் பிரயோகிக்கப்பட்டது. ஓரி கரத்தை யெண்வடிவாக்கிம் பாதியெனப் பொருள் கூறப்பட்டது. தக்குதலென்னும் பதத்திற்றல்னென்னுஞ் சாரியை நீக்கி நான்காமுருபுத் தொகப் பிரயோகித்திருக்குது. இங்ஙனமுள்ள வுருபுத் தொகையாதிய விலக்கியத்தின் மிக்கீடு பட்டோர்க்குச் சாதரணமா விளங்கு மன்றிப் பதவுரையில் விரித்தெழுதியு மிருக்கின்றாம். எங்ஙனமெழுதினும் பதசாரமும் பொருணோக்கமு மறியத்தக்க விற்பனர்க்கே பயன்படு மென்பதுஞ் சித்தம். *(26)*

27. தலங்களி லென்னகஞ் சாரச்சற்றா சிறயை செய்தியே
தலங்களி லென்னகஞ் சாரச்சற்றா சிறயை செய்தியே
தலங்களி லென்னகஞ் சாரச்சற்றா சிறயை செய்தியே
தலங்களி லென்னகஞ் சாரச்சற்றா சிறயை செய்தியே.

இதன் பொருள்:

தலம் - பூமியும்.
கள் - தேனுக்கு.
இல் - உறைவிடம்.
என் - என்று சொல்லப்பட்ட பூவாகிய.
அகம் - வீட்டையுடைய.
சாரு - கிளிபோன்ற திருமகளும்.

அச்சு - கொண்டிருக்கிற பயங்கரம்.
அற்று - நிவிர்த்தியாய்.
ஆ - பசுக்களை.
சிறை - காக்கின்ற.
ஐ - தலைவனான விட்டுணுவின்.
செய் - சிவந்த.
தி - புத்தியாகிய வீரத்தன்மையுண்டாதற்கு.

ஏது - காரணமான.
அலம் - சமட்டித்துன்பமும்.
கள் - பொய்ம்மையும்.
இல் - இல்லாத.
எல் - பகல்போலு நற்காலம்.
நகு - பிரகாசிக்கின்ற.
அஞ்சு - பஞ்ச பௌதிகமான வுலகத்தில்.
ஆர - பொருந்தும்படி.
சன் - சன்மார்க்கமான.
தா - பலமுள்ள.
சிறு - குழந்தைப்பருவத்தாற் சிறுத்துத் தோற்றுகின்ற.
ஐ - சுவாமியே.
ஐ - அழகிற்கு.
செய் - விளைநிலம் போல்வானே.
தி - அக்கினி தேவனது.
ஏ - வியப்பான.

தலம் - விரித்தகையிலும்.
கள் - ஒருக்காற்றிருட்டுத் தனஞ் செய்தவளான.
இல் - அவனது மனைவியிடத்தும் வசித்த.
எல் - சூரியன் போல்வானே.
நகம் - மலைகளாகிய.
சார - இடத்தில்.
அச்சு - சேவற் கொடி முதலான வடையாளமும்.
அல் - ஆணவவிருண் மலத்தை.
தா - தாண்டும்படி.
சிறு - சினக்கின்ற.
ஐயை - தவப்பெண்களின்.
செய்தி - ஒழுக்கமும்.
ஏ - பொருத்தமுள்ள.

தலங்களில் - உனது கோவில்களில்.
என்னகம் - ஒன்றாயென்மனமும்.
சார - சேரும்படி.
சற்று - கொஞ்சம்.
ஆசில - குற்றமற்ற.
தயை - கிருபையை.
செய்தி - செய்யக்கடவாய். எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

பூமிதேவியு மிலக்கு தேவியுங் கொண்டிருக்கிற பயங்கர நிவிர்த்தியாய்ப் பசுக்களைக் காக்கின்ற விட்டுணுவுக்குக் கோரயுத்தஞ் செய்யு மிராசத குணத்தை யுண்டு பண்ணுமேதுவான லோக சஞ்சலமு மசத்தியமுமில்லாமற் போகின்ற பகல்போலு நற்காலமானது விளங்குகின்ற பஞ்ச பௌதிகமான வுலகத்திற் பொருந்தும்படி சன்மார்க்க பலமுங் குழந்தைப் பருவமுமுள்ள சுவாமியே யழகிற்கு விளைநிலம் போல்வானே யக்கினி தேவன் கையிலு மொருக்காற் களவுப்புணர்ச்சி யின்பமுங் கொடுத்தவளானவவன் பத்தினி வயிற்றிலும் வசித்த சூரியன் போல்வானே மலைகளிடத்தி லனேகமடையாளங்களோடு கூடி யாணவ விருட்டைக் களையும் படிக்கான வைராக்கிய முற்ற தவப்பெண்களி னொழுக்கமும் பொருந்திய வுனது கோவில்களிலொன்றா யென்மனமுஞ் சேரும்படி குற்றமற்ற கிருபையிற் கொஞ்சஞ் செய்தருளென்பதாம்.

ஞாயம்:

தேனுக்கிடமாகிய வீடென்றமையாற் பூவென வருவிப்பினு மவற்றிற் சிறந்த தாமரை யென்பது தானே விளங்குவது மதில் வசிக்குங் கிளியென்றதா லிலக்குமி யெனப் பொருடந்தவாறுஞ் சரசுவதிக்கு மொரு ஞாயத்தாற் பொருந்துமென்பது மவர் போலுந் செங்கிளி வெண்கிளியுமுள்ள வென்பது மிரட்சிப் புக்கிருத்தியமுடைய விட்டுணுவுக்கு லோகநலத்தின் பொருட்டி ராசதகுண முண்டாமென்பது முலகந்துன்புறு மசத்திய கால மிரவு போலுமாதலிற் பகல்போலு நற்காலமென்றதுங் குருத்துவமுடைமை பற்றிச் சன்மார்க்க பலமுரைத்ததும் அக்கினிகையிலு மவன் மனைவியிடத்தும் வசித்தது மவன் மனைவி யருந்ததி யல்லாதவாறு பெண்களாயுருக்கொண்டு களவின்ப மூட்டியவாறும் பவுராணிகப் பிரசித்த சரித்திரமென்பதுங் குறிஞ்சிக் கோயில்களிற் சேவன்மயின் முதலிய வடையாளங்களும் பாட்டுடைத்தலைவனாற் சிறையெடுக்கப்பட்ட தவப்பெண்களும் விளங்குவது சுபாவமென்பது மென்மனமு மொருகோவிலாக வேண்டுமென்ற சொல்லின்றாற் பரியமதனிலு நீநீங்காதிருக்கச் சம்மதி

யென்றதா மென்று மற்றவற்றிற்கும் விரித்தெழுதின் மிகைபடுமென்பது மறிக.

இலக்கணம்:

அகஞ்சாரு வென்ற விருசொல்லினடு வரவேண்டிய வத்துச் சாரியை தொக்கது போல்வனவற்றை மதித்தறிய வேண்டுவது. சன்-தா வென்றல் சற்றா வெனவிதிவழி நின்றது. ஐச்செய்யென்றல் ஐசெய்யென மெலிந்து நிற்றல் போல்வனவற்றைப் பற்றி யிந்நிருவாக மறியா விளம்புலவர் பேசுமாச்சரியத்தைப் போலு மருவருப்பு வேறின்றாம். தீயென்ற வக்கினிப்பெயர் குறுக்கல் விகாரமுற்றுத்தி யென்றாயிற்று. *(27)*

28. செய்ய தகரிடத் தேறினன்றா னந்தந் தேசிகனே
செய்ய தகரிடத் தேறினன்றா னந்தந் தேசிகனே
செய்ய தகரிடத் தேறினன்றா னந்தந் தேசிகனே
செய்ய தகரிடத் தேறினன்றா னந்தந் தேசிகனே.

இதன் பொருள்:

செய்ய - சிறந்த.
தகர் - கங்கையையுடையரான சிவபெருமானுக்கும்.
இடத்து - அவரிடப்பாகத்துக் குரிதான சத்திக்கும்.
ஏறு - நரசிங்காவதாரஞ் செய்த விட்டுணுவுக்கும்.
இனன் - சூரியனுக்கும்.
தானம் - மதசலத்தையுடைய விநாயகருக்கும்.
தம் - மகாவாக்கியப் பொருளான.
தே -பொதுத்தெய்வத்துக்கும்.
சிகன் - சிகையுள்ள பிரமாவுக்கு.
ஏ - சிறைப்பட்டானென்னு நிந்தையை

செய் - உண்டுபண்ணிய.
அது - அஃறிணைச்சுட்டுக்கிலக்காகிய குழந்தை வடிவுற்ற முருகப் பெருமானுக்கும்.
அகரு - வாசனைப்புகை.
இட - கொடுத்தலாதியான வாராதனஞ் செய்யும்படி.
தேறி - தெளிவடைந்து.
நன்று - நன்மையும்.
ஆனந்தம் - களிப்பும்.
தேசு - கீர்த்தியும்.

இகல் - வல்லபமும்.
நே - அன்பும்.

செய்ய - விளைவதற்கு நிலம்போன்ற தன்மையினது.
தகு - பொருத்தமான.
அரு - அருமையை.
இடத்து - விசாலமாக.
ஏல் - ஒருமிக்கின்ற.
தின் - தீமை.
அன்று - அல்லாததாய்.
ஆனம் - உண்டாகப் பெற்றேமாயினும்.
தம் - கொடைத்தொழின் முயலும்.
தேசிகன் - செட்டியும்.
ஏ - வியக்கத்தக்க.

செய்ய - சிவந்த.
தகரிடத்து - ஆட்டுக்கடாவாகனத்தில்.
ஏறின்ன - ஏறுகின்றவனுமான.
தான் - ஒருவனே.
நந்தம் - எங்களுடைய.
தேசிகன் - ஆசாரியன். எ-று. ஏ - ஈற்றசை.

கருத்து:

சிவன் சத்தி விட்டுணு சூரியன் விநாயகர் பரம்பொருள் முருகன் என்னுமேழு விதமாயும் ஆராதிக்குந் தெளிவாகிய சமரசத்தால் நன்மையின்பம் புகழ் வலியன் பாதிய விளைதற்கோர் வயல்போன்ற குணத்தின் றகுதியையு மருமையையு மிவ்வுலகத்திற் றீமையற்றதா யடையப் பெற்றேமாயினுங் கொடைத்தொழிலுடைய செட்டியுஞ் செம்மறிக் கடாவிலேறுகின்றவனுமான வவர்களி லொருவனே யெங்களுக்குக் குருவானவ னென்பதாம்.

ஞாயம்:

இவ்வேழுவித மூர்த்திகளைப் பற்றிய விபரமொருவாறிப் பிரபந்தக் காப்புரையில் விரித்திருக்கின்றா மன்றியு நம்மாற் செய்யப்பட்டதுஞ் சதுர்வேத சித்தாந்தத்தைச் சேர்ந்த பொதுவாசிரியர் சிறப்பாசியரென்னு மிருதிறத்தாராற் பாடப்பட்டனவுமாய வெல்லாப் பிரபந்தங்களு மிவ்வெழு பகுதி யுள்ளடங்கு மென்பதுந் தெய்வமொன்றே சட்சமயத்து முள்ளதென்றல் பொது. குறித்த நாமரூபமொன்றே சிறந்த தென்றல் சிறப்பு

என்பவு மமைதி நோக்கிப் பொருணன்கு விளங்கும் பொருட்டுப் பதவுரையிற் சில விரித்தெழுதப்பட்ட தென்பது முன்பு செய்யு முபசாரமான தூபத்தைப் பற்றி யாராதனம் வருவித்தது மணக்கப்புகையுந் தன்மையா லகிலையுஞ் சாம்பிராணியையு மொன்றுபடச் சொன்னது மன்றியு மவ்விரண்டுஞ் சொற்பபேதமுள்ள வொருசாதிமரத்திற் சென்னிய மென்பது மப்படிப்பட்ட வருமை யடைந்தேமாயினுங் குருமுருகனே யென்றமையா லச்சமரசமம் மூர்த்தி யநுக்கிரகத்தாற் கிடைத்ததா மென்பதும் பிறவுமறியுமா றறியக்கடவர்.

இலக்கணம்:

பண்பு நோக்கிச் சில நாமங்கள் வருவிக்கப்பட்டன. துவ்விகுதி யுடைமை காட்டுதல் - முடித்து - பூட்டு - என்பனவாதிய வற்றாற்றோன்றும். தானமென்றது பலருமாகு பெயரென்னும் பின்மொழித்தொகை. சிகையுடையானைச் சிகனென்றல் விதிப் பிழையன்றெனல் சிகியெனு மயிற் பெயராற் றோன்றும் தீமைப்பெயரான தின்மை மை விகுதி கெட்டுநின்றது. ஆனேமென லானமெனப் பலர் வாய்பாட்டுவழி நின்றது. *(28)*

29. சிகரா சலங்கள னேகத்தி னானன்றித் தேர்கிலனே
சிகரா சலங்கள னேகத்தி னானன்றித் தேர்கிலனே
சிகரா சலங்கள னேகத்தி னானன்றித் தேர்கிலனே
சிகரா சலங்கள னேகத்தி னானன்றித் தேர்கிலனே.

இதன் பொருள்:

சிகர - தலையினிடத்துள்ள.
ஆ - வியப்பான.
சலம் - கங்கையினது.
களன் - களவுப்புணர்ச்சியுடைய சிவனும்.
ஏ - அவனது பாணமான விட்டுணுவும்.
கத்தின் - கம்மாகிய பிரம்மாவு மென்று சொல்லப்படுகின்ற மூவர்களின்.
நா - நாக்களினது.
நன்று - நன்மையானவன்.
இத்தேர் - இப்பூமியாகிய தேரின்.
கிலன் - அச்சொடிதலான வூனத்தை.

நேசி - விரும்பிச்செய்த.
கராசலம் - யானை போலும் விநாயகமூர்த்திக்கு.

களன் - தேன்போலுமினியவன்.
ஏகு - செலுத்துந் தோறுஞ் செல்கின்ற.
அத்தி - அயிராவதக் களிற்றையும்.
நானன் - கத்தூரித் திலகத்தையுமுடைய விந்திரனது.
தித்து - மனத்தையுடைய குழந்தையான தெய்வயானையின்.
ஏர் - அழகிய.
கிலன் - கழுத்தின் பூணான் மங்கலத்திற்குரியவன்.

ஏசு - குற்றமுள்ள.
இகர் - இகலோகத்தார்.
ஆ - இரங்கத்தக்க.
சலம் - பெருங்கோப சம்பந்தமான.
களன் - போர்க்களத்தையுடையவன்.
ஏக - ஒரேபொருளான.
தினான் - நித்தியன்.
நன்றி - விசுவாசமுள்ள.
தேர் - உரோகணிப் பெண்ணானேரிட்ட.
கிலன் - உருவழிதன்மையோனான சந்திரனை.
ஏ - தொடத்தக்கனவா வளர்ந்த.

சிகர - கொடுமுடிகளோடு கூடிய.
அசலங்கள் - பருவதங்கள்.
அனேகத்தினான் - எண்ணிலடங்காத் தொகையுடையவனான முருகக்கடவுள்.
அன்றி - அவனையல்லாது.
தேர்கிலன் - மற்றொரு பொருளையானறியேன். எ-று. ஏ - தேற்றம். அல்லது ஈற்றசை.

கருத்து:

சிவன் விட்டுணு பிரமாவென்னு மூவர்களினாவினாற் சொல்லு நன்மைக்குரியவனுந் திரிபுர சங்காரஞ் செய்யச் செலுத்திய தேரினச்சையொடித்த விநாயகருக்குப் பிரியமானவனு மானைவாகன முங்கத்தூரித் திலகமுமுடைய விந்திரன் மனமுழுகும்படி மகவாசையை விளைக்கின்ற தெய்வயானையி னழகிய மங்கலத்திற்குரியவனும் பெருங்கருணையி னியபறியாத வுலகத்தாரந்தோவென விரங்கத் தக்க போர்க்கள முடையவனு மொரே பொருளாக விளங்குகின்ற நித்தியனு முரோகணிப்பெண்ணின் மோகத்தாலுருவழித் தன்மையுற்ற சந்திரன் வசிக்கு மண்டலம் வரை வளர்ந்த சிகரங்களோடு கூடிய பல

பருவதங்களையுடையவனுமான முருகப்பெருமானையன்றி மற்றொருவரையு நானறியே னென்பதாம்.

ஞாயம்:

உமையவளை வஞ்சித்துக் கங்கையைச் சிவபெருமான் றலையில் வைத்தாரென்னும் பிரசித்தத்தாற் களவுப்புணர்ப் பென்றதுஞ் சிவனுக்கடுத்துப் பாணமென்றதாலு மவ்வினத்தினுயர்ச்சி பற்றியும் விட்டுணுவென வருவித்தது நாவினது நன்மை துதியென்பது மித்தேரெனச் சுட்டியதாற் பூமியெனக்கொண்டது மகவாசையினும் பெரிதின்மையாலிந்திரன் மனத்தை யுடையதெனத் தெய்வயானையைச் சொன்னதுந் துட்டசங்கார முலகிற் கிதமென்றறியாரே போர்க்களத்தின் கோரங்கண்டிரங்குவாராதலி னவரைக் குற்றமுள்ளா ரென்றது மன்றியு மிகத்தாரென்றலிற் பரத்தாரனைவர்க்கு மசுரநாசத்திற் பிரியமுண்டெனல் விளங்கியதும் ஒரு பொருளான நித்தியனென்றதாற் பரத்துவங் குறித்தவாறு மற்றொருவரை யறியேனென்ற தநுபூதி நிலயமென்பது மற்றவை முன்னுரையில் விரித்துள்ளதும் வெளிப்படையும் பவுராணிகப் பிரசித்தமுமாமென்பது மறிக.

இலக்கணம்:

கம்மென்னும் பதத்திலத்துச் சாரியை புணரிற்கத் தெனவருமாறு மறியாராதியர்க் கெல்லா முதராண மெழுதி முடியாதாதலின் விடுத்தனம். அப்பதத்தீற்றிலாறா முருபைக் காட்டிநின்றவின் சாரியை முற்கூறிய விருவரையுந் தழுவியது. காரசலமென்ற பதத்தினும் சலமென மலைப்பெயர் வந்து மற்றோரடியினு மவ்வுழி - சிகாரசலமென வப்பெயர் வந்தமையான் மயங்கு மிளம்புலவர் பலருளாராயினு முந்தியது. சலமற்ற பண்புடைய தன்றாதலானு மானையெனப் பொருடந்தமையாலும் பொருந்து மெனச்சொல்லித் தேற்று முதுபுலவரு முளாரென நம்புகின்றேன். செலுத்து மத்தியை யேகத்தி யென்றது பிறவினையால் வந்தவமைதி செலுத்துந் தோறும் போதல்பற்றி வழுவெனல் கூடாது. கழுத்துடையானெனப் பொருடருங்கில்லனென்ற பதங்கிலனென மெலித்தல் விகாரமுற்றது. *(29)*

30. தேராத சிந்தையினேன்றஞ் சஞ்சத்திக்கைச் சீரியனே
தேராத சிந்தையினேன்றஞ் சஞ்சத்திக்கைச் சீரியனே
தேராத சிந்தையினேன்றஞ் சஞ்சத்திக்கைச் சீரியனே
தேராத சிந்தையினேன்றஞ் சஞ்சத்திக்கைச் சீரியனே.

இதன் பொருள்:

தேர் - அறிகின்ற.
ஆத - இச்சையாகிய.
சிந்து - சமுத்திரத்தின்.
ஐ - ஐந்துவித.
இன் - இன்பமாகிய விடயங்களில்.
ஏன்று - பொருந்தி.
அஞ்சம் - அன்னம் போன்ற.
சத்தி - பெண்ணான சரசுவதியை.
கைச்சு - வெறுத்து.
ஈர் - பூருவபட் சஞ்சித்தாந்தமென்னு மிரண்டு வித.
இயன் - வார்த்தைக் காரனான பிரமாவுற்பத்திக்கு.

ஏது - காரணமான.
ஏ - வியப்புற்ற.
ரா - ராத்திரி போன்ற நிறமுள்ள விட்டுணுவும்.
த - குபேரனும்.
சிந்தையின் - கருதத்தக்க வவிப்பிராயங்களில்.
ஏன்று - ஒருமித்து.
அஞ்சம் - அம்மென்றுஞ் சம்மென்றுந் தொனிக்கின்ற.
சத்திக்கை - மகாமந்திர பீசாட்சரங்களைச் செபிக்கின்ற.
சீர் - சுபாவமான.
இயல் - குணமென்னும்.
நே - நெய்யை.

தேர் - தேர்போலுங் கடிதட சம்பந்தத் தாலுண்டாம்.
ஆத - குற்றங்கள்.
சிந்தை - சிந்துகின்ற நட்டத்தை.
இன் - இனிதென்னு மிலாபமாக.
ஏன்று - ஒப்புக்கொண்டு.
அஞ்சு - ஐந்தாகிய.
அம் - அழகிய நிறங்களை.
சத்திக்கை - உமிழ்கின்ற.
சீர் - சொற்சீர்களோடு கூடிய.
இயல் - தமிழின்.
நே - அன்பை.

தேராத - ஆராயமலு மிருக்கின்ற.
சிந்தையினேன் - மனத்தின்னாகிய வடியேனுக்கு.
தஞ்சம் - ஆதாரமானவன்.
சத்திக்கை - வேலாயுதம் பிடித்த கையினாற்.
சீரியனே - சிறந்தவனான முருகக்கடவுளே.

கருத்து:

அறியபட்டதான விச்சா சமுத்திரத்தின் பஞ்ச விடயங்களிலமுந்திச் சரசுவதி கடாட்சத்தை வெறுத்துப் பூருவபட்சஞ் சித்தாந்தமென்னு மிருவித வார்த்தை வடிவான வேதங்களையுடைய பிரமாவுற்பத்திக்குக் காரணமான வியப்புற்ற விருண்ட திருமேனியோடு கூடிய விட்டுணுவுங் குபேரனும் விரும்பத்தக்க பெருங்காரியங்களில் ஒருமித்து மகா மந்திரங்களைச் செபிக்கின்ற குணமாகிய நெய்யைப் பெண்மோகத்தாலுண்டாகுங் குற்றங்கள் சிந்துகின்ற நட்டத்தை நலமாக வொப்புக் கொண்டு பஞ்சவன்னங்களைக் காட்டுகின்ற சொற்சீர்களோடு கூடிய தமிழருமையை யாராயாமலிருக்கின்ற மனத்தோனான வெனக்குத் துணைவேலாயுதம் பிடித்தகையாற் சிறந்துள்ள முருகக் கடவுளே யென்பதாம்.

ஞாயம்:

மனவாக்குக்காயங்களா லறியப்பட்ட பொருள்களிடத்தன்றி யிச்சையுதியா வாதலினத் தன்மையா லிச்சா சமுத்திரத்தைச் சிறப்பித்ததுமது பஞ்ச விடயரூப மேயாமாகலின் அவற்றிலமுந்தி யென்றது மவையுற்றாற் கல்வியாசை கெடுமாதலிற் சரசுவதியை வெறுத்தென்றதும் பசுபந்தனவேள்வியாதிய பூருவபட்ச வாக்கியங்களும் புல்லுள்ள தலத்தின் மூத்திரம் பெய்யலாகாதென்ற லாதிய சித்தாந்த வாக்கியங்களும் வேதத்திலுள்ளனவேயாதலிற் பிரமாவை யீரியனென்றதும் வேதாகம விதியாகிய சத்தியசவுசங்களைக் கெடுப்போரைக் கெடுத்தலினுந் தேவாலயச் சீரணோத்தாரண மாதியவற்றை விரும்பிச் செய்தலினு நாட்டமுறுதால் விட்டுணுவுங் குபேரனுங் கொள்ள வேண்டு மவிபபிராயத்திலொரு மித்தென்றது. நெய்யாற்றன் முகதெரிசனமாதல் போற்றவத்தாலான்ம தெரிசனமாதல் பற்றி யங்ஙனந் திட்டாந்த தாட்டாந்த மாக்கியதுங் காம சல்லாபத்தாலந் நிலைகுன்றுமாதலி னதனைச் சிதறுகின்ற குற்றமாகிய நட்டமென்றது மத்தன்மை யுணராது முயல்கை பற்றி நலமாகக் கொள்ளலென்றதுந் தனது புலமையாற் றிருவருட்பிரசாத சித்தியடையாத வருத்தத்தாற்றமிழை யாராயாத மனத்தே னென்றதும் போக மோட்ச காமிகளிருவரு முபாசிக்குந் தெய்வமாதலின் முருகப்பெருமானே யெனக்குத்தஞ்ச மென்றது மறிக.

இலக்கணம்:

இன்னென்ற பதமோரிடத்திற் களிப்பையு மற்றோரிடத்தினலத்தையும் விளக்கி நின்றது. முதலடியி லஞ்சம் போன்ற சத்தியென்றற் கஞ்சஞ்சத்தி யென்ற துவமைத்தொகை. ராவென்ற பதத்திற்கு முன்னுரைத்த பண்பால் விட்டுணுவெனப் பொருள்கூறப்பட்டது. சிந்தையென்ற பதமோரிடத்தி லவிப்பிராயத்தையு மற்றோரிடத்தின் மனத்தையுங் குறித்து நின்றது. இப்பாடலி னிர்பந்தத்த லப்பீசாட்சரங்களை வெளிப்படுத்தும்படி நேரிட்டத்தாயினு மறிவார் சிலரே யென்றது சத்தியம். தேர்போலு மல்குலைத் தேரென்றே சொல்லியது மான்றோ மபேயன்றி வேறன்று. குற்றப்பெயரான ஆது - பன்மை யினிமித்தமாதவென வந்தது. சிந்துதலை யென்றபத்திற்றல் விகுதி நீங்கிச் சிந்தையென நின்றது சுவைக்குறைவறென வுணரும் புலவனை விரும்புகின்றாம். ஐந்துநிறந் தமிழ்க்குண்டென்பது வெள்ளைக்கவி செந்தமிழ் பைந்தமிழென்னும் ஆன்றோர் மொழிளானுஞ் சுத்தஞானத்தானு மறியுந் தகுதியில்லார் நம்மாலியற்றப் பட்டுள்ள அறுவகை யிலக்கணத்தா லறியக் கடவர். சத்திக்கை வாந்தியெனப் பொருடருமாயினு மிவ்விடத்தில் ஒளியை வீசுகின்றவெனப் பொருள் கொடுத்தது. அங்ஙனமேயிப் பிரபந்தமுமே காக்கிர சித்தராய்ப் பிரவஞ்சத்தையுந் தன்னையு மறந்து தமிழ்மயமாகாத புலவனுக்கருவருப்பையும் அத்திற முற்றமுக்காறற்ற முழுப்புலவனுக் கானந்தத்தையும் விளைக்குமென்பதுஞ் சருவகலா வல்லவியான சரசுவதித் தாயின்றிருவடிகளறிந்த சத்தியம் யென்பது மென்ற சொல்லிலுள்ள வும்மை மற்றெல்லாமு மெனத்தழுவியது. *(30)*

முற்றிற்று

வேலுமயிலுந் துணை

நூன் மகிமை

அதரந்தட்டாத் தனித்தாளினந்தாதிய யிலன்னதே
அதரந்தட்டாத் தனித்தாளினந்தாதிய யிலன்னதே
அதரந்தட்டாத் தனித்தாளினந்தாதிய யிலன்னதே
அதரந்தட்டாத் தனித்தாளினந்தாதிய யிலன்னதே.

இதன் பொருள்:

அதர - அண்டங்களைத் தாங்குந் தன்மையா லத்திமரம் போன்றவரும்.
அம் - அழகும்.
தண் - குளிர்ச்சியும்.

தா - வலியும்.
தனி - ஆகிய தன்மையோரும்.
தாளி - தாளக்காரனான பிரமாவும்.
நந்து - சங்கத்தையுடைய.
ஆதி - கடவுளான விட்டுணுவும்.
ஐ - ஐந்தாகிய.
இலன் - தலங்களையுடைய சிவபெருமானும்.
அ - ஆகிய மூவர்களினது.
தே - தெய்வமும்.

அதர் - அடியவர் செல்லும் வழிக்கு.
அந்து - துணையாகப் பொருந்துகின்ற.
அள் - நெருக்கமுடையவரும்.
தா - வியாழபகவானை.
தனித்து - சமானமில்லாத சேவைக்கொடுத்து.
ஆளி - ஆண்டுக்கொண்டவரும்.
நம் - எங்களுடைய.
தாதி - சொற்றாதுக்களைக் கொள்கின்றவரும்.
ஐ - தலைமை பெற்ற.
இல் - மனைவியாகிய.
அன்ன - அன்னப்புட்போலுந் தெய்வயானை வள்ளியின்.
தே - கிருபையும்.

அதரம் - அச்சமின்மையும்.
தட்டா - முட்டுப்படாத.
தனி - சம்பத்துமுடையவரும்.
தாளினம் - கடைப்பூட்டுள்ள கடக்கேயூர் மாதியவாபரணங்களும்.
தாதி - மகரந்தப்பொடியோடு கூடிய கடம்பு வெட்சியாதிய மாலைகளுந் தரித்தவருமான முருகக் கடவுளாரது.
அயில் - புசிக்கும்படியான
அன்ன - சோறு முதலிய வாகாரங்களினும்.
தேய் - உரைகின்ற.

அதரம் - உதடுகள்.
தட்டா - ஒன்றோடொன்றொட்டாத.
தனித்தாளின் - ஏகபாதச் செய்யுளுள்ள.
அந்தாதி - அந்தாதியாகிய விப்பிரபந்தம்.
அயில் - அவர்க்குரிய வேலாயுதத்தை.
அன்னதே - போல்வதேயாம்.

கருத்து:

அண்டங்களைத் தாங்குந் தன்மையா லத்திமரம் போன்றவரு மழகுங் குளிர்ச்சியும் வலியுமாகிய தன்மையுடையவருங் கைம்மணி சங்கம் பஞ்சபூதத் தலமென்னு மடையாளமுள்ள திரிமூர்த்திகளின் றெய்வமும் பத்தர்கள் செல்லும் வழிக்கு நெருங்கிய துணையாவாருஞ் சமானமில்லாத சேவையருளி வியாழனை யொருக்காலாண்டு கொண்டவரு மெங்கள் சொற்களின் றாதுக்களை யெல்லா மேற்றுக்கொள்கின்றவருஞ் சருசத்தி சமூகமான வள்ளிதெய்வானை யென்னும் பத்தினிகளின் கிருபையும் பயமின்மையுந் தட்டில்லாத சம்பத்து முடையவரு மனேக மாபரணங்களும் பூமாலைகளுந் தரித்துக் கொண்டவருமான முருகக் கடவுளாரை யுத்தேசித்து ஆகார முண்ணும்போது மொட்டுகின்றனவான வுதடுகள் சிறிதுஞ் சலனமுறாதபடி பாடியதான வேகத்தாளிதழகலந்தாதி யென்னு மிப்பிரபந்தமவரது வேலாயுதத்தைப் போல்வ தென்பதாம்.

ஞாயம்:

முருகப்பெருமானது விசுவரூப தெரிசனத்திலண்ட கோடிகளியாவுந் தொங்கிக் கொண்டிருப்பதாகப் பிரமாணமிருப்பதா லான்றோர் மொழிவழி யங்ஙனங் கூறப்பட்டது. திரிமூர்த்திகளின் றெய்வமென்றதற்கு முன்னோருழி விபரஞ் சொல்லப் பட்டிருக்கின்றது. வியாழனை யாண்டுகொண்டதாதிய பவுராணிகப் பிரசித்தம். பத்தினிகளின் கிருபையுடையானென்ற சொற்கோலாகல புருடர்க் கிழிவாகாது. அவர்களிடங் கிருபையுடையா னென்னினுஞ் செய்யுணிலையமையும். பரமகுருபரனானபோது நீக்காதது வேலாயுமே யாதலினது போன்றது பிரபந்தமென்றதா லெக்காலு நீக்காமற் றரித்துக் கொள்ளத்தக்கதெனப் பொருடந்தது.

இலக்கணம்:

தண்டாவென்ற பதஞ்செய்யுள் விகாரத் தாற்றட்டாவென நின்றது. தன்மையென்ற பதத்தின் மைவிகுதி நீக்கி யஃதுடையானைத் தனியென்றுந் தாளத்தோனைத் தாளியென்று மில்லனையி லனென்றும் அகரமொன்றான் மூவர்க்கு முடைமை காட்டியுமடியவர் முதலிய சிலசொல்லை யுரையில் வருவித்துஞ் சொற்றமையான்றோராட்சியே யல்லது விகாரமன்று. இதழகலந்தாதிக்குப் பிரதிபதப்பிரயோகஞ் செய்ததி லொட்டாமையை மாத்திரங் குறிப்பித்தமையாற் குவியாமை யொழுகிற்றென் பாரங்ஙன மன்று. குவியினுங் கடைவாயிலொட்டுதல் பற்றி யதனுள்ளடங்கு மாறறியக்கடவர்.

முற்றிற்று

24

தலையணிச் சீரிதழகலந்தாதி

24

தலையணிச் சீரிதழகலந்தாதி

தலையணிச் சங்கான றந்தகளிற் றினறகைக் கழனத்
தலையணிச் சந்தத் தேத்த லெள்ளே னந்தாத் தினரேந்
தலையணிச் சையங்க ளாள்சேயி ணைத்தண்டைத்
தாள்களிற்சேர்
தலையணிச் சீரிதழக லந்தாதி தழைத்தி டற்கே.

சீரான னத்தனையர் கண்ணலரா கண்கள்சே ரகளிசெய்
சீரான னத்தனைனந் தீர்க்கத்தக் கசெஞ்சேயிகலார்
சீரான னத்தனையாஞ் சத்திரத்தன் றின்நடித்த
சீரான னத்தனைச்சீற் றதையென்சிந் தைசிந்தித்ததே. 1

சிந்திக்கத் தக்கனல லார்சேனை யாதிய சேர்த்தலரைச்
சிந்திக்கத் தக்கனல் சித்தசற் கஞ்சித் திகிரியிற்சேய்ச்
சிந்திக்கத் தக்கங்களெல் லாங்கெட்டா னந்தஞ்சிந்
தையிற்சிஞ்
சிந்திக்கத் தக்கத்தெய் யென்னச்சிகி யிற்றிகழ்கின்றதே. 2

திகரந்த ரத்தின் றிளையாத தாகிய தேகர்நீ
திகரந்த ரந்தை யதிகரித் தேற்றிடற் றீர்செறிநாத்
திகரந்தரங் கத்தினில் லாத்தாளி ணைச்சேய் தெளியை
திகரந்த ரத்தாடை யர்நலனெய் தச்செய் கந்தனே. 3

செய்யகந்தா னையங்கிள் ளையன்னார்த் தந்தேடி நித்தஞ்
செய்யகந்தா னையி லேறிறை யாதியர்ச்சிந் தித்திடேன்
செய்யகந்தா னைதறீர்ந்தார் கண்ணாற்றந்த சேயெனையாட்
செய்யகந்தா னையத் தாலிளைத் தேங்கித் திகைக்கின்றதே. 4

திகையந்தரங் கக்கடலா டைத்தார ணிசே ணிறையர்
திகையந்தரங் கத்தையன் றறைந்தான் யிற்சே யெனலைத்

திகையந்தரங் கண்டி லாரிலன னான்செயசெ யற்கஞ்சிநீ
திகையந்தரங் கத்தரெயத ரிதாந்தி றஞ்சித் தித்தற்கே. 5

சித்திக்கனந் தந்தாந் தையெல் லாங்கெடச் செய்நலங்கள்
சித்திக்கனந் தந்தாந் தக்கதன்றெ னச்சீற் றிகழேல்
சித்திக்கனந் தந்தாச் சினஞ்சேர்ந்த கட்சேய் நிந்தா
சித்திக்கனந் தாநாடியேற்கச் செறித்த னையே. 6

தனையனையா ரின்றி யெண்ணில் சயிலத்த லைதிகழ்கந்
தனையனையாஞ் சத்திக்கைச் சேயைநற் செய்யசடா னன்நர்
தனையனையார்க் கஞ்சனல்கா னெயத்தா தகித்தாரணிசித்
தனையனையா ரிலநாட்ட றைக்கில்லைத் தளர்ச்சியதே. 7

தளங்கண்டன நல்லியத் தார்களாஞ் சித்தசனை யஞ்சித்
தளங்கண்டன ளிர்க்கிரி களைச்சார்ந் திலந்தக் கச்சிக்கைத்
தளங்கண்டனஞ் செய்தயற் சீற்ற சேயடற் றந்தியின்
தளங்கண்ட னத்த நாடகற் கீதற்றா நினைத்தே. 8

தாங்கக்கட லையடைத்தான் றன்றங் கைதனை யனையத்
தாங்கக்கட லைத்தழலா கநத்திய காள னைச்சித்
தாங்கக்கட லைந்தடங் கச்செய சேயைத் தனித்திரந்தந்
தாங்கக்கட லைத்தறஞ் சேரறி ஞர்சாத் ததரே. 9

சாத்ததையர் தரித்திந்தி ரன்சென்னி யிற்றாங்கித் தன்னே
சாத்ததையார்ந் தகடிதடத் தாரிடஞ் சாற்றிசை சால
சாத்ததையா சியணிசேய் சாணிற் றகைநெஞ் சத்தா
சாத்ததையா னன்ற கெய்தாத் தன்றித்தா ரணியிலே. 10

தரணியிலங் கையிற் செல்லாதளித்தனி யாசைத்
தரணியிலங் கையர்கா ணச்செற்றா னனிசாற்றடல் சார
தரணியிலங் கையில்சே யதினைக் காட்டிறை தாலியன்றத்
தரணியிலங் கையகலர னென்னெஞ் சத்தலத் தண்ணலே. 11

தலந்தந்த கையனைச்செங் கட்கரியனைச் சண்டை யிற்காத்
தலந்தந்த கையாதஞ் சேயதனித் தார்கன்றா ளிணைக்கா
தலந்தந்த கையச்செ யாற்றலணி யியற்சா காந்தத்
தலந்தந்த கையனைத் திற்றெரி ஞானந் தாத்தக்கதே. 12

தக்கனங்கண் டந்தறித்தார் கடந்தக் கனங்கண் டங்களி
தக்கனங்கண் டங்களி சிகியி னைச்சத் தியனைத்
தக்கனங்கண் டந்தியிற்கா ணலெய் திற்ற கைநலஞ்சீர்
தக்கனங்கண் டங்கயனா தியரி கலசா ரதலின்றே. 13

சார்ந்தாதத் தாசாதிய ரேதத்தத் யித்தியாசங்
சார்ந்தாதத் தாந்தைக் கடற்றீயத் தகந்தன் றனியா
சார்ந்தாதத் தாடையச் செயசேய் தனைச்சாற்றி யற்சீர்ச்
சார்ந்தா தத்தாச் சத்தியத் தீர்ந்த ழைக்கின்றதே. 14

தழைக்கைக்க ரியநிறச் சார ணரிகறாங் களகந்
தழைக்கைக்க ரியன்ன தாநடைகாட்டெ ழிற்றையலரி
தழைக்கைக்க ரியாறி யாத சேய்செச்சைத் தாரன்ணி
தழைக்கைக்க ரியலத் தாரக நல்கிசை தள்ளரிதே. 15

தள்ளையங் கைய கலாக்கந்த நாதன் றரிதாக்க
தள்ளையங் கையந்தணந் தாடச் செயத்தனித் தகைச்சேய்
தள்ளையங் கையனைத் திறசீர்த்த தாகிடத் தந்தன்னசி
தள்ளையங் கையரித் தாங்கதென் னினன்ற னைத்தின்றதே. 16

தனக்காத லானலிந் தெய்த்திரந் தேனைத்தண் சாரலிற் சார்
தனக்காத லாசிலர்க்கா தனல்லாட் செய்த ளிர்நிறைசந்
தனக்காத லாதனி யெஃகணி சேயிதண் டங்கினள்செந்
தனக்காத லாதழலன் னசடான்னச் சந்திரனே. 17

சந்திக்க நாடகஞ்சா ராதி கலறத் தாக்கியநிற
சந்திக்க நாடகஞ்சே ரடியேன னிசாற் றியங்க
சந்திக்க நாடகத்தே னிழிந்தாய தென்றற் றணகிரித்தே
சந்திக்க நாடகச் செய்தசெஞ் சேய்தனித் தாரகனே. 18

தாரகத்தா னைக்கிளை யானைத் தீயஞ்சுச் சாடியகைத்
தாரகத்தா னையினைச் செற்றன்னா னங்கஞ்சரி யத்தசெச்சைத்
தாரகத்தா னைத்தனிச் சேயைச் சாற்றின்ன றாழ்ந்தசகத்
தாரகத்தா னையக் கண்டா னறாச் சஞ்சலந் தின்றதே. 19

சலசாதத் தனைச்சீற் றானரிந லஞ்சாற் றிறைய
சலசாத னத்தனை யாத்திற்ற சேயந்தாத் தினர்சஞ்

சலசாத னத்தனை யந்தணந் தானங்கை தந்தநல்லஞ்
சலசாத னத்தனை யாச்னென் னெள்ளறற்கிக் கின்றதே. 20

தகியாரத் தாகரச் சேந்தன சலத்த லத்திறைதா
தகியாரத் தாகன செந்நெற்றிக் கட்சேயினைச் சாற்றியசீர்
தகியாரத் தாக்கலத்தி ழிந்தார் தத்திற சார்கிலன்சா
தகியாரத் தாகநிறத் தாளன்றென் கைக்காத்த கையே. 21

தகரஞ்ச நாடியசே யைநண்ணேஞ் சகச்சஞ் சலத்தைத்
தகரஞ்ச நாசியரைச் சேர்ந்திலேஞ் செச்சைத் தாரையணிந்
தகரஞ்ச நாதாந்தா னென்றிடேங் கழைதாங் கிந்ததந்
தகரஞ்சனா காகரக்கண் ணாக்கஞ்சேங் கதிதானெய் தற்கே. 22

தானத்தனந் தத்தத்தெய் யென்ற நாடகத் தாட்சியேயந்
தானத்தனந் தத்தகைக்கா திற்றார கஞ்சாற் றியநி
தானத்தனந் தத்த சலத்திற் சேயலைச் சாகரத்தித்
தானத்தனந் தத்தா நீர்தெரிக்கை நற்றா டாறுகே. 23

தாடலையே றிடச்சேரத் தென்னையா ளத்தத்தி தாலாந்
தாடலையே றிடந்தாரத் தேனடாதண்டி னைச்செந்
தாடலையே றிடாதீர சத்திச்சே யகிரிதந்த நல்லாத்
தாடலையே றிடத்தந் தைநனந் தலைதங் கையனே. 24

தங்கையகங் களிக்கச் சத்தந் தேற்றித் தடத்தினித்தந்
தங்கையகங் களித்தின் னத்தசை யணிசத் தியதந்
தங்கையகங் களிற்றிற் றிரிசேயலர் தண்ணங் கண்ணார்
தங்கையகங் களிற்செச்சை யிட்டா யஞ்சறந் திடின்னே. 25

தந்தக்கரி யயிராணி கண்ணா யிரஞ்சா ரணியார்
தந்தக்கரி யகலார சங்கஞ்சக் காந்தாங்கி நின்றார்
தந்தக்கரி யநலகாண்ட கைச்சே யெயிற்றாக் கியதீத்
தந்தக்கரி யகண்டத்தார் கண்ணீன் றதயா நிதியே. 26

தயங்கத்தக்கா தலின்சஞ் சலத் தெய்தித்தள ரெனதி
தயங்கத்தக் காணனன் னீதியன் றேதிசைச் சக்கயனார்
தயங்கத்தக் கார்சடான னச்சேய்த னசடாக் காததாத்
தயங்கத்தக் காரத் தினிக்கின்ற தாந்தகை சற்றியக்கே. 27

சற்காரியங் களைச்செய் தறியே னின்னதாள் களிறைஞ்
சற்காரியங் களைந்திட்டன் நீத்தி லன்றாங் கயனஞ்
சற்காரியங் களைசெந் நீராத் தந்தகை தங்கெழிலஞ்
சற்காரியங் களைச்சத் திக்கைச் சேயெண் ணிலசக்கானே. 28

சக்காஞ்சங் கந்தரித்த கையாற் றலசாத நன்னீர்
சக்காஞ்சங் கந்தரித்த கையாரி யைத் தாங்கி கற்கஞ்
சக்காஞ்சங் கந்தரித்த கையார்நெஞ் சஞ்சார்ந்த செஞ்சேய்
சக்காஞ்சங் கந்தரித்த கையான் றைதா ரின்னே. 29

தாரந்த ரிக்கையி லாடகஞ் செய்யெனச் சாற்றலைந்த
தாரந்த ரிக்கைநெல் லாதல செய்யேலளித் தண்ணிதழித்
தாரந்த ரிக்கையைத் தீயத்தசெந் தீக்கணிற்றந் தநற்சேய்
தாரந்த ரிக்கையல் லலாதசத் தித்தடங் கையனே. 30

தடங்கை யனந்தந் தலையனந்தந் திகழ்தந்தை கெஞ்சத்
தடங்கை யனந்தந் தக்கண்ணன் னைநாடத் தயித்தியரைத்
தடங்கை யனந்தந் தரித்தானனகேத்தி சைசாலெ ழிற்சேய்
தடங்கை யனந்தந் தாற்கான ஞானத்தழல தன்றே. 31

தழலாகத் தானைய யின்றாற்கி ளையன்றறை யனல்லார்
தழலாகத் தானையிற் றாங்கடற் சேய்கிள்ளைதா னஞ்சற்காந்
தழலாகத் தானையிலே றிந்திரன் றன்றலத் தியரி
தழலாகத் தானைந்தி ரந்திட்ட நாளிற்றணந் திட்டதே. 32

தணந்தாத்தா ளைத்தகர்க் கின்றசத்தி ரன்றங் கத்தாந்
தணந்தாத்தா ளைத்தனஞ் சேர்கலத் தனசா ரலினி
தணந்தாத்தா ளையலேத்தெ ழிற்சேயி ணைத்தாள ணிந்தார்
தணந்தாத்தா ளையந்நீர தாச்செய் தலசகத் தில்லையே. 33

கத்தியலாண் டலைக்கேத னத்தான சினைக்கார் செறிநர்
கத்தியலாண் டலைச்சேய கதிர்ச் சத்தியன் காசிலார்க்
கத்தியலாண் டலைநீத் தாள்செந்தா ளின்னகாத லெண்ணிற்
கத்தியலாண் டலைநீ ரீண்டின ரெண்கதை நல்கலே 34

கதையாயிரங் களிங்கா ரத்தலி னாடிக் கதிரயிலர்
கதையாயிரங் களையாரி டையாய் செங்கன்ன லனைய

கதையாயிரங் கெனக்கேட்டே னச்சேய் சிலர்கைந் நினைத்தேங்
கதையாயிரந் தலையச்செய் கின்றா னிதென் காசினியே. 35

காசிக்கனந் தாஞ்சென் றிடேனங் கனகந்தாக
காசிக்கனந் தங்கை யேந்தன்ன ணேனறென்றற் காலசகடாங்
காசிக்கனந் தங்கழித் தேத்தடி யர்கறையி னெஞ்ச
காசிக்கனந் தந்தகர்த் தகைச்சே யென்ற காதலித்தே. 36

காதலனே கந்தழைய‌ச் செய்தாய் நலங்காட்டி லையைங்
காதலனே கந்தத்தின் னலனைய கண்டே னான்கட
காதலனே கந்தந்தாள் சேயி ரண்டலர்க் கையினர்தங்
காதலனே கந்தனே யென்னையாண் டகடைக் கண்ணனே. 37

கடைக்கண்ணி யலைஞ்ஞிறந் தேர்கிலா ரிற்கலங் கின்னின்
கடைக்கண்ணி யலைநினைகின் றிலேனெ னைக்கைத் திகழேல்
கடைக்கண்ணி யலையத்தாக் கயச்சேய் சிகிக்கார் கண்டக்
கடைக்கண்ணி யலைநன் னீர்ச்சடை யார்தந்த காரணனே. 38

காரணங் கண்டலத்தீ னரைக்கெஞ்சி யென்கை யலர்த்திக்
காரணங் கண்டதிற் சந்தேகஞ் சேர்க்க லங்கலினீங்
காரணங் கண்டனஞ்செய் தாளயி லணிகாங் கெயனே
காரணங் கண்டா கடகாத்தந் தசேய்கிளிக் கையரசே. 39

கையானை யானனத் தாற்கிளை யானை யிற்கந்தனறங்
கையானை யானனத் தாற்கிளை யானைங்கணை யினற்றீயக்
கையானை யானனத் தாற்கிளை யானைத்தங்கை தந்தசேய்
கையானை யானனத் தாற்கிளை யானையல காட்டிலனே. 40

காட்டைக் கடந்தலர் தாரணி சீரளகத் தினர்கண்
காட்டைக் கடந்தக னென்றஞ் சிடேனெனைக் காகறைச்சா
காட்டைக் கடந்தடத் தாற்செய்திட் டான்றங்கை கையெழிற்சேய்
காட்டைக் கடந்தங்க ணேனலிற் சென்ற கனத்தினனே. 41

கனத்தரியா தனத்தேறிய சீலர் கடைத்த லைக்கே
கனத்தரி யாதனத் தாளைநண் ணேனெழிற்காட் சிநல்காய்
கனத்தரி யாதன நேரிந்தி ராணிகலி களைசேய்
கனத்தரி யாதனத்தா னனக்கிள்ளைக் காத்தையனே. 42

காத்தைய தாகிய கண்ணாரை நாடிக்க னகத்தினசே
காத்தைய தானனக்காட் சியினத் தற்கழி யழலா
காத்தைய தானென்கை யானென்கை தீரநலங் காட்டியசெங்
காத்தைய தாநடத்தாட் சேயிதண்டி னைக்கா னத்தனே. 43

கானத்தனா கத்தலை யினின்றா டியகா விளஞ்சேய்
கானத்தனா கத்தளர்ச்சி செய்தானறங் கைக்காதல னியாழக்
கானத்தனா கத்தற் கேட்டயத் தேறிய காளைகையெஃ
கானத்தனா கத்தறக் காரணந் தந்த காரியனே. 44

காரியங்கஞ் சனைச்சக்க ரத்தானைக் கடிய செய்தார்
காரியங்கஞ் சத்தை யன்னாட் களித்த களிதந்தசேய்
காரியங்கஞ் சளஞ்சாரா திரட்சித் தலகாத் ததினைக்
காரியங்கஞ் சலியாதா டலெந்தங்க லியடலே. 45

கலியடத்தக் காந்தோ ராக்கிதங்கள் கழறி நைந்தேன்
கலியடத்தக் கதிற்ற கேக்கற் றேனலகிக் காத்தலென்றார்
கலியடத்தக் கனகத் தானை யார்கலன் றைசீர்க்
கலியடத்தக் கதிர்ச்சத்தி யஞ்சே யெண்கலர் தானே. 46

கலககந்தார் தடியாரிடஞ் சேர்த்தி டிற்கா தகரைக்
கலககந்தார் தலத்தின் னலெய் தேங்கதிர் காலயில்
கலககந்தார் ததர்க்கா காத சேயதடங் கானகத்தர்
கலககந்தார் தியரக் காகிய தீரக்கணத்தி றையே. 47

கணக்கராரி யநலஞ் சேர்த்தற் கெண்ணிக் கடைக்கணித்தின்
கணக்கராரி யலர்த்தாள் காட்டிடாய காங்கான் றகைக்கங்
கணக்கராரி யலத்தார் கந்தன் னைக்க ழறியசேய்
கணக்கராரி யாக்கினி தாழியீந்த செங்கஞ் சத்தனே. 48

கஞ்சக்கரத் தரென்றீ யாரை யேத்திக் கரைந்திரந்தேங்
கஞ்சக்கரத் தற்கரி தாய்சீர் நலங்காட் டிடனே
கஞ்சக்கரத் தனையின் னற்றணந் தகைகந் தகறைக்
கஞ்சக்க ரத்தனக் கார்த்திகை சேயெனைக் கண்டினிதே. 49

கண்டிகைக்கா ரனைய யானை நாடன்ன காசிடத்தின்
கண்டிகைக்கா ரனைந்தானந் தத்தெய் திடற்காத லித்தியான்

கண்டிகைக்கா ரனைத்தண் டணிமேக தியைக்கன நடச்சி
கண்டிகைக்கா ரனையாஞ் சத்தியா னைக்க ழறினனே. 50

கழகத்திய னயங்காட்டி சேயைக் கலகத் திற்றி
கழகத்திய னயனா தியரேத் திசைக்காங் கெயனைக்
கழகத்திய னயனத்தா னைநாடிக் கசித லற்றி
கழகத்திய லாநெறி கன்றக் களிக்கை யென்றே. 51

களிக்கைய லாங்கனல லாரிச்சை நீடிக் கலந்தனாற்
களிக்கைய லாள ரெனத்திரிந் தேனெனைக் கண்டிரங்காய்
களிக்கைய லாய்தற் கிளையானத் தாடலங்கந் தசெந்தேன்
களிக்கைய லானிற் செலசேய் கழலாக்கைக் கடகத்தனே. 52

கடகந் திகழட லானை யன்னானடிக் கக்களித்தங்
கடகந் திகழத் தனாக்கி யையன்றகை காட்டியசேய்
கடகந் திகழலனை யானென்றெண் ணலில்கள்ள நெஞ்சே
கடகந் திகழனிச் சீர்நக ராயிராங்கா ணிச்சையே. 53

காணிக்கை யாகந் தகித்தார் கண்ணாற்றந் தகந்தனண்டா
காணிக்கை யாகண் டலனே யென்றாக்கி யகையின்னகாற்
காணிக்கை யர்கடைச் செட்டி யெனசேய் நலங்கண் டதனாற்
காணிக்கை யாகச்சரீ ராதிநல்கல் கடனாதென்றே. 54

என்றைக்கரி யநிறத்தின தாக்கின் னேறகை நற்சீ
ரென்றைக்கரி யக்க நாடில னீயதையீ யநண்ண
லென்றைக்கரி யடர்ந்தேங் கிடச்செ யத்தினி திரங்கா
யென்றைக்கரி யயிற்சேய்சிகி யேறியிலங் கையனே. 55

இலங்கைத் தலத்தைய நீத்தடி யார்கணத் தெய்திநின்ன
யிலங்கைத் தலத்தைநினை சீர்தந்தா ளியலேயந் ததகை
யிலங்கைத் தலத்தையலின் றிநின்றாய்சி கியேறெழிற்சே
யிலங்கைத் தலத்தையை யட்டானறன் றங்கைக்கி னியகன்றே. 56

இனியாத தானினத் தேற்றத் தரியதெனத்தெளிந்தே
னினியாத தாகாத்தெல் லாங்கண்டா யெனயா னிசைத்த
னினியாத தாசத்திக் கைச்சே யெணசந்தத்தி சைந்தகிள்ளை
யினியாத தாந்தகர் கண்டேங்கு நார்தனிட் டத்தனே. 57

இட்டத்த னாய்சித்தர்ந் தளகைக் கிறையி டஞ்சா
ரிட்டத்த னாய்கிற் றீரளகத் தினியற் கையைநே
ரிட்டத்த னாயகிக் கேற்றான் கடசேயெனை யெய்தின்ன
ரிட்டத்த னாயகிலத் தலைந்தாங் கிளைத்தே னிரங்கே. 58

ஏனாதிக் காகத்த தற்கிறைக் காகநல் லேற்றான்றா
னேனாதிக் காகஞ் சனலகிலன் றாதையென் றேற்றதைச்செய்
யேனாதிக் காகாக்கிளைத் தேனனகா ணின்னை யெண்ணிநண்ணி
லேனாதிக் காகல்லிய லடிச்சே யண்டரீட் டத்தனே. 59

ஈட்டிக்கை யாடக தகைக்காத்த தீயரிய லறியா
ரீட்டிக்கை யாடகச் செய்தார் கண்ணே கலனெற் கிரங்கா
யீட்டிக்கை யாட்கலத் தயிலங்கெழிற்சே
யீட்டிக்கை யாட்காகைந் நேர்செங் காந்தளண் ணேற்றத்தனே. 60

ஏற்றிட்டந் தீர்நல்லீ கையெய்தீ சனெழிற் கணின்சே
யேற்றிட்டந் தீரட்ட சித்திதந் தாகத் தினிற்கலந்தா
ளேற்றிட்டந் தீர்த்திறகற் கிணறாக்கி யெய்த்தே னெனைத்தள்
ளேற்றிட்டந் தீர்த்த நேர்சேந் தசார விடத்தின்னே. 61

இடத்தாகத் தானைந்தரி யேறன்னா ரிகலெய் தின்னென்
னிடத்தாகத் தானையிலைச் சிகியைச் செய்தியேந் திழையா
ளிடத்தாகத் தானையந் தீர்த்தேனஞ் செற்றய னெய்க்கச்
செய்சே
யிடத்தாகத் தானையிர லைதந்தார் கனத்திச் சையனே. 62

இச்சைய தான்நல்லா டலெல்லாஞ் செய்திணையிலெழி
லிச்சைய தானத்தினி னற்செஞ்சே யென்னிடநனி சா
ரிச்சைய தானனத்தாற் றீர்நாடலென் றியானினைத்தியா
னிச்சைய தானத்தா கையேற்கைக் கேக்கற்றி ளைத்தன்னே. 63

இளையானை யிலையினீற் றானல்லண் டாரிக விகலி
விளையானை யிலையனீ டிலசெஞ் சேயெழிலி யானைக்கன்றி
னிளையானை யிலையென்னா தீகையான் றன்னை யேத்திநில்லா
ரிளையானை யிலையஞ் சேர்நாளிரங் கலிலா நெஞ்சனே. 64

இலையராத்தை யத்த நாடி யிரந்திரந் தெய்த்தன்ன
யிலையராத்தை யணிசீர் கலத்தி லினிதி ரங்கா

யிலையராத்தை யாதஞ் சேயான் கந்தனென் றேத்தியநீ
ரிலையராத்தை யடையச் செய்கை தீர்தலிலென் னத்தனே. 65

அத்தனங் கண்ணிற் றாலாய் சேயடலார்ந் தசத்தி
யத்தனங் கண்ணிக் கினிய செஞ்சீறடி யண்ணலணி
யத்தனங் கண்ணிறைதீந் தினைக்கைக் கிள்ளை யாதானீ
னத்தனங் கண்ணியந் தீர்க்கச் செய்தென்னை யலைத்தன்னே. 66

அலையாற ளித்தசிற்றா கர்ச்சேந்தன யிலணிசே
யலையாற ளித்தடங்கைச் சிலையார் தங்கைக் கானகள்ள
னலையாற ளித்தா லாட்ட ளக்காரி யறைசெ
யலையாற ளித்தண்செச் சைத்தலை நன்னெறி யாய்தன்றே. 67

ஆயத் தகாத நெறிகளிற் சிந்தைய லைந்ததனா
லாயத் தகாதத் தியக்கந் தார்தென்னை யாளறஞ்சா
லாயத் தகாதல னாஞ்சே யசிகியிலயி லணிகை
யாயத் தகாதகர்க் கெட்டா தசீலத் ததிசயனே. 68

அதிகளை யானனத் தெய்திய சேய்தறையா தியநி
யதிகளை யானனலங் காட்டி யாளகந்தனா ணடிலன
யதிகளை யானனத் தானாற் செறிந்தன்னண டியத
லதிகளை யானனல கத்த ளர்ந்தேனன றடைதலென்றே. 69

அடையலாஞ்ச யிலேந்திய சேயெண்ணி லண்டரி கற்செறி
யடையலாஞ்சத் தற்கீந்தா னன்றே யென்னை யாண்டன்னை
யடையலாஞ்ச னக்கண்ணா சைநீங்கில னன்னந் தண்ணீ
ரடையலாஞ்ச வியாதியிட்டேத் தலயத் திலனே. 70

அயனரி யத்தனை யாண்டான் னேகாழற் றாநே
ரயனரி யத்தனை கைக்கட லைகளறச் செற்றசே
யயனரி யத்தனை சேடன் னனாரகற்றறி திறத்தி
லயனரி யத்தனை யாக்கர் சிலாற்றலளிக் கின்றதே. 71

அளிக்கஞ்ச னாற்கன்ன லானாலறத் தின்னா லயர்நீ
ரளிக்கஞ்ச னாதாஞ்செய் யாதிரேநின் னத்ததை நெஞ்சி
லளிக்கஞ்ச னாத்திறஞ்சேர் தங்கையங்னன டையச் செய்தா
ளளிக்கஞ்ச னார்த்தன்னேத் திசைச்சேயச் சசிதா னந்தனே. 72

ஆனந்த னாண்டலைக் கேத னத்தையன் றான்னத்தி
னானந்த னாண்டணை நல்லா ளையெஃகென்
றணிந்தகைச்சே
யானந்த னாண்டகை நந்தன் னசீர்நல்கி யாளிலற
னானந்த னாண்டனந் தஞ்சித் தர்தங்கணத்
தாட்டெய்தியே. 73

ஆட்டா தனத்தனக் கிள்ளைக் கைச்சேய்யி லான்னிசெ
யாட்டா தனத்தன் றியாநி லையைய றைந்தனைநீ
யாட்டா தனத்தன் டைசேர்ச்செய் யலணியியற் சீ
ராட்டா தனத்தனத் தத்தகக் கீர்த்தியனந் தநல்கே. 74

அனந்தந்தாந் தெண்டனிட் டேழை யானென் றறைந்தன்னி
யனந்தந்தாந் தையெல்லாங் கெடச்செய் கிலையா ரணங்க
ளனந்தந்தாந் தக்ககட கலைநங் கையனத் தினத்தி
லனந்தந்தாந் தெரியச் சீற்ற சேயிதநீ தியன்றே. 75

அன்றந் தாங்கங் களாகத் தெரிந்திட்ட றைதனிலை
யன்றந் தாங்கத் திரணத் தெயத்தேகென் றிடானயிற்கை
யன்றந் தாங்கத் தினிற்க லந்தாளை யனாறிடத்தி
னன்றந் தாங்கண் டிலாரி கழ்சேயழ லாகானே. 76

ஆகத்திடங் கரையான் னத்தால ழியானை யட்டா
னாகத்திடங் கரையாங் கணத்தேகியளித் தன்றகா
ளாகத்திடங் கரையான் றங்கை சேயென் னையாதரிக்கி
லாகத்திடங் கரையா னரியா சிற்ற டியணைந்தே. 77

அடியனை யாளத்தி யிதென் றெண்ணிலை யண்டாணி
யடியனை யாளயிலாய் நின்கை கடகத ரிதென்னே
னடியனை யாளரி கழர்நன் னீற்றையளிக் கைநண்ணி
யடியனை யாளல்லள கைதந்த சேய்செச் சையாரத்தனே. 78

ஆரத்தனந் தந்த னாரண்னயனரி யன்னநீ
ராரத்தனந் தந்த னாரண்னயனயில ணிசே
யாரத்த னந்தந்த னாரண்ன யன்றித கையா
னாரத்த னந்தந்த னாரண்ன யனத்தா டையனே. 79

ஆடையணி யசிகி நேரிற்றாங் கச்செய் தாயடியே
னாடையணி யறஞ்சார் தரச்செய்தி யன்றாய்ச் சியர்நெய்
யாடையணி யற்றனஞ் சேர்த லெய்தரியார்க் கரியா
யாடையணி யனலன்ன செஞ்சே யெண்ணி லணடத்தனே. 80

அண்டத்தார் கஞ்சலி யானனி யிரந்தாற் சிகியி
லண்டத்தார் கந்தணந் தாள்செஞ் சேய்நித் தார்நலஞ்சா
லண்டத்தார் கண்டல னாதி யாதங்களா சையெய்தே
னண்டத்தார் கத்தினங் காத்த சீர்த்தியதை நண்ணியே. 81

நண்ணியநா திநின்றன்னை யல்லா வில்லை நானறிய
நண்ணியநா தித்தனித்தா ரகத்தை நல்காய் நல்கத்தோ
நண்ணியநா திரையானே யென்றல் லநன்னாற் றநளி
னண்ணியநா தியர்நாடி சைச்சேய் நிறைஞா னத்தனே. 82

நத்தன்னத் தன்றியர் நிலைதிகழ் நாதர தன்ன
னத்தன்னத் தனத்தா ளத்திலாடி னர்நல் லநய
னத்தன்னத் தனயி லணிசேய தன்னை நாடியக
னத்தன்னத் தன்ன றெனற்றிந் தார்சிலர் நானிலத்தே. 83

நானிலந் தங்க நல்லாரா தியைநித்தந் ததியிந்த
நானிலந் தங்கன லாங்க லிக்கஞ்சி டன்னறல்நீ
நானிலந் தங்கனலா னேங்கநல் கெழினஞாங் காக்கைத்தென்
னானிலந் தங்கனலா னாஞ்செஞ் சேயன் டார்நாயகனே. 84

நாயக னந்தன் நல்லியன் ஞானநனி யெய்தினார்
நாயக னந்தனந்தச் செய்செஞ்சே யக்கனத்தி னங்கை
நாயக னந்தன்றி சீலச்சேந் தநாரி கழ்ந்த
நாயக னந்தன்னா கெனைக்காத் திசைநல்கி டின்னே. 85

நல்லானை யானன்னக டக்கைக்கா ராநயன்றி கழ்சீர்
நல்லானை யானநல்கீ டணிசேயி னைநாடி லன்கன்
னல்லானை யானட்டஞ் செய்யின்ன றீரகிலன் ஞானக்கண்ண
னல்லானை யானலி கின்றேன் கலியன் கைத்தன்னே. 86

நகையாட லாடகச் செஞ்சிகி யாயிசை நாரதனை
நகையாட லாடளி யாதளித் தாயங் கநாகநிகர்

நகையாட லாடத்தா ணணான்ற சேயென்னை நண்ணிச்சற்றே
நகையாட லாடரிற் சஞ்சரிக் கின்றநசை யற்றகே. 87

நசையாதி காரண நல்கெனக் கெஞ்சிய நானைதலென்
னசையாதி காரறச் செய்தினி தாளிறை நத்தியஞா
னசையாதி காரத்த னாகிய சேயிக னாசதத்தா
னசையாதி காரஞ்சச் செற்றாண் டளித்தநலத் தின்னே. 88

நலத்தினைத்தந் தடியாரி டைசேரத் திசைநாடல் செய்யின்
னலத்தினைத்தந் தாங்கத்தி னின்றா யகழனல கணியே
னலத்தினைத்தந் தத்தினா விடித்தாள ணைநாத கடக
னலத்தினைத்தந் தகற்செற் றார்தஞ்சே யெண்ணி னாகத்தனே. 89

நாகத்தின ரைதிரைக்கஞ் சிடாத கனஞாலத் தெய்த்தே
னாகத்தின ரையன் றாழ்சிகி யேறிநடித் தெதிராய்
நாகத்தின ரைத்தன் சேனையென் றான்றங்கை நல்கிளஞ்சேய்
நாகத்தின ரையந்தீர்ந் தாரகை சித்தித்த நன்னிதியே. 90

நிதிக்கஞ்சி யந்தணற்காத் தில்லையிற் சென்றநீ யெனைச்சந்
நிதிக்கஞ்சிய சிலரிற் சேர்த்திலா யென்ற னெஞ்சகத்தி
னிதிக்கஞ்சியற் கணையா னெய்திடர் நலநே ரச்செயந
னிதிக்கஞ்சிய நதிநகர்ச் சேய்நல்லார் சிந்தை நேயத்தனே. 91

நேயத்தத் தானக் கரிக்கஞ் சனல கியநீ னிறத்தா
னேயத்தத் தான திறலீயி லேறகல னீயளிக்கி
னேயத்தத் தானத் தாதங் கடைக்கேகல னீடயிலா
னேயத்தத் தான நற்சே யேய்சலநி லையின்னே. 92

நிலையின்னா கஞ்சசி யாதிநை யிற்றன் னெஞ்சயார்
நிலையின்னா கத்தக் கானா ரென்றா யினிகரிற்கை
நிலையின்னா கற்ற சீரிய ரேத்தநிகழ் கிளியி
னிலையின்னா கஞ்செற்றா னைச்செயசே யென்ற
நித்தியனே. 93

நித்தியந்தந் தனநல்லார் செய்யென் றெண்ணி நேடின்னற
னித்தியந்தந் தன்னஞ்ச லாரன்ற னோந்தி யற்ற
நித்தியந்தந் தனநகத்தை நேரிக னீங்கச் செய்யாய்
நித்தியந்தந் தன்னக் கேட்குஞ் சேயிலை நீற்றின்னே. 94

நீற்றால யத்தைக்கண் ணாகணையா னிலத் தாண்டர்
நீற்றாலலத் தைச்செயீச னிற்காண் கைநிகழ்த் தினையா
னிற்றாலயத் தையார் தாள்கழி யினிடை யிலென்கை
நீற்றாலயத் தையனாஞ் சேய்நன் னெஞ்சத் தினிச்சயனே. 95

நிச்சயயந் தன்னை யறியார்க் கிடைதா னீதியன்றி
னிச்சயந்தன் னையஞ்சத் தியினாற் செய்தி நீடியசென்
னிச்சயந்தன் னையநீற் றணிச்சே யங்க னெஞ்சயர்த
னிச்சயந்தன் னையந் தீர்த்தாய்தே யெனகணே சித்ததே. 96

சித்தரை யாண்ட நின்சீறடி நாடியசீ லரைக்கெஞ்
சித்தரை யாண்ட கைக்கேக்கற் றிடர்நலஞ்சேர் கிலனே
சித்தரை யாண்ட ரைநாளா கினாறைசீ ரத்திநல்கா
சித்தரை யாண்டலைக் கைச்சே யெண்டீர்ந்த
சிலர்தன்னே. 97

சிலைக்கை யாரக நிறச்சித் தனார்தந்த சேயினைச்செஞ்
சிலைக்கை யாரகஞ் செற்றாண் டளித்தானைத்
தின்நினைநெஞ்
சிலைக்கை யாரகத்தகஞ் சேர்ந்திடர் தெழிற்சே டியரெச்
சிலைக்கை யாரகலஞ் சாராத னந்தந் திறலெய்தியே. 98

திறத்தலையா ரெழிலிக் கிரியாந் தனச்சீ ரிலகத்
திறத்தலை யாசித் திளந்தை யலார்க்கயர்தீங் கறச்செய்
திறத்தலை யாரெண் ணிலாரேத் தநீடயிற்சேய் சிறியேந்
திறத்தலை யாழிக் கரைச்செந் திலாதியிற்றே சிகனே. 99

சிகரியிலா டியங்கச் சித்திகாட் டின்ன செந்தகைய
சிகரியிலா டியதென்னத்தெளி தாற்றே டியநே
சிகரியிலா டியற்சிந்தை தியானித் தற்றேரி னெண்ணில்
சிகரியிலா டியசேயங் கையேந் தயிற்சீர்த் தியதே. 100

தந்தங்க ளைக்காட்டிச் சத்தியணி சேயிடத்தி
லெந்தங் கலிதீரென் றேற்றதே - கந்தத்
திதழகலந் தாதியிசை யேயந்தசெச் சையேநே
ரிதழகலந் தாதி யிசை. 101

முற்றிற்று

13. திருச்செந்தூர் வெண்பாவந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

14. திருச்செந்தூர் யமகவந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

15. திருச்செந்தூர் திரிவந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

16. திருச்செந்தூர் பதிற்றுப்பத்தந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

17. திருவேரக வெண்பாவந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

18. முருகன் வெண்பாவந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

19. நிரோட்டத் தலைச்செய்யுளந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

20. குகன் நிரோட்டத்தொருதொடை செய்யுளந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

21. கலிவிடந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

22. குருநாதனந்தாதி

[பாடல் முதல் சீர் – பக்க எண்]

23. ஏகத்தாளிதழகலந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

24. தலையணிச் சீரிதழகலந்தாதி

(பாடல் முதல் சீர் – பக்க எண்)

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அனைத்துப் படைப்புகளையும் திருத்தமான பாடத்துடன் கூடிய ஆய்வுப் பதிப்பாகக் கொண்டு வரும் திட்டம், கடந்த 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதன் முதல்கட்டமாக, சென்னை தரமணியில் இயங்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், கோவை சிரவணபுரம் கௌமார மடாலயமும் இணைந்து, முதல் இரண்டு தொகுதிகளை வெளியிட்டன.

இப்போது, 2023ம் ஆண்டில், இத்திட்டத்தின் 2ம் கட்டமாக, தாமரை பிரதர்ஸ் மீடியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் வாயிலாக, அடுத்தடுத்து நூல்கள் வெளிவருகின்றன. தொகுதி 3ல் 5 கோவை நூல்கள் வெளியிடப்பட்டன. தொகுதி 4ல் அந்தாதி நூல்கள் ஐந்து பகுதிகளாக வெளிவருகின்றன.

தொகுதி – 4 அந்தாதி

பகுதி – 1 – முருகன்

1. சென்னை வெண்பாவந்தாதி
2. சென்னைக் கந்தனந்தாதி
3. சென்னைத் திரிவந்தாதி
4. சென்னைப் பதிற்றுப்பத்தந்தாதி
5. பழனி வெண்பாவந்தாதி
6. பழனி யமகவந்தாதி
7. பழனிப் பதிற்றுப்பத்தந்தாதி
8. பழனி நடுவொலியலந்தாதி
9. புதுவைக் குமரனந்தாதி
10. தேவைத் திரிவந்தாதி
11. செம்பொனந்தாதி
12. பாறைக்கிணற்றந்தாதி

பகுதி – 2 – முருகன்

13. திருச்செந்தூர் வெண்பாவந்தாதி
14. திருச்செந்தூர் யமகவந்தாதி
15. திருச்செந்தூர் திரிவந்தாதி
16. திருச்செந்தூர் பதிற்றுப்பத்தந்தாதி
17. திருவேரகம் வெண்பாவந்தாதி
18. முருகன் வெண்பாவந்தாதி
19. நிரோட்டத்தலை செய்யுளந்தாதி
20. குகன் நிரோட்டத்தொருதொடைச் செய்யுளந்தாதி
21. கலிவிடந்தாதி
22. குருநாதனந்தாதி
23. ஏகத்தாள் இதழகலந்தாதி (உரையுடன்)
24. தலையணிச் சீர் இதழகலந்தாதி

பகுதி – 3 – சிவபெருமான்

25. நெல்லை யமகவந்தாதி
26. நெல்லை இதழகலந்தாதி
27. தில்லை வெண்பாவந்தாதி
28. தில்லைப் பதிற்றுப்பத்தந்தாதி
29. தில்லை இதழகலந்தாதி
30. தில்லைக் கட்டளைக் கலித்துறையந்தாதி
31. திருச்சிரகிரித் திரிவந்தாதி
32. திருவாமாத்தூர் திரிவந்தாதி
33. திருவாமாத்தூர் யமகவந்தாதி
34. திருவானைக்காவியமகவந்தாதி
35. திருவருணைப் பதிற்றுப்பத்தந்தாதி
36. வில்லிப்பாக்கம் பதிற்றுப்பத்தந்தாதி
37. சிவனேகபாதத்தந்தாதி (உரையுடன்)

பகுதி – 4 – திருமால்

38. திருவரங்க வெண்பாவந்தாதி
39. திருவரங்கப் பதிற்றுப்பத்தந்தாதி
40. திருவரங்கத்து இதழகலந்தாதி
41. திருவரங்கக் கட்டளைக்கலித்துறையந்தாதி
42. அனந்த சயனத்தந்தாதி
43. அரியேகபாதத்தந்தாதி (உரையுடன்)
44. சைவ வைணவ பெருமானந்தாதி
45. திருமாலந்தாதி
46. பெருமாளந்தாதி
47. திருமகளந்தாதி
48. சடகோபர் சதகத்தந்தாதி

பகுதி – 5 – பொது / பிற

49. ஆங்கிலியரந்தாதி
50. எழுகூற்றந்தாதி
51. ஒலியலந்தாதி
52. கங்கையந்தாதி
53. சந்தக் கலித்துறையந்தாதி
54. சித்தரந்தாதி
55. ஞானவந்தாதி
56. பதிற்றுப்பத்தந்தாதி (தெய்வத் திருவாயிரம்)
57. பேரொலியலந்தாதி

₹ 450

தாமரை பிரதர்ஸ் மீடியா
பிரைவேட் லிமிடெட்

www.vaasagarvattam.in

ISBN: 978-93-926017-9-8
9 789392 601798